அனுமன்

ஆய்வும் வழிபாடும்

ச. சிவகாமி M.A.

இராவணன் அவையில்
அனுமன்

ANUMAN

அனுமன்

AYVUM VALIPATUM

ஆய்வும் வழிபாடும்

2706

3 - AUG 1976
MADRAS

ஆசிரியை: ச. சிவகாமி, M. A..

CIVAKAMI (Ca)
CI

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சிப்
பெரும் புலவராகிய திருமுறைச் செல்வர்

திரு. க. வெள்ளைவாரணனார்

...ர்களது அணிந்துரையுடன் கூ

முதற் பதிப்பு 1974
உரிமை ஆசிரியர்க்கே.

கிடைக்குமிடங்கள் :

ஜெயகுமாரி ஸ்டோர்ஸ்,
கோர்ட் ரோடு, நாகர்கோவில்

★

வ. தி. ச. அசோகன், B. A.,
9 முனிச்சாலை, மதுரை. போன் : P. P 22439.

விலை ரூ. 6—00

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்
தமிழாராய்ச்சித் துறைத் துணைப் பேராசிரியர்,
திருமுறைச் செல்வர்

வித்துவான் திரு. க. வெள்ளைவாரணனார் அவர்கள்

அன்புடன் அளித்த

அணிந்துரை.

கல்வியிற் சிறந்த கம்பர் என்னும் புலவர் பெருமான் 'தென்னுண் தேனின் தீஞ்சுவை செஞ் சொற் கவியின்பம்' எனக் காப்பியத் தலைவியாகிய பிராட்டியைப் போற்றி மகிழ்ந்த வண்ணம் தாம் பாடிய இராமவதாரமாகிய செந்தமிழ்க் காப்பியத்தையும் அறிஞர்கள் பாராட்டிப் போற்றி மகிழும் வண்ணம் சுவைபெற அமைத்துள்ளார் என்பது அறிஞர் பலரும் அறிந்த உண்மையாகும். முத்தமிழ்த் துறையின் முறை போகிய உத்தமக் கவியாகிய கம்பர் தாம் இயற்றிய இராமாயணத்தை உலகம் போற்றும் தலைசிறந்த நாடகக் காப்பியமாகத் திறம்பட அமைத்துள்ளார். இக் காப்பியத்துள் இடம் பெற்றுள்ள காப்பியப் பாத்திரங்கள் ஒவ்வொன்றின் பண்பு நலங்களையும் கூர்ந்துணர்வோர், உலகிற் பல்வேறு குடிகளிலும் பிறந்து வாழும் பலதிற மக்களின் பல்வேறு வகைப்பட்ட குணஞ் செயல்களையும் உள்ளவாறுணர்ந்து தாழ்ந்த வுணர்வினவாகிய மாக்கள் நிலையினின்றும் விலகி உயர்ந்த மக்களாக வாழ்வாங்கு வாழ்ந்து அவர்க்கு மேலாய் வானுறையும் தெய்வத்துள் வைத்துப் போற்றப் பெறும் உயர்நிலையை அடைதற்குரிய நெறிமுறைகளை நன்குணர்ந்து மகிழ்வர் என்பது திண்ணம்.

கவிச்சக்கரவர்த்தி கம்பரது காப்பியக் கடலில் நீந்திக் களிக்கும் நல்வாய்ப்பைப் பெற்றவர், தமிழ் நலம் வளர்க்கும் திருவாளர் வ. தி. சங்கரலிங்கம் அவர்களின் மகளார் செல்வி: **ச. சிவகாமி M. A.,** அவர்களாவர். நல்லிசைப் புலமை மெல்லியலாராய இவர் இராமாயணக் காப்பியத்தில் இடம் பெற்றுள்ள தலைசிறந்த பாத்திரங்களில் காப்பியத் தலைவர்களாகிய இராமபிரான் சீதா பிராட்டி என்னும் இருவரையொப்ப மக்களால்

தெய்வமெனவைத்து வழிபடப்பெறும் சிறப்பமைந்த 'அநுமன்' என்ற பாத்திரத்தின் பண்பு நலன்களையும் செயற்றிறங்களையும் நன்கு ஆராய்ந்து 'அனுமன்' என்ற தலைப்பில் அரிய ஆராய்ச்சி நூலை அழகுற எழுதியுள்ளார்.

சொல்லின் செல்வனாகிய அநுமனைப்பற்றி வான்மீகியும், கம்பரும், துளசிதாசரும் தம் காப்பியங்களிற் கூறியவற்றை நிரல்படத் தொகுத்து ஒப்பு நோக்கி ஆராய்ந்து கம்பர் காப்பியத்தில் ஒளிபெற்று விளங்கும் அநுமனது பெருஞ்சீர்த்தியினையும் உலகம் போற்றும் தெய்வத் தன்மையினையும் விரித்து விளக்கும் முறையில் இந்நூல் இயற்றப் பெற்றுள்ளது. காப்பிய மாந்தரின் குணஞ் செயல்களை முன்னுக்குப்பின் முரணின்றி உலகியலுக்கு ஒத்தவண்ணம் புனைந்துரைப்பதில் கம்பராமாயணம் சிறந்து வீளங்கும் திறத்தை இந்நூல் இனிது விளக்குகின்றது. இராமாயணத்தில் இடம் பெற்றுள்ள 'அநுமன்' என்ற பாத்திரப் படைப்பின் இயல்புகள் எல்லாவற்றையும் முறைப்படத் தொகுத்து அடைவுபட விளக்குந் திறத்தில் இந் நூல் சிறந்து விளங்குகின்றது.

இத்தகைய அருமை வாய்ந்த ஆராய்ச்சி நூலை நயம் பெற இயற்றிய செல்வி: ச. சிவகாமி M. A., அவர்கள் அறிஞர்களின் பாராட்டுதலுக்கு உரியவர் ஆவர். இவர்க்கு எனது உளம் நிறைந்த பாராட்டும் வாழ்த்தும் என்றும் உரியனவாகும். கம்பர் காப்பியத்தின் சிறப்புக்களை யுணர்ந்து மகிழ்தற்குத் துணைபுரியும் நிலையிலமைந்த இந் நூலைத் தமிழன்பர்கள் ஆர்வமுடன் வரவேற்று இந்நூலாசிரியர்க்கு இத் துறையில் ஊக்கமளித்தல் வேண்டும் என்பது எனது பெரு விருப்பமாகும்.

இங்ஙனம்,

க. வெள்ளைவாரணன்.

27-8-74

அணிந்துரை நல்கி இச் சிறு நூலுக்குப் பெருமையளித்த அண்ணமலைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சித் துறைப் துணைப் பேராசிரியர் உயர்திரு. க. வெள்ளைவாரணனர் அவர்கட்கு என் இதயங்கனிந்த நன்றி.

ச. சிவகாமி.

நன்றியுரை.

கவிச் சக்கரவர்த்தி கம்பனின் காவியக் கடலில் நீந்திக் களிக்கும் நல்வாய்ப்பை நல்கியது இவ்வாய்வுக் கட்டுரை. 'அனுமன்' என்ற தலைப்பில் ஆஞ்சநேயப் பெருமானின் அரும் பண்புகளையும் ஆற்றிய அரிய செய்கைகளையும் ஆய்வு செய்ய விழைகின்றேன் என்றபோது மனமுவந்து அனுமதி அளித்து ஆய்வு நன்முறையில் அமைய அடுத்து நின்று ஊக்கமும் உற்சாகமும் அளித்து சிறந்த தூண்டுகோலாயும் நின்ற, என்றும் என்றன் வணக்கத்திற்கும் பெருமதிப்பிற்குமுரிய பேரன்புமிக்க பேராசிரியப் பெருந்தகை உயர்திரு Dr. ச. வே. சுப்பிரமணியன் M. A., Ph D. அவர்கட்கு என்றும் நன்றியறிதலுடையேன்.

இவ்வாய்வுக் கட்டுரையை முதலிலிருந்து முடிவுவரை படித்து வேண்டிய திருத்தங்கள் செய்து தந்த ஆசிரியை திருமதி குளோறியா சுந்தரமதி M. A. அவர்களுக்கும் என் நன்றி. தாமாகவே மனமுவந்து முன்வந்து கட்டுரை சிறப்பாக அமைய உதவிய பிற ஆசிரியர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும் என் நன்றி உரித்து.

ச. சிவகாமி

உள்ளே.......

		பக்கம்
பகுதி 1		
1. பாத்திரப் படைப்பு	...	1
2. அறிமுகம்	...	11
3. அனுமன் இன்றியமையாமை	...	16
4. இராமதூதன்	...	32
5. சொல்லின் செல்வன்	...	55
6. வன்திறலோன்	...	81
7. கோதிலான்	...	104
8 இராமபக்தி	...	121
9. பிற இலக்கியங்களில்	...	129
பகுதி 2		
1. தோற்றுவாய்	...	139
2. வழிபாடு—தோற்றமும் வளர்ச்சியும்	...	142
3. பல்வேறு தோற்றங்கள்	...	146
4. தமிழகத்தில் வழிபாடு	...	150
5. பிற மாநிலங்களில் வழிபாடு	...	158
6. பிற தெய்வங்களுடன் தொடர்பு	...	164
7. வழக்குக் கதைகள்	...	172
பிற		
1 கம்பனில் அனுமன் பயிலும் இடங்கள்	...	183
2 அனுமன் பற்றிய நூல்கள்	...	209
3. துணைபுரிந்த ஆங்கில நூல்கள்	...	213
4. பிழை திருத்தம்	...	215

முன்னுரை

கனியும், கன்னலும், கள்ளும். கலப்பினும் தரவொண்ணு இன்சுவையினை இணையின்றி நல்கவல்லது கம்பனின் இராமாயணம். காகுத்தன் இராமனையும், கள்ளிருக்கும் மலர்க்கூந்தல் சானகியையும் காவியத்தலைவன் தலைவியாகக்கொண்டது. அறம் வெல்லும்; அல்லன அழியும் என்ற தத்துவத்தை அடியாகக் கொண்டமைந்தது. சொல்வளமும், பொருள்ஆழமும் இணைந் திலங்கும் இயல்பினது. கற்பனையும், கலையழகும், ஆழ்கருத்தும் நிறைந்தது தமிழ்ப்பண்பாட்டின் தனித்தன்மையினை தனியழ கோடு பறைசாற்றுவது. எழிலுறு இலக்கியங்கள் எத்தனையோ இருப்பினும் தான் தனித்திலங்குவது.

இதன் முன்னும்பின்னும் எத்தனையோ இராமாயணங்கள் இராகவன் புகழ்பாடத் தோன்றியுள்ளன. பல்வகைத் தத்துவங் களையும் பாங்காகப் பாடியிருக்கின்றன. புனைந்துரைகளும் பல உண்டு. இருப்பினும்எல்லா நலன்களும் ஒருங்கமைந்த கம்பனின் இராமாயணத்தை அவை ஈடு செய்தில. காலன் அழிந்தாலும் கம் பன் காவியம் அழியாதுஎன்று கம்பன் பெற்றசிறப்பையும் பெற் றில. இத்துணைச்சிறப்பைக் கம்பன் பெறுதற்கு அவன்படைத்த பாத்திரங்களே பெருந்துணை புரிகின்றன.

கம்பன் காவியக்கடலில் எண்ணற்ற கதைமாந்தர் காணக் கிடக்கின்றனர். தம்எண்ணத்தாலும், செயலாலும், சொல்லாலும் கற்போர் நெஞ்சில் நிலைத்து இடம்பெறுவோர் அவர்களில் சிலர். அவர்கள் அனைவருமே ஏதேனுமோர் இனிய பண்பினுக்கு எடுத் துக்காட்டாய் இலங்குகின்றனர். அவருள்ளும் காவியநாயகன் கார்மேகவண்ணன் இராமனையும், காவியநாயகி செங்கமலச் செல்வி சீதையையும் அடுத்து நம் அன்பிற்கு இலக்காவான் அஞ்சனைசேய் அனுமனே.

'மனிதன் தன்னலத்தைப் பாராமல் பிறருக்காகவே வாழ வேண்டும். அதற்கேற்ற குணங்களோடு விளங்க வேண்டும் என் பதனையே இராமாயணம் எடுத்துக்காட்டுகிறது' என்றுரைப்பர் எச்.வைத்தியநாதன் அவர்கள். இக்கருத்தினை உணர்த்தும் பாத் திரங்கள் பல இராமாயணத்தில் இருப்பினும் புன்றலைக் குரங் காம் அனுமன் அவர்கள் அனைவரினும் தனித்து நிற்கின்றார்.

இக்காலின் மாமதலை கம்பனில் ஓர் உயிர்த்துடிப்புள்ள பாத்திரமாய் இலங்குகின்றான். இவனே, வான்மீகி வடித்த அனுமனோடும், துளசியில் தோன்றும் அனுமனோடும் ஒப்ப நோக்கும் போது மிகஉயர்ந்த பாத்திரமாகின்றான். 'கண்ணனும், பார்த்தனும், சீதையும், அனுமனும், பரதனும் பூஜிக்கத்தகுந்த மூர்த்திகள். வெறும் கதாபாத்திரங்கள் அல்லர்' என்ற இராஜாஜியின் கூற்றையும் வலியுறுத்துகின்றான். அவ்வனுமனே இங்கு ஆய்வுக்குரியவன்.

இவ் ஆய்வு இருபகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதற் பகுதியில் இராமாயணத்தில் அனுமன் நிலை ஆராயப்பட்டுள்ளது. பாத்திரப்படைப்பு, அறிமுகம், இன்றியமையாமை, இராம தூதன், சொல்லின்செல்வன், வன்திறலோன், கோதிலான், இராம பக்தி, பிறஇலக்கியங்களில்என்று ஒன்பதுநோக்கில் இவ்வாய்வு நடைபெறுகின்றது. மேலும் வான்மீகியினின்றும், துளசியினின்றும் கம்பன் எவ்வாறு வேறுபடுகின்றான் அல்லது எவ்வாறு இருவருடனும் ஒன்றுபடுகின்றான் என்பதும், அதனால் கம்பன் பெறும் சிறப்பும், அனுமன் பெறும் உயர்வும் ஆங்காங்கு சுட்டப்பட்டுள்ளன. துளசி இராமாயணத்தின் மொழிபெயர்ப்பு சுருங்கிய அளவில்இருப்பதால் போதிய கருத்துக்கள் அதனினின்றும் பெறவழியில்லை. பொதுவாக இக்கட்டுரைகள் பலபடப் பிரிக்கப்பட்டிருப்பினும் அனுமனின்பண்புநலனையும், ஆற்றலையுமே அடிப்படையாகக்கொண்டு அமைந்துள்ளமையினால் ஆங்காங்கே கூறப்பட்ட கருத்துக்கள் சில மீண்டும் கூறப்படுவது தவிர்க்கப்பட இயலாததாகிவிட்டன.

இரண்டாம் பகுதி அனுமன் வழிபாடு பற்றியது. இக்கட்டுரைகள் கம்பராமாயணம் — அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பினையும், வான்மீகி இராமாயணம் — லிப்கோ வெளியீட்டையும், துளசி இராமாயணம் — தி. வெங்கடகிருஷ்ணய்யங்கார் மொழிபெயர்ப்பினையும் பின்பற்றியன.

கடலினும் பெரிது கற்றவன் அனுமன். அவன்றன் ஆற்றலோ அளப்பரிது; மற்றுஅன்பால் அனைவரையும் ஆட்கொண்டவன்; பண்பிலும் தனியன்; தாயினும் சாலப் பரிவினன்; அனைத்தும் இணைய அவனே ஓர் ஆழ்கடல்; அகன்ற அலைகடல். அக்கடலலைகளினின்றும் ஒருசிலதுளிகளே இவண் தெறித்துள்ளன.

ச. சிவகாமி.

பாத்திரப் படைப்பு.

காவியக் கதைகள் பெரும்பான்மையும் வாய்வழியாக மக்கள் மத்தியில் வழங்கப்பட்டு வந்த மரபுக்கதைகளாகவே அமைகின்றன. இம்மரபுக் கதைகளில் வரலாற்றுப் பழங்கதைகளும் (Legend or Heroic Myth) ஒருவகையாகும்' உலகக் காவியங்களில் மிகச் சிறந்தனவாகக் கருதப்படுகின்ற இலியதம் (Iliad) ஒதீசி (Odyssey), ஏனியட் (Aeneid), இராமாயணம், மகாபாரதம் முதலான மாகாவியங்கள் அனைத்துமே வரலாற்றுப் பழங்கதைகளே. இவற்றில் இறையியல்புக்கூறுகள் நிறைந்துள்ளன. மக்களுக்கும் மாக்களுக்கும் உள்ள உறவுமுறையைச் சமயச் சார்போடும், இயற்கை இறந்த நிலையிலும் தொடர்பு படுத்தி விளக்கும் கதைகளும் இறையியல்புப் பழங்கதைகளாம் விலங்கினங்களின் வீரச்செயல்களைப் பற்றிப் பொதுவாக எல்லா மக்களாலும் பேசப்பட்டு வரும் நொடிக்கதைகளே விலங்கியல் கதைகளாக அறியப்படுகின்றன. இவற்றில் இடம்பெறும் விலங்கினங்கள் பெரும்பான்மையும் மனிதப் பண்பேற்றப்பட்டு விளங்கும். இராமாயணத்தில் வருகின்ற வாலி, சுக்கிரீவன், அனுமன், தாரை, அங்கதன் போன்றபாத்திரங்களை இவ்வகைக்கதைகளின் அடிப்படையில் எழுந்த பாத்திரங்களாகக் கொள்ளலாம்.[1]

நுட்பங்களைக் கதைகள் வாயிலாகத் தெரிவிப்பது பண்டை மக்கள் மரபுகளில் ஒன்று. நாடோடிக்கதைகள் பல, குரங்குகளைப் பாத்திரமாகக் கொண்டு அமைந்துள்ளன. விலங்குகளின் வேந்தனாகவும், நன்றியுள்ள விலங்காகவும், சிறந்த வேலையாளாகவும், திருமணம் செய்து கொள்வதாகவும், உரையாடுவதாகவும், மனிதனைப் பின்பற்றுவதாகவும் கூறப்படும் கதைகள் அவற்றுள் சில. இக்கதைகள் மக்களுக்கு அறத்தினை வலியுறுத்தி அவர்களின் செயல்களை ஏளனம் செய்வன. இதனை நோக்குமிடத்து அனுமன் பாத்திரப்படைப்பு இவ்விலங்குக் கதைகளின் மரபிலிருந்தே தோன்றியிருக்க வேண்டுமெனத்தெரிகிறது.

கதாபாத்திரங்களின் குணாதிசயங்களை முன்னுக்குப் பின் முரண்படாமல், உலகியலுக்கும் இயற்கைக்கும் ஒவ்வும் முறையில் சித்திரித்துக்காட்டுவதில் கம்பஇராமாயணம் சாலச்சிறந்து விளங்குகிறது.[2] என்ற கா.சு. பிள்ளையவர்களின் கூற்றுக்கு அனுமன் பாத்திரப் படைப்பே சிறந்த சான்றாயமைகிறது. சிறந்த காப்பியப் புலவர்கள் மக்களின் பண்பாட்டையே தமது

---

[1] சிலம்பில் மக்கள் மரபுக்கதைக் கூறுகள்: இரா. காசிராசன்

[2] கவி இன்பம்: கா. சு. பிள்ளை: பக்: 65

காப்பியத்தில் பிரதிபலித்து அப்பண்பாட்டிற்கு ஒருபருவடிவம் தருகிறார்கள் [1] அப்பரு வடிவமாக அனுமன் இங்கமைகின்றான். இராமாயணப் பாத்திரங்களுக்குள்ளேயே மாசற்ற அன்புப் பாத்திரம் அனுமன். உண்மைக்கு உறைவிடமாகிய அனுமனது செயல்களைக் கண்டு அவற்றில் வியந்து முதியோரும், இளைஞரும் அவன் சரித்திரத்தில் ஆழ்ந்து ஈடுபடுகின்றனர் என்பர் [2] திரு. வையாபுரிப்பிள்ளை அவர்கள். மனிதனது எதிர்காலவாழ்வினை எல்லாம் அனுமனிடம் காணலாம். அனுமனின் திருவிளையாடல்களைக் கம்பன் பரக்கக் கூறியதெல்லாம் புனைந்துரையாகாமல் எதிர்காலத்தின் ஞானக் காட்சியாக விளங்கக் காண்கிறோம் [3] என்று கூறுகின்றார் திரு தெ. பொ. மீ. மேற்கூறிய இக்கூற்றுக்கள் அனைத்தும் ஆழ்ந்தபொருள்கொண்ட உண்மைகள் என்பதனை நாம் அனுமன் பாத்திரப்படைப்பினை உற்று நோக்குங்கால் உணரலாம்.

அனுமனின் புறத்தோற்றத்தினை முழுமையாக வருணிப்பதற்குப் புலவர்கள் சிறப்பிடம் கொடுக்கவில்லை. ஆங்காங்கு ஓரளவே சுட்டிச் செல்கின்றனர். தன் பெருங்குணத்தால் தன்னைத் தான் அல்லது ஒப்பிலாதவனாகிய அனுமனை இராமன் 'பேரெழில் வீர' (4 : 8 : 27) என விளிக்கின்றான். பொருவரும் உருவத்து அன்னோன் (5 : 1 : 39) என்று கம்பரும் அதனை வலியுறுத்திச் செல்கின்றார். இதனால் அனுமன் அழகுடை வடிவினன் என்பது வெளிப்படை.

ஒருவனின் தோள்வலியே சிறந்தவலி. கம்பர் பல இடங்களில் அனுமனின் தோளினை அதன் வலி புலப்படுமாறு வருணிக்கின்றார். வயிரத்தின் தோள், பொன்னெடுங்கிரியெனப் பொலிந்த தோளினான், பொன்குன்றம் அனைய தோளான் என்பன அவன் தோளின் வலியினைக் குறிப்பனவே. மேலும் சுருதியே அனையதோள், தடந்தோள், திண்தோள், அலங்கல் அம் தடந்தோள், பாழிநெடுந்தோள் எனவும் வருணிக்கப்பட்டுள்ளது.

கரங்களை வயிரக்கரம் என்றும், செங்கை என்றும் குறிப்பிடும் கம்பர், இராம இலக்குவர்களுக்கும் அதனை ஒப்பிட்டுச் சொல்கிறார் வான்வழியாகக் கடலைக் கடந்து கொண்டிருக்கின்றான், ஒப்பிலா வடிவுடையான். அப்போது விரைவைக் கொடுப்பனவும், தளர்ச்சியடையாமல் நிமிர்ந்துள்ளனவும் தமக்குத் தாமே ஒப்பனவுமாகிய நீண்ட கரங்கள் இராமஇலக்குவரை நினைவூட்டுகின்றன; நீங்குதலில்லாத நற்குணங்களையுடையவரையா தருளுமியல்பினனான இராமனும் ஒப்பற்ற உயிர்த் தம்பி இளைய பெருமாளும் ஆகிய அந்த இரண்டு பேரும் அனுமனது இரு

---

[1] தமிழ் மறுமலர்ச்சி : பிரான்ஸிஸ் முராயிஸ் : பக் : 69

[2] இலக்கிய உதயம் : பகுதி : 2. எஸ். வையாபுரி பிள்ளை பி. ஏ, பி. எல்.

[3] பிறந்தது எப்படியோ? தெ. பொ. மீ : பக் : 49.

புறத்திலும் முன்பு போனற்போன்று அக்கைகள் அமைந்துள்ளன என்கிறார். அவன்தன் ஒருகரத்திற்குக் காவியநாயகனையே உவமிக்கின்றமையின் அனுமன் சிறப்பு இங்கு அளவிட முடியாதபடி உயர்கிறது.

கம்பன் அஞ்சனை மைந்தனைத் தருமத்தின் தனிமை தீர்ப்பான் என்று கூறியதனை உருவ வருணனையின் மூலம் மெய்ப்பித்துக் காட்டுகின்றான். உருவவருணனையிலேயே பாத்திரங்களின் இயல்பைச் சுட்டுவது கவிஞர் தம் மரபு. இதனைக் கம்பன் வெகு அழகாக ஆற்றுகின்றான். குரங்குகளுக்கு மிகவும் இன்றியமையாத உறுப்புவால். இதனால் மேன்மையான அவ்வுறுப்பினை அனுமனின் மேன்மை புலப்படச் சிறப்பாக அமைத்துள்ளான்.

வேதநாயகன் இராமபிரானது கருணையெனும் வலிபெற்றுள்ள வாயுசேய் தருமதேவதையாவான். இத்தரும தேவதையைத் துணையாகப் பெற்றிருந்தும், அஞ்சாது கள்ளைப்பருகி இழிதொழிலையே செய்கின்ற அரக்கர்கள், பார்க்கக்கூடுமென்று எண்ணி அவ்வீரன் வாலானது மறைந்து கொண்டு, பின்புறத்திலே செல்கின்ற யமனது பாசத்தை ஒத்தமைந்தது என்கிறார். அனுமனது வால் காலபாசமாக அமைந்து அரக்கர்களை வெல்லும் நிகழ்ச்சியை நாம் யுத்தகாண்டத்துள்ளும், சுந்தரகாண்டத்துள் அவன் நடத்திய தனிப்போரிலும் காணலாம். வருணனையில் உயர்வுநவிற்சி இன்றி அமைத்துக் கம்பன் அனுமன் சிறப்பினை இவண் மிகுவிக்கின்றான்.

அனுமனது வாலாகிய காலபாசம் அவன் பின்னேயிருந்ததற்குக் காரணமாக, அரக்கர்களிடம் கொண்ட அச்சத்தைக் கூறிக் கம்பர் தற்குறிப்பேற்றமாக அமைத்திருப்பது கவிச்சிறப்பினை நவில்கிறது. பாத்திரத்திற்கும் அதனைப்படைத்தவனுக்கும் ஒருங்கே புகழ்தரும் அப்பாடல் பின்வருவதுவாம்.

> விளித்துப்பின் வேலை தாவும் வீரன்வால் வேத மெய்க்கும்
> அளித்துப்பி னநும னென்னு மருந்துணை பெற்ற தாயும்
> களித்துப்புன் றொழின்மே னின்ற வரக்கர்கண் ணுறுவ
> ரென்ன
> ஒளித்துப் பின் செல்லுங் கால பாசத்தை ஒத்த தன்றே
> (கடல்தாவுபடலம்: 34)

அனுமனின் கால்களைக் கம்பன் மிக்க வலியுடைத்தனவாகவும், கழல் அணியப் பெற்றனவாகவும் காட்டுகிறான். அனுமன் அணிந்துள்ள அணிகலன்களாகக் காற்கழல்களும், மார்பின் பொற்றார்களும், காதுக்குண்டலங்களுமே பேசப்படுகின்றன.

மனிதனுக்கு அடுத்த உயிரின வளர்ச்சியுடைய விலங்கு குரங்கென்பது பொதுவான கருத்து. இக்குரங்கினின்று மனிதன் தோன்றினன் என்பதனையும் உலகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. விலங்கினின்றும் மனிதன் அடைய வேண்டிய நிலை தெய்வநிலையாகும். இதனைக் கம்பர் அனுமன் வாயிலாக வலியுறுத்துகின்றார்.

உணர்வு சென்றுழிச் செல்லும் ஒழுகலாறினை உடையவர்கள் வானரர்கள் என்று வாலியின் வாயிலாகக் கூறுகின்றான் கம்பன், குரங்குகளின் பண்பிற்கும் அனுமனின் பண்பிற்கும் மிகுந்தவேறுபாடு அடிப்படையிலேயே அமைகிறது. அனுமன் மானிடப் பண்பினையே கொண்டு அமைகிறான். கம்பன் இரு இடங்களில் அவனை மனிதன் என்றே குறிப்பிடுகின்றான்.

'நாம் ஊனுடை மானிடம் ஆனது உண்மையால்'
(கலன்காண் படலம்: 30)

'ஆறும் ஐம்பொறி நின்னையும் ஆண் எனக் கூறும்
இவ்வுருத் தீண்டுதல் கூடுமோ' (சூடாமணிப்படலம்: 19)

உருவில் குரங்காயினும் உள்ளத்தில் மானிடனே என்பதனை இராமன், வாலி இருவருக்கும் இடை நடக்கும் வாதத்தினின்றும் அறியலாம். நினைந்தபோது நினைந்தபடி நடக்கும் இயல்புடை வானரமான நான் உருமையைக் கவர்ந்ததில் தவறில்லை என வாதிடுகிறான் வாலி. அதனை ஏற்றுக்கொள்ள மறுக்கும் இராமனின் வாதம் நாம் அனுமனை மனிதனாகக்கொள்ள இடம் கொடுக்கிறது.

ஒருவன் மானிடனா விலங்கா என்பது அவன் புறஉருவில் இல்லை. அஃது அறிவின் பாற்பட்டது. குளத்துள் இடங்கர் தன் காலைப்பற்றி இழுத்திட 'ஆதிமூலமே' என்றழைத்து வீடுபெற்ற களிறும் விலங்காமோ? நல்லது இது; தீயதுஇது என்று பிரித்தறியும் பகுத்தறிவுஇன்றி வாழ்வதுமட்டுமே விலங்கு என்பது இராமன் கூற்று. அனுமன்தன் ஆழ்அறிவு ஆதிநாயகனும் வியக்கும் வண்ணம் உள்ளது. (அனுமப்படலம்: 17, 18, 19)

'தக்க வின்ன தகாதன வின்னவென்
றொக்க வுன்னல ராயி னுயர்ந்துள
மக்க ளும்விலங் கேமனு வின்னெறி
புக்க வேலவ் விலங்கும்புத் தேளிரே.'
(வாலிவதைப்படலம்:121)

எனும் இராமனின் கூற்று அனுமன் மனிதனே என்பதனை மறுக்கமுடையாத வகையில் வலியுடைத்து.

தொல்லிலக்கணநூல் தொல்காப்பியம் 'விலங்கினுள் ஒரு சாரன ஆறறிவுடையன' (தொல்; மரபு: 34) என்று கூறுகின்றது. உரை இயற்றிய இளம்பூரணர் அவ்விலங்குகள் கிளி, குரங்கு, களிறு எனஉரைத்துள்ளார். மரபியலில் இடம்பெறும்.

'மக்கள் தாமே ஆறறி வுயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே'

(தொல்:மரபு:33)

எனும் நூற்பாவிற்குப் பேராசிரியர் உரையெழுதும் பொழுது 'பிறப்புஎன்றதனால் குரங்குமுதலாகிய விலங்கினுள் அறிவுடையன எனப்படும் மனஉணர்வுஉடையன உளவாயின் அவையும் ஈண்டு ஆறறிவுயிராய் அடங்கும் என்பது' எனக் குறிப்பிட்டுள்ளார். இவை மூலம் அனுமன் புறத்தால் புன்றொழில் விலங்காயி

னும் அகத்தால் அறிவுடை மனிதனுய் மதிக்கப்படுதற்கு உரியன் என்பது புலப்படும். அவனுடைய சொல்லும் செயலும் மாண்புடை மனிதனை நமக்கு நினைவூட்டுகின்றன. அன்றியும் அவன் ஓர் ஊனுடைக்குரங்கு என்பதனையும் நினைவினின்று அகற்றுகின்றன. இதனை நினைவிற் கொள்ளத்தான் போலும் கம்பர் அனுமனை அறுபத்திரண்டு[1] இடங்களில் குரங்கு என்றே குறிப்பிடுகின்றார்.

அனுமனை விலங்கினின்றும் விலக்கி மனிதனுகக் கொள்ளற்கு மேலும் இருசான்றுகள் உதவுகின்றன. அஞ்சனை புதல்வன் அனுமன் சிந்தையாலும் பெண்ணை நாடாதவன் என்பது ஒன்று. குரங்கிற்குரிய சலனபுத்தி அணுவளவும் அவனிடம்கிடையாது என்பதுமற்ருென்று. அவன் அரசன்சுக்கிரீவனிடமும் இச்சலன புத்தியை நாம் காணநேர்கின்றது. ஆனல் அமைச்சனுய் இலங்கும் அனுமனிடம் இச்சலனம் சிறிதும் காண இயலவில்லை. எதிலும் உடனுக்குடன் சரியான முடிவுக்கு வருவதிலும் அதனைத் திறம்பட நிறைவேற்றுவதிலும் மானிடனையும் வென்று விடுகின்ருன். அவனது உள்ளுணர்வே எச்சமயத்திலும் எதுசெய்ய வேண்டும் எனத் தூண்டுகிறது.

மானிடனுகக் காணப்பெறும் மாருதி தெய்வத்தன்மையும் பெற்றுப் பொலிவடைகின்ருன். "சாந்தம், பொறுமை, அருள், அன்பு முதலியன தெய்வச் சார்பின. பொருமை வன்கண் துவேஷம் முதலியன விலங்குச் சார்பின. மனிதன் எதில் தோய்கின்ருனே அதன் வண்ணமாகின்ருன்"[2] என்பர் தமிழ்த் தென்றல் திரு.வி.க. ஆஞ்சநேயன் தெய்வச் சார்புடையன வற்றிலே முழுவதுமாகத்தோய்ந்து அப்பண்புகளில் தனக்குவமை யில்லாதானுகத்தோன்றுகின்ருன். இப்பண்புகளே அவனுக்குச் சில தெய்வீக ஆற்றல்களை வழங்கியுள்ளன. இலங்கையின்காவல் தெய்வம் இலங்கைமாதேவியின் மீட்சியே இதற்குப் போதிய சான்ருகும். இங்ஙனம் விலங்குருக்கொண்டு மானிடப் பண்

---

[1] 4 : 2 : 30, 4 : 2 : 33, 4 : 2 : 35, 4 : 10 : 69, 5 : 2 : 94, 5 : 2 : 223, 5 : 4 : 104, 5 : 6 : 59, 5 : 7 : 2 5 : 7 : 58, 5 : 7 : 61 5 : 8 : 50, 5 : 8 : 51, 5 : 9 : 2, 5 : 9 : 3, 5 : 9 : 14, 5 : 9 : 28, 5 : 9 : 66, 5 : 9 : 67, 5 : 10 : 2, 5 : 10 : 18, 5 : 10 : 21, 5 : 10 : 22, 5 : 11 : 5, 5 : 11 : 11, 5 : 11 : 12, 5 : 11 : 17, 5 : 11 : 19, 5 : 11 : 61, 5 : 12 : 15, 5 : 12 : 58, 5 : 12 : 107, 5 : 12 : 108, 5 : 12 : 125, 5 : 13 : 45, 5 : 13 : 46, 5 : 13 : 48, 5 : 13 : 88, 6 : 2 : 11, 6 : 2 : 12 6 : 2 . 20, 6 : 2 : 21, 6 : 2 : 25, 6 : 2 : 27, 6 : 2 : 32, 6 : 2 : 34, 6 : 2 : 35, 6 : 2 : 38, 6 : 2 : 39, 6 : 2 : 40, 6 ; 2 : 41, 6 : 2 : 75, 6 : 4 : 7, 6 : 14 : 165, 6 : 14 : 231, 6 : 15 : 29, 6 : 24 : 124, 6 ; 25 : 52, 6 : 26 : 91, 6 : 29 : 46, 6 : 30 : 64, 6 : 31 : 13, 6 : 37 : 256

[2] தமிழ்ச்சோலை அல்லது கட்டுரைத் திரட்டு : திரு. வி. க. பக் : 220.

பேற்றுத் தெய்வத் தன்மையுடன் ஒளிர்ந்து நம்சிந்தைகவர் கள் வனுகின்ருன் தூயன் அனுமன்.

கம்பன் அனுமனைப் பல இடங்களில் சிவனுக்கு ஒப்ப வைத்து உரைக்கின்ருன். பெரும்பான்மை அனுமனின் ஆற்றலை உணர்த்தும் இடங்களிலேயே சிவன் உவமையாக்கப்பட்டுள்ளான். 'ஆலாலம் உண்டவனே என அகல் வாயின் இட்டு அதுக்கும்' (அதிகாயன்படலம்: 162); 'ஊழியின் இறுதிக்காலத்து உருத்திரமூர்த்தி ஒத்தான் (பொழிலிறுத்த படலம்: 46); 'மூண்டு முப்புரம் சுட முடுகும் ஈசனில் ஆண்டகை வனைகழல் அனுமன் நோக்கிஞன் (பாசப்படலம்: 24) என்டன போன்ற இடங்களை இக்கூற்றுக்குச் சான்ருக்கலாம். இத்துடன் இவை தவிர இன்னும் சில இடங்களில் ஐயப்பாட்டு நிலையிலும் சிவன் உவமையாகக் குறிககப் பட்டுள்ளான். அனுமன் சிவனின் அம்சமாகவும் கருதப்படுகின்ருன் (கம்ப இராமாயண உரையாசிரியர்கள், அண்ணுமலை பல்கலைக்கழக வெளியீடு, வை. மு. கோ உரை) வானரங்கள் அனைவருமே தேவர்கள். ஆயின் அனுமன் ஆற்றிய செயற்கரிய செயல்களைப் பிறர் புரியவில்லை. எனவே கம்பன் அனுமனின் ஆற்றலைப் புலப்படுத்த இவ்வுவமைகளுக்குச்சிறப்பிடம் கொடுத்துள்ளான் எனலாம். அனுமனின் எல்லையற்ற ஆற்றல்களுக்கு இதுவும் காரணம் போலும்.

அனுமனின் பேருருவத்தினைக் கம்பன் திருமாலின் வாமன அவதாரத்திற்கே பெரும்பாலும் ஒப்பிடுகிருன். அனுமனின் புகழ் இராமனின் புகழுக்குச் சமமாகவும் பேசப்பட்டுள்ளது இது இராமனின் செங்கைத் தனுவாக விளங்கிய அனுமன் மட்டுமே பெற்ற தனிச் சிறப்பு.

அயனுடனும் ஒப்பிட்டு அனுமனைக் கம்பன் காட்டுகிருன். விபீடணன் தன் தமையன், அரக்கர்கோன் இராவணனைப் பிரிந்து அறத்தின் நாயகன் இராமனிடம் அடைக்கலம் புகுகின்ருன். அப்பொழுது சீதையிடத்துத் தூதுரைக்க வந்த கொற்றக்குவவுத் தோள் குரக்குச்சீயம் இலங்கையில் ஆற்றிய வீரச்செயல்களை நவில்கின்ருன். அதுகேட்டு அகம்மிக மகிழும் இராமன் தன் மகிழ்வை அனுமனுக்கு அடுத்த ஊழியில் பிரமன் பதவியை, படைப்புத் தொழிலை வழங்குவதன் மூலம் வெளிப்படுத்துகின்ருன். இவ்வாறு மும்மூர்த்திகளும் தொடர்புடைய ஒரு பாத்திரமாக அனுமன் படைக்கப்பட்டிருப்பது ஒன்றே தனித்து நின்று அவன் புகழை விளக்க வல்லது.

(கம்பன் அனுமனைப் படைத்திருப்பதில் தோன்றும் மற்ருெரு சிறப்பு அவனுக்கு வழங்கப்பட்டிருக்கும் அடைமொழிகளாகும். கம்பனது இவ்வடைகள் வெறும் உயர்வு நவிற்சியாக அமையாமல் அனுமனின் இயல்பினையே விளக்குவதாய் உள்ளன. எண்உடை அனுமன், பழியை வென்ருன், செற்றம் நீங்கிய மனத்தினன், பொய்யில் மாருதி, குரக்குச்சீயம், கருணையோன், செம்மை சேர் உள்ளத்து அண்ணல், யாரினும் மேன்மையான்; தருமம் காப்பான், அறத்தை ஓம்புவான், நிறைநல் நூல

கற்றுணரும் மாருதி, நுணங்கிய கேள்வியான் என இவ்வாறு எண்ணிறந்த அடைகளைச் சான்ருக அடுக்கிக் கொண்டே செல்லலாம். இது அனுமனின் பண்பினை விளக்கி நிற்பதோடு, கம்பனின் படைப்பாற்றலையும் உடன் விளக்குகின்றது என்பதனை மறுக்க இயலாது.

இராமாயணங்களில் அனுமன், ஏன்? பொதுவாக அனைத்து வானரங்களுமே ஏன் குரங்காகப் படைக்கப்படவேண்டும் என்பதற்கு இருவிடைகள் நமக்குக் கிடைக்கின்றன. ஒன்று இராவணன் நந்தியால், 'நீ வானரங்களால் அழியக் கடவாய்' என்று சாபம் கொண்டது. இதனை வான்மீகி உத்தரகாண்டத்து உரைக்கின்ருர் கம்பன் சாபம் பெற்ற வரலாற்றினை விரித்துரைக்காமல சுட்டி மட்டுமே செல்லுகிருன். (இராவணன் மந்திரப் படலம்: 80,106) துளசி இவ்விருவரினும் வேறுபட்டு இராவணன், கும்பகர்ணன், வீடணன் ஆகிய மூவரும் கடுந்தவமியற்றிப் பிரம்மதேவனிடம் வரம் பெற்றனர்; இராவணன் மானிடர்களையும், குரங்குகளையும் தவிரப்பிறர் எவராலும் தான் கொல்லப்படாதிருக்க வரம் பெற்ருன்' என்றமைக்கின்ருர். இச்சாபம் காரணமாகவே வானவர்கள் வானரர்களாகப் பிறக்கின்றனர்.

மற்ருென்று வழக்குக் கதையாகும். நாரதர் இராமனிடம் இராவணனை அழிப்பதற்காகச் சக்தி வழிபாடு மேற்கொள்ள வேண்டினுர். இராமனும் அதற்கிணங்கி வழிபடத் தேவி தோன்றி "நீ உன் செயலைத் தொடங்கலாம். உனக்குத் தேவர்களின் தன்மை வாய்ந்த என் சக்தியோடு கூடின வானரங்கள் உதவியாக இருக்கும்[1] என்று உரைத்து மறைகின்ருள். அதன்படி வானவர்கள் வானரர்களாகத் தோன்றினர் என்பது அக்கதை.

வான்மீகி இராமாயணத்தில் அனுமனின் வரலாறு மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளது. கம்பன் அதனை அவ்வாறு விளக்கி உரையாது ஆங்காங்கே சுட்டிச் செல்கின்ருன். இம்மாறுபாடு ஏன் என்ற வினு எழுவது இயல்பே. கம்பன் இராமாயணம் படைக்கும் முன்பே தமிழ்மக்கள் அனைவருமே அறிந்த ஒன்ருக இராமாயணக்கதை இருந்தது, இராமன் வரலாறுரைக்கும் கதாக் காலட்சேபங்கள் பல அன்றே நடை பெற்றிருக்கின்றன. ஆகவே கம்பன் நிகழ்ச்சிகளைச் சுட்டிச் செல்வதுடன் விட்டு விடுகின்ருன் எனலாம்.

அனுமன் பாத்திரப் படைப்பினைப்பொதுவான நிலையில் ஆராயும் போது அவன் தன்மையில் எந்த ஒரு முரண்பாட்டையோ அன்றி வளர்ச்சியையோ கம்பர் காட்டவில்லை அனுமனின் அறிமுகத்திலேயே அவன் தன்னிகரற்றவன் என்பதனை நாம் அறிகின்ரேம். இராம இலக்குவர்களை எதிர்நோக்கி உரையாடும் துணிவு அவனிடம் மட்டுமே பொருந்தியிருந்தது, அங்கை நெல்லிக்கனி. அறிவு, ஆண்மை, பணிவு, பிறர்க்குத

---

[1] நவராத்திரி: சி. சு. ராகவன் பக்: 17.

வும் பண்பு இவற்றுடன் அனைத்துக் கலைகளிலும் வல்லவன் என்பதனையும் உணர்கின்றோம். இறுதிவரை அவனிடம் இப்பண்புகள் பொருந்தி நின்று ஒளிவிடக் காண்கின்றோம். தான் இராமதூதனாக உயர்ந்து பலரால் பாராட்டப் பெறும் நிலையிலும் தன் பெருங்குணங்களை விட்டகலாத தகைசால் பெருந்தகையாகவே அவன் காட்சி அளிக்கின்றான்.

உண்மை பக்தன் எவ்வாறிருக்க வேண்டும் என்பதனையும் கம்பன் அனுமன் படைப்பின்மூலம் புலப்படுத்துகின்றான். ஆண்டவனிடம் செலுத்தும் இடையறாத தூய அன்பு எலா ஆற்றல்களையும் நல்கும்; அடக்கம் அமரருள் உய்க்கும்; பிறர் நலம் பேணிப் பிறர் பொருட்டு வாழ்பவன் உலகோரால் போற்றப் படுவான்; நீடு வாழ்வான் என்ற அதன் பலன்களையும் வெளிப்படுத்துகின்றான். அனுமனிடம் காணப்படும் இனிய உயர்பண்புகளான தற்புகழ்ச்சியின்மை, பணிவு, புகழில் மயங்காமை இவை மானிடர்க்கு அவன் உணர்த்தும படிப்பினைகளாம். அனுமன் புகழின் அடிப்படையே இவற்றில் தான் அடங்கிக் கிடக்கின்றது. உண்மை பக்தி ஒருவனுக்கு இவற்றை இயல்பாகவே நல்குகின்றது.

அனுமன் அளவிடற்கரிய ஆற்றல்களைப் பெற்றிருந்தும், ஏன் தன் தலைவன் சுக்கிரீவனை வாலியின் சீற்றத்தினின்றும் காக்க இயலவில்லை? சொல்லின் செல்வனாக இலங்குமவன் சுக்கிரீவனின் பிழையின்மையை ஏன் தெளிவுபட வாலியிடம் உரைத்திருக்கக் கூடாது? அல்லது அளவிடற்கரிய ஆற்றல் அடைந்திருக்கும் அவன் ஏன் தானே வாலியை வென்று சுக்கிரீவனுக்கு அரசினை அளித்திருக்கக் கூடாது? அதன் பொருட்டு ஏன் இராம இலக்குவர் நட்பை நாடவேண்டும் என்பன போன்ற பல வினாக்கள் மனதுள் எழுகின்றன. இவற்றிற்குக் கம்பன் எவ்வித பதிலினையும் நேரிடையாகவோ மறைமுகமாகவோ கூறவில்லை வான்மீகி உத்தரகாண்டத்தில் இவ்வினாக்களுக்கு வேண்டிய பதில் உரைக்கின்றார்.

இந்திரனின் வச்சிராயுதத்தால் தாக்குண்டதால் அஞ்சனை புதல்வன் தேவர்களிடம் பல வரங்கள் பெறுகின்றான். இவ்வரங்களால் செருக்குற்று வனத்தில் உள்ள முனிவர்களுக்கு இடர் பல இயற்றவே, 'எந்த வரங்களின் வலியால் நீ இப்படி அனைவரையும் வதை செய்கின்றாயோ அந்த வலியினை வெகுகாலம் வரையில் நீ உணராதிருக்கக் கடவது. பிறர் உன் கீர்த்தியை ஸ்தோத்திரம் செய்தால் அது உன் நினைவிற்கு வரும்' என்று சபிக்கின்றனர். இச்சாபம் காரணமாக, தன்வலி அறியாது வாலி சுக்கிரீவனைப் பலவாறு துன்புறுத்தியும் மாருதி பார்த்துக் கொண்டிருக்கின்றான். சிம்மம் யானையால் மறிக்கப்பட்டு அடங்கியிருத்தல் போன்று வாலிக்கு அஞ்சி அமைதியாயிருக்கின்றான்' என்பதே வான்மீகி உரைக்கும் பதில். இதனை உத்தரகாண்டம் 36 ஆவது சருக்கத்தில் காணலாம்.

ஹனுமான் என்ருல் பருத்த கன்னங்களை உடையவன்;[1] கன்னம் (ஹனு—கன்னம்) முறியப்பட்டவன்; அணுவாகவும், மகாணுகவும் உருவெடுக்க வல்லவன்[2] எனப் பல பொருள்கள் கூறப்படுகின்றன. வால்மீகி கன்னம் முறிந்தமையின் ஹனுமான் என்பர். ஹனுமநான் என்பது ஹனுமான் என்று மருவியது என்பர் திரு. வையாபுரிப்பிள்ளை அவர்கள். இது அனுமான் எனத் தமிழில் வழங்கிப் பின் அனுமன் என ஒலிபபு எளிமை கருதித் திரிந்திருக்க வேண்டும் இத்திரிபு கம்பன் காலத்திற்கு முன்பே தோன்றியிருக்கவேண்டும். கம்பன் அனுமன் என 13;[3] இடங்களில் குறிப்பிட்டு ஆறே இடங்களில் அனுமான் எனக் குறித்துள்ளார். வையாபுரிப்பிள்ளையவர்களின் கருத்து எவ்வளவு பொருத்த முடைத்து என்பது ஆய்விறகுரிபது. காவியம்

---

1 அறம் வளர்த்த நம்பி : சுவாமி சித்பவானந்தர் பக்கம் : 19.

2 கம்பன் காவியம் : எஸ் வையாபுரிப் பிள்ளை பக்கம் : 25;

3 4 : 2 : 15, 4 : 3 ; 72, 4 : 7 : 137, 4 : 7 : 138, 4 : 9 : 67, 4 : 10 : 26, 4 : 10 : 42, 4 : 10 : 81, 4 : 10 : 96 4 : 10 : 117, 4 : 10 : 118, 4 : 11 : 19 4 : 12 : 5, 4 : 13 : 71, 4 : 15 : 19, 5 : 1 : 34 5 : 2 : 57, 5 , 2 : 60, 5 : 3 : 139, 5 : 4 : 23, 5 : 4 ; 32, 5 : 4 : 39, 5 : 4 : 101, 5 : 4 : 104, 5 : 4 : 109, 5 : 5 : 80, 5 : 6 : 60, 5 : 7 : 39 5 : 7 : 48, 5 : 7 : 54, 5 : 9 : 32, 5 : 11 : 15, 5 : 11 : 24, 5 : 11 : 34, 5 : 11 : 35, 5 : 11 : 39, 5 : 11 40, 5 : 11 : 42, 5 : 11 : 62, 5 : 12 : 12, 5 ; 12 : 19, 5 : 12 : 24 5 : 12 : 66, 5 : 12 : 67, 5 : 12 : 68, 5 : 12 : 82, 5 : 12 : 131, 5 : 14 : 14, 5 : 14 : 30 5 : 14 : 51, 5 : 14 : 54, 5 : 14 : 55, 9 : 14 : 58, 5 : 14 : 92, 6 : 5 : 18, 6 : 5 : 61 6 : 13 ; 15, 6 : 14 : 138, 6 : 15 : 161, 6 : 15 : 231, 6 : 15 : 359 6 : 16 : 45, 6 : 16 : 58, 6 : 18 : 32, 6 : 18 : 50, 6 : 18 : 72 6 : 18 : 100, 6 : 18 : 104, 6 : 18 : 115 6 : 18 ; 173, 6 : 18 : 188, 6 : 18 : 230, 6 : 18 : 236, 6 : 18 ; 271, 6 : 18 ; 277 6 : 21 : 19, 6 : 21 : 32, 6 : 21 : 36 6 : 21 : 59, 6 : 21 : 86, 6 : 21 : 125, 6 : 21 : 125, 6 : 21 : 133, 6 : 21 : 153, 6 : 21 : 162, 6 : 21 : 171, 6 : 21 : 174, 6 : 23 : 10, 6 : 23 : 18, 6 : 28 : 20, 6 : 23 : 62, 6 : 23 : 64, 6 : 23 : 85 6 : 23 : 99, 6 : 23 : 114, 6 : 25 : 3, 6 : 25 : 4, 6 : 25 : 5, 6 ; 25 : 16, 6 : 25 : 18, 6 : 25 : 75 6 : 25 : 85, 6 : 26 : 90 6 : 26 : 92, 6 : 26 : 99, 6 : 27 : 23 6 : 27 : 29, 6 : 27 : 71, 6 : 30 : 30 6 : 30 : 43, 6 : 30 : 64, 6 : 31 : 12 6 : 31 : 30 6 : 31 : 33, 6 : 31 : 38, 6 : 31 : 40, 6 : 31 : 42 6 : 31 : 43, 6 : 31 : 45, 6 : 31 : 49, 6 : 36 : 1, 6 : 36 : 36: 6 : 37 : 14, 6 : 37 : 24, 6 : 37 : 174, 6 : 37 : 177, 6 : 37 : 201, 6 : 37 : 250, 6 : 37 : 254. 6 : 37 : 255, 6 : 37 : 304, 6 : 37 : 328, 6 : 37 : 331, 6 : 38 : 22, 6 : 38 : 34, 6 : 38 : 38, 6 : 39 : 8, 6 : 39 : 32.

சமைத்த வால்மீகிமுனிவரே பெயர்க்காரணம்கூறியிருக்கையில் மற்ற இருவரின் கருத்துக்கள் ஐயத்திற்கே இடமளிக்கின்றன, எனினும் புதிய விளக்கங்கள், சிந்தனைகள் என்ற அளவில் ஏற்புடையன.

அஞ்சனை மைந்தன் ஆதலின் ஆஞ்சநேயன், மாருதத்தின் சேய் ஆதலின் மாருதி; வாயுவின்புதல்வன் ஆதலின் சமீரணன் மகன் எனப் பல காரணப் பெயர்களுடன் சிறப்புப்பெயர்களும் அனுமனுக்குப் பல உண்டு. காலின்மதலை, வாயுவின் தனயன், கேசரி புத்திரன், இராமதூதன், காலின் மைந்தன், அஞ்சனை சிங்கம், குரக்குச் சீயம், இராகவன் தூதன், அஞ்சனை சிறுவன், நம்பன் என்பன அவை.

நாயகன் நினைத்தவாறே நினைப்பதும், சொல்லுமாறே சொல்லுவதும், செய்யுமாறே செய்வதும் அவனைச்சார்ந்துநிற்போர்க்கே இயல்பு, நாயகன்பேரொளி அவர்கள் வாயிலாகவும் ஒளிரும். இப்போக்கைக் காவியக்கவிஞர்கள் தம் காவியங்களில் ஆங்காங்கேபுலப்படுத்தியிருப்பர் [1] இதற்குஏற்ற எடுத்துக்காட்டாக இராமாயணத்தில் இலங்குபவன் அனுமன். வ வே.சு அய்யர் 'கம்பனின்அனுமன் வால்மீகியின் அனுமனிலும் பண்பட்டவன். குரங்குப் புத்தியை அணுவளவும் கம்பன் அனுமனிடம் சித்திரிக்கவில்லை' [2] என்று தமது கம்ப இராமாயண இரசனையில் எழுதுகின்றார், இக்கூற்று முற்றிலும் மெய்யே. இச்சிறப்பிற்கு கம்பன் காலமும் அவன் அளப்பரிய திறமையும் அடிப்படைக் காரணங்கள்.

இறுதியாக மேனாட்டுக்காவியங்களில் அனுமன்போன்று இத்தகு சிறப்பமைந்த பாத்திரம் இன்னும் தோன்றாதிருப்பது அனுமன் பாத்திரப்படைப்பின் சிறப்பை இணையற்ற ஒன்றென உணர்த்துகிறது.

---

[1] அழியா அழகு : கி. வா. ஜகந்நாதன்

[2] தமிழ்வட்டம் இரண்டாவது ஆண்டு மலர். பக் : 213.

அறிமுகம்

நமக்கு நன்கு அறிமுகமான நம்வாழ்க்கையுடன் தொடர்புடைய கலைகளில் அறிமுகமும் ஒன்று. அது அனைவராலும் விரும்பப்படுவதும் கூட. இச்சிறப்புடை அறிமுகம் இலக்கியங்களில் அன்று முதல் இன்று வரை காணக்கிடக்கின்றது பாத்திர அறிமுகம் காவியங்களில் இன்றியமையாததொன்றாய் இருப்பதுடன் கவிஞனின் புலமையை அளவிட ஓர் அளவுகோலாகவும் அமைகின்றது. அறிமுகத்தின் மூலமே பாத்திரங்களின் தன்மையை நாம் அளவிட்டு விடலாம். அறிமுகத்திலேயே பாத்திரங்களின் பண்புநலன்களையும் காவியத்தில் பெறும் இடத்தையும் வாசகன் உணரும்படி அமைக்கும் போதுதான் ஆசிரியனும் வெற்றியடைகின்றான்

முன்பின் அறியாதார் சந்திக்கும்போது ஒருவரைஒருவர் இன்னார் என்று அறிவதும் களத்தில் ஒருவர் இருக்கும்போது, அவரைப் பற்றியறிந்த ஒருவர் அறியாத பிறருக்கு அன்னாரைப் பற்றியுரைப்பதும் அறிமுகமாகும். இதனை நேரடி அறிமுகம், நாடக முறை அறிமுகம் என இருவகையாகக் கொள்ளலாம். இலக்கியத்தில் இடம் பெறுவோர் தம்மைத் தாமே அறிமுகப் படுத்திக் கொள்வதும் அல்லது கவிஞன் தானே அறிமுகப்படுத்துவதும் நேரடி அறிமுகம். பிற பாத்திரங்கள் வாயிலாகக் கவிஞன் குறிப்பிட்டபாத்திரத்தை அறிமுகப்படுத்துவது நாடக முறையைத் தழுவி நிற்பது. முற்றிலும் நேரடிமுறையையோ அல்லது நாடக முறையையோ கையாள்வது அத்துணைச் சிறப்பன்று எனவே கம்பன் இரு முறைகளையும் கையாண்டு அனுமனை அறிமுகப் படுத்துகின்றான். பொதுவாகக் காவிய அரங்கில் பாத்திரங்களை அறிமுகப்படுத்தும் கம்பன், புறத்தோற்றத்துடன் அகத்தோற்றத்தையும் விளக்கிவிடல் இயல்பு. அதிலும் அனுமன் அறிமுகத்தில் கம்பன் அவன் அகத்தோற்றத்திற்கே சிறப்பிடம் தருகிறான்.

இனிய இராமாயண காவியத்தில் முதல் மூன்றுகாண்டங்களிலும் காணாத, பாக்கியம் உருக்கொண்டதை ஒக்கும் உத்தம வீரனை அஞ்சனைசேய் அனுமனை நாலாங்காண்டத்தின் தொடக்கத்தில் நாம் சந்திக்கின்றோம். இவனது தோற்றத்திலிருந்தே இராம அவதாரத்தின் அடிப்படை நோக்கத்திற்குரிய முயற்சிகள் தொடங்குகின்றன.

கிட்கிந்தா காண்டத்தின் இரண்டாம் படலமாகிய 'அனுமப்படலத்தில்' தான் அண்ணல்மாருதியை நாம் முதலாவதாகச் சந்திக்கின்றோம். இரவிதன்புதல்வனும் அவன் அமைச்சர்களும் தொலைவில் வரும் இராம இலக்குவரை வரம்பில் ஆற்றலுடைய வாலியிடம் இருந்து வருபவர்களோ என ஐயுற்றுக்கலங்கி, ஓடி

முழையுள் மறைகின்றனர். அஞ்ஞான்று அவர்கள் அனுமனைக் 'காலின் மாமதலை' என விளிக்க நமக்கு அறிமுகமாகின்றான். 'காலின் மாமதலை' என்ற இவ்விளியில் கம்பன் நமக்கு, 'அனுமன் காற்றைப் போன்ற கடுகிய வேகமும் ஆற்றலும், எங்கும் நுழையும் தன்மையும் உடையன்' என்பதைப் புலப்படுத்துகின்றான். மூன்றே சொற்களில் முப்பெரும் உண்மைகளைத் தெளிவு படுத்தும் கவித்திறம் போற்றற்குரிய ஒன்றே.

அழைத்த அவர்கள் அவனைக் 'கறுவுடை வாலி ஏவலின் வரவினர். நீ அவர்கள் யாவரென ஆய்ந்து தெளிந்து வா' எனக் கூறி அனுப்புகின்றனர். இதனால் அனுமன் அஞ்சாமையும், ஆழ்ந்த அறிவும், இன்னல் களையும் இனியபண்பும் உடையான் என்பதும் புலப்படும் அவர்களிடத்து அனுமன் 'இவ்விடத்து இனிது இருமின். அஞ்சல்' என்று கூறிச் செல்கின்றான். அனுமனின் இம்முதலுரை சீதைபொருட்டுச் சூரியன் மைந்தன் சுக்கிரீவன் நட்பினை நாடி வந்துகொண்டிருக்கும் இராம இலக்குவர்க்கும் பொருந்தி அமைகின்றது. அனுமனின் இனிய பண்பினைக் கம்பன் இம்முதல் மொழி மூலமும் உயர்த்துகிறான். இவ்வறிமுகம் நாடகப்பான்மையில் அமைந்துள்ளது.

வான்மீகி, அரசனுக்கு அறிவுரை கூறும் அமைச்சனாகவே அனுமனை முதன் முதலில் காட்டுகின்றார். வரும் வீரர்கள் இன்னார் எனவறியாது அஞ்சுவதும் ஓடி முழையுள் ஒளிவதும் அரசனுக்கு ஏற்புடையன அல்ல என அறிவுரை பகர்கின்றான். துளசி அவரினின்றும் மாறுபட்டுக்கம்பன் காட்டும் அனுமனைப் போல அஞ்சாமையும், ஆராயும் அறிவும், பிறர் இன்னல் தவிர்க்கும் இனியனாகவும் காட்டுகின்றார்.

அனுமன் தன்னைத்தானே அறிமுகப்படுத்திக்கொள்ளும் சிறப்புடை இடங்கள் நான்கு. அனுமன் பிறரிடம் தன்னை அறிமுகப படுத்திக் கொள்ளும் போது அவனின் சில பண்புகள் வெளிப்படுகின்றன. ஆதலால் அவ்விடங்களையும் இக்கட்டுரையில் இணைத்தல் பொருந்தும் எனக் கருதி இங்கு பேசப்பட்டுள்ளன.

சுக்கிரீவனின் ஐயம் தெளிக்க வரும், ஊழியின் உலகேழ் தேயினும் ஒருதன் புகழிறைதேயாதானகிய மாருதி இராம இலக்குவர்களிடம் தன்னைத்தானே அறிமுகப்படுத்திக் கொள்கிறான். அஞ்சனைக்கொரு சிறுவனாகிய அனுமன் மாணவப்படிவமொடு, அஞ்சனக் கிரியனைய மஞ்சனைக் குறுகிக் 'கவ்வை இன்றாக நும் வரவு' என வாழ்த்துத் தெரிவிக்கின்றான். முன்பின் அறியாத அயலான் ஒருவன் தங்களிடம் வந்து தானே பேச, வியப்புற்ற இராமன், 'எவ்வழி நீங்கியோய் நீ யாரென' வினவுகின்றான். அவ்விடத்து அனுமன் தன்னை, 'யான் காற்றின் வேந்தர்க்கு அஞ்சனை வயிற்றில் வந்தேன். நாமமும் அனுமன் என்பேன், என்று அறிவிக்கின்றான். இத்துடன் தான் ருசியமுகபர்வதமாகிய இம்மலையிலிருந்து வாழும் எரிகதிர்ப் பரிதியின் செல்வன் சுக்கிரீவனுக்கு ஏவல்செய்வேன்' என்று மொழிந்து தன் அடக்கத்தினையும் வெளிக் காட்டுகின்றான்.

"மஞ்சு எனத்திரண்ட கோல மேனிய மகளிர்க் கெல்லாம்
நஞ்சு எனத் தகைய வாகிநளிர்இரும் பனிக்குத் தேம்பாக்
கஞ்சம்ஒத்தலா ந்த செய்யகண்ணயான் காற்றின்வேந்தற்
கஞ்சனை வயிற்றில் வந்தேன்; நாமமும் அனுமன்என்பேன்"

'இம்மலை யிருந்து வாழும் எரிகதிர்ப் பரிதிச் செல்வன்
செம்மலுக் கேவல் செய்வேன்'' (அனுமப்படலம் :15 ;16)

என்பனவே அவன் வாய்மொழி.

வான்மீகியில் சன்னியாசிக் கோலத்துடன் வருகின்றான் அனுமன். இராம இலக்குவரைப் புகழ்ந்துரைத்து, 'நான் இவ்வளவு சொல்லியும் எனக்குப் பதிலுரையாது இருப்பதேன்? இங்கு ஸுக்கிரீவன் என்ற ஒரு வானர ராஜா இருக்கிறார். அவர் மஹாவீரர். தமையனால் வஞ்சிக்கப்பட்டுத் துக்கமடைந்து திரிகிறார். அந்த மஹாத்மா என்னைத் தங்களிடத்து அனுப்பினார். என் பெயர் ஹனுமான். நான் வாயுவின் புத்திரன். அரசனுக்கு முக்கிய மந்திரி. அவர் இஷ்டப்படி ஸந்யாசி உருவங்கொண்டு ரிச்யமுக பர்வதத்திலிருந்து இங்கே வந்தேன். நான் நினைத்த ரூபங்களை எடுக்கக் கூடியவன்' என்று கூறியபின் சாதுர்யமாகப் பேசுபவர்களுள் சிரேஷ்டரானமாருதி தான்வந்தகாரியத்தைத் தெரிவித்து அவர்களுடைய பதிலைக் கேட்க விரும்பி மௌனமாக இருந்தார்,' என்று வால்மீகி அமைக்கின்றார்.

எம்மலைக்குலமும் தாழ இசைசுமந்ததோளான் அனுமன் கற்பின் செல்வியிடம் அறிமுகமாகும் இடமும் இன்றியமையாதது. அசோகவனத்தில் அறத்தின்செல்வியை அணுகக் காலம் பார்த்துக் காத்திருக்கின்றான் அனுமன். புண்டரிகக்கண்ணுழிப் புரவலன் பிரிவாலும் அரக்கன் இராவணன் சிறுமையாலும் உயிர்துறக்க எண்ணி, அதனைச் செயலாக்க, சீதை முனைகிறாள் அதனைக் கண்ணுறும் அனுமன் காகுத்தன் தேவியைக் காக்க அவள் முன் தோன்றி 'அண்டர் நாயகனின் அருள்தூதன் யான்' எனத் தன்னை அறிமுகப்படுத்திச் சிறையிருந்த செல்விக்கு— உயிர்ச்சிறை சிதைக்க முற்பட்ட செல்விக்கு உயிரளிக்கின்றான். இவ்விடத்துக் கம்பன் அனுமனின் நுண்ணறிவினை வெளிப்படுத்துகின்றான். சீதை அனுமனை யாரென வினவ, தன்னை இராமன் இங்கு அனுப்பியதாகவும், இராம சுக்கிரீவர் இடை உள்ள நட்பினையும் கூறி,'

'... ... ... எங்கள்
மன்னவன் தனக்கு நாயேன் மந்திரத் துள்ளேன் வானின்
நன்னெடுங் காலின் மைந்தன் நாமமும் அனுமன் என்பேன்'
(காட்சிப்படலம்: 32)

என்றுரைக்கின்றான்.

இவ்விடத்தும் வான்மீகியார் மிகுதியாக வேறுபடுகிறார். அனுமன் சீதையைக் காத்துத் தன்னை இன்னான் என்று ஐயம் ஏற்படா வகையில் அறிமுகப் படுத்த ஒரு மரத்தின் மீதிருந்து இராமன்சரிதம் கூறுகின்றான். இதன்பின் சீதை இறக்கப்புகும் தன்முயற்சியைக்கைவிட அனுமன் அவள் அருகில் வருகின்றான்.

அவள் வினவ இராம—சுக்கிரீவர் நட்பின் வரலாற்றை மிக விரிவாக எடுத்துரைத்துப் பின் 'நான் ராமதூதன்; வாயுபுத்திரன்; சுக்கிரீவன் மந்திரி; ராமனால் அனுப்பப்பட்டு இங்கு வந்தேன். வானரனான நான் எவ்வாறு வாயுபகவானுக்குப் புத்திரனாக இயலும் என்று தாங்கள் நினைக்கலாம்,' என்று கூறித் தன்னுடைய பிறப்பினையும் கூறுகின்றான். வான்மீகியின் அனுமன் வரலாறே கூறித் தன்னை அறிமுகப் படுத்திக் கொள்ளக் கம்பனின் அனுமன் தன்னை ஒரே தொடரால் அறிமுகப்படுத்திக் கொண்டு சிறப்படைகின்றான். துளசியில் அனுமன் தன்னை இராகவன் தூதன் என்று மட்டுமே கூறுகின்றான்.

பரதனிடமும் தன்னை அறிமுகப் படுத்திக் கொள்ளும் வாய்ப்பு அனுமனுக்குக் கிடைக்கிறது. தூயோன் இராமனின் தூதுவனாகச் சென்று அறத்தின்நாயகனவன் வரவினை உணர்த்துகின்றான். அனுமன் மறையவர் உருக்கொண்டு அணுகிய அஞ்சனைசேயை, 'முத்திறத்தவருள் ஒருவன் மூர்த்தியை ஒத்திருந்தாய். நீ யார் என்பதை அறியச் சொல்வாயாக,' எனப் பரதன் வேண்டுகின்றான்.

அறைகழல் அனுமன்,

> காற்றினுக் கரசன்பாற் கவிக்கு லத்தினுள்
> நோற்றுளாள் வயிற்றின்வந் துதித்து நும்முனாற்
> கேற்றிலா வடித்தொழி லேவ லாளனேன்
> மாற்றிஎன் னுருவொரு குரங்கு மன்னயான்'
>
> (மீட்சிப்படலம் ; 256)

என விடையிறுக்கின்றான். 'நும் முன்னவன் பெருமைக் கேற்றவாறன்றி அவன் தகுதிக்கு ஏலாத சிறிய அடிமைத் தொழில் செய்பவன்' என்று பணிவோடு தன்னைத் தாழ்த்தி உரைக்கும் அனுமன் நம்முன மிகுதியும் உயர்கிறான். வான்மீகியும் துளசியும் காட்டும் அனுமனும் நமக்கு இவ்விடத்துக் கம்பனின் அனுமனோடு முரண்படவில்லை.

அனுமன் தன்னை அறிமுகப்படுத்திக்கொள்ளும் மற்றொரு சிறப்பான இடம் இராவணனிடமாகும். இந்திரசித்தின் பிரமாத்திரத்தால் கட்டுண்ட அனுமன் இராவணன் பால் கொண்டு செல்லப்படுகிறான். தன் மைந்தன் அட்சகுமாரன் மறைவிற்கும் மற்றும் எண்ணிறந்த வீரர்களின் துஞ்சலுக்கும் காரணமான அரிக்குலத்து அண்ணலை இராவணன்,

> 'நேமியோ குலிசியோ நெடுங்கண்ச்சியோ
> தாமரைக் கிழவனோ தறுகட் பஃதலைப்
> பூமிதாங் கொருவனோ பொருது முற்றவான்
> நலமும் உருவமும் கரந்து நண்ணினாய்'
>
> (பிணிவீட்டுப் படலம் ; 70)

என்று வினவுகின்றான். இலங்கை வேந்தனின் இவ்வினா அனுமனின் அளவில் ஆற்றலை வெளிப்படுத்துகின்றது. அனுமன் இதற்குரைக்கும் பதில் அவன் அஞ்சாமையையும் உணர்த்து

கின்றது. அவன்றன் தலைவன் ஆற்றலும் வெளியாகின்றது. இக்காட்சி, கந்தபுராணத்தில் முருகனால் தூதனுப்பப்பட்ட வீரபாகுத்தேவர் சூரபன்மனிடம் தன்னை அறிமுகப் படுத்திக்கொள்வதினை நினைவூட்டுகின்றது.

அனுமன்,

'சொல்லிய அனைவரும் அல்லென், சொன்ன அப்
புல்லிய வலியினோ ரேவல் பூண்டிலேன்
அல்லியம் கமலமே யனைய செங்கணோர்
வில்லிதன் தூதன்யான் யிலங்கை மேயினேன்'

(பிணிவீட்டுப்படலம் ; 74)

எனத் துணிவுடன் விடைமொழிகின்றான் சொல்லிய அப்புல்லிய வலியினோர் என்பதன் மூலம் இராமன் வன்மையை உயர்த்துகின்றான். இராமனின் இணையற்ற சிறப்புக்களையெல்லாம் இயம்பி 'அன்னவற்கு அடிமை செய்வேன்; நாமமும் அனுமன் என்பேன்' என்று கூறும் போது அவனது இராமபக்தியும் தெரிய வருகின்றது.

வால்மீகியில் நந்திதேவராக இருக்கலாம் என ஐயுறும் இராவணன் ஏவ பிரஹஸ்தன் 'நீ யார் தேவர்கள் யாரேனும் நின்னை ஏவினரோ' என வினவுகின்றான் அதற்கு அனுமன், 'நான் வானவர் எவராலும் அனுப்பப்படவில்லை. எனைத் தேவர்களும், அசுரர்களும் அஸ்திரங்களும் கட்டுப்படுத்த முடியாதெனப் பிரமன் வரங்கொடுத்திருக்கின்றான். ரகுவீரனால் அனுப்பப்பட்டேன்' என்கிறான். துளசி பெரும்பான்மை கம்பனை ஒட்டியே இக்காட்சியைப் படைத்துள்ளார்.

கம்பனில் அனுமன் தன்னைத் தானே அறிமுகப்படுத்தும் முதல் மூன்றிடங்களிலும் அன்பும், ஆர்வமும் கலந்த பணிவினைக் காண்கின்றோம் நான்காமிடத்தில் பகைவனுக்குத் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்வதால் அஞ்சாது பெருமையுடன் மொழிகின்றான். இவ்விடங்கள் அனைத்துமே ஆழ்ந்த அறிவோடு அளவோடு அழகாக அமைந்துள்ளன. அவன் நுண்மான் நுழைபுலம், சொல்வன்மை, வீரம் இவற்றிற்குத் தகுந்த சான்றுகளாகவும் அமைகின்றன. தற்புகழ்ச்சி சிறிதும் காணவில்லை. உயர்பண்பினோர் எவ்வண்ணம் தம்மை அறிமுகப்படுத்துவரோ அவ்வண்ணமே அனுமனும் அறிமுகம் செய்து கொள்கின்றான்.

இக்காவியத்துள் கம்பன் அனுமனைச் சொல்லின் செல்வனாக, மெய்ம்மையின் வேலியாக, நல்லமைச்சனாக, தூதனாக, இணையற்ற போர்வீரனாக, கடமை மறவாச் செயல் வீரனாக, தெய்வமாக, மானிடனாக, சாதாரணக் குரங்காக எனப்பல வடிவங்களில் காட்டுகின்றான். அவ்வடிவங்கள் அனைத்திற்கும் அவன் ஏற்றவனாகவே காட்சியளிக்கின்றான்.

'அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண்' (குறள்; 983)

என்று வள்ளுவர் சான்றாண்மைக்கு இலக்கணம் வகுக்கின்றார். சுற்றத்தார் மாட்டன்றிப் பிறர்பாலும் உளதாய அன்பும், பழி நாணலும், யாவர் மாட்டும் ஒப்புரவு செய்தலும், பிழைததோர மாட்டுக் கண்ணோட்டலும், எவ்விடத்தும் மெய்ம்மை கூறுதலு மாகிய இவ்வைந்தினையும் அனுமன் ஒருங்கே பெற்று இக்காவி யத்தில் சிறந்த சான்றோனாக விளங்குகின்றான்.

அனுமன்—இன்றியமையாமை

ஒரு காவியத்தில் இடம்பெறும் கதைமாந்தரை உயிர் நிலைமாந்தர், துணைநிலை மாந்தர் என இருவகைப் படுத்தலாம். யார்யார் இன்றி அக்காவியம் இயங்காதோ அவரே உயிர்நிலை மாந்தர். ஏனையோர் துணைநிலை மாந்தர். இராமகாவியத்தில் இராமன், சீதை, அனுமன், கைகேயி, சூர்ப்பணகை, இராவணன் ஆகிய இவர்களை முதன்மையான உயிர்நிலை மாந்தர் எனலாம். தசரதன், இலக்குவன், பரதன், மந்தரை, மாரீசன், சுக்கிரீவன், கும்பகர்ணன், இந்திரசித்து ஆகியோர் சிறப்புடைத்துணைநிலை மாந்தர் எனலாம். சுக்கிரீவன் இராமனின் இனிய நட்பினன் எனினும் செங்கைத்தனுவாகச் செயலாற்றி, இராமாயணத் திற்கு வெற்றியளிப்பவன் அனுமனே. காவியக்களத்தில் நாம் அனுமனைக் காணுந்தொறும் தன் இன்றியமையாமையைத் தன் சொல்லால், செயலால் ஆற்றலால் வெளிப்படுத்துகின்றான். தான் இன்றி இராமாயணம் இல்லை என்பதனை ஐந்து இடங்களில் மிகத்தெளிவாக அனுமன் காட்டுகின்றான் அவை அனுமன் புகழின் அழியாச் சின்னங்களாய் அமைந்துள் ளன. இராமனுக்குத் தொண்டு செய்தலே தன் குறிக்கோள் எனக்கொண்ட இலக்குவன் தொண்டும் அனுமனின் தொடர் பிற்குப் பின் ஒளிமழுங்கி விடுதலை மறுக்க முடியாது.

கைகேயி, சூர்ப்பணகை போன்றோர் காவியத்தில் ஒரி டத்திலேயே சிறப்பிடம் பெறுகின்றனர். அனுமன் அவ்வா றல்ல. அவன் இன்றியமையாமையைக் காவியத்தலைவன் காகுத்தனே பல இடங்களில் சுட்டுகின்றான் மாருதியுடன் ஏற்பட்ட முதல் சந்திப்பிலேயே,

'ஆணிஇவ் வுலகுக்கு எல்லாம் என்னலாம் ஆற்றற்கு ஏற்ற
சேண்உயர் பெருமை தன்னைச் சிக்கறத் தெளிந்தேன்பின்னர்க்
காணுதி மெய்ம்மை.'

(அனுமப்படலம்: 19)

யென்று தம்பியிடம் கழறுகின்றான். இவ்வுலகினுக்கெல்லாம் அச்சாணியென்றே சொல்லக்கூடிய இவன் திறமைக்கு ஏற்றதாகிய மிக உயர்ந்த பெருமையை ஐயமின்றித் தெளிந்தேன். அது மெய்ம்மையாதலை நீயும் பின்னர்க் காண்பாய்' என்னும் வரிசிலைக்குரிசிலின் கூற்றினை அனுமன் எவ்வாறு மெய்ப்பிக்கின்றான் என்று காட்டலே இக்கட்டுரையின் நோக்கம்.

இராம-சுக்கிரீவர் நட்பு:—

இராமாயணத்தின் திருப்புமையங்களுள் ஒன்றாக இருப்பது இராமசுக்கிரீவர்களுக்குள் தோன்றிய தலைசிறந்த நட்பு. இந் நட்பினால் இராமன் சீதை இருக்குமிடம் அறிகின்றான். இராவணாதியர்களை வதம் செய்கின்றான். இராமாயணத்தின் நோக்கம் நிறைவேற இராம சுக்கிரீவர் நட்பு இன்றியமையாததாகின்றது. இத்திருப்புமையத்திற்கு மூலகாரணமாய் இருந்த மங்காப்புகழ் பெறுகின்றான் அனுமன். தங்களைக் கண்டு அஞ்சி ஒளியும் சுக்கிரீவனை, அஞ்சனை மைந்தனின்றி இராம இலக்குவர் எங்ஙனம் காண இயலும்? நட்பினராக முடியும்? கோதில் சிந்தை அனுமனின் அறிவும், அஞ்சாமையுமே இங்குச் செயலாற்றுகின்றன

இராம இலக்குவரைக் கண்டு, மூலம் ஓராது அஞ்சி ஓடும் நோன்மைசால் கவியரசாம் சுக்கிரீவனுக்கும் அவன் அமைச்சர்களுக்கும் இடைஉதவி, அஞ்சனைக்கு ஒரு சிறுவனாகிய அனுமன் மாணவப் படிவமொடு அஞ்சனக்கிரியனைய மஞ்சனைக் குறுகுகிறான். அயல் மறைந்து நின்று அவர்களைக் கண்ணுற்று சுக்கிரீவன் எண்ணம் தவறென உணர்கின்றான். இவர்கள் தவமெய்யர்; தருமமும் தகவும் இவர்தாம் எனும் தகையர்.

'கதமெனும் பொருண்மையிலர் கருணையின் கடலனையர்
இதமெனும் பொருளல தொரியல்புணர்ந் திலரிவர்கள்
சதமனஞ் சுறுநிலையர் தருமனஞ் சுறுசரிதர்
மதனனஞ் சுறுவடிவர் மறலியஞ் சுறுவிறலர்'

(அனுமப்படலம்:6)

என ஓர்கிறான் தன் பெருங்குணத்தால் தன்னைத்தான் அலது ஒப்புஇலாதானாகிய அனுமன் தன் தலைவனுக்கு இழந்தவாழ்வை மீட்டுத்தரக் கூடியவர்கள் இவர்களே எனத் துணிகிறான்.

கொடிய விலங்குகளும் கூடத் தம் கன்றைக் கண்ட தன்மையன போல் அவர்களைக் கண்ட அன்பு மிகுதியால் பின் செல்வதைக் காண்கிறான். மயில் முதலிய பறவைகள் வெயில் படாதவாறு விரிசிறை விரித்துப் பந்தர் இட்டுச் செல்கின்றன. கனல் எனக் காயுங்கற்கள் தூய செங்கமலப் பாதம் படுந்தோறும் தேன்நிறை மலர்களெனக் குழைகின்றன. எல்லாத் திசைகளிலும் மரனொடு புல்லும் தொழுவபோல் சாய்வுறுகின்றன. இவற்றையெல்லாம் கண்டு அண்ணல் அனுமனுக்கு என்பும் நெக்குருகுகின்றது. அளவில் காதல் இவர்கின்றது. இராமன் திருமாலின் அவதாரமே எனத் துணிகின்றான்.

அவர்களும் அருகில் வரக் 'கவ்வை இன்றாக நுங்கள் வரவெனக் கூறி முன் தோன்றுகின்றான். இராமன் யாரென வினவத் தன்னைப் பற்றித் தெரிவிக்கின்றான். மெய்ம்மை சேர் உள்ளத்து அண்ணலின் சொல்லாற்றலினால் சிந்தை மகிழ்ந்த இராமன் தாங்களும் சுக்கிரீவனைத் தேடியே வருவதாகக் கூறி அவன் இருப்பிடம் காட்ட வேண்டுகின்றான் மருத்தின் புதல்வனும், 'எரிகதிர்ச்செல்வனின் செய்தவம் நன்று,' எனமகிழ்ந்து சுக்கிரீவனின் இரங்கத்தக்கநிலையை எடுத்துரைக்கின்றான். பின்

'கொடுங்குலப் பகைஞனுக்கிக் கொல்லிய வந்தகூற்றை
நடுங்கினர்க்கபயநல்கும் அதனினும் நல்லது உண்டோ'
(அனுமப்படலம் : 23)

என நவின்று தங்களுக்குப் புகலிடம் வேண்டுகிறான். இங்கு அனுமன், இராம சுக்கிரீவர் நட்பிற்கு வித்திடுகின்றான். இலக்குவன் மூலமாக அவர்கள் இராம இலக்குவர் என்பதறிந்து பேருவகை கொள்கிறான். தருமத்தின் தனிமை தீர்ப்பவன் தன் மெய்யுருக் காட்டுகின்றான்.

அஞ்சிநிற்கும் பரிதிசேயைத் தனிமையில் தேற்றி, மேல் நடக்கவிருக்கும் செயல்களை அறிவுறுத்தி, அதற்கேற்பச் செயல்பட வைக்கவேண்டும் என எண்ணுகின்றான் அனுமன். ஆதலின் இராம இலக்குவர்களிடம், 'சென்று அவன் தன்னை இப்பொழுதே கொணர்கின்றேன் சிறிதுபொழுது இங்கு இருப்பீர்' என விடைபெற்று விரைகின்றான் சுக்கிரீவனை நேரில் வந்து அழைத்துச் செல்லுதல் மேலும் சிறப்பாக இருக்கும் என்ற துணைக்காரணத்தையும் அனுமனின் இக்கூற்றுக்குக் கொள்ளலாம். தன்தலைவனுக்குத் தகுந்த துணையைத் தேடித்தந்து விட்டோம்எனமகிழ்கின்றான். 'சலனபுத்தியும், கோபாவேசமும்இந்திரிய வசபபட்ட நிலையும் கொண்ட வானரத் தலைவர்களுக்குப் புத்திசாதுர்யம், சகிப்புத்தன்மை, புலனடக்கம் ஆகிய அருங்குணங்கள் படைத்த இராமன் அவர்களை உய்விக்கும் நண்பனாக அமைவான் என்று அனுமன் எண்ணியிருக்கவேண்டும்' என்பர் பெ. திருஞானசம்பந்தம்.

இராமனும் 'நல்லன நிமித்தம் பெற்றோம்; நம்பியைப் பெற்றோம்; நம்பால் இல்லையே துன்பமானது; இன்பமும் எய்திற்று.' என்று கூறுகின்றான். அனுமனைக் கண்டு சில சொல்லாடிய அளவில் தன் துன்பம் எல்லாம் தவிர்ந்து இன்பம் எய்தியதாகச் சீதைகேள்வன், உரைப்பதன் மெய்ம்மையை நாம் பின் வரும் அனுமன் செயல்களால் உணர்கின்றோம்.

அரசனை அணுகிய அனுமன் 'யானும் உன்குலமும் இவ்வுலகும் உய்ந்தனம். வாலி என்ற வரம்பிலா வலியினான் உயிர் தெறக் காலன் வந்தனன். நாம் இடர்க்கடல கடந்தனம்' என்று ஆரவாரிக்கின்றான். நீதியா நினைமின் என்று அனுப்பியவர்களிடம் நிலையான இன்பம் நெருங்கி வருவதை உணர்த்துகின்றான்.

சுக்கிரீவன் ஐயம் அகற்ற,

'சூழிமால் யானையார் தொழுகழற் றயரதன்
பாழியா லுலகெலா மொருவழிப் படரவா
ழாழியான் மைந்தர்பே ரறிவினா ரழகினா
ரூழியா ரெளிதுனக் கரசுதந் துதவுவார்.'

(நட்புக்கோட்படலம்: 4)

என்றுரைக்கின்றான். இங்கு அநுமன் சொற்களை அடுக்கிக்கூறும் முறையிலேயே அவனுடைய அளவுகடந்த மகிழ்வு மனக்கண் முன் தோன்றுகிறது. எண்ணம் பிழையாதான் மிக விரிவாக இராமன் ஆற்றிய அருவினைகளையெல்லாம் தொகுத்துரைக்கின்றான். இராமன்பால் சுக்கிரீவன் கொண்டுள்ள ஐயத்தையும் அச்சத்தையும் அகற்றவே இங்ஙனம் அகலமாக உரைக்கின்றான். இராம இலக்குவர்களைக்காண முனிவரும் பிறரும் முற்காலந்தொட்டு தத்தமக்கியன்ற வண்ணம் தவம் புரிகின்றனர். அத்தவப்பலனைய் இராகவனைக்கண்டு இருவினைக் கட்டினையறுத்து இன்னல் நிறை இவ்வுலகம் விடுத்து உயர்ந்தோர் பலர் என்கிறான். அந்த இராம இலக்குவர்களே உன்னை நாடி வந்துள்ளனர் எனின் எத்தகு அரிய வாய்ப்பு ஈதென்றறிந்து நழுவவிடாது பற்றிக்கொள் என்கின்றான்.

மாயையால் மதியிழந்த இராவணன் சிறைசெய்த சீதையைத் தேடுகின்றார்கள்; நீ ஐயா தவம் இழைத்துடைமையால், நெடுமணம் தூய்மை உடைமையால் உன் உறவினைத் துணிகுவார். நீ அதனை ஏற்பின் தகைநெடும் பகைவனும் இந்திரன் சிறுவற்கின்று இறுதி இசைதரும். ஆகலின் நீ அவண் அவசியம் சொல்லவேண்டும் என்று அறைகின்றான்.

மந்திரம் கெழுமு நூல் மரபுணர்ந்து உதவுவானின் சொற்களைத் தன்னறிவினால் உணரும் இரவி மைந்தன் இராகவனிடம் செல்கின்றான். இராம இலக்குவர் சுக்கிரீவனைக் காண்டற்கும், இவரிடையே நட்பு ஏற்படற்கும் அநுமனே இடைப்பாலமாக நின்று செயலாற்றலை இங்குக் காண்கின்றோம். சுக்கிரீவனும் இராமனைக் கண்டதும் 'தேவர்கட்கெல்லாம் தேவராகிய கடவுளே தம் உருமாறி இப்பிறடபில் மானிடராய் வந்துள்ளார். ஆதலால் ஆறுகொள் சடிலத்தானும், அயனும் என்று இவர்கள் ஆதிவேறு உள குழுவையெல்லாம் மானிடம் வென்றது' என்றும் தெளிகின்றான். இவ்வாறு எண்ணி மேலும் மேலும் வளர்கின்ற அன்பு என்னும் அலைகளையுடைய ஒலிநிறை கடலில் நின்று கரையேறுமல், கண்கள் இரண்டும் களிக்குமாறு நெடிது நோக்கிக்கொண்டு குற்றமற்றவனாகிய இராமனை நெருங்குகின்றான் அவ்வண்ணலும் அருத்தி கூர, புனைமலர்த் தடக்கை நீட்டி, 'வந்து இனிதாக அமர்க,' என உபசரிக்கின்றான்.

பற்றற்ற சிந்தையுடைய குற்றமற்ற இராமனும், குரங்கினத்து வேந்தாம் சுக்கிரீவனும் ஒருங்கிணைந்திருந்த கோலம், கெடாத வலியுடைய அரக்கர் என்கிற தகாத பகையாகிய இரு

ளையழித்து, குவால் அறம் நிறுத்தற்கு ஏற்ற காலத்தின் கூட்டம்போன்று அமைந்திருந்தது. 'யாங்கள் உற்றகையறு துன்பம் கடப்பது கருதி வந்தோம் நின்னால் அப்பெருந்துயர்தீரும்' என்று இராமன் நவில்கின்றான் சுக்கிரீவனும் தன்குறை நவின்று, சரண் உனைப்புகுந்தேன்; தாங்குதல் தருமம் என்கின்றான். அக்குரக்கு வேந்தை, இராமன் இரங்கி நோக்கி

உன் தனக்கு உரிய இன்பதுன்பங்கள் உள்ள முன்னாள்
சென்றன போக, மேல்வந்து உறுவன தீர்ப்பல், அன்ன
நின்றன எனக்கும் நிற்கும் நேர்' என மொழியும் நேரா'

'மற்றினியுரைப்பதென்னே வானிடை மண்ணி லுன்னைச்
செற்றவ ரென்னைச் செற்றார் தீயரே யெனினு முன்னோ
டுற்றவ ரெனக்கு முற்றார் உன்கிளை யெனதென் காதற்
சுற்றமுன் சுற்றம் நீயென் னுயிர்த் துணைவ னென்றான்'

(நட்புக்கோட்படலம் 26, 27)

இதனைக்கேட்டவுடன் வானரங்கள் ஆர்க்கின்றன. அஞ்சனை சிறுவனின் மேனியைப் பொடித்த ரோமப்புளகங்கள் போர்க்கின்றன. உடன் ஆண்டு எழுந்து, அடியில்தாழ்ந்து அஞ்சனை சிங்கம் 'வாழி தூண்திரள் தடந்தோள் மைந்த! தோழனும் நீயும்வாழி' எனவாழ்த்தி, சுக்கிரீவனின் இருக்கைக்கு வருமாறு அழைக்கின்றான். அனைவரும் போக பூமியையும் ஏசும் புது மலர்ச்சோலை புகுகின்றனர்.

இராம இலக்குவர்க்கு இலக்குமியாம் சனகியைப் பற்றிய கவலை; அனுமனுக்கோ தன்தலைவன் இழந்தநாடுகிடைக்கவேண்டுமே என்ற கவலை. வில்வீரன இராமனைக் கண்டவுடன் அக்கவலையகன்று எரிகதிர்ச்செல்வன இழிநிலை அழியும்என முடிவு கொள்கிறான். அதனை விரைவுபடுத்த எண்ணியிருந்த அனுமனுக்கு, இராமன், 'பொருந்தியே நன்மனைக்குரிய பூவையைப் பிரிந்துளாய் கொலோ நீயும்' என்று இரவிமைந்தனை வினவியது இணையில் இன்பம் நல்குகின்றது. தக்கதருணத்தை எதிர்நோக்கியிருந்த அவன், 'இந்திரன் மைந்தன்; இணையிலா ஆற்றலன்; வாலி' பற்றிய வரலாற்றையே மிக விரிவாகக் கழறுகின்றான். சுக்கிரீவன்பால் சூரியகுலமைந்தனுக்குப் பரிவு பெருகும்படிச் செய்து வாலியை விரைவில் வீழ்த்துவதிலேயே அவன் சிந்தை செயல்படுவதை இவ்வாக்கு உறுதிப்படுத்துகின்றது. அவ்வெண்ணமும் ஈடேறுகின்றது. வாலிவதைக்கு அனுமனே ஆதாரசுருதி என்பதனைச் சாம்பனின், 'அறிந்து திறத்தாறெண்ணி யறத்தாறழியாமை மறிந்துருளப் போர்வாலியை வெல்லும் மதிவல்லீர்' என்னும் கூற்றும் உறுதி செய்யும்.

இராமனுக்கும்சுக்கிரீவன் நட்பு, நீலன், நளன், சாம்பன் போன்ற இணையற்ற வானரத் தலைவர்களின் ஆற்றல் நிறைந்த எழுபது வெள்ளம் எண்ணிக்கையுள்ள வானரப்படையை நல்குகின்றது. துணை நாடிவந்த அத்தயரதன் மைந்தனுக்குத் தக்க

துணையும் கிடைக்கிறது. இவ்வானர வீரர்களின் பெருமையை. அதனுல் இராமன் அடைந்த வெற்றியை யுத்தகாண்டத்தில் மிக அழகாகக் காட்டுகிருன் கம்பன். (மறம்களைந்து அறம் நிலை நிறுத்தத் தோன்றிஞன் இராமன் அண்ணலின் அவ்வெண்ணம் ஈடேறக் கருவியாய்ச் செயலாற்றியவன் அனுமன்.)

வால்மீகியாரும் துளசிதாசரும் கம்பனின்றும் சிறிதே வேறுபட்டுள்ளனர். வால்மீகியார் அனுமன் 'இராம இலக்குவரைத் தானே தன்தோளில் தூக்கிக்கொண்டு ரிசியமுக பர்வதத்திற்கு வந்தான். சுக்கிரீவனிடம் இராம இலக்குவர் பற்றிப் பகர்ந்து அவன் மனம் தெளிவித்து அழைத்து வந்தான்' என்பர். விரிசிலைக்குரிசில் இராமனின் பராக்கிரமங்களைக் கம்பன் இவண் விரிவாகக் கூற வால்மீகியார் சுருங்கவே கூறுகிருர்.

துளசியில், வந்திருப்பவர்கள் இராம இலக்குவர்கள் என அறிந்தவுடன் அனுமன் வணங்கித் தன்னைக் காக்கவேண்டும் என முதலில்வேண்டுகின்ஞன் இராமன் அதனை ஏற்றுக்கொள்ள, பின் பரிதி சேய்பற்றிக் கூறி அவனை நண்பனுகக் கொண்டு அடைக்கலம் அளித்தால் அவன் சீதையைத் தேடித் தருவான் என்கின்ருன். அதன்பின் அவ்விருவரையும் தன் முதுகில் ஏற்றிக் கொண்டு செல்கின்ருன். இங்கு அனுமன் சுக்கிரீவனிடம் இராமனைப்பற்றி யேதும் கூறவில்லை. இராமனைக் கண்ட அளவில் சுக்கிரீவனேபிறவிப்பயன் பெற்றவன்போல் மகிழ்ந்து வணங்குகின்ருன். அனுமன் அக்கினியைச் சாட்சியாக்கி நட்பைஉறுதி செய்கிருன்.

சீதையைத் தேடியது:—

'எனக்கு உரியது ஆயகருமம் இயற்ற ஒத்த சான்றவர் நின்னின் இல்லை' என்ற இராமன் கூற்றை இவண் அனுமன் மெய்யாக்குகின்ருன். தென்றிசையில் மிதிலைச் செல்வியைத் தேடி அங்கதன் தலைமையில் வரும் வானரவீரர்களில் அனுமனும் ஒருவன், எங்கும் சீதையைக் காணுமையின் செய்வதறியாது மகேந்திரமலையினை அடைந்து மலைத்து நிற்கும் அவர்களிடம் சம்பாதி இலங்கையில் சீதை சிறையிருப்பதைக் கூறுகின்ருன்.

> 'பாகொன்று குதலையாளைப் பாதக வரக்கன் பற்றிப்
> போகின்ற பொழுது கண்டேன் புக்கன னிலங்கை புக்கு
> வேகின்ற வுள்ளத் தாளை வெஞ்சிறை யகத்து வைத்தான்
> ஏகுமின் காண்டி ராங்கே யிருந்தன னிறைவி இன்னும்
> (சம்பாதிப்படலம்:59)

எனும் அவன் மொழியால் பேரின்பமும் புத்துணர்வும் பெறுகின்றனர். ஆனுல் இலங்கை இருக்குமிடம் மீண்டுமவர்களைத் திகைப்புக் குள்ளாக்குகின்றது என் செய்வது? இலங்கையோ இங்கிருந்து நூறுயோசனைப் பரப்புள்ள கடலைத் தாண்டி இருக்கின்றது. இலங்கைக் காவலர் காணுது காற்றும் உட்புக இயலாது மூவர் தேவர்க்கு மஃது அரிது. யார் இவ்வரியவினையினை ஆற்றுவது எனப்பலபட எண்ணி ஏங்குகின்றனர்.

சாம்பன், தான் திருமாலின் திரிவிக்கிரம அவதாரத்தின் போது, எட்டுத் திக்கையும் வலம் வந்து பெருமாள் உலகளந்த செய்தியை உலகோர்க்கு உரைக்கையில் மேருமலையில் கால் இடறியதால் கால் ஊனமாகியது. எனவே இலங்கை சென்று திரும்பும் திறன் தனக்கில்லை என்கின்றான். போரில் பெரும் வெற்றி பெறுதற்குரிய நீலன் முதலான சிறந்த வானரர்கள் கடலைத் தாண்டிச் செல்லும்வலிமை யற்றேம்யாம் எனத்தம் இயலாமையைத் தெளிவுபட எடுத்துரைக்கின்றனர். கூற்றுவனையும் வலியடக்கிய கொற்றவன் புதல்வன் அங்கதன் கடலைக் கடந்து செல்ல வல்லேன். ஆனால் மீளும் வலியில்லேன் என்றுரைக்கின்றான். இறுதியில் சாம்பன் மாருதியே இலங்கை செல்ல ஏற்றவன் என்பதைத் தெளிவு படுத்துகின்றான்.

'ஆரியன் முன்னர் போதுற உற்ற அதனாலும் காரியம் எண்ணிச் சோர்வு அற முற்றும் கடனாலும் மாருதி ஒப்பார் வேறு இலை' என்றியம்பிச் சாம்பன் அவன் வல்லமையை விவரிக்கின்றான். பிரமன் இறந்தாலும் இறவாத ஆயுளை உடையவன். எதையும் எடுத்துக் கூறத்தக்க சொல்வன்மை உடையவன். கடமையிற் பிறழாதவன். ஆலம் நிகர்த்தவனும் என வெம்போர் நிகழ்த்துபவன்.

'வெப்புறு செந்தீ நீர்வளி யாலும் விளியாதீர்
செப்புறு தெய்வப் பல்படை யாலுஞ் சிதையாதீர்
ஒப்புறி னொப்பார் நும்மல தில்லீ ரொருகாலே
குப்புறி னண்டத் தப்புற மேயுங் குதிகொள்வீர்'

(மயேந்திரப்படலம்: 10)

எனும்சாம்பன் கூற்று அனுமனின் அளப்பரிய ஆற்றலைக்காட்டுகின்றது. நினைந்த உருவெடுக்கும் ஆற்றலிலும் வல்லன் என்பதனை மேருகிரிக்கும் மீதுறநிற்கும் பெருமெய்யினை உடையவன்; மாரிதுளிக்கும் தாரை இடுக்கும் வரவல்லவன் என்பதனால் உணர்த்துகிறான். 'பழியற்றவன் பார் உலகெங்கும் பேரிருள் நீக்கும் பகலோன் தேர்முன் நடந்தே அரிய நூல்களைக் கற்றவன். நீதியன்; நேர்மையன்; நினைவினும் பெண்டிரை நாடாதவன்' என நவில்கின்றான் சாம்பன். கம்பன் சாம்பன் மூலம் இத்துணை நீண்ட உரையை இராம தூதனுக்கு வழங்குவது வாயுவின் புதல்வன் மீது நம்பிக்கை ஏற்படுத்துவதற்கேயாம். கமலச்செல்வியைத் தேடவேண்டும் என்ற வேளையில், கடலைத் தாண்டி இலங்கை செல்லல் என்பது மிகமிக அவசியமானது. அதனைச் செய்து முடிக்குந் திறன் அனுமனுக்கே உண்டு என்பதனைக் கம்பன் இவ்வுரையில் தெளிவு படுத்துகின்றான்.

இக்கூற்றினால் இலங்கையடைந்து சீதையைக் காண வேறுயாரும் இலர் என்பதனை அனுமனுந் தெளிந்து 'ஈண்டு இனிது உறைமின்; யானே எறிகடல் இலங்கையெய்தி மீண்டு இவண் வருதல்காறும் விடை தம்மின் விரைய' என்றுவேண்டி, 'ஆண்டு அவர் உவந்துவாழ்த்த அலர்மழை அமரர்தூவ'ச்சேண் தொடர் இமயத்தெய்வ மயேந்திரத்து உம்பர் செல்கின்றான்.

சிறைப்பட்ட சீதையைத் தேடிக்கண்டாலன்றி இராவண வதம் நிகழ இயலாது. இராம அவதாரத்தின் நோக்கம் நிறைவேறவும் முடியாது. சீதையைத் தேடுவதின் அருமையை அஞ்சனை சிங்கம் இராமனிடம்

> 'வானதோ? மண்ணதோ? மற்று வெற்பதோ?
> ஏனமா நாகர்த மிருக்கைப் பாலதோ
> தேனுலாந் தெரியலாய் தெளிவ தன்றுநா
> மூனுடை மானிட மான துண்மையால்'

(கலன்காண் படலம் : 30)

என்று உரைக்கின்றான்.

மற்றும் அளவற்ற ஆண்டுகளும் வேண்டும்; தக்கார் பலர் வேண்டும். எழுபது வெள்ளம் எழுச்சி மிக்க படையும் வேண்டும் என்று மொழிகின்றான். இராமனும் இதன் உண்மை உணர வாலிவதம் முதலில் நிகழ்கிறது. இவ்வேளை வேலையைத் தாண்டும் நிலைவர அனுமன் மனமுவந்து முன் வந்து காவியத்தில் தன் முக்கியத்துவத்தினை வெளிப்படுத்துகின்றான்.

மிக்க துணிவுடனும் திறமையுடனும் இலங்கையில் செங்கமலத்திருவைத் தேடியலைந்து எங்கும் காணாது கவல்கின்றான். எதிரே தெரியும் அசோகவனத்தை நோக்குகின்றான். புத்துணர்வு தோன்ற அதனை அணுகுகின்றான். ஆங்கு அரக்கியர் நடுவண் அவல நிலையில் அமர்ந்திருக்கும் அன்னமன்ன சீதையைக் காண்கின்றான். அவள் தோற்றமே அவளை அனுமனுக்கு அறிவிக்கின்றது. ஒருவரை வடிவாலன்றிப் பண்புகளாலும் அடையாளம் காணலாம் என்பதை அப்படிக்காணும் அகக்கண் பெற்ற அனுமன் உணர்த்தி விட்டான் எனக் கி. வா. ஜகந்நாதன் கூறுகின்றார்.[1] அங்கு அனுமன் தன்னுயிரை மாய்க்கவந்த சீதைக்கு உயிரை நல்கி உணர்வினை ஊட்டி அவள் மீட்சியில் நம்பிக்கை கொள்ளச் செய்கின்றான். அறத்தின் நாயகியும் 'உயிர் தந்தாய் உத்தம,' என்றுரைத்து

> 'பாழிய பணைத்தோள் வீர துணையிலேன் பரிவு தீர்த்த
> வாழிய வள்ள லேயான் மறுவிலா மனத்தே னென்னின்
> ஊழியோர் பகலா யோதும் யாண்டெலா முலக மேழும்
> ஏழும் வீவுற்ற ஞான்று மின்றென விருத்தி என்றாள்'

(உருக்காட்டுப்படலம் : 73)

அனுமன் இங்கு வந்திலானெனின் சீதை உயிரினை விட்டிருப்பாள் என்பர் சிலர். அஃது ஏற்புடைத்தன்று. ஏனெனில் சிறையிருந்த செல்விக்கு இவ்வாய்ப்பை அனுமனே நல்குகின்றான். அவளை அணுகுதற் பொருட்டு அரக்கியர் அனைவரையும் ஒருசேரத் துயிலில் ஆழ்த்தியதனாலன்றோ சீதைக்கு அவ்வெண்

---

1 அழியா அழகு! கி. வா. ஜகந்நாதன் 'கண்டதும் காணாததும்' எனும் கட்டுரையில்.

ணமும் தக்கதருணமும் வாய்க்கின்றன. எனவே துன்பக்கேணியில் சுழன்று கொண்டிருந்த சீதையைக் கரையேற்றி, இராமன் இன்னே வந்து இன்றுணையாம் நின்னை மீட்பான் என்று அவள் மனப்புண்ணிற்கும் மருந்திடுகின்றான், பொன்னெடுங்கிரிபோற் பொலிந்த தோளினன் என்றே ஏற்றுக் கொள்ள வேண்டும். சீதை உயிருடன் தன் கற்பிற்குப் பழுது நேரா வகையில் உள்ளமையை இராமனிடமும் உரைத்து அவனையும் புத்துயிர் கொள்ளச் செய்கின்றான். பிற இராமாயணங்களில் இதில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இல்லை. ஆயினும் வான்மீகி சாம்பன் கூற்றில் அனுமன் வரலாறு முழுமையும் வரைந்துள்ளார் என்பது ஒரு வேறுபாடே.

மருத்துமலை கொணர்தல்:—

சீதையை உயிர் நீக்காமல் காத்த அனுமன் யுத்த காண்டத்தில் இலக்குவன், வானர வீரர்கள் ஆகியோர் உயிர் நீங்காமலும் காக்கின்றான். அஞ்சனை சேயின் அரிய செயல்களிலெல்லாம் தலையாயது இதுவே. ஏனெனில் இலக்குவனுக்கு உயிரளிப்பதன் மூலம் அவன் இராமனுக்கே உயிரளிக்கின்றான்.

இராம இலக்குவரிடம் போரிட்டுப் புறமுதுகிட்ட இந்திரசித்து, இலங்கேஸ்வரனுடன் இருவரையும் வெல்வது எவ்வாறென ஆராய்கின்றான் அதன்படி மகோதரனை மாயப்போர் புரிய முதலில் அனுப்புகின்றான். அவன் போரிடும் வேளையில், தான் பிரம்மாத்திரத்தைப் பகைவர்மீது பயன்படுத்த எண்ணி அதற்கென விதிப்படி வேள்வி முடித்து, வானில் மறைந்திருக்கின்றான். மகேந்திரன் மாயையினால் இந்திரனாக வெள்ளை யானையின் மேலமர்ந்து போர் புரிகின்றான். தக்கதருணத்தில் இலக்குவன்மீது இந்திரசித்தும் பிரம்மாத்திரத்தை ஏவ, அவனைக்கோடி கோடி நூறுயிரம் சுடர்க்கணைக் குழாங்கள் சுற்றி மூடுகின்றன. இன்னது செய்வது என்றுணராளுகி போர் வலிமிக்க யானை துயில் கொண்டாற்போன்று அவனும் உணர்வொடுங்கி வீழ்கின்றான். இந்திரன் தங்களை எதிர்ப்பதன் காரணமறியாது எப்படியும் அவனை யானையொடும் எற்றுவன் எனக் கிளர்ந்து எழுந்த வன்திறல் மாருதியைத் தனுவின் ஆயிரங்கோடி வெங்கடுங்கணைகள் தைக்க அவனும் செயலற்று நெடுநிலம் சேர்கின்றான். பொன்மலையின் மேற்பூத்துத் தோன்றும் செம்முருக்க மரக்காட்டினை யொத்து செந்நீர் பெருக அருக்கண் மாமகனாகிய சுக்கிரீவன் சாய்கின்றான். அங்கதனும் தன்னுடலில் பதினுயிரம் அம்புகள் ஆழப்பதிய சிங்க ஏறு இடியுண்டென நெடுநிலம் சேர்கின்றான். மற்றும் சாம்பன் சாய்கின்றான்; நீலன் காலனார் முகம் காண்கின்றான்; குமுதன்குறைய இடபனும் விண்மேவுகின்றான்.

'வேலைதட்டவ னுயிரம் பகழியால் வீழ்ந்தான்
வாலி நேர்வலி மைந்தனுந் துமிந்தனும் மடிந்தார்
கால வெந்தொழிற் கவயனும் வானகங் கண்டான்
மாலை வாலியிற் கேசரி மண்ணிடை மடிந்தான்.'

(பிரம்மாத்திரப்படலம்: 78)

இன்னும், விந்தம் அன்னதோள் சதவலி, சுசேடணன், வினதன், கெந்தமாதனன், இடும்பன் வன்ததிமுகன் போன்ரூரும் வார்கணைகோடி தம்முடலம் முற்றும் ஒளிப்ப உணர்வு ஒடுங்குகின்றனர். மற்றை வீரர்களும் வடிகணை மழையால் மண்ணுறுகின்றனர். நான்முகனது பெருமை வாய்ந்த படைக்கலமானது இவ்வாறு அனைவரையும் பிணிக்கின்றது. உணர்வுடன் உய்ந்தோர் இராமனும், விபீடணனுமே. இதனைக் கண்ணுற்ற இந்திரசித்து வெற்றிச்சங்கினை ஊதி வல்லையிற் தாதையைச் சேர்கின்ருன்.

நிகழ்ந்தது அறியாது துய்ய தேவர் தம்படைக்கு எலாம் பூசனை புரிந்து, பின் இராமன் களம் புகுகின்றனன். ஆங்கு இருள் செறிந்திருக்கக்கண்டு அதனை அக்கினித்தேவன் அம்பால் அழிக்கின்ருன். காணமுடியாத அவலக்காட்சியினைக் கண்டு தடந்தாமரைத் திருமுகத்து உதிரம் போக்குகின்ருன் தன்படைகளைக் காக்கும் வானரத் தலைவர்களைத் தனித்தனி கண்டு, பின் கடலிடைத் துயில்வான் அன்ன தம்பியைக் காண்கின்ருன். காண்பவன்,

'உயிர்த்திலன்ஒரு நாழிகை உணர்ந்திலனென்றும்
வியர்த்திலனுடல் விழித்திலன் கண்ணிணை விண்ணோர்
அயர்த்திலன்கொலென் றஞ்சின ரங்கையுந் தாளும்
பெயர்த்திலனுயிர் பிரிந்திலன் கருணையால் பிறந்தான்
(பிரம்மாத்திரப்படலம்: 200)

பின் சிறிது உணர்வுற்றவனுய் கண்களைத்திறந்து பார்க்கிருன். விண்ணை உற்றனன் மீள்கிலன் என்றகம் வெதும்பி, புண்ணிடத்தே நெருப்புத் தோய்ந்தாலென்ன தாங்கொணுத் துன்பத்தினை யுடையனுகி அரற்றுகின்ருன். தன் புலன்களெல்லாம் சிதைவு எய்த இறந்தொழிவோம் என்று தம்பி இலக்குவனை மார்போடணைத்து ஒன்றும் உரையாணுகித் தன்னை மறக்கின்ருன். இவ்வாறு படிப்படியாக அறத்திற்கு அமர்க்களத்து நிகழ்ந்த அவலத்தினைக் காட்டி அனுமன் இன்றியமையாமையை மிகுவிக்கின்ருன் கம்பன்.

வானரவீரர்க்கு உணவு கொண்டு வரச்சென்ற விபீடணன் அவ்வேளை மீள்கின்ருன். மீண்டவன் அனைவரும் மாண்டமை கண்டு உணர்வு தீர்கின்ருன். விரைவில் உணர்வுபெற்று இாவலோடு சாய்ந்து கிடந்த இராமனைக் கண்டு, அந்நாயகன்மேனியில் வடு இல்லாமை அறிந்து மனநடுக்கம் நீங்கிக் களத்தில் வீழ்ந்துள்ள வானர வீரர்களோடு இலக்குவனையும் உயிருடன் எழுப்பலாம் என்ற நம்பிக்கை கொள்கின்ருன்.

'உணர்வதன் முன்னம் இன்னே யுற்றுழி யுதவற் கொத்த
துணைவர்கள் துஞ்சல் இல்லார் உளர்எனின் துருவித்தேடிக்
கொணர்குவன் விரைவின் என்ன கொள்ளிஒன்று அங்கை
கொண்டான்
புணரியின் குருதி வெள்ளத்தொருதனி விரைவிற்போனன்
(மருத்துமலைப்படலம்; 9)

அங்குக் காய்சினத்து அனுமன் என்னும் கடல் கடந்தானைக் காண்கின்றான். உயிர் உள்ளதை உணர்ந்து உடலில் தைத்துள்ள அம்புகள் அகற்றிக் கையால் கொண்டல் நீர் முகர்ந்து கொண்டு வந்து முகத்தினைக் குளிரச்செய்கின்றான். கண்கள் விழிக்க மேனி மெல்லப் பெயர்த்து வாய்புனல்வந்துஊறி விக்கலும் பிறக்க அனுமன் எழுந்து இராமநாமம் சொல்லி வாழ்த்துகின்றான். இராம இலக்குவர் வீழ்ந்து கிடக்க அங்கு அமரார் ஆர்த்தார் என்கிறான் கம்பன். அனுமன் எழுந்துவிட்டமையின் அனைவரும் பிழைப்பர் என்ற எண்ணத்தில் எழுந்ததே அவர்கள் ஆர்ப்பு. வால்மீகியில் சாம்பன் இதேகூற்றை 'மாருதி உயிருடனிருப்பின் நமது ஸைன்யம் முழுமையும் அழியினும் பிழைத்திருப்பதாகவே எண்ணிக்கொள்ளலாம். அவன் உயிர் இழந்தால் நாம் இருந்தும் இறந்தோரே. பலத்தில் வாயு பகவானையும், வீரியத்தில் அக்னிபகவானையும் போன்ற ஆஞ்சநேயன் அபாயமின்றி இருப்பின் நாம் உயிர்மேல் ஆசைவைக்கலாம்' என்று கூறுகின்றான். இதனால் அனுமன் பெருமை வெள்ளிடைமலை.

அனுமன் 'இறக்கும் தன்மையற்ற, நம்மை ஈண்டு வாழ்விக்கும் உபாயம் வல்ல சாம்பனைக் காண்போம்,' என வீடணனுடன் செல்கின்றான். சாம்பன் அனுமனை இமைப்பொழுதில் மருத்துமலை கொணர வேண்டுகின்றான்.

'எழுபது வெள்ளத் தோடும் இராமனும் இளைய கோவும்
முழுதுமிவ் வுலக மூன்று நல்லற மூர்த்தி தானும்
வழுவலின் மறையும் முன்னால் வாழ்ந்தன வாகு மைந்த
பொழுதிறை தாழா தென்சொ னெறிதாக் கடிது போதி'

(மருத்து மலைப்படலம் : 23)

என்கிறான். அத்துடன் அதற்கான வழியும் உரைக்கின்றான். 'இறந்தாரையும் எழுப்பும் மருந்து ஒன்றும், உடல் பலவாகப் பிளந்து இருப்பினும் ஒருங்கிணைக்கும் மருந்து ஒன்றும், படைக்கலம் வெளிப்படுதது மருந்து ஒன்றும், மீண்டும் தன் மெய்யுரு தரும் மருந்து ஒன்றும் அங்கு உள்ளன. அவற்றினைக் கொணர்க' என்று அவற்றின் வடிவோடு உரைத்து அனுப்புகின்றான்.

மீண்டும் 'இம்மருந்தினைக் காக்கும் தெய்வங்கள் கணக்கில்லாதன; யாவரிடத்தும் இரக்கம் கொள்ளாதன; யாரும் தன்னருகே நெருங்கவியலாததும் நெய்பூசப்பட்டதும் ஆகிய நெடிய சக்கரப்படையையும் துணைக்கொண்டன.

பொய்யின் மருங்கின் நில்லாததாய் நீ புரிகின்ற காரியத்தின் பொருள் நோக்கி உன்னை இரு கைகளின் பக்கத்திலும் தொடர்ந்து நின்று 'இம்மருந்தை மீட்டும் கொணர்ந்து கெடாமல் காபபாயாக!' என்று சொல்லி அப்புறம் சென்று மறைந்து கொள்ளும் என்கின்றான்.

'என்பணி இதுவாகில் இறந்தோரும் பிறந்தாரே. எம் கோவிற்கு யாதும் இடையூறு எய்தாமல் தெருட்டுதிர் போய்' எனச்சொல்லி வேதம் போல்வான் விண்ணில் பறக்கிறான். அவனைத் திருமாலாகவே எண்ணுகின்றனர் தேவர்கள். இமயம் அடைந்து அங்கிருந்து நாற்பதினாயிரம் யோசனை தூரம் தாண்டி மருத்துமலையைக் காண்கின்றான். சாம்பன் கூறிய படியே தெய்வங்களும் உரைக்கின்றன.

'இங்குநின் றின்னன மருந்தென் றெண்ணினால்
சிங்குமாற் காலம்என் றுணர்ந்த சிந்தையான்
அங்கதை வேரொடு மங்கைய தாக்கினான்
பொங்கிய விசும்பிடைக் கடிது போகுவான்'

(மருத்துமலைப்படலம். 63)

தனக்கு இனி ஏதுவும் தேவையில்லை; தம்பியோடு தானும் மாய்வேன் என்றுரைத்துச் செயலாற்ற முனையும் இராமனைச் சாம்பன் அனுமன் மருத்துமலை கொணரச் சென்றுள்ளமை கூறித் தடுக்கின்றான். அவ்வளவில் அனுமனும் தன் ஆர்ப்பொலியுடன் தோன்றுகின்றான். தெய்வத்தன்மை வாய்ந்த மருத்துமலை வஞ்சக அரக்கர் வாழ் ஊருக்கு வர அஞ்சியது ஆகலின் வானில் தனியே நிற்க, அனுமன் மட்டும் நிலத்தில் இறங்குகின்றான் வானில் நின்ற அம்மலைக் காற்று வந்து வீசலும் கடவுள் நாட்டவர் போற்றிட, விருந்து உவந்து இருந்த வானரர்கள் ஏற்றமும் பெருவலி அழிகொடும் எய்தி, கூற்றினை வென்று தம் உருவம் கூடுகின்றனர்.

'யாவரும் எழுந்தன ரார்த்த வேழ்கடல்
தாவரும் பேரொலி செவியிற் சார்தலும்
தேவர்தம் வாழ்த்தொலி கேட்ட செங்கணான்
யோகநீங் கினானன்ன விளவ லோங்கினான்'

(மருத்துமலைப்படலம் : 13)

இளவலைத் தழுவி இராமன் தன்துயர் நீங்குகின்றான். தூய கண்ணீர் துளிர்க்கும் கண்ணை உடையவனாய்த் தயாளைய அனுமனைத் தழுவிக் கொள்கின்றான். இங்குக் கம்பன் இலக்குவன் உயிரை மீட்டுத் தந்த அனுமனைத் தாய்போல் எனக்கூறுவது அவன் மேன்மைக்கு இணையற்ற சான்று. இராமன 'முன் எம்குலத்து உதித்தோர் முறைமையினின்றும் நீங்காது இருந்து என்னால் தோன்றிய துயரத்தால் இறந்த தயரதமன்னனிடத்தில் தோன்றினேம். இப்பொழுது பிரம்மாத்திரத்தால் மாண்டு நின்னால் மீண்டும் பிறந்தவர்களானோம்' என்று புகழ்கின்றான்.

'முன்னிற் றோன்றினோர் முறையின் னீங்கலாது
என்னிற் றோன்றிய துயரி னிறுசேர்
மன்னிற் றோன்றினேம் முன்ன மாண்டுளோம்
நின்னிற் றோன்றினேம் நெறியிற் றோன்றினாய்'

(மருத்துமலைப்படலம் : 110)

தவிர, எமக்குவரும் பழியையும் வாராமல் காத்து அரிய எம்பியையும் வளமிககு உலகையும் அழியாமல் காத்து, எம்மரபையும் மாறுபடாது காத்து அதனுல் நல்ல வேதநெறியும் வழுவாமல் காத்தாய்' என்கின்ருன்.

'இன்று வீகிலா தெவரு மெம்மொடு
நின்று வாழுமா நெடிது நல்கிஞய்
ஒன்று மின்னதேே யுறுகி லாதுநீ
என்றும் வாழ்தியால் இனிதென் ஏவலால்'

(மருத்துமலேப்படலம் : 113)

என்றும் கூறுகின்ருன் தயரதன் தனயன். அனுமனுடைய வள்ளல் தன்மையால் வாழ்நாள் மீண்டும் பெற்ற மற்றையோரும் அன்புமிகு அவ்வனுமனைச் சுற்றிக் கொண்டு தொழுது வாழ்த்துகின்றனர். இதன் பின் மருத்துமலேயை வன்றிண் தோள் வரையன்ன மாருதி உரிய இடத்தில் சேர்க்கின்ருன்.

வன்திறல் மாருதிக்கு மறுபடியும் இலக்குவனுக்கு உயிரளிக்கும் பேறு கிடைக்கின்றது. அமரில் வீடணனே நோக்கி இராவணன் விட்டவேலே இலக்குவன் பொன்னின் மார்பிடை ஏற்கின்ருன் இதனைக்கண்ட வீடணன் இறக்கத் துணிகின்ருன். சாம்பன் தடுத்து, 'அனுமன் அருகிருக்க நாம் ஆருயிர்க்கு இரங்கல் அறிவோ? அழுங்கல் மின்,' என்று இடர்தீர்க்கின்ருன். அனுமனே அனுப்பி மறுபடியும் மருத்துமலேயினைக் கொணரச் செய்து இலக்குவனே எழுப்புகின்ருன் இலக்குவன் அனுமனைத் தழுவி எந்தாய் எனக்கூறி மகிழ்கின்ருன். இந்நிகழ்ச்சி இராமன் அறியாவண்ணம் நிகழ்கிறது.

இமயத்திற்கு அப்பால் நாற்பதிஞயிரம் யோசனைத் தொலேவில் மருத்துமலே உளதெனக் கம்பர் உரைக்கின்ருர். இவ்வளவு தொலேவினை வெவ்விழைவுஇல் சிந்தை நெடுமாருதி இராமன் அறியுமுன் கடந்து சென்று மீள்வது அவன் வேகத்திற்குப் பெருமையளிக்கின்றது. அம்மருந்தின் அருமையையும், மாருதியின் பெருமையையும இப்புனேவால் உயர்த்துகின்ருன் கம்பன். நடந்ததை வானரர் கூற அறியும் இராமன் அந்தமில் கேள்வியானைப் புல்லி, 'பெற்றனள் உன்னை என்னைப் பெருதன? பெரியோய் என்றும் ஆற்று இடை ஈறுசெல்லா ஆயுளை ஆக, என்றும் வாழ்த்துகின்ருன்.

அனுமன் மருத்துமலே கொணராதிருந்தால், அந்த ஆற்றல் அவனுக்கு இல்லாதிருந்தால் போரில் சீதையை இராமன் மீட்பது ஐயத்திற்கிடமே. இப்படியாக ஒவ்வொரு நிலேயிலும் இராமாயணத்தை அனுமன் உயிர்ப்பிக்கின்ருன். செயற்கரிய செய்து இராமனின் இன்றுணே என்ற நிலேயில் அவன் புகழில் ஒளிபெருமல் தனக்கே உரிய ஒளி வெள்ளத்தில் சுடர் விடுகின்ருன். 'உலகிற்கு அச்சாணி போன்ருன் அனுமன்' என்ற இராமன் வாக்கு இங்கு வாய்மையாகின்றது.

கம்பனிலிருந்து வான்மீகியும் துளசியும் பெருமளவில் மாறுபடுகின்றனர். வான்மீகி கூற்றுப்படி இராம இலக்குவர் பிரம்மாத்திரத்தால் கட்டுண்கின்றனர். இலக்குவனே பிற வானர வீரர்களோ இறக்கவில்லை. பிரம்மாத்திரத்தினின்று காத்தற் பொருட்டே அனுமன் மருத்து மலைக்குச் சாம்பனால் அனுப்பப்படுகின்றான். அனுமனைக் கண்டு மலையில் உள்ள மருந்துகள் தம்மை மறைத்துக் கொள்ளக் கோபம் கொண்ட அனுமன் மலையொடும் பெயர்த்தெடுத்துக் கொணர்கின்றான். இவ்வேறு பாட்டினை நோக்குங்கால், கம்பன் காவியத்தில் இறந்த இலக்குவனை உயிர்பெறச் செய்தமையாலும், மூலிகைகளைத் தேடின் நேரமாகும் என்று சாமர்த்தியமாக மலையொடும் பெயர்த்து வருவதாலும் அவன் பெருமை பெருமளவு உயர்கின்றது. இரண்டாம் முறை இலக்குவன் மயக்கம் தெளிவிப்பதற்காக ஸிஷேணன் என்ற வாரை வீரனால் அனுப்பப்படும் அனுமன் அவன் குறிப்பிட்ட மூலிகையினைக் கண்டுகொள்ள இயலாமையின் மலையொடும் பெயர்த்து வந்தனன் என்று வான்மீகியார் கூறுவதும் பொருந்தவில்லை. அது அனுமன் அறிவிற்குப் பங்கம் விளைவிப்பதாக உள்ளது.

துளசி அனுமன் ஒருமுறைமட்டுமே மருத்துவமலையினைக் கொணர்ந்ததாகப் படைத்துள்ளார். இங்கும் இலக்குவன் உயிரிழந்ததாகக் காட்டப்படவில்லை. மேகநாதனின்வீரர்களைக்கொல்லும் சக்தி என்னும் ஆயுதத்தால் இலக்குவன் நினைவு மட்டுமே இழக்கின்றான். அவனை இராமனின்பால் எடுத்துவருகிறான் அனுமன். சாம்பவன் ஆணைப்படி சிற்றுருக்கொண்டு இலங்கையுள் நுழைந்து 'சுஷேணன்' என்ற மருத்துவனை அவன்மனையோடு தூக்கி வருகின்றான பின் அவன் வேண்ட மருத்து மலைக்குச் செல்கின்றான் இச்செய்தி இலங்கையில்பரவ, இராவணன் காலநேமி என்ற அரக்கனிடம் சென்று செய்தியைக் கூறுகின்றான். அனுமனைத் தடுக்குமாறும் ஏவுகிறான். காலநேமி அறிவுரைபலபகன்றும் இராவணன் அச்சுறுத்தியமையின் இராமதூதன் கையால் இறப்பதேமேல் என்று உணர்ந்து இராவணனுக்குக் கீழ்ப்படிகின்றான். அனுமன் அவன் மாயத்தை அழித்து அவனைக் கொன்று மருத்துமலையை அடைகின்றான். அங்கு அம் மூலிகைகளை எளிதில் அறிந்துகொள்ள ஏலாமையால் மலையொடும் கொணர்கின்றான் வருப் வழியில் பரதனால் தாக்கப்படுகின்றான். பின் உண்மை உணரும் பரதன், அனுமனை மலையுடன் தன் அம்பால் இராமனிடம் விரைவில் சேர்ப்பிக்கின்றான். இதனால் அனுமனின் வேகம் குறைவு படுகின்றது அனுமன் இடையில் தன் களைப்புத் தீரக் காலநேமியின் மாயமனையில் தங்குவதாக உள்ளது, அவன் கடமையுணர்வையும் இழிவுபடுத்துகின்றது. இக்குறைபாடுகள் அனுமனிடம் தோன்றாமல கம்பன் கவனமாகக் கையாள்கின்றான். இதனால் இவ்வனுமன் நம் உள்ளத்திலும் இடம்பெற்று எண்ணுந்தொறும் இன்பம் அளிக்கின்றான்.

பரதனைக் காத்தது:—

சீதை உயிர் காத்து, இலக்குவன் உயிர்மீட்டு இராமன் உயிரையும் நிலைநிறுத்தும் அனுமன், பரதனையும் எரியில் விழுந்து உயிர் துறக்காது தடுக்கின்றான். மறத்தை வீழ்த்தி அறத்தைக் காத்த வெற்றிப் பெருமிதத்துடன் வரும் விரிசிலை வீரனை இராமன் தன்சுற்றத்துடன் பரத்துவாசமுனிவரின் ஆசிரமத்தில் தங்க நேர்கிறது. பரதன் குறிப்பிட்ட நாள் வந்துவிடவே, தான் சென்று சேருமுன் பரதன் எரியில் விழுந்து விடலாகாது என்பதற்காக அனுமனைத் தூதாக முதலில் அனுப்புகின்றான் முன்பே நாம் அறிந்த அதேவேகத்தோடு விரைந்து வருகின்றான் அனுமன். இராமன் எண்ணியது நிகழ்ந்து கொண்டிருக்கிறது. பரதன் கோசலைவிலக்கவும் விலகாமல் தன் ஆணையால் சத்ருக்னன் மூட்டிய எரியில் விழ அதற்குப் பூசனை புரிந்து கொண்டிருக்கின்றான். அவ்வமயம் குன்றுபோல் நெடுமாருதி தோன்றி, புண்டரீகக் கண்ணுழிப் புரவலன் வரவினை இயம்பித தன் கையால் அவ்வெரியைக் கரியாக்குகின்றான்.

'இன்ன நாழிகை யெண்ணைந் துளதைய
உன்னை முன்னம்வந் தெய்த வுரைத்தநாள்
இன்ன தில்லை யெனினடி நாயினேன்
முன்னம் வீழ்ந்திவ் வெரியின் முடிவெனல்

(மீட்சிப்படலம்: 242)

எனக் கூறுகின்றான். இவ்வாறுரைக்க அனுமனால் மட்டுமே இயலும். அனுமன் இங்குப் பரதன் உயிர்மட்டும் காக்கவில்லை. அயோத்தியின் உயிரையே காக்கின்றான். பரதன் இறப்பின் அவனைப் பின்தொடர அயோத்தியே ஆயத்தமாயிருக்கிறது இன்னுயிர்த்தம்பி மாய்ந்தான் என்றால் இராகவன் உயிரும் உடலில் தங்காது. இராமனின் முடிசூட்டுவிழாவினை எதிர்நோக்கும் நாம்மீண்டும் 'கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை' எனும் பழமொழியை அனுபவிக்க நேரிட்டிருக்கும். இவ்வாறு சாகாவரத் தலைவரில் திலகம் அன்னான்தான் காவியத்தில் தோன்றியதிலிருந்து இறுதிவரை நாம் வியந்து நிற்கும் வண்ணம் பலர் சாகாமல் தடுக்கின்றான். பல அரும்பெரும் செயல்களை அடுத்தடுத்துச் செய்கின்றான்.

நிகழ்ந்த தறிந்த இராமன் அனுமனை,

'தீவினை யாம்பல செய்யத் தீர்விலா
வீவினை முறைமுறை விளைவ மெய்ம்மையால்
நீயவை துடைத்துநின் றளிக்க நேர்ந்ததால்
யாயினு மன்பினாய் யாம்செய் மாதவம்'

(மீட்சிப்படலம் : 330)

என்று பாராட்டி விட்டு உனக்கு எந்த முகமன் மொழியை மொழிய முடியும் என்கின்றான். இவ்வுரை இராமன் உள்ளத்தில் அனுமன்பெற்று விட்ட உயர்வைச் சுட்டி நிற்கின்றது.)

துளசியிலும் வான்மீகியிலும் பரதன் இறக்க முனைய வில்லை. கம்பன் மட்டுமே இவ்வாறு அமைத்து அனுமன் பெருமைக்கு மெருகூட்டுகின்றான்.

பிறருக்கு உயிரளித்து அதன்மூலம் தனக்குச் சிரஞ்சீவித் தன்மையை வரமாகப் பெறும் அனுமனைக் கம்பன் தன்னைத் தான் அலது ஒப்பிலாதான்' என்றுரைக்கின்றான். இக்கூற்றிற்கு முற்றிலும் பொருந்தும் வகையில் அனுமன் படைக்கப்பட்டிருக்கின்றான். அஃது பொய்யுரையன்று; மெய்யுரையே மேலும் அவன் புகழைப் பூரணமாக எடுத்துரைத்தலும் ஏலாது. இராமனே இத்துணையளவு தனக்கு உதவிசெய்த அனுமனுக்கு என்ன பதிலாகத் தருவது என்றறியாது தவித்து இறுதியில் தன்னை இறுகப்புல்லுமாறு வேண்டுகின்றான். யாருக்கும் கிட்டாத பேரின்பம் அனுமனைத் தானே தேடி வருகின்றது.

'மாருதி தன்னை யையன் மகிழ்ந்தினி தருளி னோக்கி
ஆருத விடுதற் கொத்தார் நீயலா லன்று செய்த
பேருத விக்கு யான்செய் செயல்பிறி தில்லை பைம்பூண்
போருத வியதிண் டோளால் பொருந்துறப் புல்லுக',

(விடை கொடுத்தபடலம் : 20)

என்கிறான் கம்பன். இஃதொன்றே அனுமனின் அளவிறந்த செயல்களுக்குப் பரிசாக அமைகின்றது. தன் இடர் அறிந்து அகற்றிய அனுமனுக்குச் சீதையும் தனக்குப்பாமுறைக் கிழத்தி ஈந்த பருமுத்த மாலையை அவன் இன்புறும்படி அளிக்கின்றாள். இதுவும் அனுமனுக்கு மட்டுமே கிட்டிய பெருமை மேலும் தான் மீட்சியுற்ற ஞான்று, அதற்குக் காரணமாயிருந்த (அனுமனை 'நின்னை என் தலையினால் தொழவுந்தகும் தன்மையோய்' என்கின்றாள். அனுமனுக்கு இதனினும் வேறென்ன வேண்டும்.)

இராம தூதன்

ஒருவன் தன்கருத்தை மற்றொருவனுக்குத் தெரிவிக்க, அடுத்தவன் ஒருவனை அவனிடத்து அனுப்புதலே தூதாகும். இங்ஙனம் தூதனுப்பும் முறை பண்டைத் தமிழரிடமே பரவியிருந்த ஒரு பழக்கமாகும். பகைவனிடத்துத் தூதுவிடலும், இரவலன் புரவலனிடத்துத் தூதுவிடலும், தலைவன் தலைவியிடமும், தலைவி தலைவனிடமும் தூதுவிடலும் உண்டு என்பதைத் தொல்காப்பியம் மூலமாகவும், சங்க இலக்கியங்கள் மூலமாகவும் அறிகின்றோம்.

தூதுவிடுப்பது ஆணாகவும் இருக்கலாம்; பெண்ணாகவும் இருக்கலாம். அஃறிணைப் பொருள்களும் இலக்கியங்களில் தூதனுப்பப்படல் உண்டு. இத்தூது அகத்தூது, புறத்தூது எனவும் இருவகைப்படும். தலைவன் தலைவியரிடத்து இடம்பெறும் தூது அகத்தூது. பிற அனைத்தும் புறத்தூதே.

ஔவை அதியனுக்காகத் தொண்டைமானிடம் தூது சென்றது புறத்தூதிற்குத் தக்கசான்றாகும் (புறம் : 95) பொதுவாகப் புறத்தூதினைக் காட்டினும் இலக்கியங்களில் அகத்தூதே அதிகம் பயிலப்படுகின்றன. அக இலக்கியங்களில் காணப்படும் வாயில், வாயில் மறுப்பு ஆகிய துறைகளை அகத்தூதாகக் கொள்ளலாம். வள்ளுவர் தூதுபற்றி ஒரு அதிகாரமே அமைத்திருக்கின்றார். பெருங்காவியங்கள் அனைத்திலுமே தூது இடம்பெறுகின்றது. பாரதம் காட்டும் கண்ணனும், பெரியபுராணம் உரைக்கும் சிவபெருமானும் கூடத் தூது சென்றதாகக் கூறப்படுகின்றது. இவ்வாறு இறைவனே தூது சென்ற சிறப்பினையும் நம் தமிழிலக்கியம் உடையது. இறைவனைத் தலைவனாகவும், தன்னைத் தலைவியாகவும் கொண்டு அஃறிணைப் பொருட்களைத் தூதனுப்பிப் பாடும் பக்திப்பாடல்களும் பலவுண்டு. இவ்வகையில் தாயுமானவர் பாடிய பைங்கிளிக்கண்ணி மிகச் சிறந்தது. பிற்காலத்தில் தனியொரு இலக்கியமாகவே இத்தூது தழைத்தது. அவற்றுள் தமிழ்விடுதூது தனித்திலங்குவது.

தமிழ் இலக்கியத்தில் மட்டுமின்றிப் பிறநாட்டார் இலக்கியங்களிலும் தூது இடம் பெறுகின்றது. ஒப்பற்ற நாடகாசிரியரான ஷேக்ஸ்பியரின் 'ரோமியோ அன் ஜூலியட்டில்' ஜூலியட் ரோமியோவிடம் தன் தோழியைத் தூதனுப்புகின்றாள். கிறிஸ்டோபர் மார்லோவின் டாக்டர் பாஸ்டஸில், பாஸ்டஸ் மெபிஸ்டோபிலிஸ் என்ற ஆசிரியரிடம் தூதனுப்புகின்றான். உலக மகா கவிஞரான ஹோமர் எழுதிய இலியத்தில் இடம்பெறும் டிராய் இளவரசன் பாரிஸ், ஸ்பார்த்தா நாட்டிற்கு ஒரு தூதுவனாக வந்தே ஹெலனைக் கவர்ந்து செல்கின்றான். இதுபோன்று இன்னும் பல சான்றுகளைக் காணலாம்.

பண்டைக் காலத்தில் அரசர்களுக்குப் பேருதவி புரிந்து வந்த ஐம்பெருங்குழுவில் தூதுவரும் இடம் பெற்றிருந்தனர். தூதுவர்கள் எப்படியிருக்க வேண்டும் என்பதனை வள்ளுவர் விரிவாகக் கூறுகின்றார். அபிதான சிந்தாமணி தூதுவனுக்குக் கூறும் இலக்கணம் பெரும்பாலும் வள்ளுவர் கருத்தினையே ஒட்டி அமைகின்றது. நற்குடிப் பிறந்தோனாகவும், சகல சாத்திரங்களும் கற்றோனாகவும் கண்சிமிட்டுதல் போன்ற சாடைகள், சிட்டிகை போடுதல் முதலிய செயல்கள் அறிந்தவனாகவும், பொருள்பால் பற்றற்றவனாகவும், சமர்த்தனாகவும் இருப்பவன் தூதனாவான். அத்தூதன் அனைவரிடத்தும் நட்புடையனாகவும், அன்புள்ளவனாகவும், ஞாபகமுள்ளவனாகவும், தேசகாலங்களை அறிந்தவனாகவும். தேகபுஷ்டியுள்ளவனாகவும், பயமில்லாதனாகவும், பலபாஷைகளைப் பேசுகின்றவனாகவும, சத்துரு இடத்தில் மறைந்து சென்று அவன்செய்கை, அபிப்பிராயம், அவன்சேனையின் அபிப்பிராயம், பலம், இச்சை இவைகளை அறிபவனாகவும், சத்துருவினிடம் சென்று அவன் செய்கைகளை அறியுமிடத்துத் தனக்குத் தீங்கு நேராது தப்பித்துக் கொள்பவனாகவும் இருத்தல் வேண்டும். இவ்வகைத்தூதன், தான் வகுத்துக்கூறுவான், கூறியது கூறுவான் என இருவகைப்படுவான்.[1]

தான் வகுத்துக் கூறுபவனே முதல் தரமான நல்லதூதன் என்று பரிமேலழகர் கூறுகின்றார். இதனைப் பின்வரும் பாரத வெண்பாவும் வலியுறுத்துகிறது.

'தானறிந்து கூறும் தலைமற் றிடையது
கோனறைந்தது ஈதென்று கூறுமால் — தானறியாது
ஓலையே காட்டும் கடைஎன் றொருமூன்றும்
மேலையோர் தூதுரைத்த வாறு.'

பின்னும் வேற்றரசரிடம் சென்று பேசும்பொழுது காரியங்களைத் தொகுத்துச் சொல்லி அவனுக்கு ஆகாத காரியங்களை அறிவித்துமிடத்துக் கொடுஞ்சொற்களைக் கூறியும், தான் எடுத்தகாரியத்தைப் பகைவர்மனங்கொள அவர் கோபிக்கினும் அஞ்சாது காலத்தோடு பொருந்த அதை முடிக்கத்தக்க உபாயம அறிபவனும். பகைவரிடம செல்லுமகால், சென்றகாலம், சொல்லும் இடம் அறிந்து தான் கூறப்போகும் விஷயத்தை முன்பேவிசாரித்து உரைப்பவனும், பகையரசர்களது அமைச்சர்களைத் தம் வசமாக்கும் வன்மையுடையவனும் தூது கூறத்தக்கவனாவான். இத்தகைய செய்கைஉடையவனையே தூதாகக்கொள்ளவேண்டும்.[2] இராமாயணத்தில் முக்கிய அங்கம் வகிக்கும் இராமதூதனான அனுமன் எவ்வகையில் இவ்விலக்கணங்களுக்குப் பொருந்தி நிற்கின்றான் என்பதைக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

---

1 அபிதான சிந்தாமணி: பக்கம்: 885

2 அபிதான சிந்தாமணி: பக்கம்: 885

தூதுவனுக்குரிய தகுதி :—

தூது அனுப்பப்படுபவன் மீது தூது அனுப்புவோர்க்கு மிகுந்த நம்பிக்கை இருத்தல்வேண்டும். மிக நெருங்கிய தொடர் புடையாரையே அகத்தூதிற்கு அனுப்புவது வழக்கம். இவ் வகையில் அனுமன், இராமனுக்கும் சுக்கிரீவனுக்கும் நம்பிக்கைக் குரியவனாகின்றான். இராவணாதியர்களை அழிப்பதன் முதல் நிகழ்ச் சியாக, இராம அவதாரத்தின் எண்ணம் நிறைவேறுதற்குரிய வழியாக சீதையைத் தேடுவது ஆரம்பமாகிறது. தென்றிசைக் கண்ணே இராவணன் இலங்கை இருப்பதை உய்த்துணரும் எரி கதிர்ச்செல்வன் சுக்கிரீவன் அத்திசைக்கண், அனுமன், அங்க தன், சாம்பன் முதலிய பெரும் வீரர்களை இரண்டு வெள்ளம்வீரர் களோடு அனுப்புகின்றான். சுக்கிரீவன் 'வன்றிசைக்கு இனி, மாருதி நீ அலால் வென்றிசைக்கு உரியன் பிறர் வேண்டுமோ?' என வினவிக் காலின் மைந்தன் பாலுள்ள ஆழ்ந்த நம்பிக்கை யைப் புலப்படுத்துகின்றான்.

நெடியோனும் ஆண்டகை அனுமனை நிறை அருளால் உற நோக்கி 'நீதி வல்லோய் காண்டி எனின் குறி கோட்டி' எனத் தனித்து அழைத்துச் சென்று சீதையின் முழுவடிவினை யும் கூறுகின்றான். பின் சில அடையாள மொழிகளையும் உரைக் கின்றான். 'வினையும், மாமணிநல் மோதிரமும்' கொடுத்து 'அறிஞ! நின் வினையெலாம் முடிக்க' என விடைகொடுத்து அனுப்புகிறான். புனையும் வார்கழலனை இராமன், தருமம்அன் னான் தனனிடம் மட்டுமே இவ்வாறு உரைப்பது அவனே அறத் தின் நாயகன் தன்தேவியைக் காண்பதில் வெற்றியடையப் பேறுகின்றான் என்பதை வெளிப்படுத்துகின்றது. எல்லா வான ரர்களும் சீதையைத் தேடும் பொருட்டு அனுப்பப்படினும் அனு மனிடம்மட்டுமே இராமனும், சுக்கிரீவனும் நம்பிக்கைகொண்ட தால் அனுமன் மட்டுமே தூதனாக மதிக்கப்படும் தகுதி அடை கின்றான்.

தூது இலக்கியங்களில் தூதாக அனுப்பப்படும் பொரு ளைப் புகழந்துரைப்பதாக ஒருபகுதி உண்டு. அதில் பிறபொருட் களுக்குத் தூதுசெல்ல இல்லாத திறமையைக்காட்டி அப்பொருள் ஒன்றால் மட்டுமே தூது செல்ல முடியும் என்பது வலியுறுத் தப்படும். அதை நாம் இங்கும் காண்கிறோம். தென் திசையில் சீதையைத் தேடிக் கொண்டு வரும் வானர வீரர்கள் அவளை எங்கும் காணாது மகேந்திரமலையை அடைகின்றனர். அங்கு சம்பாதியின் மூலமாக இலங்கை மாநகரில் இராவ ணன் சீதையைச்சிறை வைத்திருப்பதை அறிகின்றனர் அங் கிருந்து அலைகடலைத் தாண்டி யார் இலங்கையை அடைவது என்ற வினா எழுகின்றது. அனைவரும் அது தங்கள் ஆற்றலுக்கு விஞ்சிய செயல் என்பதனை வெளிப்படையாகவே ஒப்புக் கொள் கின்றனர். அனுமனே இதற்குத் தகுதியானவன் என்பதனைச் சாம்பன் உணர்ந்து அவன் ஆற்றல்களையெல்லாம் எடுத் துரைத்து அவனை அக்கனகமாநகருக்கு அனுப்புகின்றான். இத

ஞல் இகல் அனுமன் மேலும் சிறப்புறுகின்றன். அவர்கள் அனைவரும் கொண்ட நம்பிக்கையைச் சிதைக்காது வழியில் எதிர்ப்படும் இடையூறுகள் அனைத்தையும் வென்று வெற்றி வீரனாக மீள்கின்றன்.

அகத்தூது :—

அனுமன் சீதையிடம் சென்றது இதன்பாற்படும். காற்றினும் கடுகிக் கடலைக் கடக்கின்றன் காலின் மதலை. இடைப்பட்ட இடையூறு களைந்து கருமமே கண்ணாகக் கொண்டு இலங்கையை அடைகின்றன். அந்நகர்க் காவல்தெய்வத்தை வென்று அவள் வாழ்த்துரையோடு அந்தியிருளில் சிற்றுருக் கொண்டு செற்றம் நீங்கியமனத்தினன் உள்ளே நுழைகின்றன். ஒருதூதுவனுக்கு வேண்டிய மனஉறுதியையும், பொறுமையையும், கூர்த்தமதியையும், ஆழ்ந்த திறமையையும ஆழ்கடலைத் தாண்டி இலங்கையில் நுழைவது வரையில் உள்ள ஒவ்வொரு சிறு நிகழ்ச்சியிலும் பொன்மேனியான் மாருதியிடம் காண்கின்றோம்; இனியும் காண்போம்.

இலங்கையில் அங்கும் இங்கும் எங்கும் ஒரு சிறு இடம் கூட விடாது ஊண் உறக்கமின்றிச் சீதையைத்தேடும் பேரெழில் வீரனை அனுமன் இறுதியாக அவளை அசோகவனத்தில்சோகமே உருவெடுத்து வந்தாற் போன்று அமர்ந்திருக்கும் நிலையில் காண்கின்றன். இன்பக்கடலில் திளைக்கின்றன். அவள்சீதையே என்பதை,

> 'எள்ளரு முருவினல் லிலக்க ணங்களும்
> வள்ளறன் னுரையொடு மாறு கொண்டில
> கள்ளவா ளரக்கனக் கமலக் கண்ணனார்
> உள்ளுறை உயிரினை யொளித்து வைத்தவா'
>
> (காட்சிப்படலம். 6.)

எனத் தெளிகின்றன். தூதுவர்களுக்கு இருக்க வேண்டிய நினைவாற்றலும், சாதுர்யமும இங்கு அனுமனிடம் புலப்படுகின்றன.

தேவியைச் சந்தித்துத் தான் தூதுவந்த செயலைத் தெரிவிக்கத் தக்க பொழுதினை எதிர் பார்க்கின்றன் தாயினும் நல்லான். இலங்கைக்காவலன் இழிமொழி பலபுகன்று அகன்றதும் அன்னை சானகியைச் சுற்றியிருந்த காவலரக்கியரைத் தன்விஞ்சையால் தூங்கச் செய்கின்றன். ஆணியாய் உலகுக்கெல்லாம் அறப்பொருள் நிரப்பும் அண்ணலின் அற்புத ஆற்றலுடன், சமயோசிதப்புத்தியையும் இவண் காணலாம். காகுத்தன் தேவியை எவ்வாறு அணுகுவது? எங்ஙனம் தூதுரைப்பது என ஆழ்ந்து சிந்திக்கின்றன். அஞ்ஞான்று சீதை பலவாருக எண்ணித் தன் நம்பிக்கை முற்றுமிழந்து இனி உயிர் துறத்தலே நன்று என நினைந்து அருகிலிருந்த மாதவிப் பொதும்பரை அடைந்து சிந்தனையைச் செயல்படுத்த முனைகின்றுள். அவ்வளவில்,

'கண்டனன் அனுமனுங் கருத்து மெண்ணினுன்
கொண்டனன் துணக்க மெய்தீண்டக் கூசுவான்
அண்டர் நாயகன ருடுதன் யானெனுத்
தொண்டை வாய் மயிலினை தொழுது தோன்றினுன்'
(உருக்காட்டுப்படலம் : 25)

தூதுவனுக்குத் தேவையான நுண்ணறிவும் விரைந்து செய லாற்றும் திறமும் இவண் அனுமனிடம் நிறைந்திருக்கக் காண் கின்றேம்.

தேவியின் சிந்தையைத் திசைதிருப்பிய அனுமன் உடன் 'இராமனது ஆணையால் அடைந்தேன்: செய்தவத்தால் செய்ய வள் நின் சேவடி நோக்கினேன்; ஈண்டு நீ இருந்து இடரின் வைகுவதை ஆண்டகை அறிந்திலன். அதன் காரணம் அரக்கர் தம வருக்கம் வேரோடு மாண்டிலது அலால் வேறிலை' என்று தன்னைக் கண்ட மருட்சியால் தயங்கும் தேவியிடம் கூறுகின் ருன். தூதுரைப்போன் சொல்வல்லனுகை இருத்தல் மிக இன்றி யமையாதது. இலங்கையிலெயிற்று வீரன் தன் கூற்று, தலைவ னைக் காணுது வருந்தும் சீதையின் மனநிலை அறிந்து அதற் கேற்ப ஆற்றுப்படுத்தும் பாங்கில் அமைந்துள்ளமை அறிய லாம். மீண்டும்,

'ஐயுற லுளதடை யாள மாரியன்
மெய்யுற வுணர்த்திய வுரையும் வேறுள
கையுறு நெல்லியங் கனியிற் காண்டியால்
நெய்யுறு விளக்கனுய் நினையல் வேறென்ருன்'
(உருக்காட்டுப்படலம் : 26)

இங்கு இராமனது நெய்யாகிய அன்பினை மீண்டும் பெற்று சீதையாகிய விளக்கு வளரும் எனச் சுட்டுகின்ருன். தற்கொலை பாவம்; அதனை உணர்த்த நினையல் வேறு என்கின்ருன். மற் றும் பல உரைக்க, சிதை அலங்கல் தாழ்மார்பனை 'இவன் நிரு தன் அல்லன்; உரையும் தூயன்' எனத் தெளிகின்ருள். இங்கு வந்து எம்பிரான் நாமம் சொல்லி உருக்கினன். உணர்வு தந்தனன்; உயிர் இதின் உதவி வேறுண்டோ?' என உளமகிழ் கின்ருள் மிதிலைச் செல்வி. அவள் அகங்குளிரும்படி இராமன் திருவுருவ நிலையை விவரித்து இராமன் உரைத்த அடையாள மொழிகளையும் மொழிகின்ருன். தூதுச் செய்தியைக் கேட்போர் கருத்து ஒன்றும் வகையில் உரைக்க வேண்டும். அதற்கேற்ப கேட்போர் பிணிக்குந்தகையவாய் அரிக்குலத்தண்ணல் மொழி கின்ருன்.

இராமன் காடுசெலத் துணிந்த ஞான்று, 'நடத்தல் அரிது ஆகும் நெறி; நாட்கள் சில; தாயர்க்கடுத்த பணிசெய்து இவண் இருத்தி' என, அச்சுற்று உடுத்த துகிலொடும், உயிர் உக்க உடலொடும் எடுத்த முனிவொடு அயல் நின்றதை

முதலில் கூறினான். பின் அயோத்தி நகர் வாயில் அகலா முன் 'யாண்டையது கான்?' எனச் சீதை வினவியதை இப்பொழுது நினைவூட்டுகின்றான். பின்,

'எள்ளரிய தேர்தரு சுமந்திர னிசைப்பாய்
வள்ளல் மொழி வாசகமெனத் துயர் மறந்தாள்
கிள்ளையொடு பூவைகள் வளர்த்தல் கிளவென்னும்
பிள்ளையுரை' (உருக்காட்டுப்படலம் : 63)

எடுத்தியம்பித் திருவாழியினையும் காட்டுகின்றான். ஆழி கண்ணுற்ற சீதைநிலை குழவி உயிர்த்த மலடிக்கு உவமையாயிற்று. 'மும்மையாம் உலகம் தந்த முதல்வற்கும் முதல்வன் தூதாகி, செம்மையால் உயிர் தந்தாய். யான் மறு இலா மனத்தேன் எனில் ஊழி ஓர் பகலாய் ஓதும் ஆண்டு எல்லாம் உலகம் ஏழும் ஏழும் வீவுற்ற ஞான்றும் இன்று என இருத்தி' என வாழ்த்துகின்றாள் சீதை, நாயகன் இன்னுயிர்த்துணை ஆதலின், மிக்க பரிவோடும் பணிவோடும் அவளிடம் உரையாடுகின்றான். கேட்போர்க்கேற்பச் செயல் படல் தூதர்தம் இயல்பே.

இதன்பின் சீதை இராமன் வரலாறு வினவ, மாயமானாய் வந்த மாரீசன் குரல் சீதையை மயக்கியதையும், இலக்குவன் சென்று இராமனைக் கண்டதையும், இருவரும் பின் சீதையைத் தேடி அலைந்ததையும், சடாயுமூலம் இராவணன் கவர்ந்து சென்றதை அறிந்ததையும், வெவ்வழல் உற்ற மெழுகென அழியும் மெய்யன் சுக்கிரீவனுடன் நட்புக்கொண்டதையும், பின் தன்னை இங்கு அனுப்பியதையும் முறையாகக் கூறுகின்றான்.

சீதைக்குத் தான் கடலைக் கடந்ததையும் கூறித் தன் பேருருக் காட்டுகின்றான். அதுகண்டு வியந்த சீதை 'ஒழிந்தேன் ஐயம். உயிர் உயிர்த்தேன். நிருதர் என் ஆவர் நீயே என் கோன் துணை ஆனால்?' என்று கடல் கடந்த காலின் புதல்வனைப் பாராட்டுகின்றாள்.

'தொகச் சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாம் தூது' (குறள் : 685)

என்றார் வள்ளுவப் பெருந்தகை. இதன்படி, சீதையின் பாராட்டுரையில் மயங்கித் தன்னையிழக்காத அனுமன் அவள் மனந் தேறும்படி வானரர்களின் ஆற்றலைக் கூறுகின்றான். அவளை ஆற்றுவித்தல் மூலம் தலைவனுக்கும் நன்மை செய்கின்றான். 'அநந்தத்யே வண்ணக்கடலின் இடைக்கிடந்த மணலின் பலரால் வானரத்தின் எண்ணற்கரிய படைத்தலைவர். யான் அவர்தம் பண்ணைக்கு ஒருவன் எனப்போந்தேன். ஏவக்கடவ பணி செய்வேன்' என அடக்கமாக நவின்று வானரர் பெருமையினை விரிவாக உரைக்கின்றான். அவர்களின் ஆற்றலை,

'வெள்ள மெழுபதுள தன்றோவீரன்சேனை யிவ்வேலைப்
பள்ள மொருகைந் நீரள்ளிக் குடிக்கப் போதும் பான்மை
யதோ
கள்ள வரக்கர் கடியிலங்கை காணு தொழிந்ததாலன்றோ
உள்ள துணை யுமுளதாவ தறிந்த பின்னு முளதாமோ'
(உருக்காட்டுப்படலம் : 116)

எனப்பகர்கின்றான். அனுமன் இவ்வாறு வானரர்களின் பெருமை யுரைப்பதற்குக் காரணம் சீதையின் மனக்கலக்கம் தவிர்தற்பொருட்டே. இராம இலக்குவரோ இருவர்; அரக்கரோ அளவிறந்தவர்; இராமன் துணையோ வானரப்படை; இதனால் மேருமலையினையே பெயர்த்த இராவணனின் வதம்பற்றிய ஐயம் சீதையின் மனதில் எழுவது இயல்பு. அவள் மனநிலைக்கேற்பச் செயலாற்றித் தானொரு தலையாய தூதன் என்பதனை உறுதிப்படுத்துகிறான்.

'கண்டு வந்தேன் கொண்டு வரவில்லை, என்று எங்ஙனம் உரைப்பது என எண்ணிய வாயுவின் தனயன் அண்டமுதல் நாயகனது ஆவியனையாளைக் கொண்டகல்வதே கருமம் என உணர்கின்றான்.

'பொன்றிணி பொலங்கொடி யென்மென் மயிர்பொருந்தித்
துன்றிய புயத்தினி திருக்க துயர்விட்டாய்
இன்றுயில் விளைக்க வொரிமைப்பினி றைவைகும்
குன்றிடை யுனைக்கொடு குதிப்பெனிடை வைகேன்'
(சூடாமணிப்படலம் -3)

எனக்கூறி 'விதியால் இப்பேறு பெற என்கண் அருள். பின்னே ஆறு துயர். அடியேன் தோள் ஏறுகடிது' என்று தொழுது இன்னடி பணிகின்றான்.

அதற்குச் சீதை 'அது சிறப்பின்று, எனப் பல காரணங்களைக் காட்டி வேதநாயகன்பால் இனி மீண்டு போதலே காரியம் என்றனள். கோதிலானும், 'மருளும் மன்னவற்கு யான் சொல்லும் வாசகம் அருள்வாய்,' எனவேண்டினன் சீதைதான் இன்னும் இங்கு ஒருமாதப்பொழுதே இருப்பேன். அதற்குள் மீட்கப்படவில்லையெனில் இறப்பேன் என்று கூறுகிறாள். மேலும் சில அடையாளமொழிகளையும் மொழிகிறாள். இத்துடன் அமையாது தன் விதியினையும், நிலையினையும் நொந்து,

'தன்னை நோக்கி யுலகம் தளர்தற்கும்
அன்னை நோய்க்கும் பரதன் அங்காற்றுறும்
இன்னல் நோய்க்கும் அங்கேகுவ தன்றியே
என்னை நோக்கியிங் கெங்ஙன மெய்துமோ'
(சூடாமணிப்படலம்: 37)

எனச் சிந்தை நைந்துருகி வருந்துவாளைச் சொல்லின் செல்வன் தன் சொல்லாற்றலால் ஆற்றுப்படுத்துகின்றான். சூழ் நிலைக்கேற்பத் தானே ஆராய்ந்து தூதுரைப்பவனே தலையாய தூதன். இசையுடையண்ணல் தான் இங்கொரு தலையாய தூதன் என்பதனை நிறுவுகின்றான். மிகவிரிவாக இராமனது நிலையினையும் அவனது ஆற்றல்களையும் எடுத்துப்பேசி அவன் உடன் வருவான் என்பதனைக் காரணகாரியத்தோடு நிலை நிறுத்துகின்றான். 'தீர்த்தனும் கவிக்குலத்திறையும் தேவி நின் வார்த்தை கேட்டுவப்பதன் முன்னம் குரக்குப் படைகள் மாக்கடலைத் தூர்த்து இலங்கையைச் சூழ்ந்து ஆர்ப்பரிக்கும் ஓசையைக்கேட்பாய். எண்ணரிய பெரும்படை நாளை யிந்நகரை நண்ணும். அப்பொழுது விண்ணுறு கலுழன் மேல் விளங்கும் விண்டுவிற் கண்ணனை என்னெடு வெரிந்நில், நங்கை நீ அப்படையிடையே காண்பாய். நீ இடரும் சங்கையும் நீங்குவாய். உன் தனிமை விரைவில் தீரும்,' எனக் கூறித் தேற்றுகின்றான்;

இராம இலக்குவர் ஆற்றலையும் குரக்குப் படையின் ஆற்றலையும் கூறி அவள் மனதில் எள்ளளவும் ஐயமில்லாதபடி அவளின் மீட்சி உறுதி என்று ஆற்றுவிக்கின்றான். அதில் வெற்றியும் பெறுகின்றான். சீதையும் தேறி 'காகம் ஒன்றை முனிந்து அயல்கல்லெழு புல்லால் வேக வெம்படை விட்டதையும் 'மென்கிளிக்குத் தன் அன்னை கைகேயியின் பெயர் இடவைத்ததையும் கூறு' என மொழிந்து தன் துகிலில் பொதிந்துவைத்திருந்த சூடாமணியினையும் அடையாளமாகக் கொடுக்கிறாள். மேலோனான அனுமனும் அதனைத் தொழுது வாங்கி, சுற்றிய தூசிடை முற்றப்பழுதுறுவகைப் பந்தனை செய்து அவளை வணங்கி ஆசி பெற்று ஏகுகின்றான்.

வால்மீகியில் அனுமன், ஒரு பூனையளவு உருவத்துடன் இலங்கையில் நுழைந்து சீதையைக் காண்கின்றான். இங்கு சீதையைக் காக்கும் அரக்கியர் தாமே யுறங்குகின்றனர். அனுமன் சீதையின் எண்ணத்தை மாற்றி அவளருகில் செல்வதற்குரிய உபாயமாக இராமசரிதத்தைக் கூறுகின்றான். சீதை, வந்திருப்பவன் இராமபிரானால் அனுப்பப்பட்ட தூதுவனாகத் தான்இருக்கவேண்டும்; கடலைத்தாண்டித் தேவர்களும் நுழைதற்கரிய இவ்விடத்தில் நுழைந்திருப்பவன் வாயுபுத்திரனாகத்தான் இருக்கவேண்டும் என எண்ணுகின்றாள். எனினும் சீதையை நம்பவைக்க அனுமன் அதிகமாகச் சிரமப்பட வேண்டியிருக்கிறது. சிறுசிறு வேறுபாடுகள் தவிர மற்றப்படி கம்பன் காட்டும் அனுமனையே நாம் இங்கும் காண்கின்றோம்.

துளசி, ஒரு கொசுவளவு உருவத்துடன் அனுமன் இலங்கையில் நுழைந்து விபீடணன் உதவியுடன் சீதையைக் காண்பதாக அமைத்துள்ளார். இது அத்துணைச் சிறப்பு வாய்ந்ததாக இல்லை. திரிசடையின் கனவைக் கேட்டு அரக்கியர் பயந்து ஓடுகின்றனர். சீதை திரிசடையிடம் தன் உயிர் மாய்க்கத் தீ வளர்த்துக் கொடுக்கும்படி வேண்ட அனுமன் இராமனின் மோதிரத்தை

நழுவ விடுகின்றான். சீதை அதனை எடுத்து இராமநாமத்தைக் கண்டு மாயையோ என மயங்கும் வேளையில் இராம சரிதத்தைப் பாடிப் பின் சீதையை அணுகுகின்றான். சீதையை அணுகும் பொழுதுள்ள சூழ்நிலையை அமைத்திருப்பதிலும், அணுகும் முறையிலும் கம்பனே சிறப்பாக அமைத்துள்ளான் என்பது வெள்ளிடைமலை.

அனுமன் தனக்காகக் காத்துக்கொண்டிருந்த அங்கதன் முதலியோரை அடைந்து நடந்தன நவின்றுப் பின் அனைவரோடும் இராமன்பால் செல்கின்றான் தென்றிசை நோக்கித் தொழுது கொண்டு வரும் அனுமனைக் கண்டு இராமன், சீதை தென்றிசைக்கண் இருப்பதை உய்த்துணர்கின்றான். அதன்பின் இராமனை அடைந்து,

'கண்டனென் கற்பினுக் கணியைக் கண்களால்
தெண்டிரை யலைகட லிலங்கைத் தென்னகர்
அண்டர் நாயகவினித் தவிர்தி ஐயமும்
பண்டுள துயருமென் றனுமன் பன்னினான்'

(திருவடிதொழுத படலம் : 58)

தலைவன் மனநிலை உணர்ந்து 'கண்டனென்' என்ற ஒரே சொல்லாலேயே தலைவனுக்கும் உயிர் ஊட்டித் தனக்கும் புகழ்சேர்க்கின்றான் மெய்ம்மையின் வேலி போல்வான்.

சீதை இலங்கையில் தன்சற்பு நிலையினின்று அணுவளவும் வழுவாது இருப்பதையும் கூறுகின்றான். பின் 'காலையும் மாலையும் தானுமிலாதோர் கனகக் கற்பகச் சோலையங் கதனுள் உம்பி புல்லினால் தொடுத்த தூயசாலையிலிருந்தாள் ஐய தவம் செய்த தவமாம் தையல்' என்றுரைக்கின்றான். நடந்த நிகழ்ச்சிகளையும் நவில்கின்றான.

'இங்குள தன்மை யெல்லா மியல்புளி யியம்பக் கேட்டாள்
அங்குள தன்மை யெல்லா மடியேனுக் கறியச் சொன்னாள்
திங்க ளொன்றிருப் பெனென்றாள் அன்னது தீர்ந்தபின்னை
மங்குவ துண்மை யென்றுன் மலரடி சென்னி வைத்தாள்'

(திருவடி தொழுத படலம் : 80)

என்றுரைத்து வேத நன்னூல் உய்த்தன காலமெல்லாம் புகழொடும் ஓங்கி நிற்பவன், 'வித்தக காண்டி' யென்று சூடாமணியைக் கொடுக்கின்றான். இங்கு அனுமன் தன்திறனால் சீதை நிலையைப் படம் பிடித்துக் காட்டுகின்றான்.

'அன்பறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்கு
இன்றி யமையாத மூன்று' (குறள் : 682)

என்ற வள்ளுவர் வாக்கினைப் பொருந்தி நின்று தன் செயலில் வெற்றி பெறுகின்றான்.

வான்மீகியில் அனுமன் அங்கதனிடமும், இராமனிடமும் நடந்த நிகழ்ச்சிகளை மிகவிரிவாகப் பேசுகின்றான். துளசியில் அனுமன் இராமன் கேட்ட பின்பே சீதையின் நிலை, அவள் கூறிய அடையாள மொழிகள் ஆகியன உரைத்துச் சூடாமணியைக் கொடுக்கின்றான் இதனின்றும் மாறுபட்டுத் தன் தலைவன் உள்ளமறிந்து முதலில் உரைக்க வேண்டுவது எது என்றறிந்து அதன்படித் தானே கூறும் கம்பனின் அனுமன் இவர்களினின்றும் தனித்து நிற்கின்றான்.

உலகப் புகழ்பெற்ற மாபெருங்கவி ஹோமரின் பேரிலக்கியமான 'ஒதிஸிய'த்தில் காப்பியத் தலைவன் ஒதிஸியஸின் விடுதலை, தூதுவன் மூலமே நடைபெறுகின்றது. ஒதிஸியஸ் டிராய்ப் போர் முடிந்து கப்பலில் தன்னூடு திரும்பும்போது கலிப்ஸோ என்னும் தேவகன்னிகையால் சிறைப்பட்டுக் கடலின் அடியில் வைக்கப்படுகின்றான். அதுகண்டு அதீனி என்னும் தெய்வம் வருந்தித்தன் தலைவன் ஸியஸிடம் முறையிடுகின்றாள். ஸியஸ் ஹெர்மிஸ் என்பவனைத் தூதனுட்பி ஒதிஸியஸைச் சிறையினின்றும் விடுவிக்கும்படி ஆணையிட, ஹெர்மிஸீம் விண்வழிப் பறந்து, கடலுக்கடியில் சென்று ஒதிஸியஸை மீட்கிறான். இவன் தூங்கச் செய்யும் மந்திரமும் அறிந்தவன். இவ்ஹெர்மிஸ் அனுமனைப் பெரிதும் ஒத்தமைகின்றான்.

புறத்தூது :—

அகத்தூது சென்று வெற்றிவாகை சூடிய அனுமன், தன் திறனால் இரு புறத்தூதும் சென்று தன் புகழை நிலைநாட்டுகின்றான். பரதன் இராவணன் இருவரிடமும் இவன் புறத்தூதாகச் செல்கின்றான்.

இராவணனிடமே முதற்கண் தூது சென்றாலும், அவனாகவே அங்கு சென்றனன் ஆதலினானும், தூதுவனாகச் சென்றவன் அங்கே ஒற்று வேலையும் திறம்பட நடத்தித் திரும்புகின்றனன் ஆதலினாலும் முதற்கண் பரதன் தூதினைக் கண்டுபின் செல்லலாம்.

சீதையை மீட்டு அரக்கர் குலத்தை வேரொடும் வீழ்த்திவிட்டு வெற்றிகரமாகத்திரும்பிவரும் இராமன் இடையில் பரத்துவாச முனிவரிடம் தங்க நேர்கிறது. இராமன் தான் திரும்பிவருவதற்குக் குறித்த நாள் நெருங்கி விட்டமையின், பரதன் தான் திரும்புமுன் அவன் ஆணையினை நிறைவேற்றி விடலாகாது என்ற அச்சத்துடன் அனுமனை,

'இன்று நாம்பதி யேகுமுன் மாருதி ஈண்டச்
சென்று தீதின்மை செப்பியத் தீமையும் விலக்கி
நின்ற காலையின் வருதுமென் றேயின் னெடியோன்
நன்றெனுவவன் மோதிரங் கைக்கொடு நடந்தான்'

(மீட்சிப்படலம்: 202)

வாயுபுதல்வனின் வேகமே பரதன் உயிரைக் காக்கமுடியும் என்பதறிந்த இராமன் அவனையனுப்பி அவன் பெருமையை உயர்த்துகின்றான். மறையவர் உருக்கொண்டு வான்வழியே மனோவேகமும் பின்னடையும்படிச் செல்கின்றான் அனுமன். அங்குப் பரதன் இராமன் இன்னும் மீளாமை கண்டு தான் சொன்னதுபோல் கோசலை தடுத்தும் கேளாது சத்துருக்கனனை வற்புறுத்தி ஆணையிட்டுத் தீ வளர்த்துத் தரச் செய்கின்றான்.

'தீயினை யெய்தி யிரைந்தெழுந்
தொன்று பூசலிடுமுல கோருடன்
நின்று பூசனை செய்கின்ற நேசற்குக்
குன்று போனெடு மாருதி கூடினான்'

(மீட்சிப்படலம் : 239)

அன்று சீதைக்கு உயிர்தந்து இராமனுக்கும் உயிருட்டிய மாருதி இன்று பரதன் உயிரையும் காக்கும் பேறு பெறுகின்றான். அய்யன் வந்தனன்; ஆரியன் வந்தனன். மெய்யின் மெய்யன்ன நின்னுயிர் வீடினால் உய்யுமோ அவன்? எனக்கேட்டு அவன் எழுப்பிய எரியைக் கரியாக்குகின்றான் அனுமன். பின்னும் இராமன் வரற்கு இன்னும் நாற்பது நாழிகைப் பொழுது உளது என்று உரைத்து அதற்குள் தூயன் இராமன் வரவில்லையெனின் தான் முதலில் இறந்துபடுவேன் என்று உறுதி கூறுகிறான். பரதனும் தன்கூற்றை நம்பும்படிச் செய்கிறான். பின் இராமன் காலந்தாழ்க்கின்றமைக்குக் காரணம்காட்டித் தான் கொணர்ந்த மோதிரத்தைக் காட்டுகின்றான். எல்லையில் இன்பம் அடைந்த பரதன் தன்னைத் தொழுகின்ற தூதனைத் தான் முறை முறை தொழுது வணங்குகின்றான். 'முத்திறத்தவருள்ளே ஒருவன் மூர்த்தியை ஒத்திருந்தாய் நீ எத்திறத்தாய்? என வினவ அந்தமில்லான்தன் வரலாறுரைத்துப் பேருருக்காட்டுகின்றான். பரதன் வேண்ட இராமனுக்குக் காட்டில் நேர்ந்த அனுபவங்களையும் அறைகின்றான். கேட்கும் பரதன் உற்றுழி உதவத் தான் இல்லையே என்றெண்ணி உற்ற வருத்தத்தை ஆற்றுவிக்கின்றான் ஆற்றுவிக்கும் திறன் கோளொத்தவனிடம் கைவந்த கலையாக சிறப்பாக அமைந்திருக்கக் காண்கின்றோம்.

'அறிவுரு ஆராய்ந்த கல்வி இம்மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு' (குறள்: 684)

என்ற வள்ளுவர் வாக்கினைத் தெளிந்த கம்பன் இவையுடையனுமனைத் தூதுவனாக்கி அவன் உயர்வை நிலைநாட்டுகின்றான்.

பரதனிடமிருந்து இராமனிடம் மீளும் கூருகிர்க் குவவுத்தோளான், அவண் நடந்தன நவில்கின்றான் கார்முகில் வண்ணன் களிப்புற்று,

'தீவினை யாம்பல செய்யத் தீர்விலா
வீவினை முறைமுறை விளைவ மெய்ம்மையால்
நீயவை துடைத்துநின் றளிக்க நேர்ந்ததால்,
யாயினும் அன்பினுய் யாம்செய் மாதவம்
(மீட்சிப்படலம்: 330)

என்று புகன்று அவ்வண்ணலை இறுகப் புல்லுகின்றான். பெறற்கரும் பெருமை அஞ்சனை சேய் அடைகின்றான்.

வான்மீகியில் இராமன் அனுமனிடம் 'அரக்கர்களும் விபீஷணனும், வானரர்களும், சுக்ரீவனும் என்னுடன் வந்திருப்பதாகக்கூறு. அப்பொழுது அவன் முகத்தில் சந்தோஷம் வெளிப்படுகின்றதா? துக்கம் வெளிப்படுகின்றதா என்று காண். இன்னும் என் விஷயத்தில் அவனுடைய அபிப்பிராயம் என்ன என்று ஜாக்கிரதையாகத் தெரிந்துகொள். பரதனுக்கு அரசாட்சியில் பற்றிருக்கின்றதா எனப் பரிட்சித்துப் பார்த்து அவ்விதமான ஆசையிருந்தால் நாங்கள் இங்கிருந்து அயோத்தியை நோக்கி வெகு தொலைவில் வரும்போதே திருப்பி வந்து என்னிடம் தெரிவிக்க வேண்டும்' என்று கூறுகின்றான். மானிட வடிவில் பரதனை அடைந்து தூதுரைக்கும் அனுமன் இராமனிடம் திரும்பி வரவேயில்லை. இராமன் அனுமனிடம் உரைக்கும் இக்கூற்று சிறப்புடையதாக இல்லை. பரதன் பண்பை மாசுப்படுத்துவது மட்டுமல்லாமல் இராமன் உளத்தூய்மையையும் கறைபடுத்துகின்றது. துளசி, 'நீ பிரம்மச்சாரி வேடம் பூண்டு அயோத்திக்குச் சென்று, பரதனிடம் நம்முடைய நலனைக்கூறு. பின்பு அவர்களுடைய நலனை அறிந்து வா,' என்று கூறி அனுப்புகின்றான். இவ்வாறு தூது கூறவேண்டிய செய்திகளிலேயே ஒருவருக்கொருவர் வேறுபடுகின்றனர்.

கடலினும் பெரிது கற்ற மாருதியின் மற்றொரு புறத்தூது பகைவன் இராவணனிடம் சென்றதாகும். இத்தூதின் தனிச்சிறப்பு இராமன் அனுப்பாமலேயே இராமதூதனாகச் சென்றதாகும். முளரி நீங்கியாளிடம் சென்று தன் தூதுரைத்த அனுமனுக்கு இராவணனை உடனே அழிக்கவேண்டும் என்ற சீற்றம் தோன்றுகிறது. அறிவு அவ்வெண்ணத்தை மாற்றுகின்றது. இராமன் இராவணனுடன் பொருது சீதையை மீட்டலே அவ்விருவர்க்கும் சிறப்பு; அனுமனால் அழிக்கப்படின் இழிவே இதனுடன் அனுமன் இஞ்ஞான்று தனியனாய் அவனை அழித்தலும் எளிதல்ல. எனவே இராமனிடம் விரைவில் மீண்டு சீதை இருப்பிடம் உணர்த்தலே அவன் இப்பொழுது செய்யவேண்டுவது. அவனின்றி சீதைநிலை அறிவிப்பார், இராமனுக்கு யாருமில்லை. வேறு வழியுமில்லை ஆகலின்தான் தூதாகச் செல்லலே பொருந்தும் என முடிவு செய்கின்றான். தலைவனுக்குத் தன்னால் இழுக்கு நேரிடக்கூடாது என்பதில் ஆழ்ந்த கவனத்துடன் விளங்கும அனுமனின் பண்பு ஒரு தூதுவனுக்கு மிகமிக இன்றியமையாதது.

மேலும் பொன்னெடுங் கிரிபோற் பொலிந்த தோளினன் தானே இராவணனிடம் தூதுசெல்ல முன்நிற்பது காகுத்தன் தேவியை விரைவில் மீட்க விழைந்தமையே. நிருதர்கோனிடம் பின் விளைவுகளை உணர்த்தி மிதிலைச் செல்வியைச் சிறைவிடும் படிக் கேட்கவேண்டும்.

'அல்லதூஉ மவனுடைத் துணைவ ராயினர்க்
கெல்லையுந் தெரிவுறு மெண்ணுந் தேறலாம்
வல்லவ னிலைமையும் மனமுந் தேறலாம்
சொல்லுக முகமெனும் தூது செல்லவே'

(பிணிவீட்டுப் படலம்: 22)

என முடிவு செய்கின்றான்.

அனுமனின் இவ்வெண்ணம் ஒரு தூதுவனுக்குரிய இலக்கணமாகவே குறிக்கப்பட்டுள்ளது.

'கடனறிந்து காலங் கருதி இடனறிந்
தெண்ணி உரைப்பான் தலை' (குறள்: 687)

என்ற வள்ளுவரின் குறட்பா இதனை வலியுறுத்தும்.

இராவணனுக்குத் தன் வரவையுணர்த்தி எவ்வாறு அவனைக் காண்பது என எண்ணியவன் முதலில் அசோக வனத்தை அழிக்கத் தொடங்குகின்றான். பின் தன்னை எதிர்க்க வந்த அனைவரையுமே அழித்து, இறுதியாக இந்திரசித்தின் பிரம்மாத்திரத்தால் கட்டுண்டு இராவணனின் அவைக்குக் கொண்டு செல்லப்படுகின்றான். கூற்றினை ஒக்கும் இராவணன்,

'யாரை நீ என்னையிங் கெய்து காரியம்
ஆருனை விடுத்தவ ரறிய வாணையால்
சோர்விலை சொல்லுதி யென்ன,'

(பிணிவீட்டுப் படலம்: 73)

அதற்கு நுணங்கு கேள்வியான் வாளரக்கன் தனைக் கண்டு அஞ்சாது, தனிமையும் கருதாது தன்தலைவன் சிறப்பைக் கூறுகின்றான். சீதை, பரதன் இருவரிடத்தும் தன் அன்பையும், பண்பையும், பணிவையும் காட்டுபவன் இங்குப் பகைவனிடம் தன் வீரம் விளக்குகின்றான்.

'வில்லிதன் தூதன் யான்; இலங்கை மேயினேன்; அவன் முனிவரும், அமரரும், மூவர் தேவரும், ஏனையர் யாவரும், யாவையும் நினைவரும் வினைமுடிக்க நின்றுள்ளான். போரணங் கிடங்கர் கவ்வப் பொதுநின்ற முதலே யென்ற வாரணம் காத்தவன், இன்று வானவர் காக்க வந்தான் என்று கூறித் தான் யார் என்பதனையும் கூறுகின்றான். வாலியின் மைந்தன் அங்கதன் ஏவலால் இலங்கை ஏகியதாக உரைத்தவுடன் இராவணன் நகைத்துக் கொண்டே 'வாலி, வலியன் கொல்? அரசின் வாழ்க்கை நன்றுகொல்' என வினவுகின்றான். வாலியின் வலியையும், அனு

மனின் ஆற்றலையும் கண்டவன் ஆதலின் உள்ளத்தெழுந்த அச்சம் அகற்றவே நகைக்கின்றான். அரக்கர் தலைவனின் கூற்றில் அனுமனைத் தன்பால் ஈர்ப்பதற்கான விருப்பமும் மறைந்து நிற்கின்றது. மாற்றான் மனம் அறியவல்ல மாருதியும் நகைத்து, 'அஞ்சலை அரக்க! வாலியும் துஞ்சினன்; அவன் வாலும் அழிந்தது', என்று எள்ளுகின்றான். அவன் உளம் தான் உணர்ந்ததையும் வெளியிட்டு அவனை அவமானத்திற்குள்ளாக்குகின்றான். பகைவனுக்கு ஆட்படா மனத்திண்மையை நாம் இவண் அஞ்சனை சிங்கத்திடம் காண்கின்றோம். பகைவர்களின் துணையைப் பிரிப்பதுதானே அமைச்சர்களின் கடன்! அறிவு சான்ற அமைச்சனான அனுமன்தான் பகைவனுக்கு ஆட்படாது தன் ஆற்றலால் வீபீடணனை இராவணனிடமிருந்து பிரிக்கின்றான். வீபீடணனே இதனை இராமபிரானிடம்தான் அடைக்கலம் புகும்போது தெரிவிக்கின்றான். 'உனது ஒளிவீசும் அம்பினால் கரன் முதலிய வீரர்களும் குரங்குகட்கு அரசனாகிய வாலியும் இறந்தமையைக் கேள்வியுற்றதனால் மட்டுமன்று. இலங்கை மாநகர் அழிந்தவாற்றைக் கண்டதனாலும், அவன் அரக்கரைப் போரில் அழித்து வந்ததனைக் கண்டதனாலும் நான் இங்கு உன்னைச் சரண்புகுந்தேன் - புகழோய்!' என்பதே அவன் கூற்று. அனுமன் ஆற்றலுக்கு இது போதுமான சான்று.

இத்துடன் நில்லாது நாயகன் தூதன் அறம் அழித்தோனுக்கு அறிவுரையும் பகர்கின்றான்.

'வறிது வீழ்ந்தனை வாழ்க்கையை மன்னறம்
சிறிது நோக்கலை தீமை திருந்தினாய்
இறுதி யுற்றுள தாயினும் இன்னுமோர்
உறுதி கேட்டி யுயிர்நெடி தோம்புவாய்'

(பிணிவீட்டுப் படலம்: 92)

'சீதையைக் கவர்ந்ததால் உன் அரிய பலன் போயிற்று. காமச் செருக்கினால் தம்மதி மயங்கினோர் அழிவர். அறம் திறம்பினோர் யார் உளர் இவ்வுலகில்? காமத்தால் அழிந்தவர் பலர். மறுப்புண்ட வாழ்க்கையைவிட நாசியறுப்புண்ட வாழ்க்கை இனிதானது என்கின்றான். இதன்கண் அனுமன் சீதையால் மறுக்கப்பட்ட இராவணன் வாழ்வையும், மூக்கறுபட்ட சூர்ப்பணகை வாழ்வையும் குறிக்கின்றான். ஆயிரம் தலைகளிலிருப்பினும், உலகை அழிக்கவல்ல பற்பல புயங்கள் இருப்பினும் அவை உனக்கு நலம் உண்டாக்குமோ? எனத் துணிவுடன் கேட்கின்றான்.

'ஆதலாற் றனரும் பெறற் செல்வமும்
ஓதுபல் கிளையும் உயிரு முறச்
சீதையைத் தருகென் னெனச் செப்பினான்
சோதியான் மகனிற் கென்று சொல்லினான்'

(பிணிவீட்டுப் படலம்: 106)

தன்முன் நிற்பவன் மும்மூர்த்திகளில் ஒருவன் அருள் பெற்றவன். மற்றொருவனின் பேரன். தேவர்களையெல்லாம் தனக் கடிமையாக்கினவன். இவையெல்லாம் அறிந்திருந்தும் அஞ் சாது அவனுக்கு அறிவுரை நல்குகின்றான். அவன் அழிவைப பற்றி அவனிடமே துணிந்துரைக்கின்றான். இந்த அஞ்சா மையை அனுமனிடம்தான் காண இயலும்.

'இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவற்கு
உறுதி பயப்பதாம் தூது' (குறள்: 690)

என்ற வள்ளுவர் வாய்மொழி இங்கு நினைவு வருகின்றதன்றோ!

அவை அஞ்சானை அழிக்க அரக்கர்கோன் ஆணையிட, வீடணன் தூதரைக் கொல்லல் தகாது எனத் தடுக்கின்றான். ஆயினும் அனுமன் வாலில் எரியிடச் செய்கின்றான் இராவணன். அந்நெருப்பினாலேயே தன்னை யாரும் நெருங்கவிடாது செய்து இலங்கையையும் எரித்துவிட்டுச் சீதையிடம் விடைபெற்று மீள் கிறான். இதன் பின்னரே சூடாமணி பெற்றதாகத் துளசி குறிப் பிடுகின்றார். வான்மீகி சில சொல்லிச் சீதையை ஆற்றுவித்து விட்டு அனுமன் மீள்வதாக அமைக்கிறார். இது தவிர வேறு குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இன்று

அகத்தூது புறத்தூது இரண்டிலுமே அனுமன் ஈடுபட்டுச் செவ்வனே செய்து முடித்து மீள்வதைக் கண்டோம். இக்காவி யத்தில் இடம்பெறும் இன்றியமையாத நிகழ்ச்சிகளில் ஒன்று, இராவணனால் சிறைப்பட்ட சீதைஇருக்குமிடம் அறிதல். அதனை வெற்றிகரமாக ஆற்றிமுடித்து அனுமன் சிறப்பெய்துகின்றான். அதனினும் இச்செயலை அனுமனன்றிச் செய்துமுடிக்க வேறு எவருமிலர் என்னும்போது அவன் புகழ் பன்மடங்கு பெருகு கின்றது. அதிலும் சென்ற இடத்தில் எதிர்ப்பட்ட இடர்களையும் களைந்து பல அரும்பெரும் செயல்களையும ஆற்றி ஆணவம் இன்றி வருவது, மேலும் உயர்த்துகின்றது தனியொருவனாய் நின்று அரக்கர் பலரை அழித்து, இராவணனுடன் உரையாடி அவன் படைவலி கண்டு இலங்கையையே அழித்துவிட்டு வெற்றியுடன் மீளும் ஆண்டகை அனுமன். ஒரு தூதுவன் என்ற நிலையினிலேயே இத்துணைச் சிறப்புக்களையும் அஞ்சனை சிறுவன் கொண்டுள்ளான்.

அங்கதனும் இராமபிரானால் இராவணனிடம் தூதுசென்று தன் ஆற்றல் காட்டி வந்தான் எனினும் அனுமன் திறமைமுன் அவன் திறமை கதிரவனைக் கண்ட பனிபோல் கரைகிறது. 'இராம தூதன்' என்ற சிறப்புப் பெயரையும் அனுமனே பெறு கின்றான் இதனால் அனுமன் பெருமை புலப்படும் அனுமன் என்றாலே அஞ்சுகின்ற, அவன் ஆர்ப்பொலி கேட்ட அளவி லேயே அலமந்து ஓடுகின்ற அரக்கர் கூட்டத்தைத் தோற்று வித்த பெருமை அனுமனையே சாரும். தூதுவனிடத்து இருக்க வேண்டிய அரும்பண்புகள் அனைத்தும் ஒருங்கே பெற்றுத்

தான் ஒரு தலைசிறந்த தூதன் என்பதனைத் தன் சொல்லால் செயலால் வலியுறுத்துகின்றான்.

கந்தபுராணத்தில் முருகனால் தூதனுப்பப்படும் வீரபாகுத் தேவரும் கடலைக் கடந்து, இலங்கையை அழித்துத் தன்னை எதிர்த்த அரக்கரை விண்ணுலகிற்கு அனுப்பி அடைதற்கரிய சூரபன்மன் அரண்மனை அடைந்து, அஞ்சாத வீரவுரை பகன்று விஞ்சையால் காவலரக்கரைத் துயில்கொளச் செய்து, சிறையிருந்த வானவர்களையும், இந்திரன் மகன் சயந்தனையும் ஆறுதல் கூறித் தேற்றித் திருப்புவது ஒவ்வொரு நிலையிலும் அனுமனுடன் ஒத்தமைகின்றது. கம்ப இராமாயணத்திற்குப் போட்டியாக எழுந்த சைவகாப்பியம் கந்தபுராணம். இராமாயணத்தில் அனுமன் பெறும் நிலையைக் கந்தபுராணத்தில் வீரபாகுத்தேவர் பெறுகிறார். அனுமனை முற்றிலும் மனத்துட் கொண்டே படைக்கப்பட்ட பாத்திரம் வீரபாகு எனின் மிகையன்று. தூதனாக அனுப்பப்பட்ட அனுமன் ஒற்று வேலையும் செய்கின்றான். அனுமன் ஒற்றனாகச் செல்லவேண்டும் என்று செல்லவில்லை எனினும் சூழ்நிலை அவனை ஒற்றனாக்குகின்றது.

'எல்லீருஞ் சேற லென்ப
　　தெளிதன்றவ் விலங்கை மூதூர்
வல்லீரே லொருவ ரேகி
　　மறைந்தவ ணுழைகி வாய்மைச்
சொல்லீரே துயரை நீக்கித்
　　தோகையைத் தெருட்டி மீடிர்'

(சம்பாதிப் படலம்: 62)

எனும் சம்பாதி கூற்று இலங்கை அடைதற்கரிது என நவில்கின்றது. மேலும் சீதையின் இருப்பிடத்தினை அறிவதற்கு அனுமன் கரந்து ஒழுகவேண்டியுள்ளது. அவ்வாறன்றி தன்னை வெளிப்படுத்திச் சென்றிருப்பின் சீதையைத் தேடலரிது; அதனால் காணலுமரிது. வெற்றித் தூதுவன் அவலத்திற்கு ஆளாகியிருப்பான்.

கம்பரும், வான்மீகரும் இதனைத் தெளிவாக இலங்கை வருணனை மூலமும், அனுமன் காணும் காட்சிகளின் வாயிலாகவும் தெரிவிக்கின்றனர். கடலைக் கடந்த அனுமன் பவளமலையில் வந்து இறங்குகின்றான். ஆங்கிருந்தே இலங்கையின் எழிலையும் வளத்தையும் அரக்கர்களின்இறுமாந்த வாழ்வினையும் கண்ணுறுகின்றான். அரக்கர் காணின் அன்னையை அடைதல் அரிது என்றெண்ணித் தன்னுருகுறைக்கின்றான் சந்திரன் தோன்றிய பின் இருளில் இலங்கையின் மதிலை வானவர் வாழ்த்துடன் மேவுகின்றான். அம்மதில் ஊழிதிரி நாளிலும் உலையா வலியது. மடங்கல் அரிஏறும், மதமால்களிறும் நாணத் தனியே நடந்து புகும் நம்பி மிகப்பழைய அதன் வாயில் நண்ணுகின்றான். அவ்வாயில் முந்நூறு வெள்ளம் அளவுடைய கள்ளவினை வெவ்வலி

அரக்கர் சேனை காவல் கொண்டது. இலங்கையின் ஒரு வாயிலைக் காக்க இத்துணைப் படையினர் எனின் அதன் முற்றிய படைவலி எண்ணற்கும் எட்டுமோ? அளவில் ஆற்றலன்; அஞ்சா நெஞ்சினன். அனுமனே, எத்தேவர் எவ்வசுரர் இதனுள் புகமுடியும் என எண்ணி வியக்கின்றான் எனினும் இந்நகருள்ளும் புகுந்துலாவி வெற்றியுடன் மீள்கின்றான் எனின் அவன் ஆற்றலையும் அஞ்சா நெஞ்சினையும் நம்மால் வியக்கவும் முடியவில்லை.

கருங்கடல் கடப்பதரிதன்று இந்நகர்க் காவற்
பெருங்கடல் கடப்பதரி தெண்ணமிறை பேரின்
அருங்கடன் முடிப்பதரி தாமமர் கிடைப்பின்
நெருங்கடல் விளைப்பர் நெடுநாளென நினைந்தான்’

(ஊர்தேடு படலம்: 73)

இதனாலேயே அனுமன் கரந்து செல்கின்றான். அக்கரவு அவன் அறிவையும் புலப்படுத்துகின்றது. ஒற்றனுயினும் தூதனுயினும் சிந்தித்துச் செயலாற்றும் திறம்வேண்டும். அத்திறம் அனுமனிடம் அளவிறந்து காணப்படுகிறது. உருக்கரந்தவன் வாயில் வழிச் செல்லாது மதிலைத் தாண்டியே செலமுடிவு செய்கிறான். அவர்கள் அமைத்துள்ள வாயில் வழியே செல்லுதல் அழகன்று என்ற எண்ணமும் அனுமன் கொண்டான் எனக் கம்பன் கூறுகின்றான்.

ஏன் அழகில்லை என்பதற்கு வான்மீகி விளக்கமும் தருகின்றார். ‘சத்துருக்களை ஜெயிக்க விரும்புகிறவன் அவனுடைய பட்டணத்திலாவது, கிராமத்திலாவது வீட்டிலாவது நுழையும் போது வழியில்லாத இடத்தில் நுழையவேண்டும் என்பது நீதிசாஸ்திரம்’ என்று அவர் கூறுகின்றார். அந்நீதி சாஸ்திரப்படி ‘மதிற்சுவரில் வாசலில்லாத இடத்தில் தாண்டிச்சென்று அரக்கர்களுடைய தலையில் அடி வைத்து மிதிப்பதுபோல தனக்கு அளவற்ற ஜயம் கிடைக்கவேண்டும் என்று தன் இடது பாதத்தை முதலில் வைத்து லங்கையில் பிரவேசித்தார்’ என வான்மீகி கூறுகின்றார்.

வழியில் எதிர்ப்பட்ட இலங்கை மாதேவியை வென்று ஆரியன் கமலபாதத்தினை மனத்துள் வணங்கி இலங்கையுள் நுழைகின்றான் கேசரிபுத்திரன். அங்கு மணிமாடங்கள் வீசிய ஒளி கண்டு துணுக்குற்று அயோத்தி வேந்தன் புகழ் எனக் குவவுத் தோளான தகையனைய மேனி சுருக்குகிறான் கருங்கடல் கடந்த தாளான். பூத்தொறும் வாவிச் செல்லும் பொறிவரி வண்டில்போல ஆக்களின் கொட்டில், யானைகளின் கூடம், பெருமைமிக்க மாளிகைகள், குதிரைகளின் சாலைகள், கடிகாவலுடைய சோலைகள் ஆகியவற்றில் சென்று நுணிகித் தேடுகிறான்.

தேவர்க்கு அமுதம் ஈந்த குன்றன்ன தோளான் வானவமகளிர் ஆட்ட மஞ்சனம் ஆடும் அரக்கியரைக் காண்கின்றான்

சந்தப்பூம்பந்தர் வேய்ந்த தமனிய அரங்கில் கந்தர்ப்ப மகளிர் ஆடும் நாடகம் கண்ணுறும் நிருதமக்களையும் காண்கின்றான். அழகிய பொன்மயமான கற்பகமரங்கள் கொடுப்பவற்றைப் பெற்றுத் தங்களை அழகுசெய்து கொள்ளும் அரக்கியரைக் காண்கின்றான். கள்ளுண்டு களிக்கும் மகளிரையும், கொண்ட கணவரோடு ஊடும் மகளிரையும், கொழுநர் பிரிவால் வாடும் மகளிரையும் காண்கின்றான். கின்னரர்கள் மிதுனம்பாட, பன்னக மகளிர் பல்லாண்டிசைக்க, தரளம் வேய்ந்த வெண்ணிறவிமானம் ஊர்ந்து பொன்னகர் வீதிதோறும் புதுமனை புகுவோரைக் காண்கின்றான்; புதுமணம் புணருவோரையும் காண்கின்றான்.

அனுமன் காணும் இக்காட்சிகளால் இலங்கை மாந்தர் செல்வச் செழிப்பையும், அதனால் கொண்ட செருக்கினையும் சித்திரிக்கின்றான் கம்பன். வான்மீகி வேறுவேறு காட்சிகளைப் படைக்கினும் அவற்றினை விரிவாகப் படைத்து மேற்சண்டவற்றையே சுட்டுகின்றார். இலங்கையின் பெருவளனை இருபெருங் கவிஞர்களும் அனுமனைக் கருவியாகக்கொண்டு செவ்வையாகச் செய்துள்ளனர்.

இதன்பின்,

'இயக்கிய ரரக்கி மார்க ளுகிய ரின்சொல் விஞ்சை
முயற்கறை யிலாத திங்கண் முகத்தியர் முதலினோரே
மயக்கற நாடி ஏகும் மாருதி மலையின் வைகும்
கயக்கமி றுயற்சிக் குப்ப கருணனைக் கண்ணிற்'

(ஊர்தேடு படலம்: 121)

காண்கின்றான். மூன்று தேவர்களில் ஒருவனோ எனும்படி வலி கொண்ட இவன் இராவணனோ, என எண்ணும் மாருதி கண்களில் கனல்எழச் சீற்றம் கொள்கின்றான். பின் இருபது திண்புயங் களும் பத்துத் தலைகளும் இலாமை நோக்கி, மறுகி ஏறிய முனிவு எனும் வடவை வெங்கனலை அறிவு எனும் பெரும்பரவையம் புபலினால் அவிக்கின்றான்.

'மாட கூடங்கள் மாளிகை யோளிகண் மகளிர்
ஆடு அரங்குக ளம்பலந் தேவரா லயங்கள்
பாடல் வேதிகை பட்டி மண்டப முதற் பலவும்'

(ஊர்தேடு படலம்: 133)

அதன்பின் தேடி அலைகின்றான் இராகவன் புகழெனும் நலத்தான். காற்றுப்போற் புக இயலா விடங்களிலும் புகுந்து தேடியவன் புண்ணியன் விபீடணன் கோயிலுள் அடுத்து புகுகின்றான். உற்று நின்று அவன் உணர்வைத் தன் உணர்வான் உணர்கின்றான். குற்றம் இலாததோர் குணத்தினன் என்று கொள்கின்றான். இவ் வுணர்வு பின் அவனுக்காக இராமனிடம் பரிந்துரைக்கச் செய்கின்றது

வீடணன் வீடுவிட்டு ஏகுகின்றவன் இந்திரன் சிறை இருந்த இந்திரசித்தின் மாளிகை காண்கின்றான். புகைபுகாவாயி

னும் புகக் கூடியவனான அனுமன் 'இந்திர சித்தைக் கண்டு, இவன் யார் என அறியேன், ஆயினும் இளையவீரனும் இலக்குவன் இவனுடன் நெடுநாள் உளைய உள்ள போர் உளது' என உள்ளத்தின் உணர்கின்றான். பகைவன் வலியைப் பார்த்தவுடன் கணிக்கின்ற இயல்பு இராமதூதனுக்கு இருப்பதில் வியப்பில்லையே.

'அக்கன் மாளிகை கடந்துபோய் மேலதிகாயன்
தொக்க கோயிலும் தம்பியரில்லமுந் துருவித்
தக்க மந்திரத் தலைவர் மா மனைகளுந் தடவிப்
புக்கு நீங்கினன் இராகவன் சரமெனப் புகழோன்'

(ஊர்தேடு படலாம்: 144)

இங்ஙனம் ஒவ்வொருவர் அரண்மனையாக அனுமனைக் கடந்து வரச் செய்வதன் மூலம் கம்பன் ஒவ்வொருவரைப் பற்றியும் அவனும் நாமும் அறிந்து கொள்ளச் செய்கின்றான். இம் மறைமுக அறிமுகம் கம்பன் கவித்திறனுக்கோர் நற்சான்று. மேலும் அனுமன், இதனால் பகைவலி நன்குணர்ந்து பின்னால் இராகவனுக்கும வானரங்களுக்கும் அதனை உணர்த்தப் பேருதவி புரிகின்றது. இக்காட்சியை வான்மீகியை விடக் கம்பன் தெளிவாக அமைத்துள்ளான். அனுமன் கருத்துக்களும் முற்றும பொருத்தமாகத் தப்பாமல் இருக்கக் காண்கிறோம். அவன் திறனுணர்ந்து அவனைப் போற்றவும் செய்கின்றோம்,

பண்டு கனிக்கு அடல் கதிர் தொடர்ந்தவன் படைத்தலைவர்கள் ஆயிரக்கோடியினரின் மாளிகைகளையும் தேடி இடை அகழியைச் சேர்கின்றான். அதனைக் கடல் கடந்தாற்போன்று கடந்தான் அனுமன் என்றுரைப்பதன் மூலம் அதன் அகலமும் ஆழமும் வெளிப்படுத்துகின்றார் ஆசிரியர். சீதையின் மீட்பு எளிதல்ல; அரிதே என்பதும் புலப்படுகின்றது. மேலும்,

'சருவி நாழிகை பாதியிற் கலனும்
வெருவி யோடு மரக்கர்தம் வெம்பதி
ஒருவ னேயொரு பன்னிரண் டோசனைத்
தெருவு மும்மைநா ருயிரந் தேடினான்.'

(ஊர்தேடு படலம்: 157)

என்ற இவ்வொரேபாடலிலேயே கனகநகர் இலங்கையின் கடிகாவற் சிறப்பு, அனுமனின் வேகம், அவனது எண்ணவும் இயலாத ஆற்றல் அனைத்தையும் வெளிப்படுத்துகின்றான் கம்பன்.

அரக்கர்தம் ஆர்ப்பாட்டங்கள் அனைத்தும் அடங்க அனைவரும் துயில்கொள்கின்றனர். இராவணனுக்குட்பட்ட மன்னர்கள் வாழும் இரண்டுகோடித் தெருக்களைக் கடந்த பின் அகநகர் அடைகின்றான். ஆங்கு தன்னுடல் இனிய இளங்காற்றையும் விட நுட்பமாய் அமைய இராவணன் காதற் பெண்டிர் இல்லங்களில் புகுந்து புறப்படுகின்றான்.

அடுத்து அவன் மனைவி மண்டோதரி மனை அடைகின்றான். அவள் துயில் கொள்ளும் நிலை கண்ட ஆண்டகை அனுமன் அவள் ஜானகியே போலும் என ஒருகணம் எண்ணுகின்றான். அதனால் அகத்து எழும் வெம்தீ துன்னு தன் உயிர் உடலோடு சுடுவது எனத் துயர் உறுகின்றான் ஆனால் இவ்வையம் கணப் பொழுதில் அகலுகிறது. இம்மயக்கம் மூலம் மண்டோதரியின் பண்பினை நாம் உணரவைக்கின்றான் கம்பன்.

இராவணற்கு எடுப்பரும் கிரி எனத் திரள் தோளான் பின் இராவணன் மனை அணைகின்றான். உறங்குகின்றவனைக் கண்ட அவன் காலச் செந்தீ உமிழ்கின்றன கண்கள், ஆனால் உலகை அழிக்கும் முறைத்து எனினும் காலம் பார்த்து இறைவேலை தாவாத கடல் போன்று தன் சீற்றம் அடக்கி அவன் துயில்கின்ற நிலைகண்டு 'பூவை நல் நிலையில் உளள்' எனத் தெளிகின்றான். தெளிந்தவன் இலங்கைமா நகர் எங்கும் தேடியும் காணாது சென்று நிற்கின்றான்

யாவரும் துயிலும் இரவில் கண் துஞ்சாது சோர்வடையாது மிகக் கவனமாகத் தன் கடமையாற்றுகின்றான் அனுமன். ஒரே இரவில் இலங்கை முழுவதும் செம்மையாகத் தேடிய அவன் ஆற்றல்வியந்து போற்றற்குரியது. இராமன்பால்கொண்ட பற்றும் செய்யும் வினையின்கண் கொண்ட கடமை உணர்வும் அவனை இவ்வாறு செயல்படத் தூண்டுகின்றன. முயற்சி மெய் வருத்தக் கூலி தரும். அனுமனின் முயற்சி அவன் எண்ணத்தை நிறைவேற்றுகிறது.

சிறைப்பட்ட சீதையைக் காணாது துயருற்று வருந்தி நிற்கும் அனுமன் கண்களில் அசோக வனம் தென்படுகிறது. அங்கும் சீதையைக் காணவிடில் இலங்கையை வீட்டித் தானும் வீவதாக முடிவு செய்கின்றான். நல்வினை காரணமாகத் தன் தலைவன் ஆருயிர்த் தேவியைக் காண்கின்றான். காவல் அரக்கியர் சூழ அன்பே ஒரு உரு எடுத்தாற்போன்று இராமன் வரவு நாடி ஏங்கி இருக்கின்றாள் மிதிலைச் செல்வி. அந்நிலையில் காணும் மாருதி இன்பமும் துன்பமும் ஒருங்கே எய்துகின்றான்.

அவளை எவ்வாறு அணுகுவது என்று அனுமன் எண்ணிய அளவையில் துன்று பூஞ்சோலைவாய் அரக்கன் தோன்றுகின்றான். அதனால் அனுமனும் தான் மேற்கொண்டு செய்ய வேண்டிய வினயமும் செயலும் மேல்வினை பொருளும் இவ்வழி விளங்கும் என்றெண்ணி வினைகழல் இராமன் பெரும்பெயர் ஓதி அருகில் வந்து மறைந்து இருக்கின்றான்.

இரவு வேளையில் இராவணன் சீதையைச் சந்திக்க வருகின்றான். இக்காட்சியை ஏன் முன்னோ அல்லது பின்னோ அமைக்காது அனுமன் வந்த சத்தர்ப்பத்தில் அமைக்கின்றான் கம்பன் என்னும் வினா எழுவது இயல்பே. இவண் அமைப்பது மூலம் சீதையின் பெருங்கற்பு நிலையும் இராவணனின் இழிநிலையும் ஆழப்பதிகின்றது மனத்தில். மேலும் இக்காட்சியினைத் தானே நேரில் கான்பதன் மூலம் அனுமன் மற்றவர்களுக்கு எழும் ஐயங்

228665

னத் தக்க சான்றுடன் நீக்க இயலும் சீதை கற்பினின்றும் வழுவாதவள் எனக் கவிஞர்கள் சொல்லிச் செல்வதைவிட இப்படி ஒரு காட்சியை அமைப்பது சிறப்பாக அமைகிறது. அனுமனின் கரந்தநிலை, உண்மையறிய இங்குதவுகிறது.

அனுமன் இங்ஙனம் ஒற்றுத் தொழிலை மேற்கொள்ளினும் அவனை ஒற்றன் என்றுரைக்க முடியாது. ஒற்றன் உயிரே போயினும் தன்னை யார் எனப் பகைவன்முன் வெளியிடமாட்டான். ஆனால் அனுமன் வலியத் தானே தன்னை வெளிப்படுத்துகின்றான். அவன் தன் வினையைச் செம்மையாக முடிக்கக் கரந்துறைகின்றான் அவ்வளவே. தன்னை யார் எனப் புலப்படுத்துவதன் மூலம் இராவணனின் மனநிலையினையும், இரவில் தேர்ந்த கருத்துக்களைப் பகலில் உறுதிப்படுத்தவும், அவன் வலியினை முழுமையாக உணரவும் முயல்கின்றான். அனுமன் எப்பொழுதும் செயற்கரிய செய்யும் பெரியோனாகவே சிறக்கக் காண்கின்றோம் அவற்றுள் ஒன்றாக இவ்வொற்றுத் தொழில் அமைகின்றது.

ஊர்தேடு படலம் முழுவதும் இவ்வொற்றுதலே நடைபெறுகிறது. ஒற்றனுக்குக் கூரிய அறிவும், மனித சக்திக்கு உட்படாத ஆற்றலும் தேவை.[1] பகைவனின் நடவடிக்கைகளை அறிதற்பொருட்டு தங்கள் செயல்களில் விரைவு மிகமிகத் தேவை[2] என்பது அர்த்தசாஸ்திரம் கூறும் கருத்து. இத்தேவைகள் அனுமனிடம் அளவிற்கு மிஞ்சியிருக்கின்றன. மேற்கண்ட நிகழ்ச்சிகள் இதனை வலியுறுத்தும். இதனால் அனுமன் சிறந்த தூதன் மட்டுமல்ல; ஒற்றனாதற்கும் தகுதி உடையன் என்பது புலப்படும். அனுமனின் இத்திறனை துளசி இராமாயணத்தில் காண வழியில்லை. ஆனால் வான்மீகி இதனை அழகுபட அமைத்திருக்கின்றார். குறிப்பிடத்தக்க வேறுபாடும் இல்லை

அனுமன் இராம இலக்குவரை அணுகும்போதும், ஒற்றனாக வரவில்லையெனினும் ஒற்றுத்தொழிலை மேற்கொள்கின்றான். அவர்கள் நற்பண்பினர்; அவர்களால் சூரியன் மைந்தன் நன்மையே அடைவான் என்றறிந்த பின்பே தன்னை வெளிப்படுத்துகின்றான்.

இராம தூதன் என்ற பெயரும் புகழும் பெறும் அனுமன் சுக்கிரீவனுக்குச் சிறந்த அமைச்சனாகவும் திகழக்காண்கின்றோம். வள்ளுவர் அமைச்சியலிலேயே தூதுபற்றிப் பேசுகின்றார். அனுமனும் அமைச்சனாக இருந்தே தூதுவனாகச் செல்கின்றான். எனவே அனுமனிடம் அமைச்சனுக்குரிய பண்புகளில் சிறப்பாக அமைந்துள்ள வேறு சிலவற்றையும் இவண் நோக்குவோம்

நாடாளும் வேந்தன் எத்துணை வலியன் எனினும் அமைச்சனின் வலிமைதான் நாட்டின் வலிமையாகவும், நாட்டுத் தலைவனின் வலிமையாகவும் அமைகின்றது. அனுமனின் வன்மைக்கு

---

[1] The Kautiliya Artha'sastra Part II R. P. Kangle M.A., Page 25.

[2] Ibid Page 30.

நாம் சான்றுதேட்ரு ண்டுவதில்லை. அனுமன் அறிமுகமாவதிலிருந்து இறுதிவ அவன் ஆற்றலில் நாம் வியந்து நிற்கின்றோம்.

அமைச்சர் என்பார் முக்காலும் உணரும் வன்மையினையும் முதுநூல் புலமையினையும் உலகியல் நெறியினை உணர்தலையும் கொண்டோராகையால் அவரால்தான் பிறர் உள்ளத்தில் பொதிந்து கிடக்கும் கருத்தினைக் குறிப்பாக உணர முடியும். இக்குறிப்புணரும் ஆற்றலும் அனுமனிடம் மலிந்து கிடக்கின்றது. சுக்கிரீவனுக்கு வாலியை வீழ்த்தும் ஆற்றல் இராம இலக்குவர்களிடம் இல்லை என்ற ஐயம் இருப்பதை உணர்கிறான் அனுமன். அதனைத் தீர்ப்பதற்த உடனடியாக ஒரு வழியினையும் காட்டுகின்றான். அருகே நிற்கும் ஏழு மராமரங்களில் ஒன்றை இராமனைத் தன் வில்லால் துளைக்க வேண்டும்படிக் கூறுகின்றான்.

'மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யாவுள முன்நிற் பவை' (குறள்: 636)

என்கிறார் வள்ளுவர். கதிரவன் தேரோட அதன்முன் நின்று பகலெல்லாம் எல்லாக் கலைகளையும் அவன் கற்றுத்தரத் தெளிந்தவன் மாருதி. அவன் அறிவில் நம்மால் குறைகாண முடியவில்லை அவனுடைய பரந்த ஆழ்ந்த அறிவு எச்செயலையும் குறையின்றிச் சிறப்பாகச் செய்து முடிகின்றது இவ்வறிவே சுக்கிரீவனது ஐயத்தினை உணரவும் அதனைத் தீர்க்கவும் வழி வகுக்கின்றது.

அனுமன் இராமனுடன் சுக்கிரீவனை நட்புக் கொள்ளச் செய்வது அவன் கடமையுணர்வினைக் காட்டுகின்றது. அமைச்சன் எஞ்ஞான்றும் தன் அரசன் மேன்மைக்கே பாடுபடுவான். அனுமனும் சுக்கிரீவன் உயர்விற்குப் பெரிதும் பாடுபட்டு உதவுகின்றான். நட்பினை ஏற்படுத்தியவன் அந்நட்பு நீடுவாழவும் வழிசெய்கின்றான் தன்சொல் மறந்த சுக்கிரீவனைச் சீற்றத்துடன் நாடிவரும் இலக்குவனைத் தன் அறிவால் அமைதிபடுத்துகின்றான் நட்பினைக் காக்கின்றான்; பழியினின்றும் சுக்கிரீவனை நீட்கின்றான்.

'அறிகொன் றறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன்' (குறள்: 638)

என்பது வள்ளுவர் வாக்கு. இதன்படி, கள்மயக்கில் தன்செயல் மறந்து நிற்கும் சுக்கிரீவனுக்கு அரசியல் தர்மத்தையும் கடமையையும் நினைவூட்டி, இராமனுக்குக் கொடுத்த வாக்கினை நிறைவேற்றும்படி அனுமன் அறிவுறுத்துவதாக வான்மீகியும் துளசியும் அமைத்துள்ளனர் இந்நிகழ்ச்சியினைக் கம்பன் தன் காவியத்தில் விட்டுவிட்டான். இந்நிகழ்வால் சுக்கிரீவனுக்குச் செய்ந்நன்றி மறந்த பழி ஏற்படுகின்றதாதலால் கம்பன் விட்டுவிட்டான்போலும். ஆயின் இந்நிகழ்ச்சி இன்மையால் அனுமன் பெருமை மங்கிவிடவில்லை. பிற இராமாயணங்களில் இல்லாத,

இலக்குவன் கோபத்தினை அனுமன் ஆற்றும் நிகழ்ச்சியைக் கம்பன் மட்டுமே படைத்துள்ளான்.

ஒரு அரசனின் நற்றுணையான அமைச்சன்,

'அறனறிந்து ஆன்றமைந்த சொல்லான் எஞ்ஞான்றும்
திறனறிந்தான் தேர்ச்சித் துணை' (குறள்: 635)

என்கிறார் வள்ளுவர். அனுமன் அறம் அறிந்தானாய், சொல்லின் செல்வனாய், எக்காலத்தும் செயல்புரிய வல்லானாய் இருக்கின்றான். இதனை அவன் தோன்றும் அனைத்துக் காட்சிகளுமே புலப்படுத்துகின்றன.

இவ்வாறு அமைச்சனாய் இருந்து, தூதனாய்ச் சென்று ஒற்றனாயும் தொழில் புரியும் அனுமன் பிற அமைச்சர்கட்குரிய அருங் குணங்களினின்றும் சிறிதும் வழுவாது எக்கோணத்தி லிருந்து ஆராய்ந்தாலும் முழுமை பெற்றவனாய் மிகுந்த சிறப் புடையவனாய் விளங்கக் காண்கின்றோம். அனுமன் தன் ஆற்ற லுக்கு ஓர் எல்லையே இல்லை என்னும்படி ஒரு சீரிய பண்பட்ட திறன் மிகு பாத்திரமாய் விளங்குகின்றான். இதனாலேயே எந்நிலை யிலும் அவன் அனைவரையும் கவர்கின்றான்.

வன்திறலோன்.

'செயற்கரிய செய்வர் பெரியர்' என்றார் வள்ளுவப்பெருந்தகை. அவ்வாறு அவர்கள் அருஞ்செயல்கள் ஆற்றற்குக் காரணமாய் அமைவது அவர்களிடம் பொருந்தியுள்ள ஆற்றலே. ஆகலின் ஒருவரின் புகழும் அவரிடத்து அமைந்துள்ள ஆற்றலைப் பொறுத்ததே எனின் அது மிகையன்று. அனுமனும் இக்காவியத்தில் சிறப்பிடம் பெற்றதன் அடிப்படைக் காரணம் அவனிடம் பொருந்தி நின்ற ஆற்றலே. 'உற்றது செய்க என்றாலும் உரியன் இவ்வனுமன்' எனும் வலிநிறை வாலியின் கூற்று அஞ்சனை மைந்தனின் ஆற்றல் அனைத்தையும் தன்னுள் அடக்கி நிற்கின்றது. அனுமன் ஆற்றலை ஆசிரியன் கம்பனும் ஆங்காங்கே சுட்டிச் செல்கின்றான். 'எனக்கு உரியது ஆய கருமமும் இயற்றற்கு ஒத்த சான்றவர் நின்னின் இல்லை' எனப் பகர்கின்றான் ஆதிநாயகன் இராமனே. அனுமனது அளவிடற்கரிய ஆற்றல்கள் அனைத்தையும் தொகுத்தே தருகின்றான் சாம்பன். இவ்வாறு அனைவரும் வெளியிடும் கருத்துக்களை அனுமன் எவ்வாறு தன் செயலால் விளக்குகின்றான் என்பதைக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம். ஆற்றல்கள் பலவகையின இவண் அனுமனின் ஆற்றல்கள் உடல் ஆற்றல், சித்தாற்றல், பிற ஆற்றல்கள் என முப்பிரிவாக வகை செய்யப் பட்டுள்ளன.

உடல் ஆற்றல்:—

அனுமன் உடல் வலியை உணர்த்துவன அமர்க்களக் காட்சிகளாகும். அமர் பொதுவாக அன்றைய காவியங்கள் அனைத்திலுமே இடம் பெற்றது. உலக முதற்காவியங்களான ஒதிஸியம் (Odyssey) இலியதம் (Iliad) என்ற இவற்றிலும் அமர் சிறப்பிடம் பெறுகின்றது. தொன்று தொட்டுப் போருக்கு இருந்து வரும் சிறப்பினை இலக்கண, இலக்கியங்களாலும் அறியலாம். அடுதலும் தொலைதலும் புதுவதன்று இவ்வுலகத்து இயற்கை என்றே எண்ணியிருந்தனர் அன்றைய மக்கள். தொல்காப்பியர் புறத்திணையியல் என்று ஒரு தனியியலே போர்பொருட்டு அமைத்துள்ளார். தமிழின் முதற்காவியமும் முதன்மைக் காவியமுமான சிலம்பிலும் போர் இடம் பெறக் காண்கின்றோம். போரே ஆற்றலை அளவிடும் கருவி என்றும் எண்ணினர். மண்ணாசை பெண்ணாசை அறம்நிலைத்தல் வேண்டும் என்ற எண்ணம் இம்மூன்றும் போருக்கு உரிய காரணங்களாயின. மகாபாரதமும், இராமாயணமும் அறத்தை நிலைநிறுத்த எழுந்த போரி

னைப் பாடுகின்றன. மில்டனின் சொர்க்க நீக்கத்திலும் (Paradise Lost) இப்போரே இடம் பெறுகின்றது.

அனுமன் செய்யும் போர்களைச் சுந்தரகாண்டத்தில் பரக்கக் காணலாம். யுத்தகாண்டத்திலும் பல இடங்களில் அவை பேசப்படுகின்றன அனுமன் பக்கலில் அறம் இருப்பதைக் கம்பன் இருஇடங்களில் சுட்டுகின்றான். முதலாவதாக, அனுமனை எதிர்க்க இராவணன் மகன் அட்சகுமாரன் பெரும்படையுடன் வருகின்றான். இதனை, இதுகாறும் அவர்கள் செய்த தீவினையே அவர்களைச் செலுத்தி வருகிறது என்கிறான் கம்பன். அறம் சார்ந்து நிற்கும் அனுமன் அவர்கள் அனைவரையும் அழிக்கின்றான். இரண்டாவதாக அனுமன் இந்திரசித்தின் நாகபாசத்தால் கட்டப்படுகின்றான். அஞ்ஞான்று அவனைத்தொடர்ந்து இலங்கையுட் புகுந்த அறக்கடவுளும் அழுதனன் என்கிறான் கம்பன். இதனால் அனுமன் இலங்கையுட் புகுமுன் அங்கு அறமே இல்லையென்பது தெளிவு. ஆகலின் அனுமன் நடத்தும் போர் அறத்தின் வாழ்வுபொருட்டே என்றாகிறது. அனுமன் தனியனாய் நின்று அசோகவனப் போரில் அளவிடற்கரிய பெரும்படையை எதிர்த்து வெற்றி காண்கிறான். இலங்கையை எதிர் நோக்கியிருக்கும் பேரழிவினை இப்போர் சுட்டி நிற்கின்றது.

அனுமனின் பேராற்றல் பல பிரிவுகளில் கீழே விளக்கப்பட்டுள்ளது.

போர் விழைவு :—

போரில் விழுப்புண் படாத நாட்களையெல்லாம் வீணாளாகக் கருதியவர்கள் நம்முன்னோர். இவண் அனுமனிடமும் போரில் நீங்கா விருப்பு இருப்பதனைக் காணலாம். சீதையைக் கண்டு தான் வந்த வினைமுடிக்கின்றான் அனுமன். அதன்பின் இனிச் செய்வதென் என எண்ணுகின்றான், சீதையைக் கண்டுபேசியதுடன் தன் கடன் முடிந்ததாக எண்ணி மீளுதல் தீது; அது தன் ஆற்றலுக்கு அழகன்று என்று நினைக்கின்றான். அரக்கர்களை அழித்து அவர்களுக்குத் தன் ஆற்றலைக் காட்டுவதே கருமம் எனத்துணிகின்றான். அசோகவனத்தை அழிப்பின் அரக்கர்கள் வருவர்; அவர்களை அழிப்பேன் என்று உன்னுகின்றான். எண்ணியதைச் செயல்படுத்தவும் முனைகின்றான்.

இராமன் தனியொருவனாய் நின்று இராவணனின் மூலபலமாய் இலங்கும் படையை வதைக்க எண்ணுகின்றான். அவ்வரக்கர்களைக் கண்டு அஞ்சியோடும் வானரவீரர்களை ஒன்று சேர்த்து ஒழுங்குபடுத்துமாறு இலக்குவனை அனுமன் துணையுடன் அனுப்புகின்றான். உடன் அனுமன் தன்னைப்போரில் வாகனமாகஏற்றுக்கொள்ளவேண்டும் அல்லது உடனின்று அடிமைத்தொழில் புரியும் ஏவலனாகக் கொள்ள வேண்டும் என்கிறான். அவன் தினவெடுக்கும்தோள்கள் போரிடாதிருக்க உடன்படமறுக்கின்றன. இங்ஙனம் போர்ப்பற்று மிக்கவனாக இருப்பதற்குக் காரணம்

அறம்சாரா அரக்கர்களை அழித்து அறத்தின்நாயகன் விரைவில் தன் துணையோடு இணையவேண்டும் என்பதே அத்துடன் வானவர்களும் இராவணன் தளையினின்று நீங்கிச்சீருடன் வாழவேண்டும் என விழைகின்றான் இவற்றை நோக்குங்கால் அனுமனின் போர் விருப்பு நியாயமானதாகவே தோன்றுகின்றது.

அனுமன் ஆயுதங்கள் :—

பகைவர்கள் சூலம், வாள், பிண்டிபாலம், முசலம், கூர் வேல், தோமரம், தண்டு முதலிய படைக்கலங்களோடு போரிட அனுமன் அவர்களைத் தன்கைகளாலும், கால்களாலுமே அழிக்கின்றான். அவனுக்குத் துணைநின்றதும், படைக்கலமாகப் பயன் பட்டதும் கைக்குக் கிடைத்த மரங்களே. அனுமனுக்கு அவன் உடல்உறுப்புகள் அனைத்துமே கருவிகளாகப் பயன்பட்டதைக் கம்பன் கவினுற வர்ணிக்கின்றான். நெய்யிடுதலால் சுடர் விட்டெரியும் தீப்பிழம்பு போன்று திருநாமம் தரித்து விளங்கும் அவன் நெற்றியே நெற்றிப்படையாகின்றது. மேனி முழுமையும் சிலிர்த்து நின்ற மயிர்க்கற்றைகளே நடுப்படை. கூரிய நகங்களை உடைய கைகளே பக்கப்படைகள். திருவாலே பின்னணிப் படை. இதனை,

'ஐயனு மமைந்து நின்ற னுழியா னளவி னுமம்
நெய்சுடர் விளக்கிற் றோன்று நெற்றியே நெற்றி யாக
மொய்ம்மயிர்ச் சேனை பொங்க முரணபி லுகிர்வாண்
மொய்த்த
கைகளே கைகளாகக் கடைக்குழை திருவா லாக'

(சம்புமாலி வதைப்படலம் : 21)

எனக் கவின்மிகப் பாடுகின்றான் கம்பன். இரும்புத்தூண், மலைகள் முதலியனவும் அவனுக்குக் கருவிகளாகின்றன.

வஞ்சினம் மொழிதல் :—

வீரர்கள் வஞ்சினம் மொழிந்து போர் செய்தல் மரபு. அனுமன் இராவணனிடமும், கும்பகருணனிடமும் வஞ்சினம் மொழிகின்றான் இராம- இராவண யுத்தத்தின் முதல்நாட் போர்; தன்வல்லமையால் வானவர்களையே அடக்கி ஆளும் இராவணனை எதிர்த்துக் கையில் ஆயுதம் இன்றி நிற்கின்ற அனுமனை, 'கல்லும், மலையும், கையும், புன்மயிர்த்தோளும் கொண்டு போர்புரியும் உங்களால் என் வில்லாற்றல் முன் நிற்க முடியுமோ,' என ஏளனம் செய்து நகைக்கின்றான் ஆணவத்திற்கு ஓர் உரு என விளங்கும் இராவணன். தன்மானம்மிக வீறுகொண்டு எழுகின்றான் காலின்தோன்றல் சுத்தவீரன் எவனுமே மாற்றான் எள்ளல்பொறான். பொங்கிஎழும் மாருதி 'திசைக்கரிகளை வென்ற உன்னால் என் கரத்தால் குத்துகின்ற குத்தின் வலிமையைத் தாங்க முடியுமோ என வீரமாக வினவுகின்றான். நான் குத்தவும் இறவாது நீ இருப்பின் நின் இருபது கரங்களாலும் என்மேல் வரிசை

யாகக்குத்தலாம் நான் இறவேன் எனினும் நின்னொடு அத பின் பொருவேன் அல்லன்,' என்று வஞ்சினம் மொழிகின்ருன்.

அடுத்து அனுமன் கும்பகருணனிடமும் வஞ்சினம் உரைக்கின்ருன். கும்பகருணனேடு போர்புரியும் வாலிமைந்தன் அங்கதன் தளர்கின்ருன். அவனுக்கு உதவ விரையும் அனுமன் கும்பகருணன் மீது மாபெரும் மலையொன்றை வீசுகின்ருன். சிறிதும் நிலைகுலையாத கும்பகருணன் அம்மலையாலேயே அனுமனை எதிர்த்துத் தாக்குகின்ருன். இதனுல் அனுமன் மற்றுமொரு மாமலையைத் தன்கரங்களில் ஏந்திக்கொண்டு வஞ்சினம் மொழிகின்ருன். இவண் அனுமன் அடிப்பட்ட வேங்கையாதலின் அவன் மொழிகளில் அனல் பறக்கின்றது.

''எறிகுவெ னிதனை நின்மே லிமைப்புறு மளவி லாற்றல்
மறிகுவ தன்றி வல்லே மாற்றினை யென்னின் வன்மை
யறிகுவ ரெவரும் பின்னை யானுன்னோ டமருஞ் செய்யேன்
பிறிகுவெ னுலகில் வல்லோய் பெரும்புகழ் பெறுதி என்ருன்.''
(கும்பகருணன் வதைப்படலம் : 200)

அனுமனின் இவ்வஞ்சின மொழிகள் அவன் சீற்றத்தினையும் தன்னம்பிக்கையினையும் காட்டுவதோடு அவன் ஆற்றலையும் புலபபடுத்தி நிற்கின்றன.

போர் புரியும் முறை :—

அனுமன் போர்முறை வியப்பிற்குரிய ஒன்று. பலவிதமாக அவன போரிடுகின்ருன். போர்க்களத்தில் அவனைக் காணும் பொழுதெல்லாம் ஒவ்வொரு வகையில் அவன் அமர் புரிகின்ருன். சான்ருகச் சில காணலாம்.

அனுமன் பெரும்பாலும் ஆயுதமின்றியே போரிடுகின்ருன். அசோகவனத்தை யழிக்கும் அனுமனைப் பிடிக்கப் பெரும் படையுடன் வருகின்றனர் கிங்கரர்கள். அவர்களில் பலரைத் தன் தாள்களால் அழிக்கின்ருன்; தடக்கைகளால் பலரை அழிக்கின்ருன்; குத்துக்களால்பலர்; தத்தம்வேல்களால் பலர் என்று எஞ்சி நின்ரோரையும் அழிக்கின ருன். பின் சம்புமாலி படையுடன் வர மந்தரம் கடுக்கும் மாருதி அவர்கள் ஆயுதங்களை இடக்கரத்தால், அழித்து, வலக்கரத்தால் அவர்களையும்அழிக்கின்ருன் அடுத்து வரும் அட்சகுமாரனை இகலோன் வதைத்தவகைபுதியது. அக்கனின் வில்லையும் வாளையும் முதலில் ஒடித்தெறிகின்ருன் அனுமன். இதனுல் சினந்தெழும் அக்கன் அனுமனைத் தன்தோள்வலியால் பற்றுகின்ருன். அஞ்ஞான்று அனுமனது கூரிய மயிர்க் கற்றை அக்கன்மேல் தைக்கின்றது. கம்பன் மாருதியின்மயிர்த் தொகுதியினை நடுப்படையாகக் கூறுவது இவண் பொருந்தக் காணலாம். அவன் நெடிய வால் நிமிர்ந்து அக்கன் உடல்மீளா வண்ணம் இறுகப் பற்றுகின்றது. அனுமனும் அவன் மேல் அமர்கின்ருன். அக்கனின் குருதியே நீராகவும் தசையே அரிசி

யாகவும் அமர்க்களமே அம்மியாகவும் கொண்டு தன் வன்கரங்களிஞல் விண்ணும் மண்ணும் காண அரைத்து அழிக்கின்ருன். அருக்கனை அனைய அனுமன் பெரும்பாலும் பெரிய வீரர்களை அவர்களின் தேரோடும் விண்ணில் வீசியெறிந்து கைச்சிலையை முறித்து மண்ணில் விழவைத்தே வதைக்கின்ருன். அட்சகுமாரன், திரிசிரன் ஆகியோர் வதம் இதற்குத்தக்க சான்ரும். இதன் பின் இந்திரசித்து, பஞ்சசேனுதிபதிகள் ஆகியோர் தேர்களையும் அழிக்கின்ருன். மற்றும் எண்ணிறந்த அரக்கர்களையும் அழிக்கின்ருன்.

தவிர, முனிவுற்ற குரக்குச்சீயம் குதிரைகளைக் குதிரைகளோடு சேர்த்தழிக்கின்ருன். தேர்களைத் தேர்களோடு மோதவைத்து அழிக்கின்ருன். மதம்வழியும் யானைகளின்கோட்டைப் பறித்து தேர்களைச்சிதைக்கின்ருன். சிதைந்ததேர்களின் உருளைகளால் வீரர்களை உருட்டுகின்ருன். அவ்வீரர்களின் வாளிஞல் புரவிகளைத் தாக்குகின்ருன்.

> ''உதைக்கும் வெம்கரிகளை உழக்கும் தேர்களை
> மிதிக்கும் வன்புரவியைத் தேய்க்கும் வீரரை
> விதிக்கும் வல்லெழுவிஞல் அரைக்கும் மண்ணிடை
> குதிக்கும் வன்தலையிடை கடிக்கும் குத்துமால்,''
>
> (பஞ்ச சேனுதிபதிகள் வதைப்படலம் : 37)

என்ற இப்போர் முறை எண்ணி எண்ணி மகிழவைப்பது.

கரிகளுடன் அரிக்குலத்து அண்ணல் அனுமன் ஆற்றும் போர் அவன் ஆற்றலுக்குத் தக்க சான்று. சில களிறுகளின் கோட்டினைப் பறிக்கின்ருன்; சிலகரிகளை இருகூருக்குகின்ருன். சிலவற்றின் அங்கங்களைத் துண்டிக்கின்ருன்; சிலவற்றை ஒடிக்கின்ருன்; சிலவற்றைக் கடித்துத்தின்கின்ருன் என்று கம்பன் பாடியிருப்பது மிக விநோதமாக உள்ளது. இறுதியாக இரு கைகளாலும் அவற்றை வாரி வாரி, வாரியில் எறிகின்ருன்.

அருக்கன் அனைய அனுமன் ஆங்காங்கே மராமரங்களையும் மாற்ருர் விட்டுச் செல்லும் தண்டினையும், பிற ஆயுதங்களையும் கொண்டு பரிகளையும், கரிகளையும், தேர்களையும், வீரர்களையும், தன்னை நோக்கி வரும் படைக்கலங்களையும் அழிக்கின்ருன். ஆயினும் பெரும்பான்மை தன் கை, கால், வால் இவற்ருலேயே பகைவருக்குக் கூற்றுவனுகின்ருன்.

ஆர்ப்பொலி :—

அனுமனின் ஆர்ப்பொலிக்கு இராம—இராவணப் போரில் ஒரு தனியிடம் உண்டு. நாகபாசத்தால் கட்டுண்ட இலக்குவனும் வானரப்படையும் அதனின்றும் மீண்டதை இராவணனுக்கு உணர்த்த வானரர்கள் ஆர்க்கின்றனர். இவற்றினின்று அனுமன் ஆர்ப்பினைத் தனியே இனம் காண்கின்ற இராவணன், 'அடிக்கின்றது என்னைவந்து செவிதொறும் அனுமன் ஆர்ப்பு,'

என்று அவலமுடன் மொழிகின்றான். இதேபோன்று 'கடையுகத்து உரும்' என இலங்கும் அனுமன் ஆர்ப்பின் தனித்தன்மையினை மற்றோர் இடத்தும் காணலாம் இந்திரசித்துடன் போர் புரியும் இராம-இலக்குவர்களின் பேராற்றல்கண்டு தன்பெருவலி படைத்த தாள்களில் தட்டி ஆர்க்கின்றான் அனுமன். இவ்வாறு

'ஆர் இடை யநும ணார்த்த வார்ப்பொலி யசனி கோளாத்
தேரிடை நின்று வீழ்ந்தார் சிலர்சிலர் படைகள் சிந்திப்
பாரிடை யழிந்து போகப் பாரித்தார் பைம்பொ னிஞ்சி
ஊரிடை நின்று ளாரு முயிரோ டுதிரங் கான்றார்,'
(பிரம்மாத்திரப்படலம் : 86)

தவிர, 'விண்ணோர் நடுக்குற வீரனார்த்தான்' என்கிறான் கம்பன். இதனால் அனுமன் ஆர்ப்பொலியின் வலிமையினை உணரலாம்.

போர்த் திறன் :—

அனுமன் ஆர்ப்பொலி கேட்டு அமரரும் அஞ்சினர் என்கிறான் கம்பன். ஆர்ப்பொலியே அவ்வாறெனின் அவன்போர்த் திறனை எவ்வாறுரைப்பது. 'ஆலம் நுகர்ந்தவன் ஆம் என வெம்போர் அடர்கிற்பீர்' எனச் சாம்பன் புகழ்கின்றான். இவ்வுவமை நல்லறவீரன் அனுமனுக்குப் பலஇடங்களில் கூறப்படுகின்றது. இதிலிருந்து அனுமன் போர்வன்மை தெற்றெனப் புலப்படும் சீதையைத்தேடி இலங்கைநோக்கிவிரைகின்றான் விசயத் திண்டோள் வீரன். இடையே எதிர்ப்படுகிறது மைநாகமலை. தன்வேகத்தினைத் தடைப்படுத்தும் அதனைத் தலைகீழாமாறு புரட்டித்தள்ளிவிட்டு விண்ணவரும் வியக்க மேலே தொடர்கின்றான். அனுமன் ஆற்றல் இனித் தான் முழுமையாக வெளிப்படுகின்றது. அதற்கு முன்மாதிரியாக இந்நிகழ்ச்சி அமைகின்றது. அனுமன் ஆற்றல் அக்னி எனின் அதில் தோன்றும் புகையே இது. தன்னைப் பற்றிப் பிடித்து வருமாறு இலங்கையர் கோன் இராவணனால் அனுப்பப்பட்ட கிங்கரர்கள், சம்புமாலி, பஞ்ச சேனாதிபதிகள், அட்சகுமாரன் ஆகியோரை அவர்களது பெரும் படையுடன் தனி ஒருவனாய் நின்று அழிக்கின்றான் அனுமன். இச்செயலை நோக்குமிடத்து

'ஒலித்தக்கால் என்னும் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும்' (குறள் : 763)

எனும் குறளுக்குச் சான்றாய் அனுமன் அமைவது புலனாகும். மேலும்

'போர்மு னெதிர்ந்தால் மூவுலகேனும் பொருளாகா
ஓர்வில் வலங்கொண் டொல்கலில் வீரத்துயர் தோளீர்'
(மயேந்திரப்படலம் : 14)

எனும் சாம்பன் கூற்றினை இவன் தன் திறலினால் நிறுவுகின்றான்.

அனுமனின் போர்த்திறன் முழுமையும் அவன் உடல்வலி யாலேயே காட்டப்படுகின்றது. கும்பகருணன் போர் புரிந்து விட்டுச் சென்ற தண்டாயுதத்தினை எடுத்துக்கொண்டு அனுமன் அகம்பனையும், அவன்படைகளையும் எதிர்க்கின்றான். இவ்வாறு அகம்பனோடு போர்புரிதலால் முன்பு தண்டாயுதத்தினை பற்றிப் பயன்படுத்தியறியாத அனுமன் இன்று அதில் துறைபோகக் கற்றுமுடித்தான் என்று கூறுகிறான் கம்பன். தண்டாயுதம் போன்றவை இதுகாறும் அவனுக்குத் தேவைப்பட்டில; மேலும் ஒரேநாளில் அதில் கற்றுத்துறை போகின்றான். இரண்டுமே அனுமனின் போர்த்திறனை விளக்கப் போதிய சான்றாய் அமை கின்றன.

உடல் வலி :—

'அய்யன் மல்பெரும் புயத்தன்' அனுமனின் உடல்வலி மை பலவாறாகக் கம்பனில் காட்டப்படுகின்றது. உடல்வலிக்கு ஓர் உரு என்றே அனுமன் கருதப்படுகின்றான். மகேந்திரமலை யைத் தலைகீழாகப்புரட்டுகின்றான்; அசோகவனத்தில் பிரமனால் படைக்கப்பட்ட வலிமைவாய்ந்த சயிந்தியத்தை மண்ணினின் றும் வாங்கி இலங்கைமேல் எறிகின்றான்: இதனால் விண்ணுற விரிந்த மாடங்கள் பொடியாகி மண்ணுறுகின்றன.

திண்மைக்குச்சான்றாக மலையினைக்கூறுதல் மரபு. இவண் ஆளரியொத்த அனுமன் அதனையே தன் ஆற்றலால் தூளாக்கு கின்றான். நிருதர்கள் தன்மேல் ஏவிய படைக்கலங்களை 'செறிந் தன மயிர்ப்புறம்; தினவு தீர்வுறச் சொறிந்தனர்', என ஏற்று 'ஐயன் தூங்கினன்' என்கிறான் கம்பன். இதனால் கலுழனை ஒத்த அனுமன் ஆற்றல் ஆய்விற்கும் அப்பாற்பட்டது என்பது வெள் ளிடைமலை. தெய்வப்படைகள் ஊசிகுத்துவதோர் வடு அளவு கூடத் துன்புறுத்தாத பஞ்சசேனாபதிகளை விண்ணுக்கு விருந் தாக்குகின்றான். அக்ககுமாரனையும் கூற்றுவனுக்குக் கொடுக் கின்றான். அவனுடன் வரும் படைகளின் அளவினைக் கம்பன்,

'பொருகடன் மகர மெண்ணி லெண்ணலாம் பூட்கை பொங்கித்
திரிவன மீன்களெண்ணி லெண்ணலாம் செம்பொற் றிண்டேர்
உருவறு மணலையெண்ணி லெண்ணலாம் உரவுத் தானை
வருதிரை மரபி லெண்ணி எண்ணலாம்'

(அட்சகுமாரன் வதைப்படலம்: 8)

என்கிறான். இவ்வாறு எண்ணற்கரிய படைகளைத் தான் தனியனாய் நின்று எதிர்த்து அழிக்கிறான் எனின் அதற்கு அடிப்படை யாய் நின்று உதவுவது அவன் உடல்வலியே அனுமன் முன் தேவர்களைச் சிறைகொண்ட அரக்கர்கள் அஞ்சி ஓடுகின்றனர். இதனால் அனுமனின் ஆற்றலை நாம் ஒருவாறு அறுதியிடலாம்.

இலங்கை வேந்தன் இராவணன், அமரர்கள் அனைவரின் வலியையும் அடக்கியவன். மேருமலையையே தூக்கியவன். அவனிடத்து வஞ்சினம் மொழிந்த புன்றலைக் குரங்கு அனுமன், அவன் மார்பில் குத்துகின்றான். இதனால் இகலோன் மார்பகலம் ஒளிவிடும் நெருப்பைச் சிந்துகின்றது. அன்று திசைக்களிறுகளுடன் பொருதபோது அவன் உரம் புகுந்து ஒடிந்து இதுகாறும் நீங்காது இருந்த கொம்புகள் இன்று அவன் புகழ் சிந்துவது போன்று முதுகின்வழி சிந்துகின்றன. "இதுவரை நான் அடையாத வேதனையை இன்று அடையச்செய்தாய்,' எனத்தேவர்களைத் தெருட்டியவனே உரைக்கின்றான். அடல் மாக்களிறனைய அனுமன் இராவணனைவிட வலியன் என்பதனை மற்றுமொரு சான்றாலும் உணரலாம். இராவணன் தான் வீழ்த்திய இலக்குவனை த தூக்கிச் செல்ல முயல்கிறான். அவனால் முடியவில்லை. அவன் மேலும் முயலும் போது அனுமன் இடைமறித்து மிக எளிதாகத்தூக்கிச் செல்கின்றான்.

வேகம் :—

போரில் வெற்றிகாண வீரம் இருப்பினும் செயல்படுவதில் விரையும் வேண்டும். இவ்விரைவு உடல்வலியாலேயே அமைகின்றது. அனுமன் உடல்வலி இதற்குமுன்பே தெளிவுபட உரைக்கப்பட்ட ஒன்று. அசோகவனத்தை, கறங்கெனத் திரியும் அனுமன் அழிக்கும்போது மரங்களை அவன் தூக்கி எறியும் வேகத்தில் அவை திசையானைகளுக்கு உணவாகின்றன. சில அரக்கர்களின் அகன்ற மாடங்களை அழிக்கின்றன. சிலவான் வரை சென்று விண்மீன்களையும் உதிர்க்கின்றன. மேலும்,

"ஓடிக் கொன்றனன் சிலவரை யுடலுட ரேறும்
கூடிக் கொன்றனன் சிலவரைக் கொடிநெடு மரத்தால்
சாடிக் கொன்றனன் சிலவரைப் பிணந்தொறுந் தடவித்
தேடிக் கொன்றனன் சிலவரைக் கறங்கெனத் திரிவான்,"

(கிங்கரர்வதைப்படலம் : 36)

என்கிறான் கம்பன் இவ்வாறு காலின் மாமதலை ஊழிக் காற்றெனச் சுழன்று திரிந்து கொன்ற நிருதர்களுக்கு எல்லையில்லை. 'நமனுக்கு ஆயிரக்கோடித் தூதர் உளரோ' என எண்ணி வியக்கின்றான் கம்பன். நாம் எதனையும் எண்ணவே இடலாதபடி வியப்பு மேலிடுகின்றது. ஆனால் நம் வியப்பு தரும் சிறப்பென்ன? இகலோன் இராவணனின் இன்னுயிர் மைந்தன்; இந்திரனை வென்ற இந்திரசித்தே அல்லவோ வியக்கின்றான். இலக்குவனுக்குத் துணையாக அதிகாயனை எதிர்க்கின்றான் அனுமன். ஆயிரம் களிறுகளையும் அழிக்கின்றான். பின் இளவலைத் தோள் மீது ஏற்றிக் கொண்டு இந்திரசித்தை எதிர்க்கின்றான். இந்திரசித்தின் தேரும் அனுமனும் அனந்தசாரி புரிதலின் இலங்கை ஊரும் திரிகின்றது. இதேகாட்சியை மீண்டும் இராமனைத்தோளில் சுமந்து இந்திரசித்துடன் பொரும் போது காணலாம் இவ்

வமயம் 'உலகமெங்கும் இடம் இல்லையாம்படி அனுமர் பலர் வந்துள்ளனர் போலும்' என இந்திரசித்தே வியக்கின்றான். இவ்வாறு அனுமனின்வேகம்அயலானும்போற்றும்படி அமைகிறது.

பகைவர் போற்றும் வீரம்:— அனுமனின் வேகம் மட்டுமன்று வீரமும் மாற்றாரால் போற்றப்படுகின்றது. வேகத்தை இந்திரசித்து மட்டுமே வியக்க வீரத்தை இந்திரசித்தோடு இராவணன், கும்பகருணன், அகம்பன் முதலானோரும் வியந்து போற்றுகின்றனர். காலின் தோன்றல் தன்முன் வஞ்சினம் மொழிந்ததைக் கண்டு வியக்கின்றான் இராவணன். "நீயலால் என் எதிர் நிற்போர் இன்று. கரங்களில் படைக்கலம் யாதுமின்றி இருபதுகரங்கொண்ட என்முன் இநகரம் உடை நீ இம்மொழி மொழிந்தாய். இனி யான் தோற்று நீ அடைவது ஒன்றுமின்று. அமர் புரிதலும் தகுதியன்று. நீ இவண் நனிவந்து உலகு எவையும் காண கடிது எதிர் குத்துதி," என்கிறான். வயிரக்கரமுடை வாயுமைந்தனும் குத்துகின்றான். உலகஉயிர்கள் வருந்துமாறு உள்நின்று உலவி வந்த நெடுங்காற்று பெருவலி கொண்டு மோதத் தள்ளாடும் மேருமலை போன்று, மேருமலையையே தூக்கிய இராவணன் தள்ளாடுகின்றான்; உணர்விழக்கின்றான். உணர்வு பெற்றவுடன் மீண்டும் அஞ்சனைசேயைய் புகழ்கின்றான். இதுவரை அகம்பாவத்தின் மொத்த உருவாய் நின்ற அரக்கர்கோன் அனுமனை 'இணையாருமிலாய்' என்று புகழ்கின்றான். அனுமனுக்கு இதனினும் பெருமை தரத்தக்கது வேறுண்டோ?

"வலியென்பது முளதேயது நின்பாலது மறவோய்
அலியென்பவர் புற நின்றவ ருலகேழினு மடைத்தாய்
சலிபென்றதிர் மலரோனுரை தந்தாலிறை சலியேன்
மெலிவென்பது முணர்ந்தேனெனை வென்றாயினி விறலோய,"
(முதற்போர்ப்படலம்: 181)

கும்பகருணனும் சுக்கிரீவனும் பொருகின்றனர். சுக்கிரீவன்பால் அவன்விட்ட சூலப்படையினைத் தன் கைகளால் பற்றி அனுமன் ஒடிக்கின்றான். இதனைக் காணும் கும்பகருணன்,

'கருதவு மியம்பவு மரிதுன் கைவலி
அரியன முடிப்பதற் கனைத்து நாட்டினு
மொருதனி யுளையிதற் குவமம் யாதென்றான்.'
(கும்பகருணன் வதைப்படலம்: 262)

ஆம்! கும்பகருணன் கூற்றுப்படி, அனுமனுக்கு ஒப்பாவார் இவ்வுலகில் இலரே.

அனுமனால் அழிக்கப்பட்ட அரக்கர்களைக் களத்தில் காணும் இந்திரசித்து, 'ஒப்பில் ஆற்றலுடை அரக்கர் மாண்டனர். இவர்களை மாய்த்தது ஒரு குரங்கு. ஒரு குரங்கின் ஆற்றலே இதுவெனின் இராமன் வந்து நாளை எதிர்ப்பின் எப்படை கொண்டு வெல்வது,' என வியக்கின்றான்.

அனுமன் ஆற்றலைக் கண்டு அகம்பனும் வியக்கின்றான். 'இந்திரன், திருமால், சிவன் ஆகியோரே இவன் எதிர் நிற்க இயலும். கூற்றுவனும் இவன் உயிர் கவர்தலரிது' என்கின்றான் அகம்பன்.

இங்ஙனம் பலதெய்வக் கலம் கொண்ட அரக்கர்கள், வன்மையால் அமரர்களையும் அடிமைகொண்ட அரக்கர்கள். புன்றலைக் குரங்கு தானே என எண்ணி அலட்சியம் செய்த அரக்கர்கள் ஒருவர்பின் ஒருவராய் அனுமனைப் புகழ்கின்றனர். அனுமன் புகழும் வளர்பிறையாய் வளர்கின்றது.

போரின் விளைவு :—

இவ்வாறு மாற்றாரும் போற்றப் போரிடும் அனுமனால் அரக்கர் அடையும் அவலத்தை இனிக் காண்போம். சீதையைத் தேடி வரும் அனுமன் இறுதியில் அசோகவனத்தில் அவளைக் காண்கின்றான். வந்தவினை முடியும்வரை கரந்து ஒழுகிய அனுமன் அதன்பின் தன்னை வெளிப்படுத்துகின்றான். தன் கால்களால் இராவணனின் காவற்சோலையான அசோகவனத்தைத் துகைக்கின்றான். அதனால் சில மரங்கள் வேரோடும் வீழ்கின்றன. சில வெந்து கரிகின்றன. சில விண்ணை முட்டுகின்றன. சில தேவலோகம் சென்று வீழ்கின்றன சில பிளந்து சிதறுகின்றன.

அடுத்து அனுமன் தன்னுடன் பொரும் அரக்கர்களைப் பக்கங்களிலுள்ள மலைகளின் மேல் மோதியடிக்கின்றான் இதனால் சிலர் குபேரனின் பட்டணமாகிய அளகாபுரியில் சென்று விழுகின்றனர். சிலர் அகன்ற இடமெல்லாம் மூடும்படியாக விழுகின்றனர் சிலர் மேலுலகமே செல்கின்றனர். இன்னும் சிலர் மேகங்கள் படியும் கடலில் கலக்கின்றனர்.

அனுமனுடன் போரிட அட்சகுமாரனுடன் வந்த அரக்கர்கள் அவன் எதிர் நிற்க இயலாது அயர்கின்றனர். சிலர் புறமுதுகிட்டோட சிலர் கண்கண்ட திசையில் ஓடுகின்றனர். சிலர் கூற்றுவனுக்கும் விருந்தாகின்றனர். இன்னும்,

மீனாய் வேலையி னுற்றார் சிலர் சிலர்
பசுவாய் வழிவழி மேய்வுற்றார்
ஊனார் பறவையின் வடிவா னார்சிலர்
சிலர் நான் மறையவ ருருவானார்
மானார் கண்ணிள மடவா ராயினர்
முன்னே தங்குழல் வகிர்வுற்றார்
ஆனார் சிலர்சில ரையா நின்சர
ணென்றார் நின்றவ ரரியென்றார்.''

(அட்சகுமாரன் வதைப்படலம் : 40)

என்றிவ்வாறு மீனாய், ஆவாய், பறவையாய், மடவாராய், மறையோராய் தம்மாயம்கொண்டு மாறுகின்றனர். மற்றும் சிலர் மனைவியும் மற்றவரும் பின்தொடர 'நாம், உங்கள் உறவினரல்

லோம்; வானவர்கள்; இவ்வழி வந்தோம், என்று பொய்யுரை புகன்று ஓடுகின்றர், சிலர் அமரரும் அரக்கரும் அல்லம் யாம்; மானிடர் என்கின்றனர். பின்னும் சிலர் அனுமனைக் கண்ட அச்சத்தாலேயே உயிர் இழக்கின்றனர். இவ்வாறு அனுமன் ஆற்றலால் அஞ்சி ஓடி ஒளிந்தவர்களைக் கம்பன் நகைச்சுவையோடு காட்டுகின்றுன். இச்சுவை வேறெங்கும் இலது.

அடல் மாக்களிறு அனைய அனுமன் இராவணன் அகன் மார்பில் குத்துங்கால் ஏற்பட்ட அதிர்ச்சியில் மாமலைகளும் மணல்போல் சிதறுகின்றன. விழிகள் நெருப்பினைச் சிந்துகின்றன; மூளைகள் தயிர்போல் சிதறுகின்றன; அரக்கர்கள் பலர் அழிகின்றனர். வானரங்களின் மயிரும், பற்களும் உதிர்கின்றன. இவ்வாறு இருதிறப் படையிலுள்ள வீரர்கள் அனைவரும் தம் படைகளைத் தாங்கமாட்டாது தரையில் சிந்தினர் என்கிருன் கம்பன். இவண் அனுமன் முன் இராம இலக்குவர் ஆற்றலும் அடிபட்டுப் போகின்றது.

அரிக்குலத்து அண்ணல் அனுமனுடன் போரிடும் சேனைகள் அவன் கையினுல் அரைபடுகின்றன. இதனுல் உருக்குலைந்து ஒரே குழம்பாக மாறிவிடுகின்றன. யானை, தேர், குதிரை, வீரர் என்ற பாகுபாடே அற்றுப்போகின்றது அதேபோன்று வில், வேல், அம்பு, தண்டு என்ற வேறுபாடும் அறிய இயலாது போகின்றது. இவ்வாறு அனுமன் தான் தோன்றுமிடமெல்லாம் அரக்கர்களைத் திணறடிக்கின்றுன்.

இவ்வாறு அலைக்கழிக்கப்பட்ட அரக்கர்களின் இடையே அனுமன் நிற்பதை, கடையும்போது கலங்குகின்ற கருங்கடலின் நடுவே கடைகின்ற மந்தரமலையை ஒத்தான் என்கிருன் கம்பன். இது அனுமன் அரக்கர்களை அழித்து நின்றதைக் காட்டுவதோடு கம்பனின் உவமைத் திறனையும் சேர்த்தே புலப்படுத்தி நிற்கிறது எனின் மிகையன்று,

உதவியும் காத்தலும் :—

கறங்கெனத்திரியும் காலின் மதலை அமர்க்களத்தில் அங்கிங்கெனுதபடி எங்கும் நிறைந்திருக்கின்றுன். இதனுல் எந்நேரமும் எல்லோருக்கும் உதவவும், மரணத்தினின்று காக்கவும் முடிகின்றது. அதிகாயனும், இலக்குவனும் போரிடுகின்றனர். அதிகாயனுக்குத் துணையாக மாபெரும் யானைப்படையை இராவணன் அனுப்பிவைக்கின்றுன். உடனே இலக்குவனுக்கு உதவ அவண் அனுமன் வந்து சேர்கின்றுன். இதனைக் கம்பன், 'தவ்வேலென வந்தான் அவன் தனிவேல் எனத்தகையான்,' என்கிருன். இவண், 'அனுமன் என்பவனை ஆழி ஐய நின்செங்கைத் தனுவென நினைதி' என்ற வாலியின் உரை எவ்வளவு ஆழ்பொருள் உடைத்து என்பதனையும் உணரலாம்.

இராவணன் சுக்கிரிவனுடன் அமர்புரிந்து தளரச்செய்த போது அனுமன் புகுந்து இராவணன்மேல் பெரும் மலையினை வீசுகின்றுன்; சுக்கிரீவனும் ஓய்வு பெறுகின்றுன். இதேபோன்று

கும்பகருணனால் அங்கதன் தளர்ந்தபோதும் இடைப்புகுந்து உதவுகின்றான். அங்கதனைக் கொல்ல நிகும்பன் சூலப்படையினை எடுக்கின்றான். இதனைக் கண்ணுறும் மாருதி பொறிவான் உகுதீயெனப் புகுந்து அவனைத் தனகையாலேயே புடைத்துக் கொல்கின்றான். வச்சிரத்தெவிற்றனோடு போரிட்டு இடபன் சோர இடையில் அவனுக்கும் உதவுகின்றான்.

''எங்கும் நீக்கமற நிறைந்துள்ளவன் ஒருவனே' எனப் பெருமையுடைய வேதங்களால் தெளிந்து போற்றப்படும் செங்கண்மாலே இவனோ எனும்படித் தான் ஒருவனே எங்கும் திரிகின்றான்,'' என்கிறான் கம்பன். காக்கும் இறை திருமால் ஆகலின் இவ்வுவமை மிகமிகப் பொருத்தமுடைத்து. மருத்துமலையினை இருமுறை கொணர்ந்து இறந்த இலக்குவனையும், வானரர்களையும் உயிர்பெறச் செய்ததின் மூலம் இக்கருத்து மேலும் வலுப்பெறுகின்றது.

போர் நீதியான் :—

நல்லற வீரன் அனுமன் அனைத்து இடங்களிலும் புகுந்து மறப்போர் புரியினும் அறத்தைத் தவறாது கடைப்பிடிக்கின்றான். புறமுதுகிட்டோர் மேல் ஆயுதங்களைச் செலுத்தாமை; பெண்டிர், பசு, முதியோர், குழந்தைகள், அந்தணர், ஆகியோருக்கு இன்னல் இழைக்காமை என்ற தமிழர்தம் அறக்கொள்கைகளை அனுமன் அப்படியே பின்பற்றுகிறான்,

துணைவந்தோர் அனைவரும் அழியத் தனித்து நிற்கின்றான் சம்புமாலி. தானும தனி ஒருவனாகவே நின்று போரிடும் அனுமன், — பூத்தமரம போல் புண்களால் பொலிவடைந்த அனுமன் அவனை நோக்கி, 'நின் கூட்டத்தினரைக் காக்க வலியற்ற நின்னைக் கொல்லல் தீது ஆகலின் அகல்க,' என்று கூறுகின்றான். வலியார் தன்னினும் மெலியாரை வெல்லலில் சிறப்பில்லை. ஆயினும் சம்புமாலி அவ்விடம் விட்டு அகல மறுத்து அனுமனை எதிர்க்கவே படைக்கலம் பொருந்திய அவனை அனுமன் தன் உடல் வலியால் அழிக்கின்றான்.

அகம்பனோடு அனுமன் போர் புரிகின்றான்: அஞ்ஞான்று கும்பகருணன் தண்டாயுதம் அனுமன் கையில் இருக்கின்றது, அதைககொண்டு அகம்பனின் தண்டாயுதத்தை அவன் கையொடும் கீழே விழச் செய்கின்றான். பின் போர் நீதியானாகிய அனுமன், — ஆயுதமற்றவனை ஆயுதத்தால் தாக்கலாகாது என்றெண்ணி தன் கையே ஆயுதமாகக்கொண்டு அவன் உயிர் பறிக்கின்றான். அறம் கருதா அரக்கர்களிடம் அறம் போற்றித் தன் நிலையினின்றும் உயர்கிறான் அனுமன்.

பெண்ணொடு பொருதல் பெரும் பாவம். எனினும் பெண் தானே வலிந்து போரிடும் காரணத்தால் அனுமனும் எதிர்க்கின்றான். ஆனால் அங்கும் அறமே துணையாகக் கொள்கின்றான், இலங்கையுள் நுழைவதற்கு அதன் மதில்மீது செல்கின்றான்

அனுமன். வழியில் நகர்க் காவல்தெய்வம் இலங்கை மாதேவி எதிர்ப்படுகின்ருள் அவள் எண் தோளினள்; நான்கு முகத்தினள்; முட்டிப்பொரியின் மூவுலகொடும் கட்டிச் சீறும் காலன் வலத்தாள்; பொறுமை இலாள்; வேல், வாள், சூலம், வெம்கதை, பாசம், மிளிர்சங்கம், கோல், சாபம் என்ற பல படைக்கலமுடையள். இத்தகு வலியளிடமே படைக்கலம் பல கொண்டவளிடமேயன்றி எளிய பெண்ணுடன் பொரவில்லை அனுமன்.

அய்யன் அனுமன் தன்ஞல் இயன்றவரை போரினைத் தவிர்க்கவே முயல்கின்ருன். ஆஞல் இலங்கை மாதேவி தானே போரை முதலில் தொடங்கி வைக்கின்ருள். தன்னைக் கண்டு சீறும் அவள்முன் குறுநகை புரிகின்ருன் அனுமன். அதனைக் காணுமவள், 'இவன் ஒர் எளிய குரங்கல்ல. ஆலாலம் உண்ட சிவன்போல் நகும் இவன் நுழையின் இந்நகரே அழியும்,' என எண்ணுகிருள் இவண் கம்பன் இலங்கை அழியப்போவதைக் குறிப்பால் காட்டுகிருன் எனலாம்.

'என்னை வென்று உள்நுழை,' என அவள் தன் சூலம் எறிந்து அமரினை ஆரம்பிக்கின்ருள். இதுவரை அவளை அழிக்காது அவளோடு அனுமன் உரையாடிக் காலந்தாழ்த்துவதன் காரணமே அவள் பெண் என்பதால்தான். அவளே போரினைத் தொடங்கவும் அவளிடம் தன் ஆற்றல் காட்டாஞய் அவளது சூலம் பற்றி ஒடிக்கின்ருன். மென்மேலும் படைக்கலங்களை அவள் ஏவ, அவன்பற்றி விண்ணில் எறிகின்ருன்.

இறுதியாக வேறு படைக்கலங்கள் இல்லாதுபோகத் தன் கைகளாலேயே தீப்பொறி சிந்தும்படி அறைய வருகின்ருள். இதுவரை 'பெண் கொலை பாவம்' என்றெண்ணி அமைதியாய் நின்றிருந்த அனுமன், அவள் கரங்கள் அனைத்தையும் சேர்த்துப் பற்றிக்கொண்டு ஒர் அடி கொடுக்கின்ருன். இவ்வாறு அடிப்பதும் அனுமன் பெண்ணொருத்தியிடம் அடிபட்டான் என்ற பழிச்சொல் நீக்கற்கேயாம். அடிபட்ட அவள் இடியேறுண்ட மால்வரைபோல் மண்ணிடை உயிரொடும் வீழ்கின்ருள். 'உயிரொடும்' என்று உரைப்பது அனுமன் தன் முழுவலி காட்டிப் போரிடவில்லை என்று உணர்த்தற் பொருட்டே. பெண் ஆகலின் இரங்குகின்ருன் அவனின் ஒரு குத்தால் இராவணனே பட்ட பாட்டை நாம் அறிவோம். அவன் குத்தால் இறந்த அரக்கர்களும் எண்ணற்ருேர்.

வீழ்ந்தவள் நான்முகனுர் தம் அருளைப்பற்றுக் கோடாகக் கொண்டு எழுந்து, யாரும், யாவையும், எல்லா உலகதும் தொழும் வீரனின் தூதன் முன்நின்று தன் வரலாறு உரைக்கின்ருள். நான் பிரமன் கட்டளையால் இவ்வூர் காவல் செய்வேன். இதனுலேயே நின்பாற் பிழை செய்தேன்.

'எத்தனை காலங் காப்பல் யானிந்த மூதூ ரென்றம்
முத்தனை வினவி னேற்கு மூரண்வலிக் குரங்கொன்
றுன்னைக்
கைத்தல மதனாற் றீண்டிற் கழிவதன் றென்னைக் காண்டி
சித்திர நகரம் பின்னைச் சிதைவது திண்ண மென்றான்'
(ஊர்தேடு படலம்: 94)

அந்த ஐயன் சொன்னபடியே ஆயிற்று உன்னால் உன்னிய எல்லாம் முற்றும். பொன்னகர் புகுதி,' என்று, புகல்கின்றாள். இவற்றால் அனுமன் போர் அறத்தினின்று எஞ்ஞான்றும் தன்னைக் காத்துக் கொண்டமை அறியலாம் இதனாலேயே கம்பனும் போர் நீதியான் என்று புகழ்கின்றான்.

வருவன உரைத்தல் :—

பின்னன, முன்நிகழ்வுகளிலேயே சுட்டப்படல் காவிய உத்திகளில் ஒன்று இதனைக் கம்பன் அனுமன் வரும் சில இடங்களிலும் கையாள்கின்றான் சம்பு மாலியைக் கொன்றவுடன் 'இன்று இங்கு இவனால் சரிந்தது அரக்கர்வலி,' என்றெண்ணி அறமும் தளிர்த்தது என்கின்றான். இதனால் அறம் சாரா வாழ்வு நடத்தும் அரக்கர் அழிய மீண்டும் இலங்கையில் அறம் வளரும்; இராமன் இன்னுயிர்த் துணையை அடைவான் என்பதனை அறியலாம். இவண் காப்பியத்தின் உட்கோள் நிறைவேற இருப்பது உணர்த்தப்படுகின்றது.

அனுமன் அசோகவனத்தில் இருந்த மணிமயமும் பொன்மயமுமான மரங்களை விண்ணில் வீசுகின்றான். அவை இரவில் இந்திரவில் தோன்றியதுபோல் தோன்றின என்கிறான் கம்பன். இரவில் இந்திரவில் தோன்றல் உற்பாதம். அதனைக் கூறுவதன் மூலம் கம்பன் கனகமாநகர் இலங்கை அனுமனால் எரியூட்டப் பட இருப்பதைச் சுட்டுகிறான். அனுமனின் ஆற்றலைக் கம்பன் காவிய உத்தியாகப் பயன்படுத்தியிருப்பதன் மூலம் அவன் ஆற்றலுக்கு மேலும் புகழ் சேர்க்கின்றான்.

தேவர்கள் மகிழ்வும், வருத்தமும்:—

விசயத் திண்டோள் வீரன் அனுமன் அரக்கர்களை அழித்துத் தன் வீரம் வெளிப்படுத்துங்கால் அமரர்கள் ஆரவாரிக்கின்றனர். அவன் தாக்கப்படுங்கால் தாமே தாக்கப்பட்டது போன்றுணர்ந்து வருந்துகின்றனர். அனுமன் அமர்க்கான காரணங்களில் அமரர்கள் அல்லல் தீர்ப்பதும் ஒன்று. எனவே இவ்வாறு மகிழ்ந்தும் வருந்தியும் தங்களுக்காகப் போரிடும் அவன் உயர்விலும் தாழ்விலும் அவர்கள் பங்குகொள்கின்றனர்

இராவணன் அனுமனிடம் பெற்ற குத்தால் தள்ளாடும் போது 'இராவணன் வெற்றிகள் இவனால் அழிந்தன' என்று ஆர்த்து அவன்மேல் மலர்மாரி பொழிகின்றனர். இதேபோன்று

தேவாந்தகன் வில்லினைப் பற்றி அனுமன் முறித்தபோதும் தேவர்கள் மகிழ்கின்றனர்.

அனுமனை எதிர்க்கவரும் பஞ்ச சேனாதிபதிகளையும் அவர்களின் படைபலத்தையும் அனுமனின் தனிமையையும் காண்கின்றனர் தேவர்கள். அச்சம், அவலம், இரக்கம் அனைத்தும் ஒருங்கே எய்துகின்றனர். இந்திரசித்து அனுமன் சிரத்திலும், உரத்திலும் வலிய கணைகளைவிட மனம் மருள்கின்றனர். ஆனால் அனுமனோ அவற்றைப் பேருருவம் கொண்டு தன் கைகளாலேயே விலக்குகின்றான்.

வெய்யவன் இராவணன் கயிலையங்கிரியைப் பெயர்த்த தன் கரங்களால் அனுமன் மார்பில் குத்த அவன் தளர்கின்றான். அமரர்களும் ஆவது என்னவோ என்று தளர்கின்றனர்,' தருமம் தளர்கின்றது; மெய்ம்மொழி தளர்கின்றது. தகவு தளர்கின்றது. புகழொடு சுருதியும் தளர்கின்றது; நீதி தளர்கின்றது; கருணையும் தளர்கின்றது என்கிறான் கம்பன்.

இதேபோன்று வில் இழந்த தேவாந்தகன் தோமரம் எனும் கொடும்படையை வீச இமையோர் நடுங்குகின்றனர் ஆனால் அனுமன் அதனைப்பற்றி அதனைக்கொண்டே அவன் தேரையும் சாரதியையும் அழிக்கின்றான். தனக்கு வேண்டியவர் வென்றால் ஆரவாரிப்பதும், தளருங்கால் தானும் துன்புறலும் உலகவியல்பு. இவ்வியல்பினைக் காவியத்தில் பின்பற்றும் கம்பன் அதன் சுவையினை மிகுவிக்கின்றான்.

தெய்வத்தன்மை :—

மேல் பலவாறாக விரித்துரைத்தாற் போன்று எண்ணிறந்த வீரச்செயல்களை அனுமன் ஆற்றுகின்றான். இவற்றை நோக்குங்கால் அனுமனிடத்து இறைத்தன்மை நிறைந்திருப்பது உணரலாம். சாதாரணக் குரங்கின் ஆற்றலைவிட அனுமன் ஆற்றல் பல நூறு மடங்கு உயர்ந்ததாக இருக்கின்றது. வானரப் படைகள் அனைத்திடமும் இதனை நாம் காண்பதால் அது இங்கு சிறப்பாக எடுத்துக்கொள்ளப்பெறவில்லை வானரப்படைகளின் ஆற்றலினின்றும் அனுமன் ஆற்றல் பன்மடங்கு உயர்ந்து நிற்பதே இங்கு உரைக்கப்படுகின்றது

அனுமன் தாக்கியதால், தன் பழையவாழ்வினை அடைகின்றாள் இலங்கைமாதேவி. அனுமன் அசோகவனத்தை அழித்த போது தீவினை புரிந்ததால் அவண் வரநேர்ந்த தேவருலக மரங்கள் மீண்டும் தேவருலகம் செல்கின்றன: இவ்வாறே சில பறவைகளும் தேவருலகம் மீள்கின்றன. இவ்வாற்றல் வேறு எந்த வானரத்திடமும் இல்லாத ஒன்று. அனுமனின் இச்செயல் இராமனின் பாதத்துளியால் கல்லுருநீத்த அகலிகையின்மீட்சிக்கு ஒப்பாய் அமைகின்றது.

தனியனாய் நிற்கும் அனுமன், தன்னைப் பல்வேறு திசைகளினின்றும் அடுத்தடுத்துப் பெரும்படை தாக்கவும் அவற்றையெல்லாம் சமாளித்து அழிக்கின்றான். புதிது புதிதாக வன்மையான படைகள் வரும்போதும் தளராது எதிர்க்கின்றான். தெய்வப் படைக் கலங்களும் அவனை அழித்தில. பஞ்ச சேனாதிபதிகளை அனுமன் அழித்தவுடன் எதிர்ப்போர் அவண் யாருமிலாமையால் அனுமன் சோம்பியிருந்ததாக இராவணன் ஒற்றர்கள் உரைக்கின்றனர். ஓய்வின்றிப் போரிடல் அரிது. அதனினும் அரிது களைப்பின்றி இருத்தல். ஆனால் அனுமனோ வரம்பிலா வெம்போர் பெற்றமையின் மும்மடங்கு ஆற்றலுற்றவனாய் ஊழியின் இறுதிக்காலத்துக் கதிரவன் ஆனான் என்கின்றான் கம்பன். இவை சாதாரணக் குரங்கால் அமைவதன்று; சாதாரண நிலையில் அமைவதுமன்று. அனுமனிடம் நிறைந்திருக்கும் இறைத்தன்மையே இதற்குக் காரணம். அனுமன் தன் வாலில் இராவணன் இட்ட தீயால் இலங்கையை அழித்ததும் இதனுள் இடம் பெறுகின்றது.

அனுமன் ஆற்றலை வெளிப்படுத்துவதில் கம்பன், வான்மீகி, துளசி, மூவருமே பெரும்பாலும் ஒன்றுபடுகின்றனர். போர் வருணனையில் கூடக் கம்பனும் வான்மீகியும் பெருமளவு ஒன்றுபடுகின்றனர். சந்தர்ப்பங்களும், சூழ்நிலையுமே சில இடங்களில் மாறுபட்டுள்ளன. துளசியில அனுமனே இலங்கை மாதேவியை முதலில் தாக்குகின்றான். இதனால் பிற இருவரின் அனுமன் உயர்ந்து நிற்கின்றான். கம்பனில, அனுமன் வஞ்சினம் உரைக்கும் இரு இடங்களையும் மற்றஇருவரும் சாதாரணமாகவே சுட்டியுள்ளனர்.

சித்தாற்றல்:—

இதுவரை அருக்கனை அனைய அனுமனின் உடலாற்றல் கண்ட நாம் இனி அவனிடம் மிகுந்துள்ள சித்தாற்றலைக் காணலாம். சித்தர்களில் ஒருவனாகவே அவன் கருதப்படுகின்றான். அனுமன் அறியாத கலைகள் இவ்வுலகில் இல்லை எனும் இராமன் கூற்று அவன் சித்தையும் பயின்றுள்ளான் என்பதனை உணர்த்தும். சாம்பன் அனுமனுக்கு இவ்வாற்றல் உண்டு என்பதனை

> 'மேருகிரிக்கும் மீதுற நிற்கும் பெருமெய்யீர்
> மாரி துளிக்கும் தாரை இடுக்கும் வரவல்லீர்'
> 'வேண்டிய போதே வேண்டுவ எய்தும் வினைவல்லீர்'
> (மயேந்திரப் படலம் : 12, 18)

எனும் கூற்றுக்களால் தெளிவுபடுத்துகின்றான்.

சித்திகள் எண்வகைப்படும். அவை அணிமா, மகிமா, லகிமா, கரிமா, பிராத்தி, பிரகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பன. அனுமன் இவ்வெண்வகைச் சித்திகளும் கைவரப் பெற்றவன், என்பாரும் உளர். ஆனால் இவண் அனுமன் வெளிப்படுத்திய ஐந்துவகைச் சித்தாற்றல்கள் மட்டுமே காட்டப்படுகின்றன

அணிமா:—

அணுவைக் காட்டிலும் மிகச்சிறிய உருவிலே உலவும் ஆற்றலுக்கு அணிமா என்பது பெயர். இவ்வுருவினை இருமுறை அனுமன் எடுக்கின்றான் (5:1:72, 5:2:264). மகேந்திர மலையிலிருந்து இலங்கை செல்லும் வழியில் சுரசை எதிர்ப்படுங்கால் முதன்முறை எடுக்கின்றான். சிந்தை தூயாளான சுரசையை அமரர்கள் அனுமனின் வலியறியுமாறு அனுப்பி வைக்கின்றனர். சுரசையும் பேழ்வாயுடையோர் அரக்கியாக உருமாறி அனுமன் முன் தோன்றி, 'யமனும் அஞ்சும்படியாக நான் வாழும் இடத்தில் குரங்காகிய நீ வருவாயோ? என்னுடைய பசியினைப் போக்குபவனாய் நீயே வந்து என் வாயில் புகுவாய். இவ்விசும்பில் வேறுவழி உனக்கு இல்லை,' என்கிறாள் பெண்ணை ஏமாற்றல் எளிது எனஎண்ணி முதலில் சொல்லால் ஏமாற்ற முனைகின்றான். 'நான் நாயகன் ஏவலின் செல்கின்றேன். முடித்து மீண்டு வருங்கால் உன்பசி போக்குகின்றேன். அதுவரை பொறுத்திரு,' என்கிறான்.

இதற்கு சுரசை 'உன்னுடைய உடலை இவ்வேழ் உலகும் காணத் தின்றிடுவேன் இது ஆணை,' என்கின்றாள். உடன் அனுமன் 'நான் நின்னுடை வாயிற் புகுந்து மீள்வேன். வல்லை பல் தின்றிடு' எனக்கூறி, திசைகளில் பரவிய அவளது பெருவாய் சிறிதாகும்படிப் பேருருக் கொள்கின்றான். பின் உடனேயே மிகச்சுருங்கி அவள் வாயுள் புகுந்து ஒருதடவை மூச்சு விடுமுன்னே வெளிவருகின்றான். சொல்லால் முடியாது, இப்பொழுது செயலால் ஏமாற்றி அவளை வெற்றி கொள்கின்றான். எம்மை ஆண்டான் வலன் என அதைக் கண்ணுறும் தேவர்கள் மகிழ்ந்து மலர் தூவுகின்றனர். சுரசையும் தாயினும் அன்போடு தன் உரு உணர்த்தி, "உன்னால் முடியாதது இனி ஒன்றும் இல்,' என வாழ்த்திச் செல்கின்றாள். இங்கு அனுமன் சித்தாற்றலோடு அறிவாற்றலையும் சேர்த்து உணரலாம்.

அடுத்து இலங்கை மாதேவியினின்றும் விடைபெறும் அனுமன் இலங்கையுள் எப்படி நுழைவது எனச் சிந்தனை செய்கின்றான். இரவிலும் இலங்கையில் ஒளிவெள்ளம் பகல்போல் நிலவுகின்றது. அமரர்க்கு அமுதம் ஈந்த மந்திரமலையினை ஒத்த தோளுடை அனுமன் தன் உருவுடன் இந்நகர் வீதியில் உலவல் இழுக்கு என்றெண்ணித் தன் உருவினைச் சுருக்கிக் கொள்கின்றான். இவ்வுரு அனுமனுக்கு ஈந்த நன்மைகள் பல. இவண் காற்றினைவிட நுண்ணிய உருவுடன் அனுமன் சென்றதாகக் கம்பன் கூறுகின்றான்.

மகிமா:—

மலையினும் பெரிய உருப்பெறும் ஆற்றலுக்கு மகிமா

என்று பெயர். இச்சித்தினை அனுமன் ஏறக்குறைய பதினெட்டு[1] இடங்களில் பயன்படுத்துகின்றான். இது தவிர, தெளிவின்றியும் சில இடங்கள் அமைந்துள்ளன.

அனுமன் முதலாவதாகத் தன்பேருருவினை இராம இலக்குவரிடம் காட்டுகின்றான். சுக்கிரீவன் ஏவலால் இராம இலக்குவர்களைக் காணவரும் அனுமன் அவர்களின் உண்மைநிலை உணர்ந்தவுடன் இராமன் பாதம் பணிகின்றான். மாணவப் படிவமொடு வந்த அவனை, 'தகாது செய்தது என்னை நீ தருமம் அன்றால் கேள்வி நூல் மறைவலாளா,' எனஇராமன் வினவுகின்றான். உடன் அனுமன் 'அடியேன்தானும் அரிக்குலத்து ஒருவன்' என்று தன் பேருருக் காட்டுகின்றான். அனுமன் பேருரு அவன் பெருங்குணத்துக்கேற்பவே அமைகின்றது.

மின்னுருக் கொண்ட வில்லோர் வியப்புற வேத நன்னூல்
பின்னுருக் கொண்ட தென்னும் பெருமையாம் பொருளுநாணப்
பொன்னுருக்கொண்ட மேருபுயத்திற்கு முவமைபோதாத்
தன்னுருக் கொண்டு நின்றான் தருமத்தின் தனிமை தீர்ப்பான்.

(அனுமப்படலம் : 31)

'இராமபிரானுக்கே பொன்னால்இயன்ற ஒளியுடைக்குண்டலம் அணிந்த அனுமனின் முகத்தைக் காண இயலவில்லை எனின் அவன் வடிவினைவரைய நம்மால் ஆமோ? என வினவுகின்றான் கம்பன். 'நல்லன நிமித்தம் பெற்றோம்; நம்பியைப் பெற்றோம்: இல்லையே நம்மால் துன்பம் ஆனது,' என்று இராமன் மொழிவதற்கு இவ்வுருவமும் காரணமாகின்றது.

'இச்சிறியவலியற்றஉடலால் எவ்வாறு கடல் கடந்தனை? அது தவத்தின் ஆயதோ? அன்றிச் சித்தியின் இயன்றதோ? செப்புவாய்,' எனச் சீதை வேண்ட, அவளுக்கும் தன் பேருருக் காட்டுகின்றான். சீதை அவனது தாமரை மலர் போன்ற திருவடிகளைக் கூடக்காண இயலாதவளாய் 'அஞ்சினென்இவ்வுருஅடக்குவாய்,' என்கிறாள். மேலும் துஞ்சினர் அரக்கர்என உறுதியாக எண்ணி உவக்கின்றாள். இவ்வாறு சிறையிருக்கும் செல்விஐயம் நீங்கிப் புத்துயிர்பெறஇவண் அனுமன்பேருருவம் பயன்படுகின்றது. "மலைகளோடும் உலகம் பெயர்த்தெடுத்தாய்; விசும்பை இடித்தாய்; இவை சுமக்கும் படந்தாழ் அரவை ஒருகரத்தால் பறித்தாய் என்றாலும்பயன் ஆவதோர்சிறப்பன்று. கடலின் நடுவே நடந்துவந்தேன்என்றாலும் அது உனக்குப் பெருமை தருவதன்று," என்கிறாள். தண்ணீர் ஆழமின்றி உள்ள இடத்திலே தான் நடக்கமுடியும். அவ்வாறிருக்க எண்ணுதற்கரிய ஆழமுடைய கடலில் நடந்துவருதலும் அவனுக்குப புகழ் தருவதன்று

[1] (4 : 2 : 31, 4 : 13 : 31, 4 . 13 : 68, 4 : 16 : 26, 5 : 1 : 71, 5 : 1 : 87, 5 : 1 : 100, 5 : 7 : 24, 5 : 9 : 29, 5 : 11 : 41, 6 : 14 : 1, 6 : 14 : 16, 6 : 14 : 218 6 : 15 : 231, 6 : 21 : 116, 6 : 23 : 29, 6 : 31 : 39, 6 : 37 : 257.)

என உரைப்பதால் அனுமனின் உயரத்தினை ஓரளவு உணரலாம். இதனால்தான் கம்பனும், வான்மீகியும் அனுமனின் பெருவடிவினை, ஈரடியால் மூவுலகினையும் அளந்த நெடியவனின் தோற்றத்தை விட உயர்ந்தது என்று கூறுகின்றனர். 'நிருதர் என்னுவர் நீயே எங்கோன் துணையானால்,' என்றுவியக்கிறாள் சீதை. அனுமனின் பேருருவின் பெருமையையும் பயனையும் கம்பன் இங்குதான் கூறுகின்றான். உருக்காட்டுப்படலம் என்று அவன் உருக்காட்டியதற்குச் சிறப்பிடம் கொடுத்துப் பெயரும் இடுகின்றான்.

அனுமனின் பேருரு, சிறப்பினை அடையும் மற்றொருஇடம் பிலம் ஆகும். இங்கு சுயம்பிரபைக்குத் தன்னாற்றலால் விடுதலை அளிக்கின்றான். சீதையைத் தென்றிசையில் தேடிவரும்வானரர்கள் கொடிய வெஞ்சுரம் ஒன்றினைக் கடந்து ஒரு பிலத்துள் புகுகின்றனர். அதன் செறிந்தஇருளால் வானரர்கள் மூச்சுத்திணறுகின்றனர். பொன்றினோம் என எண்ணி வருந்தி, 'வன்திறல் மாருதி! வல்லையோ எமைஇன்று காக்க,' என்றுகூறி இரக்கின்றனர். வானரர்கள் அனுமன் ஆற்றல்பால் கொண்டுள்ள நம்பிக்கை இவண் வெளிப்படுகின்றது. அவர்கள் அனைவரையும் தன் வாலினை இறுகப் பற்றிக்கொள்ளச்செய்து தான் மிகவிரைந்து செல்கின்றான். பன்னிரண்டு யோசனை தூரம் படர்ந்த மெய்யினன் எனக் கம்பன் இங்கு அவன் உருவத்திற்கு அளவு உரைக்கின்றான். பேருருவினால் அவன் குண்டலங்களும் பெரிதாகி ஒளியைச்சிந்த பிலத்தின்இருளும் அகல்கின்றது விரைந்துசென்று அடுத்துள்ள நகரை அடைகின்றனர்.

அந்நகர் நடுவண் "ஒண்சுடர் உள்ஓர் நற்றவம் அனைத்தும் உருநண்ணி, ஒளி பெற்ற கற்றைவிரி பொன்சடையினளாகிய" சுயம்பிரபையைக்காண்கின்றனர். அவள்வினவத் தங்கள் வரவிற்கான காரணம் கூறுகின்றனர். கேட்டவள் பேருவகை கொண்டு அவர்களை உபசரிக்கின்றாள். பின் அனுமன் வினவ இந்திரன் ஏவலால் இந்நகர் தன்னுடைய காவலான வரலாறு உரைக்கின்றாள். இராமதூதர்கள் வரும் நாள் தான் இதிலிருந்து விடுபடும் நாள் என்று தனக்குள்ள நிலையும் கூறுகிறாள். பின்,

'ஐயிருப தோசனை அமைந்த பிலமையா
மெய்யுளது மேலுலக மேறுநெறி காணே
னுய்யுநெறி யுண்டுதவு வீரெனி னுபாயம்
செய்யும் வகை சிந்தையி னினைந்திர்சிறி தென்றாள்.'

(பிலம்புக்குநீங்கு படலம்)

இதனைக்கேட்டு அனுமன் அவள்மலரடி பணிந்துவணங்கி, 'வானவர்கள் சேரும் பொன்னுலகம் நினக்கு ஈகுவல்,' எனப் பகர்கின்றான், வானரர்களும், 'முழைத்தலை இருட்கடலின்மூழ்கி முடிவேமைப் பிழைத்து உயிர் உயிர்க்க அருள் செய்த பெரியோனே! இனிச் செய்யத்தக்கசெயலாகிய வினை செய்வாயாக!, எனவேண்டுகின்றனர். 'நடுங்கன்மின்', என அவர்களுக்கு அப

டம் நல்கிய அனுமன் தன் பேருருவினை எடுக்கின்றான். ஆண்சிங்கம் போன்று, பிலத்தின் மேலிடம் திறக்கப்பெற்றுப் பூவுலகத்தோடு ஒன்றுகுமாறு தன் நீண்ட கைகளை மேலே உயர்த்திக் கொண்டு எழுகின்றான். இது கடலில் மறைந்திருந்த பூமியைக் கோரப் பல்லினால் பெயர்த்தெடுத்த கரிய வராகத்தினை ஒத்தமைந்தது என்கிறான் கம்பன். ஏழ் இருபது யோசனை அளவு பெயர்த்துத் தேவர்களும் அஞ்சுமாறு மேலைக்கடலுள் எறிகின்றான். இவ்வாறு அனுமன் வானரர்களுக்கும் வானவ மகளுக்கும் அப்பிலத்தினின்று விடுதலை நல்குகின்றான். அனுமனின் ஆற்றல் இவ்வாறு பலருக்கு வாழ்வளிப்பதன் மூலம் மேலும் சிறப்புறுகின்றது.

வான்மீகியும், துளசியும், பிலத்தின் விடுதலையைச் சுயம்பிரபையைக் கொண்டே செய்விக்கின்றனர். அவள் வானரர்களைக் கண்மூடிக் கொள்ளச் சொன்னதாகவும், பின் திறந்து பார்த்தபோது தாங்கள் பூமியின் மேல் இருப்பதை உணர்ந்ததாகவும் கூறிச் செல்கின்றனர். கம்பன் அனுமன்மேல்கொண்ட பற்றால் அவன் புகழை மேலும் சிறப்பிக்கின்றான்.

மருத்துமலையினைக் கொணர அனுமன் இருமுறை பேருருவம் எடுத்தது, இலக்குவன், வானரர்கள் இவர்களின் உயிரினைத் திரும்பப் பெற உதவியதால் அவ்விடங்களும் சிறப்பிடம் பெறுகின்றன. கடல் தாவுங்கால் மகேந்திரமலையில் எடுத்த பேருருவினைக் கம்பன் முழுமையாக வருணிப்பதன் மூலம் அப்பகுதி சிறப்புப் பெறுகின்றது. காகுத்தன் தன் போரின் சாயையைப் பரப்பும்மேலோர் தம் புகழ்போல் அனுமனது பெருவடிவின் நிழல் பெரியகடலை அவன் தாண்டும முன்னரே தாண்டிச்சென்று இலங்கையின் மேல் விழுந்தது என்கிறான் கம்பன். இவை தவிர அனுமன், பரதன், இராவணன், இந்திரசித்து, கிங்கரர்கள், பஞ்சசேனாதிபதிகள் ஆகியோர் முன்பும தன் பேருருவினை அங்கங்கு தேவையான அளவிற்கு எடுக்கின்றான்.

அனுமன் பெருமையை எடுத்துரைப்பவற்றுள் அவன் பெருவடிவமும் ஒன்று. அதனைக் கம்பன் கடவுளரும் போற்றுவதாகக் கூறி மேலும் சிறப்பிக்கின்றான். அனைத்துலகும் அளந்த, அனைவர்க்கும் தலைவனாகிய திருமால், வலிமை இல்லாத குரங்கு என்று எண்ண முடியாத அச்சாணி போன்ற அனுமனை அமைய நோக்குகின்றான்; 'சேனையர் பெருமை ஓர் திறத்தது அன்று என ஓர்ந்து நாணுகின்றனன்,' என்கிறான். அனுமனுக்குப் பெருமை தர இதனினும் வேறு வேண்டுமோ?

லகிமா :—

அனுமனிடம் அடுத்து நாம்காணும் வியத்தகு ஆற்றல் லகிமா ஆகும். உடலைக் கனமின்றி மென்மையாக ஆக்கிக் கொள்ளலும் நீரிலும் சேற்றிலும் அழுந்தாமல் காற்றுப் போல் விரைந்து செல்லலுமே லகிமா எனப்படும். இச்சித்தினை அனுமன் நான்கிடங்களில் வெளிப்படுத்துகின்றான். மகேந்திர மலையினின்று கடலைத்தாண்டும் போதும், மருத்துமலைகொணர

இருமுறை சென்ற போதும், பரத்துவாச முனிவர் ஆசிரமத்தி லிருந்து பரதனுக்குச் செய்தி சொல்ல விரையும் போதும் அனுமன் இவ்வாற்றல் கொண்டு வான்வழிச் செல்லுகின்றான்.

இந்நான்கிடமும் ஒன்றே போல் சிறப்புப்பெறுகின்றன. கடலைத்தாவி இலங்கை சென்று சீதைக்கு உயிரூட்டுகின்றான். மருத்துமலை கொணர்ந்து இலக்குவனுக்கும், வானரர்களுக்கும் உயிர் தருகின்றான். பரதனிடம் சென்று அவனையும் மரணத்தின் வாயிலினின்று மீட்கின்றான். இவர்களுக்கெல்லாம் உயிர் ஈந்து இராமனுக்கும் புத்துயிர் அளிக்கின்றான். இதனால் இந்நிகழ்ச்சிகள் காவியத்தில் சிறப்பிடம் பெறுகின்றன.

'கடன்முன்னே நிமிர்ந்தோடக் கால்பின்னே
தொடர்ந்தோடக் கடிதிற் செல்வான்
உடன் முன்னே செலவுள்ளங் கடைக்குழையாய்ச்
செலச்செல்வா னுருவை நோக்கி
அடன்முன்னே தொடங்கியநா ளாழ்கடல்சூ
ழிலங்கையெனு மரக்கர் வைகும்
திடன்முந்நீ ரிடைப்படுத்து மறித்திலன்
துயரென்றார் தேவ ரெல்லாம்'.

வான்வழிச் செல்லும் அனுமனின் வேகத்தை இப்பாடல் நயத்துடன் உணர்த்துகின்றது. காற்றினும் கடுகி விரைவது மனம். அம்மனமும் பின்னிடும்படி விரைகின்றான் அனுமன். அனுமனின் வேகத்தை இதனினும் சிறக்க உணர்த்தல் அரிது. விண்வழிச் செல்லல் சிலம்பு, மேகலை இவற்றிலும் கூட இடம் பெறுகின்றது.

பிராத்தி :—

நினைந்தது நினைந்தபடி அடைவது பிராத்தி. அனுமனின் உருமாற்றமும், அங்காரதாரையின் வயிற்றுள் புகுந்து வெளி வரலும் இச்சித்தால் நடைபெறுகின்றன.

உருவினைச் சுருக்குவதும், பேருருக் கொள்வதும் சுரசை, அங்காரதாரை தவிர அனுமன் மட்டுமே மேற்கொள்கின்றான். (கடல்தாவுபடலம் 71, 80).

ஆனால் பலரும் உருமாற்றம் செய்கின்றனர். வானரங்களும் இவ்வாற்றல் கொண்டிருக்கின்றன (ஆறுசெல்படலம் ; 38).

நன்மை தீமை இரண்டுமே இவ்வுருமாற்றத்தால் ஏற்படுகின்றன. சூர்ப்பணகை உருமாற்றம் அவளுக்கு மட்டுமன்றிப் பலருக்கும் கேடு சூழ்கின்றது. இதற்கு நேர் எதிராக அனுமான் உருமாற்றம் நன்மை பயக்கின்றது. இத்துடன் நில்லாது அவளால் விளைந்த தீமையையும் சேர்த்தழிக்கின்றது.

உருமாற்றத்தில் முதலாவதே சிறப்பும் சிறப்பிடமும் பெறுகின்றது. அனுமன் இராமஇலக்குவர் இன்னார் என்று அறி

யச் செல்லும் போது மாணவப்படிவமொடு செல்கின்றான். இராம சுக்கிரீவர் நட்பிற்கு இம்மாற்றம் அடிப்படையாய் அமைகின்றது. வாலியால் அனுப்பப்பட்ட தெவ்வரோ, இராம இலக்குவர் என்று ஐயுற்று சுக்கிரீவன் கலங்கும் நிலையில் தன் உண்மை உருவினை அவன் கரப்பது அவசியமாகின்றது. ஒற்றர்கள் உரு மாறுவது அக்கால இயல்பு. அதனையே அனுமனும் செய்கின்றான்.

இரண்டாவதாக மாற்றுருக் கொள்வது சீதையைத் தேடும் போதாகும். இங்கும் மறைநாவலர் வடிவம் கொள்கின்றான் உடன் வரும் வானரங்களும் அவ்வேடமே பூண்கின்றனர். அந்தண உருக்கொள்ளல் ஐயத்திற்கு இடந்தராதுபோலும். பரதனிடம செல்லும்போதும் அந்த உருவில் தான் செல்கின்றான். தூதுசெல்லல அந்தணர்க் குரியதாகத் தொல்காப்பியர் கூறுகின்றார். இதனால் யாவர் முன்னிலையிலும் இவ்வுருக் கொண்டான போலும்.

அனுமன் கடலைக் கடக்கும் போது அங்கார தாரையுடனும் மோதவேண்டிய நிலை ஏற்படுகின்றது. அவள் அரக்க உருவில்வருகின்றாள். உருவில்மட்டுமின்றிப்பண்பிலும் அவள் அரக்கியே. வானில் பறக்கும் பறவைகளின் நிழலைப்பற்றியிழுத்து அவற்றின் உயிருண்ணும் ஆலாலம் அன்னவள். தன்செயலால் அனுமனையும் பிணித்து வான்வழியை அடைத்துக் கொண்டு நிற்கிறாள். நீள்வான் அகத்தினிடை ஏகும் நெறிகாணாத மாருதி, நீ யார்என வினவுகின்றான். அதற்கு அவள், 'நீ பெண்என என்னைக் கருதும் எண்ணம் ஒழி எனை நெருங்கின் விண்ணவரும் உயிர் விடல் மெய். காலனேவரினும்உண்பேன்,' எனக்கூறுகின்றாள்.

''திறந்தா ளெயிற்றையவ ளண்ணலிடை சென்றான்
அறந்தா னரற்றிய தயர்த்தமர ரெய்த்தார்
இறந்தா னெனக்கொடொ ரிமைப்பதின் முன்னம்
பிறந்தான் எனப்பெயரிய கோளரி பெயர்ந்தான்''

(கடல்தாவு படலம் : 83)

இங்கு ஓர் இமைப்பின் முன்னம் அவள்வயிற்றினின்றும் வெளிப்படுகின்றான் அனுமன். உயிர் துறக்கின்றாள் அங்காரதாரை. ஆர்க்கின்றனர் விண்ணவர். விரிஞ்சனும் வியந்து மலர்மாரி பொழிகின்றான். இக்காட்சியைச் சிவனும் காண்கின்றான். முனிவர்களும் ஆசிமொழி பகர்கின்றனர்.

ஒவ்வொருவரிடமும் அவர்களுக்குத் தக்கபடி செயல்பட்டுத் தன் வினையைமுடிக்கின்றான் அனுமன். சுரசையை அறிவால் வெல்கின்றான். இலங்கைமாதேவியைப்பலத்தால்வெல்கின்றான். இவ்வரக்கியிடம் அறிவும், பலமும்பயனற்றுப்போகவேகொல்ல நேர்கின்றது. மேலும் அவள் தன் வாயாலேயே தான் பெண் அல்லள் என்கிறாள். அனுமனின் இச்செயல் விசுவாமித்திரரின் யாகத்திற்கு இடையூறு செய்த தாடகையை இராமன் அழித்ததற்கு ஒப்பாகும். தவிர்க்க முடியாத நிலையிலேயே அவனை

ழ்த்துகின்ருன். இது தவறன்று என்பதனை முனிவர்களும், தேவர்களும் வாழ்த்தியதிலிருந்து பெறவைக்கின்ருன் கம்பன்.

வசித்துவம் :—

அனுமனிடம் வெளிப்படும் மற்ருெரு சித்தாற்றல் வசித்துவமாகும். பிறரைத் தன்பால் ஈர்க்கும் சக்தியே இது. அசோக வனத்தில் சீதையைச் சுற்றிக் காவல் புரியும் அரக்கியர் அனைவரையும் அனுமன் தன் விஞ்சையால் உறங்க வைக்கின்ருன். இதனுல் அவன் எளிதாகச் சீதையைநெருங்கி வெற்றியுடன்மீள முடிகின்றது. வான்மீகத்திலோ, துளசியிலோ இந்நிகழ்ச்சி கூறப்படவில்லை. வான்மீகியார், இராமன், இலக்குவனிடம் அனுமன் தோற்றத்தைக் கண்டு, 'இவனுடைய ஆச்சரியகரமான வார்த்தையைக் கேட்டு இவனைக் கொல்ல எண்ணிக் கத்தியை உருவிக் கொண்டு பாயும் சத்துருவும் கோபம் தணிந்து சந்தோஷம் மேலிட்டு இவனுக்கு வசப்படுவான், என உரைப்பதாகக் கூறுகின்ருர். எனவே அனுமன் அங்கும் வசித்துவ சித்து பெற்றவன் என உணரலாம்.

அனுமனின் புகழும் பெருமையும் அவன் செய்த செயற்கரிய வினைகளாலேயே அமைகின்றது. அவன் இத்தகு செயல்கள் செய்தற்குப் பேருதவி புரிந்தன இச்சித்துக்களே.

பிற ஆற்றல்கள்

அனுமனிடம் நாம் காணும் பிற ஆற்றல்களில் சிறப்புப் பெறுவன அறிவாற்றலும், சொல்லாற்றலுமே. இவற்றை நாம் அனுமன், இராம சுக்கிரீவரிடையே நட்பு ஏற்படுத்துவதிலும், சுரசை, அங்காரதாரை ஆகியோரை எதிர்கொள்வதிலும், இலக்குவன் சினம் தணிப்பதிலும் உணரலாம். அவலமுற்ருேரை ஆற்றுவிக்கும் ஆற்றலும் அனுமனிடம் மேலோங்கி நிற்கின்றது. சீதையைக் காணுது கலங்கும் வானரவீரர்களை ஆற்றுவிக்கின்ருன். நாயகனை எண்ணி நலியும் சீதையைத் தேற்றுகின்ருன். இவ்வாற்றல்களுக்கெல்லாம் மூலமாக அமைவது அவன் கல்வி அறிவே. இவனின் ஊங்குசெவ்வியோர் இன்மை தேறி, இராமனே 'ஆற்றலும் நிறையுங் கல்வியமைதியு மறிவுமென்னும் வேற்றுமையிவனேடில்லை,' என்று கூறுகின்ருன். இக்கூற்றினை மேற்கண்ட நிகழ்ச்சிகள் வலியுறுத்துகின்றன.

தவிர, இராமனின் ஆற்றலினும் அனுமனின் ஆற்றல் சிலஇடங்களில் உயர்ந்து நிற்கின்றது. கதையிலும் காவியத்திலும் தலைவனும், தலைவியும் சாதாரண மானிடர்களாகப் பிறந்து உயர் நிலை அடைவதையே மக்கள் விரும்புகின்றனர்; ஏற்கின்றனர். இந்நிலையில் காவியக் கதை நிகழ்ச்சிஏற்படவும் தலைவனுக்குச் சிறப்பு ஏற்படவும் அனுமன் போன்ற அசாதாரண சக்தி படைத்த பாத்திரங்கள் படைக்கப்படுகின்றன. இது ஒன்றையே நாம் அனுமன் ஆற்றல் உயர்ந்து நிற்பதற்குக் காரணமாகக் கூற இயலும்.

கோதிலான்

கதைவானில் கதிரவனும் திங்களுமாய்ப் பேரொளி வீசித் திகழும் இராமனையும் சீதையையும் சுற்றிவரும் ஒளிமீன்களாகிய தயரதன், இலக்குவன், குகன், அனுமன், சுக்கிரீவன், வீடணன் ஆகியோர் ஆய்வுக்குரிய தனித்தனிப் பண்புச்சுரங்கங்கள். ஒவ்வொருவரையும் ஆழ்ந்து நோக்கின் அவரனைவரும் வெவ்வேறு நலங்காட்டி நம்மை மகிழ்விக்கும் குணச்சுரங்கமாவர். அதிலும் தன்னை இராமனின் அடிமை என்று கூறிக்கொள்ளும் அனுமன் தன் பண்பினால் பிறரை எளிதில் ஆட்கொள்ளுதலைக் காணலாம்.

கதைமாந்தர் தம் பண்பு நலனை முன்னுக்குப்பின் முரண்படாமல் உலகியலுக்கும் இயற்கைக்கும் பொருந்த சித்திரித்துக் காட்டுவதில் கம்பன் தன்னிகரற்றவன். மேலும் எடுத்துக்கொண்ட பாத்திரங்களை மனித இயல்புக்கு ஏற்பக் காட்டுவதிலும் வல்லவன். அக்கம்பன் காட்டும் அனுமன் பண்புநலனை நாம் மூன்று நிலைகளிலிருந்து ஆராயலாம் அனுமன் எண்ணம், சொல், செயல்களால் அறியும் பண்புநலன்; பிறபாத்திரங்களின் வழி வெளிப்படும் பண்புநலன்; கம்பன் தன் கூற்றால் உணர்த்தும் பண்புநலன் என்பனவே அவை. அனுமனின் பண்புநலனில் நம்மைப் பெரிதும் ஈர்ப்பவை பணிவும், தற்புகழ்ச்சியின்மையுமே. அனுமன் புகழின் அடிப்படைக் காரணமாய் அமைவதும் அவையே. தவிர, பெருமை, சான்றாண்மைகளில் தாம் வழுவாது நின்று எல்லோர் இயல்பிற்கும் ஏற்ப ஒழுகுதல் பண்புடைமை என்ற திருவள்ளுவரின் கூற்றிற்கும் சிறந்த சான்றாய் அமைகின்றான்.

பணிவு :—

ஆன்று அவிந்து அடங்கிய பெரியோர்களிடம் காணும் பண்புகளில் சிறந்து நிற்பது, பிறர் பாராட்டிற்குரியது பணிவே. காவியத்தில் பல இடங்களில் அனுமன் பணிவு வெளிப்படுகின்றது. அசோகவனத்தில் சீதை, ''வீர! நீயாவ?'' என வினவுகின்றாள். இராம இலக்குவர் சுக்கிரீவனிடம் நட்புக் கொண்டதை அவள் அறியாள் எனவே அனுமன் சுக்கிரீவன் பற்றிக் கூறுகின்றான். அதன்பின் தன்னை, ''மன்னவன் தனக்கு நாயேன்,' மந்திரத்து உள்ளேன்,' என அறிமுகப்படுத்துகின்றான். இராமன்பால் கொண்ட பக்தியும் சீதையின் தவக்கோலம் தந்த மதிப்புமே அவனை இவ்வாறு பணியச் செய்கின்றன.

அனுமனின் ஆற்றல்களைக் கண்ட சீதை மகிழ்ந்து ''நீ என்னுயிர் நாயகன் துணை என்னின் நிருதர் கதி என்னாம்?' என்று உவகையோடு உரைக்கின்றாள். உடன்,

'அண்ணற்பெரியோ னடிவணங்கியறியவுரைப்பா னருந்ததியே
வண்ணக் கடலி னிடைக் கிடந்த மணலிற் பலரால் வானரத்தின்
எண்ணற் கரிய படைத்தலைவ ரிராமற் கடியார் யானவர்தம்
பண்ணைக்கொருவனெனப்போந்தேனேவக்கடவபணிசெய்வேன்'
(உருக்காட்டுப்படலம் : 115)

என்கிறான். அனுமனின் இப்பதில் என்றும் பணியுமாம் பெருமை என்னும் வள்ளுவர் மொழியை அரண்செய்வது காணலாம். பிறர் தன்னைப் புகழ்ந்தவழியும் அதனை ஏற்றுக் கொள்ள நாணுகின்றது அவன் பண்புள்ளம்.

அனுமன் பணிவினை மற்றோர் இடத்திலும் காணலாம். இலங்கைக்குச் செல்வது யார் என்ற வினா வானரவீரர்களிடையே மகேந்திர மலையில் எழுகிறது. சாம்பன் அனுமனால் மட்டுமே ஆவது அது என்று அவன் ஆற்றல் கூறி இலங்கைக்குச் செல்ல வேண்டுகின்றான். இதனை அனுமன் தன் பெருமையாகக் கொள்ளாது ஆணையாகவே ஏற்கின்றான். 'நீங்களே, நினைப்பதற்கு முன்பே ஏழ்கடலையும் தாண்டுவீர். உலகோர் அனைவரையும் வெல்வீர். சீதையையும் சிறைமீட்பதற்குரிய வல்லமை உடையீர். 'நீ போய் இதுபுரிதி,' என்று அறிவு இல் என்சிறு தொழில் காண என்னை ஆணையிட்டீர் ஆகலின் என்னின் பேறுபெற்றார் யாருளர். இற்றை நும் அருளும எங்கோன் ஏவலும் இரண்டு பாலும் கற்றைவார் சிறைகள் ஆகக்கலுழனின் கடப்பல் கண்டீர்,'' என்று கூறுகின்றான். பிறரால் இயலாததொன்றினைத் தான்செய்யப் போகின்ற ஆணவம் இங்கில்லை. அறிவில் என் சிறு தொழில் என்றுதன் பணிவுடைமையைக் காட்டுகின்றான். உடன் வந்தோர் அருளும் இராமனின் ஏவலுமே தனக்கு உதவுவதாகக் கூறுகின்றான். அனுமனின் இப்பணிவே அவனின் பெருமைக்கெல்லாம் அடித்தளமிடுகின்றது.

தற்புகழ்ச்சி இன்மை:—

மனிதன் தற்பெருமை கொள்ளாதவனாக இருக்கவேண்டும். எத்தனை சிறப்புக்கள் பெற்றவனாய் இருப்பினும் 'தான் தற்புகழ்தல் தகுதியன்று' என்பது மனிதப் பண்பாட்டின் மேல்வரிச் சட்டம். ஆனால் இன்றைய மனிதர் எத்தனைபேர் இந்த உண்மையை உணர்ந்து போற்றுகின்றனர்? மனிதன் இவ்வாறு தன்பண்பாட்டினைப் புறக்கணித்து நிற்கும் அதே வேளையில் விலங்காகிய அனுமன் வழி அப்பண்பாட்டினை உணர்த்துகின்றான் கம்பன்.

இலங்கையினின்றும் வெற்றியுடன் மீண்டுவருகின்றான் அனுமன். அவனுக்காகக் காத்திருந்த வானரர்கள் நடந்தன அறியும் அவாவுடன் அவனை நெருங்குகின்றனர். ஆண்டகை அனுமன் தேவி உள்ளத்து அருந்தவம் அமையச்சொல்கின்றான். அவள் தந்த பேர் அடையாளம் கைக்கொண்டது புகல்கின்றான். ஆனால் போரில் நீண்ட வாள் அரக்கரோடு நிகழ்ந்ததும், நெருப்புச் சிந்தி மீண்டதும் தான் தன வென்றியை உரைப்ப வெள்கி

விளம்பான் என்று கம்பன் கூறுகின்றான். செயற்கரிய செய்து மீண்டிருக்கின்றான் அனுமன். பிறர்வியக்கும்படியாகச் செய்துள்ள அதனைத் தற்புகழ்ச்சியாக அமைத்து அதன் பெருமை சிதைக்காது பிறர்புகழ்ச்சியாக அமைய விட்டுவிடுகின்றான். அவன் உரையாவிடினும் அவன் ஆற்றிய அருஞ்செயல்களை வானரர் உணர்கின்றனர்.

"பொருதமை புண்ணை சொல்ல வென்றமை போந்த தன்மை
உரைசெய வூர்தி யிட்ட தோங்கிரும் புகையே யோதக்
கூருதலர் பெருமை தேவி மீண்டிலாச் செயலே காட்ட
தெரிதர வுணர்ந்தார்."

(திருவடி தொழுத படலம் : 10)

அனுமன் போரிட்டதனை அவன் மேனிப்புண்கள் காட்ட, அவன் திரும்பி வந்ததன்மை வெற்றியை உணர்த்துகின்றது. வானில் ஓங்கிச் சூழ்ந்திருந்த கரும்புகை ஊருக்குத் தீயிட்டதை உணர்த்த அரக்கர் வலிமை தேவிமீண்டிலாத செயல் காட்டுகின்றது. இவ்வாறு ஒருவன் பெருமையை மற்றவர்கள் தாங்களே உய்த்துணரும் போது அதன்சிறப்பு மேன்மேலும் உயர்கின்றது.

கடமையுணர்வு :—

ஏற்றுக்கொண்ட வினையில் காட்டும் ஊக்கமும் விடா முயற்சியும் அதன் வெற்றியை உறுதிப்படுத்துகின்றன. கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது தூக்கம் கடிந்து செயல் வேண்டும் என்கிறார் வள்ளுவர். இதனை அப்படியே அடியொற்றிச் செல்கின்றான் அனுமன்.

சீதையைத்தேடி விரைந்து இலங்கை நோக்கியேகும் அனுமனை மைநாகமலை தடுக்கின்றது. தன்செயலுக்குத் தடையாய் நிற்கும் அதனைத் தலைகீழாய்ப் புரட்டி அப்பாற் செல்கின்றான் அனுமன். பின் மைநாகமலை மானிடஉருக்கொண்டு அவன் முன் தோன்றி அவன் தாதை வாயுவிற்கும் அதற்கும் உள்ள நட்பினை எடுத்தியம்பி அவனைத் தன் இல்லிற்கு அழைக்கின்றது. அதன் உரையால் அனுமன் உண்மை உணர்ந்தனன் எனினும் தான் செய்தொழிலினின்றும் தன் கவனத்தைத் திசைதிருப்ப விரும்பவில்லை. அதன்பொருட்டு அன்புடை நெஞ்சினைப் புண்படுத்தவும் விரும்பவில்லை. இனிய சொல்லால் தன் நிலையினை அதன் மனம் கொள்ளும் வகையில் எடுத்து இயம்பி, 'நீ வருந்தற்க. இராகவன் ஆசை நிரப்பி அல்லால் இனியான் ஒன்றும் அருந்தேன். நின் அன்புமிகு இன்சொல்லால் என்னை வயப்படுத்திய ஞான்றே நின் இடத்தில் இருந்தேன். நீ கொடுத்தவற்றை நுகர்ந்து விட்டேன். இந்த அன்புடைமையினும் கொடுப்பதற்கு இதைவிடப் பெரிது உன்னிடம் யாதுளது? அன்பிற் சிறந்த வழிபாடு வேறில்லை. இப்பொழுதே இலங்கையை அடைந்து ஆண்டான் அடிமைத்தொழில்

ஆற்றி மீளின் நுகர்வேன்,'' என உறுதிகூறி மெய்ம்மை பூண்டான் அதன் கட்புலம் பிற்பட முன்பு போகின்றான். கண்ணும் கருத்தும் கொண்ட கடமையிலேயே இருத்தல் வெற்றிக்கு அடிப்படை என்பதனை அனுமன் இவண் உணர்த்துகின்றான்.

அனுமன் ஒருபோதுப் தன் கடமையை மறந்தவனும் அல்லன். தன்சொற்பொய்த்த சுக்கிரீவனைத் தேடி வெஞ்சினத்துடன் வருகின்றான் இலக்குவன். சுக்கிரீவனோ அங்கதன் இலக்குவன் வரவை உணர்த்தியும் உணராளுய் கள்மயக்கில் மூழ்கிக் கிடக்கின்றான். இந் நிலையில் அரசனைக் காக்கவேண்டிய தன் கடமை அனுமனை ஆவன செய்யத் தூண்டுகின்றது. அந்தமில் கேள்வியான் அங்கதனுடன் தாரைமனை ஏகுகின்றான். எதிர்வரும் இலக்குவனைத் தாரை மகளிர்குழாத்துடன் சென்று எதிர்கொண்டால் அவன் சுக்கிரீவனைக் காணுமல் திரும்பிவிடுவான்; அவன் சீற்றமும் தணியும் எனத் தகுந்த உபாயத்தை நேரமறிந்து வழங்குகின்றான். அவன் சொல் செயலாக எண்ணமும் நிறைவேறுகின்றது. இலக்குவன் சீற்றம் சற்றே தணிந்தவுடன் அனுமன் அவனைக்கண்டு தன் சொல்லாற்றலால் எஞ்சிய சீற்றமும்தவிர்த்து அமைதிப்படுத்துகின்றான். இவண் அனுமன் கடமையுணர்வே சுக்கிரீவன் உய்ய உதவுகின்றது.

இலங்கையை அடையும் அனுமன் சீதையைத் தேடும் போதும் தன் கடமையுணர்வின் ஆழத்தைப் புலப்படுத்துகின்றான். தன் மனமும் பின்தொடர இயலா விரைவுடன் கண் துஞ்சாது பசிநோக்காது ஒருகோடிப் பொன்மாடங்களில் நுழைந்து தேடுகின்றான்.

''கருவி நாழிகை பாதியில் காலனும்
வெருவி யோடும் அரக்கர்தம் வெம்பதி
ஒருவனே ஒருபன் னிரண் டோசனைத்
தெருவு மும்மை நூறுயிரம் தேடினுன்''

(ஊர்தேடுபடலம் : 252)

என்கிறான் கம்பன். அனுமனின் இவ்வேகத்திற்கு அவன்கடமையுணர்வே காரணமாகின்றது.

இதே கடமையுணர்வே எடுத்துக்கொண்ட பணியினை முற்றுவிக்க இயலாதபோது இறந்துபடவும் தூண்டுகின்றது. இலங்கை முழுவதும் தேடியும் சீதையைக் காணுத அனுமன் கலங்குகின்றான். ''சீதையைக்கொன்றனரோ? அன்றிக் கொடுந்தொழிலால் கற்பு அழியாக் குலமகளைக் கொன்று தின்றனரோ? எப்புறம் செறித்து வைத்துளாரோ? ஒன்றுனும் உணர்கிலேன். மீண்டு இனிப்போய் என் உரைக்கேன்? பொன்றுத போதன்றி இத்துயரம் போகாது,'' என எண்ணுகின்றான்.

''கண்டுவரு மென்றிருக்குங் காகுத்தன் கவிக்குலக்கோன்
கொண்டுவருமென்றிருக்கும் யானிழைத்த கோளிதுவால்
புண்டரிக நயனத்தான் பாலினியான் போவேனோ
விண்டாரோ டுடன்வீயா தியான்வாளா விளிவேனோ?''

(ஊர்தேடுபடலம் : 227)

என்றெல்லாம் கவல்கின்றான். "வடிதாழ் பூங்குழலாளை வான் அறிய மண் அறியப் பிடித்தான் இக்கடல் அரக்கன் எனும் மாற்றம் பிழையாது. ஆகவே இவ்வாழி இலங்கைதனை எடுத்து இருங்கடல் இட்டு இன்று இவ்வரக்கனை முடித்தபின் நான் முடிவது முறை'' என்று தனக்குள் தானே சிந்தித்து உணர்கின்றான். எண்ணிய எண்ணியாங்கு முடிக்க முடியாதகாலை உயிருடன் உலவுவதனினும் இறந்துபடலே உண்மை வீரத்திற்கும் அழகு. பொய்மருங்கு நில்லாதான் கடமையுணர்வினைக் காட்ட இதற்கு மேலும் சான்று வேண்டுமோ?

சீதையைத் தேடும் முயற்சியில், அவளைக் காண இயலாமையால் வானரவீரர்கள் அனைவரும் மனம் தளர்கின்றனர். அனுமன் ஒருவனே தளராது அடுத்து என் செய்வது எனச் சிந்திக்கின்றான்' அது மட்டுமின்றி ஊக்கம் இழந்த அனைவர்க்கும் தன்சொல்லால் புத்துணர்வு ஊட்டுகின்றான். அவன்றன் கடமையுணர்வே இவ்வாறு சோர்வடையாதிருப்பதற்குக் காரணம் என்றும் கூறலாம்.

சீதையைத் தேடும் வானரர்கள் ஒருபிலத்துள் புகுகின்றனர். பெருவீரன் சாம்பனும் மனந்தளர்ந்து 'சீதையை ஒளித்த கள்வன் அமைத்த பொறிநன்று. நாமடையும் வருத்தத்திற்கு எல்லையுமில்லை. அனைத்தும் ஊழின்படியே நடக்கும்,' எனக் கவலையோடு கழறுகின்றான். இதனினின்றும் இனிமீட்சி இல்லை என்பதே அவன் முடிவு. 'இன்று இப்பிலத்தின் இடையினின்றும் ஏறி மீளுதல் அரிது என்றால் கடலைத்தோண்டிய சகரர்களினும் சிறப்புடையோராய் இப்பூமியைத் தோண்டி மேலே எளிதாக ஏறிச் செல்வோம். வஞ்சனை அரக்கர் செய்த செயலாயின் அவர்களையும் அழித்து மேல்ஏகுவோம்,'' என்று அஞ்ஞான்றும் வீரவுரை பகர்கின்றான் அருக்கனேயனைய அனுமன். தேவைக்கேற்றாற்போன்று மிகவிரைவாக முடிவு எடுக்கின்றான் மனதில் சலனமின்றி சலிப்பின்றி சஞ்சலமற்ற உறுதியான சொற்களைக் கூறுகின்றான். எஞ்ஞான்றும் இன்பம் விழையாது இடர்பலவரினும் மேற்கொண்ட வினையில் வெற்றியினையே நாடி நிற்கின்றான். போர்க்களத்தில் பகைவர் ஆயுதங்களால் தாக்கப்படும் பொழுது மட்டுமே அனுமன்சோர்வடைவதைக் காண்கின்றோம். அச்சோர்வும் கணப்பொழுதே நீடிக்கின்றது.

அஞ்சாமை :—

ஆண்மையின் சிறப்பே அஞ்சாமையில் தான் அடங்கி நிற்கின்றது. தவமுதியாள் சபரி சாற்றிய நெறியில் இரவிபுதல்வனை நாடிவரும் இராம இலக்குவர்களைக் கண்டு அக்குரக்கு வேந்து அஞ்சி மலைமுழைக்குள் ஓடி ஒளிகின்றான். அனுமனே அஞ்சாது அவர்கள் முன்சென்று உண்மை உணர்ந்து நன்மை கொணர்கின்றான்.

தன் இளையான் பெயர்கேட்டவுடன் அவனைப்பற்றி அறிய வரும் சம்பாதியைக் கண்டு வானரவீரர்கள் அனைவரும் அஞ்சி

ஓடுகின்றனர். கோதில்சிந்தை அனுமனே அஞ்சாது எதிர் நிற்கின்றான். அனுமனும் அஞ்சி ஓடி ஒளிந்திருப்பின் சீதையைத் தேடிக்காணல் எவ்வாறு?

இதே அஞ்சாமை தானே மாற்றான் இலங்கைக்கோன் இராவணன் முன்நின்று இராமன் புகழைப் பாடித் தூதுரைக்கச் செய்கின்றது.

தன்னை அடைந்தாரைக் காத்தல்:—

அனுமனின் மிகச்சிறந்த பண்புகளுள் இதுஒன்று ருசிய முகபர்வதத்தில் இராம இலக்குவரைக் கண்டு அஞ்சி ஓடிவரும் சுக்கிரீவனுக்கும் மற்றைய வானரங்களுக்கும் அடைக்கலம் அளிக்கின்றான். 'அவ்விடத்து இனிதுஇருமின் அஞ்சல்,' என்று அவர்களைத் தேற்றிவிட்டுத் தான்மட்டும் உளவறிய இராமஇலக்குவர் முன் வருகின்றான். இங்குக் கம்பன் அனுமனைப் பாற்கடல் தோன்றியநஞ்சுண்டு, அமரர்களுக்கு அபயம்அளித்த அரனுக்கு உவமிக்கின்றான். பிலத்தின் இருளில் வழியறியாது மயங்கி வருந்திய வானரங்களும் வன்திறல் மாருதி வல்லையோ இன்றெமைக் காக்க' என்றே இரங்கி வேண்டுகின்றனர். பொய்த்தல் இல் அன்பு உள்ளத்து மாருதியும் 'உய் உறுத்துவென் மனம் உலையலீர்' என்றுரைத்து அவர்களின் கவலையை அகற்றுகின்றான். பிலத்துள் இருந்த சுரசை வேண்ட அவளுக்கும் வானரர்களோடு சேர்த்து விடுதலை அளிக்கின்றான். தம்மை அடைந்தாரைக் காத்தல் அறிவுடைச் சான்றோர் இயல்பு. இங்கு அனுமன் மிகச்சிறந்த ஆன்றோனாய் காத்தற் கடவுளாய் காட்சியளிக்கின்றான்.

அரக்கர்களுக்கும் வானரங்களுக்குமிடையே போர் நிகழ்கின்றது. அஞ்ஞான்று இராவணன் வீடணன் மீது தன் வேலை ஏவுகின்றான். அதுகண்ட இலக்குவன் இடைப்புக அவனுக்கு முன் வீடணன் வர இருவரையும் விலக்கிக் கொண்டு அங்கதன் மேற்செல்லுகின்றான். அவனையும் வானரக்காவலன் முந்த முயல, அனுமன் அனைவரையும் பின்விட்டுத்தான் முன் செல்லுகின்றான். தன் உயிரினையும் உன்னாது பிறன் உயிர்காக்க முன வருகின்றான். இவ்வாறு அடைக்கலம் கேட்ட ஞான்று மட்டுமின்றி பிறர் இடர் நீக்கத்தானே முன்நிற்கின்றான்.

பகைவனிடத்தும் அருளுள்ளம்:—

அன்புகொண்டார் அவலம் அகற்றி அடைக்கலம் தருதல் அவ்வளவு சிறப்புடையதன்று. அதே அன்பும் அருளும் பகைவர்மாட்டும் வெளிப்படுங்காலையே ஒருவனது உண்மை உள்ளம் புலப்படும். தன்பால் பற்றுக் கொண்டாரையும், தான் பற்றுக் கொண்டாரையும் காப்பதில் என்றுமே முன்நிற்கும் அனுமன் பகைவர் அழிவு குறித்தும் அழுங்குகின்றான். இலங்கையில் சீதையைத் தேடிச்செல்லும் அனுமன் அங்கு தோன்றும் துன்னிமித்தங்களால் இலங்கை அழியப் போவதை அறிகின்றான்.

அறிந்தவன் பெரிதும் இரங்குகின்றான். 'நீங்கும் அந்தோ இந் நெடு நகர்த்திரு,' என்று நெக்குருருகின்றான். உலக இயல்பு எண்ணிப்பின் ஆறுதல் அடைகின்றான். எக்குலங்களில் யாவரே ஆயினும் இருவினை எல்லோருக்கும் ஒக்கும். ஊழ்முறை அல்லது வலியது ஒன்றுமில் என்று வாழ்வின் உண்மையை உணர்கின்றான். அனுமனுக்கு இலங்கை மேல் தோன்றிய இரக்கம், 'வளை எயிற்று அரக்கனை உற்று அவன் அவையிலுள்ளோரும் அறியும்படி சீதையை விடாவிட்டால் ஏற்படும் விளைவினை விளம்பினால் மிதிலை நாடியை இளகினன் என்வயின் ஈதல் ஏயும், என எண்ணத் தூண்டுகின்றது. வாலிக்கு உற்றதும் மராமரங்களுக்கு நேர்ந்ததும் இராவணன் அறிவான். ஆகலின் அரக்கனை அணுகி நம் ஆற்றலையும் பொதுநீதியினையும் அவன் மனம்கொள்ளும் படிக் கூறவேண்டும். அவன் ஏற்கவில்லை எனின் அவன் படையினை அழித்துப் பையப்பையப் போதலே கருமம் என முடிவு செய்கின்றான். இதனால் அனுமன் நச்சரவிடமும் அருள் சுரந்து நிற்பது புலப்படும்.

இத்தகு அனுமன் ஏன் இலங்கையை எரிக்கிரையாக்க வேண்டும் என்ற வினா எழலாம். அனுமன் இலங்கையை எரிக்க வில்லை; அவண் இருந்த தீவினையை எரிக்கின்றான். அனுமன் இலங்கையை விட்டு அகன்றவுடன் அழல்தேவனும், "கள்ள அரக்கர் காணின் எள்ளலர் பற்றுவர்,'' என்று ஓடி ஒளிவதால் இராவணன் ஆட்சியின் கொடுமை தெரியவரும். இலங்கையில் அறம் இல்லை என்பதனைக் கம்பனும் தெளிவாகத் தருமம் அன்னானுடன் அறம் இலங்கையுள் புகுந்தது என உரைப்பதன் மூலம் அறிவிக்கின்றான். நீதியுரைத்த அந்த ஆண்டகைக்குப் பரிசாக வாலில் தீயினைப் பற்றவைக்கின்றனர். அனுமனும் அதன்பயனை அவர்களே அனுபவிக்க விட்டுச் செல்கின்றான். எனவே அனுமன் இலங்கையை எரித்தது தவறெனல் தகாது.

தலைவன்மேற் பழிவராது காத்தல் :—

நூற்பெருங்கடல் நுணங்கிய கேள்வியான் சீதையைத் தேடிவரும் பொழுது இராவணன் அரண்மனையில் துயில்க்காண்கின்றான். சீற்றம் பொங்குகிறது. அவ்விடத்திலேயே அவனை நமனுலகு அனுப்பிவைக்க விழைகின்றான். ஆனால் அறிவு தடுக்கின்றது. ஒருசெயலைச் செய்ய நினைத்துத் தகாத மற்றொன்றைச் செய்தல் அறிவாளிகளுக்குத் தக்கதன்று. எனவே அவ்விடம் விட்டுப் பெயர்கின்றான் இவனை இவண் வென்றால் இறை இராமனும் பழிகொள்ள நேரிடும். ஆலம்பார்த்து உண்டவன் போல் ஆற்றல் கொண்டவன் எனினும் சீலம் பார்க்குரியோர்கள் எண்ணுது செய்யாரன்றே! எனவேதான் கற்றைப் பூங்குழலாளைச் சிறைவைத்த கண்டகனை முற்றப்போர் முடித்தது ஒரு குரங்கு எனின் முனைவீரன் கொற்றப்போர்ச் சிலை தொழிற்குக் குறை உண்டாம் என எண்ணித் தெளிகின்றான். இதுபோன்றே கார்காலம் கழிந்துபடப் படையுடன் வருவன் என்றுரைத்த சுக்கிரீவன் செல்லாது காலந்தாழ்த்த அஞ்ஞான்றும் அவன் மீது

பழிவராது தன் சமயோசிதப்புத்தியாலும், சொல்லாற்றலாலும் நிலைமையைச் சரிசெய்கின்றான். இவ்வாறு எச்செயலைச் செய்யும்போதும் தன்தலைவன்பால் பழிவாராது காப்பதில் மிக்க கவனத்துடன் இருக்கின்றான் அனுமன்.

அறிவு :—

கல்விக்கடலின் கரைகண்ட அனுமன் அறிவினை, நேரத்திற்கும் இடத்திற்கும் ஏற்ப விரைந்து அவன் முடிவெடுப்பதன் மூலம் நன்குணரலாம். விரைந்து எடுக்கும் முடிவுகளும் வேண்டி நிற்கும் முடிவுகளைத் தருவதே அவன் அறிவின் சிறப்பு. இராம சுக்கிரீவரிடையே முதலில் வாலிவதையா இராவண வதையா என்ற பிரச்னை எழுகின்றது. நண்பர்கள் இருவரும் மற்றவர் குறையை முதலில் முடிப்பதில் பேரார்வம் காட்டி நிற்கின்றனர். அனுமன் அவர்களிடம் வாலிவதம் முதலில் நிகழ வேண்டிய தன் அவசியத்தைக் காரணகாரியத்தோடு விளக்குகிறான். இதில் அரசியல் சூழ்ச்சித் திறம் நிறைந்திருக்கக் காண்கிறோம். ''சீதையைக் கவர்ந்து சென்றவன் நிருதர்கோன். அவன் உறைவிடம் விண்ணதோ? மண்ணதோ? மற்று வெற்பதோ? ஏனைமாநாகர் தம் இருக்கைப் பாலதோ? நாம் ஊனுடைமானிடம் ஆனது உண்மையால் அதனைத் தெரிதல் அரிது மேலும் நிருதர்கள் எவ்வுலகையும் ஓர் இமைப்பொழுதில் எய்துவர். விரும்பியது எதுவாயினும் வவ்வுவர். வெறுப்போர் யாராயினும் அவர்களை ஒறுப்பர். ஆகலின் இந்த உலகம் முழுமையுமே ஒரே நேரத்தில் நாம் முறையுடன் தேடவேண்டும். இதற்கு நீண்ட காலமும் ஆகும்; எண்ணிறந்த படையும் தேவை.

''ஏழுபத் தாகிய வெள்ளத் தெம்படை
ஊழியாற் கடலென வுலகம் போர்க்குமா
லாழியைக் குடிப்பினு மயன்செ யண்டத்தைக்
கீழ்மடுத் தெடுப்பினுங் கிடைத்த செய்யுமால்,''

(கலன்காண்படலம் : 33)

என்று படைகள் தேவை என்பதனை வலியுறுத்துவதன் மூலம் வாலிவதை முதலில் நிகழ வேண்டியதன் அவசியத்தை நிறுவுகின்றான். இராமனும் இதனை ஏற்க வாலிவதை முதலில் நிகழ்கிறது.

அனுமன் சிறந்த அரசியல் அறிஞன் என்பதனை வீடணனுக்கு அடைக்கலம் அருளும்படி இராமனை வேண்டுவதினின்றும் அறியலாம். சுக்கிரீவன், நீலன் முதலானோர் மறுக்கும் போதும் 'வஞ்சகரின் முகத்தினைக் கண்ட பொழுதே அவர்தம் நெஞ்சிலுள்ள வஞ்சம் தெரிந்துவிடும். வஞ்சம் ஒளிக்க ஒண்ணாதது. பகைவர் நம்மை நாடிவந்து சேர்வரோ? ஒருவரின் உள்ளத்து உணர்ச்சிகள் பேசத் தொடங்கு முன்பே முகத்தில்தெரிந்துவிடும். கள்ளத்தின் விளைவுகள் அறியாமை இருள் உள்ளாரிடத்துப் பெருகித் தோன்றுமே தவிர அறிவு ஒளிவீசும் இவர்க

ளிடம் தோன்றுமோ?'' எனஉரைத்து வீடணனும் அவன்உடன் வந்தோரும் நல்லவர்களே என்பதனைத் தெளிவு படுத்துகின்ருன். விடணன் வந்ததற்கான காரணத்தை உணர்த்தும்போது அனுமன் சிந்தனையின் ஆழத்தினையும் காண்கின்ருேம்.

'வாலிவிண் பெறஅரசு இளைய வன்பெறக்
கோலிய வரிசிலை வலியும் சொற்றமும்
சீலமும் உணர்ந்து நிற்சேர்ந்து தெள்ளிதின்
மேல்அரசு எய்துவான் விரும்பி மேயினன்''

(விடணன் அடைக்கலப்படலம்: 9.)

"செறிகழல் அரக்கர்தம் அரசு சீரியோர் நெறியில் நிற்குமே அன்றி நிலைக்காது. ஆகலின் அதனை உன்னியும் எறிகடல் உலகெல்லாம் இளையவற்கு ஆக்கிய அருங்கருணையையும் வாய்மையையும் பேணி இங்கு வந்துள்ளான்,'' எனத் தெளிவாக, வீடணன் மனநிலையை முற்றும் உணர்ந்தவனுக உரைக்கின்ருன். பகைவனுககருளும் போது அப்போதைய காலநிலையினையும் கருத்தில் கொள்ள வேண்டுமாகலின் அவன் வந்துள்ள காலமும் சரியான காலமே என வாதிடுகின்ருன். இராவணன் அழிவது உறுதியாதலால் இவன்தன் அண்ணனைப் பிரிந்துள்ளான் என அறுதியிட்டுக் கூறுகின்ருன்.

அரசியல் நோக்கில் ஒருவருக்கு அடைக்கலம் அளிக்கும் போது அவரால் கிடைக்கும் பயனையும் சீர்தூக்கிக்காணல் இயல்பு. அந்நோக்கில் அனுமன்

'தீத்தொழி லரக்கர்த மாயச்செய்வினை
வாய்த்துள ரன்னவை யுணருமாண்பினுல்
காய்த்தவ ரவர்களே கையுற்ருர் நமக்கு
ஏற்றதோ ருறுதியு மெளிதி னெய்துமால்'[1]

(வீடணன் அடைக்கலப்படலம் :93)

என்றுரைக்கின்ருன். இக்கூற்றின் மெய்ம்மையை வீடணன் வானரர் உருவில் திரிந்த ஒற்றர்களைக் கண்டுபிடித்தது, சீதை உயிருடன் இருப்பதும் நிதம்பலை யாகம் நடப்பதும் அறிந்து கூறியது போன்ற செயல்களால் அறியலாம். அரசவையில் இராவணனுக்கு அறிவுரை பகன்றதையும் அனுமன் அறிவிக்கின்ருன். மேலும் ''நான் இவன்மாளிகை அடைந்தபோது நன்னிமித்தங்கள் நனிநிகழ்ந்தன'' என்று கூறிப் பின்னும் அவன் தூய்மையை,

''நிந்தனை நறவமும் நெறியில் ஊன்களும்
தந்தன கண்டிலென்; தரும தானமும்
வந்தனை நீதியும் பிறவும் மாண்பமைந்து
அந்தணர் மனையெனப் பொலிந்த தாமரோ''

(வீடணன் அடைக்கலப்படலம் : 98)

என விளக்குகின்றான். பின்னும் அடைக்கலம் அளிக்க வேண்டியதன் அவசியத்தை அரசியல் நெறியினின்றும் விளக்குகின்றான். 'தேவர்க்கும் தானவர்க்கும் திசைமுகனே முதலாய தேவதேவர் மூவர்க்கும் முடிப்பரிய காரியத்தை முற்றுவிப்பான் மூண்டு நின்றோம். ஆவத்தின் வந்து அபயம் என்றானை அயர்த்து அகலவிடுதும் என்றால் கிணற்றின் சிறுபுனலைக் கண்டு கடல் ஐயுற்றதற்கு ஒப்பாகும். அதனால் நமக்கும் இழுக்குண்டு பகைப்புலத்தோர் துணை அல்லர் என்று இவனை விட்டுவிடின் அது அறிஞர்களுக்கு நகையாகும். தந்தையர், தம்பியர், தமையர் என்ற நெருங்கிய உறவினர் தாம் பயன்தரத்தக்க ஒரு பொருளை விரும்பியபோது தமக்குள் பெரும் பகைவராவார். அதே போன்று வீடணன் இப்பொழுது இராவணாதியர்களுக்குப் பகைவனாகி, நம்மை நாடி வந்துள்ளான். அவனை ஏற்பது நம் படை வலியை மிகுவிக்கும். இங்ஙனம் ஓதநீர் கடந்து பகைதடிந்து உலகை உய்யக்கொண்டான் கழறியதை செவிமடுத்து அமிழ்தின் மாந்தும் இராமன் "மாருதி சொன்ன பெற்றியே பெற்றி. பேர் அறிவாள! நன்று நன்று," என்று பாராட்டுகின்றான்.

சேர்ந்தாரைக் கொல்லும் தன்மையது சினம். சினமெழுங்கால் அறிவு அகன்று விடுவதே இதற்குக் காரணம். ஆனால் அனுமன் சீற்றத்தின் எல்லையை அடையினும் அவன் அறிவினை இழப்பதே இல்லை- ஆழ்ந்த அறிவினோர்க்கே இது இயல்வது. இராவணனை அவன் அவையில் காணும் அனுமன் வெகுண்டு "வென்றிலேன் எனினும் மாண்டபோதினும் புகழ் அன்றி மற்றும் ஒன்று உண்டோ?" என எண்ணி அவனைக் கொல்லத் துணிகின்றான். ஆனால் குணமென்னும் குன்றேறி நிற்கும் அவன் சீற்றம்,

'என்னையும் வெலற்கரிது இவனுக்கு ஈண்டிவன்
தன்னையும் வெலற்கரிது எனக்கு; தாக்கினால்
அன்னவே காலங்கள் கழியும் ஆதலால்
துன்னரும் செருத்தொழில் தொடங்கல் தூயதோ?"

(பிணிவீட்டுப்படலம் : 62)

என எண்ணியவுடன் மறைகின்றது. இத்துடன் ஏழுபேர் உலகங்கள் யாவும் இன்புறப் பாழிவன் புயங்களோடு அரக்கன் பல்தலை பூமியில் புரட்டல் என் பூணிப்பாம்' என ஊழியானாகிய இராமன் விளம்பிய உரையும் அவன் நினைவிற்கு வருகிறது. பின்னும் 'இங்கு ஒருதிங்களே இருப்பல் யான்' என அங்கண் நாயகன் தனது ஆணை கூறிய மங்கையும் இன்னுயிர் துறத்தல் வாய்மை ஆகலின் பொங்கு வெம்செருவிடைப் பொழுது போக்குதல் அழகின்று என எண்ணுகின்றான். சினம் தவிர்த்து ஆராயும் அறிவு அழிவின்றி ஆக்கத்தை மேற்கொள்ளப் பேருதவி புரிவது இவண் குன்றிலிட்ட விளக்கு.

ஆழ்ந்த துயரில் தம்மையே மறப்பது மானிடர் இயல்பு. இதிலும் அனுமன் விதிவிலக்காய் நிற்கின்றான். இந்திரசித்து

சீதையைக் கொன்றது மாயையே என அறியாத மாருதி துயர்க் கடலில் வீழ்கின்றான்.

''அன்னமே என்னும் பெண்ணி னருங்குலக் கலமே யென்னும்
என்னமே யென்னுந் தெய்வமில்லையோ யாது மென்னும்
சின்னமே செய்யக் கண்டுந் தீவினை நெஞ்ச மாவி
பின்னமே யாயதில்லை யென்னும்பே ராற்றல் பேர்ந்தான்,''

(மாயாசீதைப்படலம் : 45)

என அவன் உற்ற துயரத்தினை வருணிக்கின்றான் கம்பன். இத்தனை துயரினும் தன் அறிவினை இழக்காது இனி யாது செய்யலாம் எனச் சிந்திக்கின்றான். கள்வன் அயோத்திமேல் எழுவேன் என்று சொன்னது உண்டு. போன சுவடும் உண்டு. அவனைத் தொடர்ந்து செல்லின் மன்னன் இங்கு உற்ற தன்மையை உணரான். இனிவர இருப்பதையும் ஓரான். என் செய்வது? எனச் சிந்திக்கின்றான். பின் பொன் தடந்தோளன், ''இராமனுக்கு உற்றதை உணர்த்திப் பின்னை உலகுடை ஒருவனோடும் இற்று மாள்வென் அன்றெனின் அவன் உள்ளம் உணர்ந்து செயல்படுவேன் பிறிது ஒரு மாற்றமில்லை,'' எனத் துணிந்து, துணிந்ததைச் செய்கின்றான். அனுமன் இவண் அறிவை இழந்திருப்பின் நிருதர்களின் எண்ணம் நிறைவேறியிருக்குமன்றோ!

மேற்கூறிய இவற்றை நோக்குங்கால் அனுமன் எந்தச் சூழ்நிலையிலும் அறிவினை இழக்காது சிந்தித்துச்செயல்படுவது புலப்படும்.

உருவைக் கண்டு அளவில் உய்த்து உணர்தல்:—

இவ்வரிய திறமையினை அனுமன் பெற்றிருப்பதை நாம் பல இடங்களில் காணலாம். இராம இலக்குவரின் தோற்றத்திலிருந்தே அவர்கள் நட்பு சுக்கிரீவனுக்கு நன்மை பயக்கும் என உணர்கின்றான். பிலத்துள் சுரசையைக் காணும் வானரர்கள் அவள்தான் சீதையோ என்று ஐயுறுகின்றனர். அனுமன் மட்டுமே அவள் சீதையாக இருக்க முடியாது என்பதறிந்து,

''எக்குறியொ டெக்குண மெடுத்திவ னுரைக்கேன்
இக்குறி யுடைக்கொடி யிராமன் மனையாளோ
அக்குவட முத்தமணி யாரமத னேர்நின்
றெக்குமெனி னெக்குமென'' உரைத்து மறுக்கின்றான்.

(பிலம்புக்கு நீங்கு படலம் :)

கைதவ நிசிசர கள்ள வேடத்தை உய்திகொல் எனச் சினந்து சம்பாதிமுன் நிற்பவன், அவன் உடலில் தோன்றும் மெய்ப்பாடுகள் மூலம் அவன் உண்மை நிலை தேர்கின்றான். 'துன்பத்தால் விம்முகின்றான். பொங்கிய சோரிநீர் பொழியும் கண்ணினன் ஆகலின் இவன் குற்றமற்றவன்' என ஆய்ந்து தெளிகின்றான். கடலினைக் கடக்கையில் எதிர்ப்பட்ட அங்காரதாரை

யைக் கண்ட ஆய்திறத்தவன். 'அறத்தை அருளொடும் தின்ருள் ஒருத்தி இவள்,' என ஓர்கின்ருன். சீதையைத் தேடுகையில் வீடணனைக் காண்பவன் குற்றமிலாததோர் குணத்தினன் இவன் எனக் கொள்கின்ருன். இந்திரசித்தினைக் கண்ட அளவில் இவனுடன் நெடுநாள் உளைய உள்ள போர் உளது என உணர்கின்ருன். இவ்வுணர்வுகள் அனைத்துமே முற்றிலும் சரியாக இருப்பதையும் பின்நிகழ்வுகள் நமக்குக் காட்டுகின்றன.

பிறரை மதித்தல்:—

அசோகவனத்தையும் அரக்கர்களையும் அழித்து நின்ற அனுமனை இந்திரசித்து தன் பிரம்மாத்திரத்தால் பிணிக்கின்ருன். தெய்வப் படைக்கலங்களால் அழிவில்லாத அனுமன் தன்னைப் பிணித்தது சதுமுகன்படை என்பதனை அறிகின்ருன். மேலும் மற்று இதன் ஆணையை அவமதித்து அகல்கை ஏய்ந்தது அன்று என எண்ணிக் கண்முகிழ்த்து அமைதியாய் இருக்கின்ருன். இதனை அறியாத இந்திரசித்து ஒய்ந்தது ஆம் இவன்வலி என உவக்கின்ருன். வல்லமை உடையார் ஆணவமுடன் இருத்தல் இயல்பு. இதற்குஇராவணனே போதிய சான்ருவான். இவண் அனுமன் தன் வல்லமை உணர்ந்திருந்தும் நான்முகனை மதித்து அவன் படைக்கலத்திற்குக் கட்டுப்பட்டிருப்பது அவன் உயர் பண்பினை உணர்த்துகின்றது.

சிறுமை கண்டு பொங்குபவன்:—

நற்பண்புடையோர் தம்கண்முன்பே தீவினை நடப்பதைக் காண மனம் பொருர். ஐம்புலன்களையும் அடக்கியாளும் அனுமனுல் இராவணன் சீதையிடம் தகாதமொழிகளை மொழிவதனைக் கேட்டுக்கொண்டிருக்க இயலவில்லை. 'அருந்ததி கற்பின் என்னை ஆளுடை நாயகன் தேவியை என்முன் சொன்ன நீசன் கைதொடுவதன் முன் துகைத்து உழக்கிப் பின்னை நின்றது செய்குவன்'' எனச் சீறி எழுகின்ருன். ''தனியனுய் இருக்கும் யான் இவனைப் புடைத்து இலங்கையைக் கடலுள் வீசி புனிதமாதவத்து அணங்கினைச் சுமந்து இனிதின் போவேன்,'' என நினைந்து சினத்தால் தன் கரங்கள் பிசைகின்ருன். தான் வந்த காரியத்தினைச் செவ்வையாகப் பழிநேராமல் முடிக்கவேண்டும் என்ற எண்ணத்தால் தன்சீற்றத்தினைச் செயலாக்காமல் நிற்கின்ருன்.

புகழில் மயங்காமை:—

அளவிறந்த ஆற்றலுடையவனுய் இருக்கின்ருன் அனுமன். ஆற்றற்கரிய அருஞ்செயல்கள் பலபுரிகின்ருன். அதன் காரணமாக அறத்தின் நாயகனும் இராமனும் புகழும் பேறு பெறுகின்ருன். இருப்பினும் நாணுகின்ருனே தவிர செருக்குற்ருன் அல்லன். வீடணன் இராமனிடம் அனுமன் தூதுவந்த போது, அடுபுலி துரந்த ஆடுபட்டது பட்டனர் அரக்கர்,' என்று கூறுகின்ருன். அவன் வீரச்செயல்களை முழுமையாகக் கேட்டறிந்த இராமன் மனம் மகிழ்ந்து 'கூட்டினர் படை பாகத்தின்

மேற்படக் கொன்றாய். ஊட்டினாய் எரிஊர் முற்றும் இனி என்னால் அழிக்கக் கூடியது அங்கு ஒன்றுண்டோ? கிளிமொழிச் சீதை கிடைத்தும் மீட்டிலாதது என்வில் தொழில் காட்டவோ? வீர! நாங்கள் இனி இவ்விலங்கையில் செய்யத் தக்கது எது? அவையும் இனி பெருமை பெறுமோ?'' என வியந்துரைக்கின்றான். பின்னும்,

''என்னது ஆக்கிய வலியொடு அவ்விராவணன் வலியும்
உன்னது ஆக்கினை பாக்கியம் உருக்கொண்டது ஒப்பாய்
முன்னது ஆக்கிய மூவுலகு ஆக்கிய முதலோன்
பின்னது ஆக்கிய பதம் நினக்கு ஆக்கினென் பெற்றாய்,''
(இலங்கைகேள்விப்படலம் : 73)

எனப் புகழ்ந்துரைக்கின்றான். இதனைக் கேட்டவுடன் அனுமன் சீதையைக் கண்ட ஞான்று துள்ளிக் குதித்தது போன்றோ இராமனை உணர்ந்தபோது மகிழ்ந்து ஆடியது போன்றோ நிலை 'இழந்தானில்லை. அவன் செயலைக் கம்பன் மிக அழகாக, எழுந்து இரு நிலன் உற இறைஞ்சி ஒன்றும் பேசலன் நாணினால் வணங்கினான் உரவோன்' என உரைக்கின்றான். இவண் அனுமன் நாணமும் வணக்கமுமே அவன் புகழினைப் பன்மடங்கு பெருக்குகின்றன.

மருத்துமலை கொணர்ந்து இலக்குவன் முதலாக எண்ணற்ற உயிர்களை மீட்ட போதும் அனுமன் ஆணவம் கொண்டானில்லை. அமரர் ஆர்த்து எழத்தாயினும் அன்பனாகிய அனுமனை இராமன் தழுவுகின்றான். உடன் அனுமன் அடக்கத்தோடு தாழ்ந்து தாளுற வணங்குகின்றான். எத்தகு உயர்ந்த பண்பினரிடமும் சிறிதேனும் புகழின் மயக்கம் இருக்க அனுமனிடம் அணுவளவும் அது இல்லாதது வியப்பிற்குரிய ஒன்றே. பிறர் புகழ் அவர்களின் செருக்கினாலேயே அழிய அனுமனின் இவ்வடக்கத்தினால் அவன் புகழ்மேலும் ஒளிர்கின்றது.

பிறர் வாயிலாக அறியலாகும் பண்புகள்:-

சாம்பன் கூற்றே மிகுதியாக அனுமன் பண்பினை உணர்த்துவதாக அமைகின்றது. 'ஒப்பு உறின் ஒப்பார் நும் அலது இல்லீர்'' எனும் அவன் கூற்று அனுமன் பெருமை அனைத்தையும் உள்ளடக்கி நிற்கின்றது. இது எவ்வளவு பொருத்தமானது என்பதனை மேற்கண்ட பண்புகள் புலப்படுத்தும்.

கோது இல் சிந்தை அனுமனை இராமன் 'நின்போல் பெரும்பொறை அறிவினோர் யார்' என வியந்துரைக்கின்றான். இத்துடன் அனுமனிடம் இராமன் ஆலோசனை கேட்பதனையும் காண்கின்றோம். மேலும் நன்குணர் மாருதி, நீதியில் வல்லவன் என்பதனையும் உணர்த்துகின்றான். இத்துடன் நில்லாது

'தாட்படாக் கமலமன்ன தடங்கணன் நம்பிக்கம்ம
கீட்படா நின்றநீங்கிக் கிளர்படா தாகியென்றும்
நாட்படா மறைகளாலு நவைபடா ஞானத்தாலும்
கோட்படா பதமேயைய குரக்குருக் கொண்டது,''
(அனுமப்படலம் : 33)

என்று அஞ்சனை சிறுவனைப் பரம்பொருளாகக் காட்டுகின்றான்.

சுக்கிரீவன் அவனை நெறிவல்லோனாகக் காட்டுகின்றான். சீதையின் கூற்றில் அனுமனின் பெருமைகள் ஒளிவிடுகின்றன. தன்முன் அண்டர்நாயகனின் தூதனாக நிற்பவனைக் கண்ட சீதை அவன் சொற்களால், ''நெறிநின்று பொறிகள் ஐந்தும் வென்றவன் அல்லன் ஆகில் விண்ணவன் ஆதல் வேண்டும்,'' எனத் தெளிகின்றாள். அனுமனின் உயர்ந்த பண்புகளுக்கு அவன் புலனடக்கமே காரணம் என்பதனை இவண் கம்பன் சீதை வாயிலாக உணர்த்துகின்றான். புலனடக்கத்தின் எல்லையற்ற பெருமையை உருவால் சிறியவனும், மானிடவடிவம் கொண்டவனும் கூட அல்லாமல் விலங்குவடிவம் கொண்டவனாகிய ஒருவன் மாட்டு வைத்து வெகு அழகாக நமக்குக் காட்டுகிறான் கம்பன் என்று அ.ச ஞானசம்பந்தம் அவர்கள்கூற்றும் இதனைவலியுறுத்தும். இத்துடன் அமையாது சீதை,

''அறிவு மீதே யுருவீதே யாற்ற லீதே யைம்புலத்தின்
செறிவு மீதே செயலீதே தேற்ற மீதே தேற்றத்தின்
நெறியு மீதே நினைவீதே நீதியீதே நினக்கென்றால்
வெறிய ரன்றே குணங்களால் விரிஞ்சன் முதலா மேலானோர்,'
(உருக்காட்டுப்படலம் : 112)

என அனுமனுக்கு வழங்கும் பாராட்டுரை அவனைப் பண்பின் சிகரம் எனப்பகர்கின்றது.

அனுமனிடத்து அன்பு கொண்டார் மட்டுமன்றிப் பகைவரும் அவனைப் போற்றுகின்றனர். மருத்துமலை கொணர்ந்து மூர்ச்சித்த இலக்குவனையும் வானரவீரர்களையும் எழுப்பியது அறிகின்றனர் பகைவர். இராவணன் தன்மந்திரச் சுற்றத்துடன் அதுபற்றி ஆய்வு நடத்துகின்றான். அப்போது மாலியவான் அனுமனது ஆற்றல்களை எடுத்தியம்பி அவன் உயர்ந்த பண்பினையும் கூறுகின்றான். 'மருத்துமலையைக் கொணர்ந்த அனுமனுக்கு இலங்கையைப் பூமியினின்றும் பறிதது்க் கடலில் எறிவதோ, மேரு மலையைப் பெயர்த்துக் கொண்டு வந்து இலங்கை மேல் எறிந்து அதனை அழிப்பதோ பெரிய செயலல்ல. ஆயினும் அனுமன் நெறிமுறை பிறழாதவன். தன் நிறை குணத்தால் குற்றமற்ற வேதங்கள் கூறும் முதற்கடவுளர் மூவரோடு இணைந்து முதல்வர் நால்வர் என்று சொல்லும்படியாக உள்ளவன்,' என்கிறான். அனுமனின் நற்பண்பினைக் காட்ட இதனைத் தவிர வேறு சான்று தேவையில்லையன்றோ! கம்பன் இவ்வாறு பிறர் வாயிலாக அனுமனைக் கடவுள் நிலைக்கு உயர்த்துகின்றான்.

கம்பன் கூற்று உணர்த்தும் பண்புநலன்:—

அனுமன் பண்பினைக் கம்பன் உய்த்துணரும்படியும் அமைத்துள்ளான்.

''தீண்டருந் தீவினை தீக்கத் தீந்துபோய்
மாண்டற வுலர்ந்தது மாருதிப் பெயர்
ஆண்டகை மாரிவந் தளிக்க வாயிடை
ஈண்டற முளைத்தென முளைத்த திந்துவே''
(ஊர்தேடுபடலம் : 52)

எனச் சந்திரன் வரவினைக் கம்பன் பாடுவதன் உள்நோக்கம் அனுமனது பெருமையுரைத்தல் என்பது இங்கு வெளிப்படை. மாருதி எனும் மாரி பொழிய, வெவ்வினை அரக்கர்தம் கொடுமையால் உலர்ந்து கிடந்த அறம் முளைவிட்டது. மழையால் ஆக்கமும் உண்டு. அழிவும் உண்டு. அனுமன் நல்வினைக்கு ஆக்கமாக அமைகின்றான் தீவினைக்கு அழிவாக அமைகின்றான். மறம்விழ அறம்வாழ உழைப்பதே பெரியோர்பண்பு. இப்பண்பு அனுமனிடம் இயல்பாக அமைந்துள்ளது எனக் கம்பன் நயம் படக் காட்டுகின்றான்.

கைம்மாறு கருதாது காட்டும் அன்பாக இவ்வுலகில் அமைந்திருப்பது தாயன்பு அனுமன் இராமஇலக்குவர்களிடம் கொண்ட பக்திக்குத் தாயன்பினை உவமையாகக் காட்டுகின்றான் கம்பன். அமரில் இராவணன் தன்அம்பால் மயங்கிவீழ்ந்த இலக்குவனைத் தன் இருப்பிடம் எடுத்துச் செல்ல எண்ணுகின்றான் அவன் முயற்சி கைகூடுமுன் எவரினும் தூயனான அனுமன் தான் தூக்கிக்கொண்டு அப்பால் செல்கின்றான். இராம இலக்குவர் தம்தகுதி நோக்கிக் கொண்ட அன்புஎன்ற ஒப்பற்ற துணையே அல்லாமல் இலக்குவனை அணைத்துக்கொண்டு செல்லுகின்ற காதலுமுடைமையால் அக்காட்சி மகவினை ஏந்திச்செல்லும் பெண் குரங்கினை ஒத்தமைந்தது என்று பாடுகின்றான் கம்பன்.

இராவணன் தேரேறிப் போருக்குவர இராமன் வறிதே நிலத்தில் நிற்பதைக் காணும் அனுமன் விரைந்து இராமனை அணுகி ''புன்றொழில் குரங்கென என்சிறுமை நோக்காது தோளின்மேல் ஏறுக,'' எனப் பணிவுடன் வேண்டுகின்றான். நன்று நன்று என நாயகன் நாமக்குன்றின் மேல் கோள் அரி ஏறுஎன ஏறுகின்றான். வானவர் ஆசி இயம்புகின்றனர். இவன் அனுமன் ஈன்ற கன்று தாங்கியதாய் எனமகிழ்ந்தான் எனும் கம்பன் கூற்று அவன் தாயன்பினை மேலும் வலியுறுத்துகிறது.

இத்தனை நற்பண்புகளுக்கும் உறைவிடமாய் நன்மைக்கெல்லாம் இருப்பிடமாய் இலங்கும் அனுமன் வணங்கிய வாயினனாகவும் நுணங்கிய கேள்வியனாகவும் விளங்கி ஒப்பாரும் மிக்காரும் இன்றித் திகழ்கின்றான்.

வான்மீகியின் அனுமன் தன் பெருமையினைத் தானே கூறிக்கொள்பவனாக அமைகின்றான். மேலும் மகேந்திரமலையில் சீதையைக் காண முடியாத வானர வீரர்கள் ஒன்று இறந்து பட வேண்டும். அன்றெனின் பிலம்புக்கு வாழவேண்டும் என விழைகின்றனர். அனுமன் மட்டும் நாடு திரும்ப நினைக்கின்றான். இஃது அவன் கடமையுணர்வைக் குறைத்து, எடுத்துக்கொண்ட செயலில் முழுமுயற்சியுடன் ஈடுபடாது இடையில் சோர்வடைவதையும் உணர்த்துகின்றது. ஆனால் இலங்கையில் சீதையைக் காணாத பொழுது அனுமன் கம்பன் காட்டுவதுபோன்றே உயிர் விடத் துணிகின்றான். வேலையின் இடையில் வருந்தி நிற்பது வெற்றியைத் தடுக்கும் ஆகலின் ஊக்கமுடன் செயல்பட வேண்டும் என இலங்கையில் சீதையைக் காணாது துயரடையும் போதெல்லாம் நினைக்கின்றான். இந்நிலை முன்னுக்குப் பின் முரணாக அமைகின்றது. கம்பனில் இத்தகைய முரண்பாடு காண இயலாத ஒன்று. சாம்பன் அனுமனின் ஆற்றலை எடுத்துக் கூறும் வரையில் அவனுக்கு அவன் ஆற்றல் தெரியாதென வான்மீகி படைக்கிறார். அனுமன் தன் ஆற்றலை உணராது இருந்ததே மகேந்திர மலையினின்றும் தோல்வியுடன் தன் இருப்பிடம் திரும்ப விழைந்ததற்கு ஒருகால் காரணமாக இருக்கலாம்.

இலங்கையில் சீதையை இராவணன் அரண்மனையில் தேடிக்கொண்டு வரும் அனுமன் ''இந்த ஸ்த்ரீகளையெல்லாம் கன்னியைகளாக இருக்கும் பொழுதே ராவணன் கொண்டு வந்து விவாஹம் செய்ததுபோல் சீதையையும் ராகவன் பாணிக்கிரஹணம் செய்வதற்கு முன் வந்து விவாஹம் செய்திருந்தால் அவனுக்கு க்ஷேமமுண்டாயிருக்குமே என்று அகஸ்மாத்தாஎண்ணினான்'' என்று வான்மீகி அமைத்துள்ளார். இது அனுமன் பண்பினைக் களங்கப் படுத்துகின்றது என்பதனை மறுக்க முடியாது.

துளசியில் அனுமன் வீடணனைச் சந்தித்து உரையாடியதாகக் கூறப்படுகின்றது. வந்த வேலைவிடுத்து வேறு செயலில் இறங்குவது சிறியோர் செய்கை. மேலும் வீடணனே அனுமனுக்குச் சீதை இருக்குமிடம் உணர்த்துகின்றான். இதனாலும் அனுமன் பெருமை தாழ்வுறவே செய்கின்றது. சீதையிடம் பேசிய பின் அனுமன் தனக்குப் பசியெடுப்பதாகக் கூறி அசோகவனத்தில் உள்ள பழங்களைச் சாப்பிட அனுமதி கோருகின்றான். அனுமனின் வேலை இராமனிடம் சென்று சீதையினைபபற்றிக் கூறிய பின்பே முற்றுப்பெறுகிறது. மெய்வருத்தம்பாராமையே செயல் வீரனுக்கு அழகு. கம்பனும் வான்மீகியும் அனுமன் வானரர்களுடன் இராமனை அடையுமுன் மதுவனத்தை அடைந்து இளைப்பாறுவதாகக் காட்டுகின்றனர். ஆனால் அங்கு அனுமன் தன் உடன்வந்தோர் துன்பங்களைய அணுகுகின்றான் என்பது குறிப்பிடத் தக்கது.

வான்மீகியில் நாம்காணும் குறைகளையெல்லாம் அகற்றி அனுமனை நிறைகுணத்தனாகப் படைத்திருக்கின்றான் கம்பன். துளசியால் கூடக் கம்பன்காட்டும் அனுமனின் நற்பண்புகளைக்

குறைபாடில்லாமல் வடிக்க இயலவில்லை என்பது இங்கு கம்பனுக்கும் சிறப்பளிக்கின்றது. கோதிலான் என்று அவனுக்குத் தான் வழங்கிய அடைக்கேற்ப கம்பன் குறைகளை அற்றவனாக அனுமனைப் படைத்திருக்கின்றான்.

இறுதியாக, அனுமனிடம் நாம்காணும்பண்புகள் அனைத்தும் அன்பையும் அறிவையும் அடியாகக் கொண்டு அமைந்துள்ளன. யான், எனது என்பதைஒழித்து எவன் தூய அன்பினனாக விளங்குகின்றானோ அவனே பிறர் வழிபாட்டுக்குரியவனாகின்றான்; எவன் யான் என்பதனை ஒழித்ததோடு தன்னலமற்ற அன்பினை அனைவர்மாட்டும் செலுத்தலாகிய தெய்வப் பணியினைக் கைக்கொண்டுஒழுகுகின்றானோ அவனே பிறரால்தெய்வமாகமதிக்கப்படுகின்றான்என்ற வ. உ. சி. அவர்களின் கூற்றுக்கு அனுமன் சிறந்த சான்றாகின்றான். பிற்காலத்தவர் அனுமனைத் தெய்வமாக வழிபட்டமைக்கு அவனது இப்பண்புகளே காரணமாகின்றன. இக்கூற்றின் உண்மையை முன்பே நன்குணர்ந்திருந்த கம்பன் தன்திறமையனைத்தையும் ஒன்றுதிரட்டி அனுமனைப் பண்பின் சிகரமாகப் படைத்திருக்கின்றான்.

இராமபக்தி.

இவ்வுலக உயிரினங்கள் அனைத்தையும் படைத்து, காத்து, இறுதியில் அழிக்கும் இறைவனிடம் அவ்வுயிர்கள் செலுத்தும் ஆழ்ந்த, அளவுகடந்த, தொடர்ந்த தூய அன்பினையே பக்தி எனலாம். ''உண்மை பக்தன் தன்னுடைய கடமைகளை இறைவனின் கட்டளையாக ஏற்று தன்னையே அவனிடம் அர்ப்பணிப்பான். இதனால் உள்ளத்தூய்மையும் தியான நிலையும் கைவரப்பெற்று இடையறாது அவனையே எண்ணி ஒழுகுவான்,'' என்கிறார் விசிஷ்டாத்துவைதத்தில் இராமானுஜாச்சாரியார், மத்துவாச்சாரியார் துவைதத்தில் ''வீடுபேறு விருப்பமுடையார் இறைக்கும் தமக்கும் இடைஉள்ள ஆண்டான் அடிமைத்தொடர்பை உணர்ந்து எஞ்ஞான்றும் இறைவனின் பெருமைகளை எண்ணுவதிலும், தெளிவதிலும், கேட்பதிலும் ஈடுபடுவர் என்கிறார். மேலும் இறைவன் கட்டளைகளை நிறைவேற்றுவதிலும் அவருக்குகந்த பணிகளைச் செய்து முடிப்பதிலும் பேரின்பம்பெறுவர். இவ்வாறு, பிறவி எடுத்ததன் பொருள் ஆண்டவனுக்கு அடிமைத் தொழில் புரிவதிலேயே நிறைவு பெறும்'' என்கிறார். இவ்விருவர்தம் கூற்றும் அனுமனது பக்திவாழ்வில் இயைந்திருக்கக் காண்கின்றோம் ஆகலின் அனுமனையே பக்திக்கு இலக்கணமாகக் கொள்வதில் தடையில்லை.

அனுமன், அளவிட இயலாத இராம பக்தர்களுக்குள் முதன்மையானவன். இராமனுக்குத் தொண்டு செய்வதே தன் கடனெனக் கருதுபவன். அனுமனின் அளவற்ற ஆற்றலுக்கும் நற்பண்புக்கும் அடிப்படை அவனிடம் குடி கொண்டிருந்த இராம பக்தியே. அவன் எந்தஒருசெயலையும் இராமனைத் தொழுதே செய்வதைக் காவியம் முழுவதிலும் காண்கின்றோம். சுக்கிரீவன், அங்கதன், வீபீடணன் முதலானோரும் இராமனிடம் நிறைந்த அன்பு செலுத்துபவர்களே. சபரி, சரபங்கன் ஆகியோர் இராமனைக் காண தவமே செய்கின்றனர். குகனும் இராமன்பால் ஆழ்ந்த பக்தி கொண்டிருப்பவன். இருப்பினும் அனுமன் அனைவரையும்வென்று இராமபக்தியில் ஈடுஇணையற்றவனாக விளங்குகின்றான்.

இராமனிடம் அன்புகொண்ட குகன், இராமன் தன் துணைவியுடனும் இளவலுடனும் கங்கைக்கரைக்கு வந்திருப்பதை அறிகின்றான். உடன் தேனும், மீனும் கையுறையாகக் கொண்டு அவனைக் காணச் செல்கின்றான். இவன் தோற்றத்தில் காட்டு வேடனாக, முரட்டு மானிடனாகத் தோன்றினும் உள்ளத்தால் அதற்கு நேர்மாறாக மிக மென்மையானவனாக, கல்லும் கரையும் அன்பினனாக இருக்கின்றான். இவனை நோக்கும் இலக்குவன்

இராமனிடம், ''உள்ளம் தூயன்; தாயினும் நல்லன்,'' என்று கூறி அறிமுகப்படுத்துகின்றான். அனுமன் இராம இலக்குவர் யார் என அறியாதநிலையில் கரந்தஉருவத்துடன் வருகின்றான். அவர்களைக் கண்டவுடன் அன்பினின் உருகும் உள்ளத்தினன் ஆகின்றான். பிரிந்த அன்பிற்குரியோரை மீண்டும் கண்டாற் போன்றஉணர்வினன ஆகின்றான் இராமன்யார்என்று அறிந்த நிலையில் அவன் பண்புகளையெல்லாம் உணர்ந்தநிலையில்குகன் அன்பு செலுத்துகின்றான். ஆனால்அனுமன் ஒன்றுமேஅறியாத நிலையில் அவனிடம் ஆட்படுகின்றான். இதனால் குகனையும் விஞ்சி நிற்கின்றான்.

குகன் வேடர்களின் வேந்தன். அனுமன் அறிவிலும் ஆற்றலிலும் ஈடுஇணையற்றவன் ஆயினும்இருவருமே அரசு துறந்து கான் அடைந்திருக்கும் இராமன்முன் தாழ்ந்த சென்னியராய் வணங்கிய வாயினராய் நிற்கின்றனர். ''இமைப்பொழுதும் உன்னைப் பிரிய இயலாது உடன் வர அருள்,'' எனத் தன் அரச வாழ்வையும் துறந்து இராமன் பின் செல்ல முந்துகின்றான் குகன். அனுமன் தன் தலைவன் சுக்கிரீவன இழந்த அரசினை மீண்டும் பெறச்செய்து அவனுக்கு ஆற்றவேண்டிய தன் கடன் முடித்துப்பின் தன்அமைச்சுப் பதவியைக் துறக்கவிழைகின்றான். 'இத்தனை இருந்து நாயேன் ஏயின, எனக்குத் தக்க கைத்தொழில் செய்வென்,' என்று இராமன் கனைகழல் இணை வணங்குகின்றான். இராமனிடம்கொண்ட தூய அன்பே இவர்களை இவ்வாறு கூறவைக்கின்றது. பின் இருவரும் இராமன் ஆணையால் தத்தம் வினையாற்றச் செல்கின்றனர். (குகன் இராமனின் இனிய நண்பன். இராமனால் உடன்பிறந்தானாக ஏற்றுக்கொள்ளப்பட்டவன். ஆகலின் குகன் பிரிந்து செல்ல வருந்துவதில் வியப்பில்லை. ஆனால் அனுமன் தன்னை அடிமையாகவே இராமனிடம் அர்ப்பணிக்கின்றான் எனவே இந்நோக்கிலும் அனுமனின் பக்தியே உயர்ந்து நிற்பது காணலாம்.)

இராமனை நாடிவரும் பரதனைத் தவறாகப் புரிந்துகொள்ளும் குகன் தன் உயிரைக் கொடுத்தேனும் இராமனை, தன் நண்பனைக் காக்கவிழைகின்றான். ஒரு நண்பன் என்ற நிலையில் நட்புக்காகப் போராடஎண்ணும் அவன்எண்ணம் உயர்ந்த ஒன்றே. சீதையைத் தென்திசை முழுவதும் தேடி, இலங்கை அடைந்து பின் இலங்கை முழுவதிலும் தேடி அலைந்து அவளை எங்கும் காணாது வருந்தி, எதிரே தோன்றும் இவ்வசோக வனத்துள்ளும் சீதை இல்லையெனில் இவ்விலங்கல்மேல் இலங்கையை வீட்டி யானும் வீவேன்என்று முடிவுசெய்கின்றான். இராமனுக்கு அடிமையாய் வாழ்ந்து ஏவற்றொழில் செய்யும்அனுமன் இவ்வெண்ணத்தால் நண்பன் குகனைவிடப் பன்மடங்கு உயர்கின்றான்,

(அனுமன் இராமனை உள்ளத்தாலும் என்றும் குகனைப் போலவே பிரியாதிருந்து அவனுக்கு உற்றுழி உதவுகின்றான். சீதை இருக்குமிடம் அறிந்துவந்து இராமனிடம் கூறுகின்றான். மருத்துமலை தூக்கிவந்து இலக்குவனுக்கும் பிறருக்கும் உயிர்

அளிக்கின்றான். பரதனை எரியில் வீழ்வதினின்றும் காக்கின்றான். இராமனை 'யாயினும் அன்பினாய்' என்று பாராட்டும் படி ஒவ்வோர் உதவியும் செய்கின்றான். இதனால் இராமபக்தியில் அனைவரினும், வேட்டுவன் குகனினும், அனுமனே முதன்மையானவன் என்பது வெளிப்படை. அனுமன் இவ்வாறு பல் நிலைகளிலும் இராமனுக்குத் தொண்டாற்ற சூழ்நிலையும் சந்தர்ப்பமும் பெருமளவில் பயன்படுகின்றன. எனினும் குகனுக்கு இவற்றையெல்லாம் செய்து முடிப்பதற்கேற்ற அறிவும் ஆற்றலும் இல்லை என்பதனையும் மறுக்க இயலாது.

அனுமன் இராமனின் புறத்தோற்றத்தைக் கண்டவுடனேயே அவன் திருமாலின் அவதாரம் என்பதனைத் தெளிகின்றான். சுக்கிரீவனிடம்

'சங்குசக்கரக் குறியுள தடக்கையிற் றாளி
லெங்கு மித்தனை யிலக்கணம் யாவர்க்கு மில்லை
செங்கண் விற்கரத் திராமனத் திருநெடு மாலே
இங்கு தித்தன னீண்டறம் நிறுத்தற்கு'

(நட்புக்கோட்படலம் : 74)

என்று அவன் கூறும் கூற்று இதனைப் புலப்படுத்தும். அசோகவனத்தில் சீதையைக் காணும் அனுமன் மீண்டும் இதனை நினைவுகூர்கின்றான். சீதையையும் திருமகளின் அவதாரமாகக் கொள்கின்றான். அரவணைத் துயிலின் நீங்கிய தேவனேயவன் இவள் கமலச் செல்வியே' எனப் பகர்கின்றான்.

அனுமன் இராமன்பால் கொண்ட அளவிறந்த பக்திக்கு அவன் தந்தை வாயுவும் காரணமாகின்றான். வாயு தன் செல்வன் அனுமனிடம் 'இவ்வுலகு யாவையும் ஈன்றான் தனக்கு அடிமைசெய். தவமுனக்கு அதுவே' என்று உரைத்திருந்தான். அவனை யான் அறிவது எவ்வாறு என அனுமன் வினவ 'அன்பு சான்று' என்று அறைந்திருந்தான். அனுமனும் இராமனைக் கண்டபோது, 'என்பு நெக்குருகுகின்றது; இவர்கின்றது அளவில் காதல்; அடைவு என்கொல்?' என வியக்கின்றான் அனுமனின் இந்நிலை கண்ணப்பநாயனார் காளத்தி நாதனைக் கண்டதும் அடைந்த நிலையை நினைவு படுத்துகின்றது. தன் எல்லையில் காதலால் இராமனைத திருமாலாக உணர்ந்தவன் தன்தாதை சொற்குப் பணிந்து பெருமகிழ்வோடு இராமனுக்கு அடிமைத் தொழில் புரிகின்றான்.

அனுமனுடைய ஒவ்வொரு செயலிலும் அவனது இராம பக்தி வெளிப்படுவதைக் காணலாம். அனுமனின் தூயஉள்ளத்தில் எழுந்த பக்தியே அவன்பல அருஞ்செயல்கள் செய்வதற்குக் காரணமாயிற்று என்பது பலர் கருத்து. அன்பிற்குரியோருக்காக ஆற்றும் வினைகள் எப்பொழுதுமே எளிதாகத் தோன்றுவது இயல்பு ஆகலின் இக்கருத்து ஏற்புடைத்தே. அனுமன் எச்செயலையும் இராமனை வழிபட்ட பின்பே செய்யத் தொடங்குகின்றான்.

'ஊறுகடி துறுவன வூறிலற முன்னுத்
தேறலி லரக்கர்புரி தீமையவை தீரா
ஏறுவகை யிங்குளதி ராமவென வெல்லாம்
மாறுமதின் மாறுபிறி தில்லென மதித்தான்'

(கடல்தாவு படலம் : 89)

என்ற இவ்வனுமன் கூற்று இராமநாமத்தின் மீது அவன் கொண்டிருந்த பற்று அளவிடற்கரிது என உணர்த்தும். புனையும் வார்கழலினுன் அருளாலேயே சீதையைத் தேடிச் செல்கின்ருன். இலங்கை செல்லுமாறு சாம்பன் வேண்ட அதனையும்இராமன் கட்டளை என்றெண்ணி ஏற்கின்ருன். ஆரியன் கமலபாதத்தினை அகத்துற வணங்கி இலங்கை பொன்மதில் தாவிச் செல்லும் போதும் இராமநாமத்தையே துணையாகக் கொள்கின்ருன்.

அனுமன் இலக்குவனிடம் 'ஏற்றது முடியேயம் என்னின் இறத்தும்' என்கிருன். இப்படிக் கூறத் தூண்டுவதும் இராம பக்தியே. சீதையைத் தேடி அவளைச் சிறை மீட்டலே இவண் அனுமன் குறிப்பது. மனுக்குலத்துப் பிறந்த இராமனுடைய குணங்கள் எல்லாவற்றையும் நினைந்து நினைந்து இன்புறுகின்ருன். இறைவனின் அருட்பண்புகளில் இவ்வாறு இடையருது ஈடுபடுதல் தூய அன்பினர்க்கே இயல்வது.

இறைவனேடு முழுமையாக ஒன்ற அடிப்படைத்தேவை நம்பிக்கை. இராமன் திருமாலே என அனுமன் ஐயமற நம்புகின்ருன். அவன் ஆற்றல்களிலும் அனுமனுக்கு ஐயமில்லை. 'வென்றியான் அடியேன் தன்னை வேறு கொண்டிருத்தி கூறித் தென்றிசைசேறி என்ருன் அவனருள் சிதைவதாமோ?' என்று சீதையிடம் வினவும் அனுமன் குரலில் அவன் அருள் சிதையாது என்றகருத்து ஆழமாக ஒலிப்பது காணலாம். பிறவிப் பெருங்கடல் நீந்த இராமன் இணையடிகளை இடையருது பற்ற வேண்டும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவன் காலின்மதலை. ஆகலின் ''நீ எவ்வாறு கடல்கடந்தனை' என்று சீதை வினவ 'நின் நாயகன் இராமனது தூய திருவடிகளிலே ஒடுங்கும் அறிவுடை உத்தமர்கள் ஒழிதலில்லா மாயைக் கடலைக் கடத்தல்போல் நான் காலினுல்(காற்று)கருங்கடல் கடந்தேன்'' என்று பதிலுறுக்கின்ருன்.

இறைவனுக்குச் சேவை செய்தலையே பெரும்பேருகக் கருதுவர் அடியார்கள். இராமனைச் சுமந்து செல்வதையே தன்பணியெனக் கொண்டவன் அனுமன் இதனுலேயே சிறிய திருவடி என்ற பெயரும் பெறுகின்ருன். இராமனைத் தன்தோளில் தாங்கும் அனுமன் ஈன்றகன்று தாங்கிய தாயென மகிழ்ந்ததாகக் கம்பன் கூறுகின்ருன். இராகவனைத் தாங்கிய மாருதியைக் கண்டு, அவனது ஊர்தியான கலுழனும், சேக்கையாகத் திகழும் அனந்தனும் நாணி நடுங்குகின்றனர்.

''தகுதியாய் நின்ற வென்றிமாருதி தனிமை சார்ந்த்
மிகுதியை வேறு நோக்கி னெவ்வணம் விளம்புந் தன்மை
புகுதி கூர்ந்துள்ளார் வேதம் பொதுவுறப் புலத்து நோக்கும்
பகுதியை யொத்தான் வீரன் மேலைத்தன் பதமே யொத்தன்.''
(முதற்போர்ப்படலம் : 221)

என அக்காட்சியை அழகாக வடிக்கின்றான் கம்பன்.

இராவணனை வதம் செய்ய இராமன் புறப்பட்ட ஞான்று இந்திரன் தன்தேரினை அனுப்புகின்றான். அத்தேரில் இராமன் ஏறிய உடன் தேவர்கள் அனுமன்தோள் வாழ்க என்று வாழ்த்துகின்றனர். இவ்வாறு கம்பன் பாடியிருப்பதன் மூலம் இராமனுக்கு ஊர்தியாய் அமைந்த அனுமன் தோளின் பெருமையினை உணரலாம்.

இலங்கையில் சீதையைத் தேடும் அனுமன் இராவணனைக் கண்டு வெகுண்டு முதலில் கொல்ல எண்ணுவதும் பின் அதனால் தன் தலைவனுக்கு வரும் இழுக்கஞ்சி அவ்வெண்ணத்தைக் கைவிடுவதும் அவன் பக்தியுணர்வையே காட்டுகின்றன. சீதையைக் கண்டபின் அவளைக் கொண்டகல்வதே கருமம் என உணர்ந்து அவளிடம், 'இராமன் எதிர் நின்னைக் காட்டியடி தாழ்வன்,' என்கிறான். ''நிருதர் தொடரின் அவர்களை பழித்து என் மனச்சினம் தவிர்வேன். நின் நிலைமை கண்டும் நெடியோன் பால் வெறுங்கையொடு பெயரேன். அப்படிச் சென்றால் எவரும் கண்ணெடுத்தும் பாரார் என்னை,' என்கிறான் அனுமன்.

'அருந்ததி யுரைத்தியழ கற்கருகு சென்றுன்
மருந்தனைய தேவிநெடு வஞ்சர்சிறை வைப்பிற்
பெருந்துயரினோடுமொரு வீடுபெறு இல்லாள்
இருந்தனளெ னப்பகரி னென்னடிமை யென்னும்''

என்கிறான். (சூடாமணிப்படலம் : 6)

புண்தொடர்வகற்றிய புயத்தினோடு அவர்களிடம் செல்வேன். பகைவர்களின் நலனையும் வலிமையையும் விரித்துரைப்பேன். உயிர்க்குறுதி கொண்டதால் அவளைக் கொண்டுவரவில்லை. கண்டும்வரவில்லை. எனக்கழறுவனோ?'' என இறைஞ்சுகின்றான். பக்திநிறைந்த பண்பட்ட தூய உள்ளத்தினின்று எழும் உணர்வுமயமான சொற்கள் இவை.

'உன்னோடு சென்று இகல்வீரனின் சிந்தையுறு வெம்துயரினைத் தவிர்ப்போம். அதன்பின் அரக்கர்களை அழித்து இப்பூமியின் இடர்களைவோம்,'' என்கிறான். இவ்வுலகு படும் துயரினும் அவன் தலைவன் இராமன் துயரே பெரிதாக அவனுக்குத் தோன்றுகிறது. அத்துயரினைத் தானும் அனுபவிக்கின்றான். அத்துயரம் தொடரக்கூடாது என்பதற்காகவே அவளைத்தன் தோள் மேல் ஏற்றிக் கொண்டு செல்ல விழைகின்றான். அதனைத்தான் செய்த பெருந்தவமாகவும் எண்ணுகின்றான். சீதையைத் தன்

சொல்லாற்றலால் ஆற்றுவிக்கும்போதும் அவன் பக்தியுணர்வே வெளிப்படுகின்றது.

இராமனைச் சிறிதுநேரம் கூடப் பிரியக்கூடாது என எண்ணுகின்றான் அனுமன். இறந்தவர்களை உயிர்ப்பிக்கமருந்து கொணரச் செல்லும் மாருதி வீடணனிடமும் சாம்பனிடமும், 'எம்கோவிற்கு யாதுமிடையூறு எய்தாமல் தெருட்டுதிர் நீர் போய்,' என வேண்டுகிறான். இராவணனின் மூலபலத்தை எதிர்க்க இராமன் தனியொருவனாய் நின்றபோது அனுமன், "புன்தொழில் குரங்கெனது என்தோளின் மேல் ஏறிப் போருக்குச் செல்வது நன்று என எண்ணுகின்றேன், நாயேன் அதுவன்றின் உனக்குப் பின் தனியே நின்றபோதும் நினது அடித்தொழில் பிழைத்தல் இல்லாதவனாவேன்,' என இறைஞ்சுகின்றான். அனுமனின் இந் நிலை,

'வெம்மறக் குலத்து வந்த வேட்டுவச்சாதி யார்போல்
கைம்மலை கரடி வேங்கையரிதிரி கானந் தன்னில்
உம்முடன் துணையா யுள்ளா ரொருவரு மின்றிக் கெட்டேன்
இம்மலைத் தனியே நீரிங் கிருப்பதே யென்று நைந்தார்'

(கண்ணப்ப நாயனார் புராணம் : 107)

எனச் சேக்கிழார் காட்டும் கண்ணப்பர் நிலையாக அமைந்திருப்பது நோக்கத்தக்கது. உடன் இராமன், "ஐய! நிற்கியலாதது இல்லை. போர்க்களத்தில் இராவணன் இலக்குவனை எதிர்ந்தான் எனின் இலக்குவனுக்கு நின் துணை வேண்டுமே. அன்றி நம் சேனை சிதைய நேரிடும். பின் வெற்றியும் நம்பக்கமோ? அவன் இந்திர சித்தை வென்றதும் நின்னால் அல்லவோ? நீ அவனைப் பிரியாய் எனின் இன்னும் பல வெற்றிகள் கிட்டுமே!" என்று கூறுகின்றான். பின்,

"சேனையைக் காத்ததன் பின்னை திருநகர் தீர்ந்து போந்த
யானையைக் காத்து மற்றை யிறைவனைக் காத்தெண் டீர்ந்த
வானிலித் தலத்தி னோடு மறையோடும் வளர்த்தி என்றான்
ஏனைமற் றுரைக்க லாதான் இளவல்பி னெழுந்து போனான்'

(மூலபலவதைப்படலம் : 67)

இவண் இராமன் சொல்லை அப்படியே அனுமன் ஏற்றுக் கொள்ளலையும், அவனது சிறந்த ஆற்றல் இராமனே புகழும்படியாக இருப்பதையும் உணரலாம்

ஆழ்ந்த பக்தியுடைய ஆன்றோர் தலைவன் துயர்காணின் எப்படித் துடிப்பார்கள் என்பதனையும் அனுமன் வாயிலாக நாம் காணலாம். நாகபாசத்தால இந்திரசித்து இலக்குவனையும் அனுமன் முதலான பிற வானரங்களையும் பிணிக்கின்றான். ஆயிரங்கோடிக்கு மேற்பட்ட அம்புகள் தன் அகத்தூடு போயின போதும் வருந்தாத அஞ்சனை சிங்கம் நாயகன் தம்பிக்குற்ற துயர் தன்னைச் சுட நடுங்குகின்றான். தன்முன் இந்திரசித்து

மாயா சீதையை வெட்ட அனலிடைப்பட்ட புழுவாய்த் துடிக்கின்றான். ''பெருங்கற்பினாளை என் கண்ணெதிரேயே கொல்ல, இருஞ்சிறையுற்ற புள்போல யாதொன்றும் இயற்றலாற்றேன். எம்பிரான் தேவிபட்ட அருஞ்சிறை மீட்ட வண்ணம் அழகிது பெரிதுமம்மா! இதனைக் கண்டுகொண்டிருந்த என் செல்வமோ பெரிது,'' எனக் கல்லும் கரையும் வண்ணம் கலங்குகின்றான். ''முன்பு இராமன் தூதாக வந்தேன். பின்பு இத்துன்பம் செய்தாரைக் கொல்ல வந்த நான், உன்னை மீட்காமல் கொல்விக்க வந்தேன் என்று கொடும் பழியினையும் கூட்டிக் கொண்டேன்,'' என ஏங்குகின்றான்.

பின்னும், 'வஞ்சியைக் காணாது உயிரினை மறந்தான் போன்று திரிந்த செஞ்சிலை உரவோன் உளம்தேற அச்சொலாள் இருந்தாள் கண்டேன்,' என்றயான் 'அரக்கன் கொல்லத் துஞ்சினாள்.' என்று கூறவும் தோன்றியுள்ளேன். என்பிழைப்பு இவ்வாறுயிற்றே என அழுது அரற்றுகின்றான்.

'அருங்கடல் கடந்து இவ்வூரை யள்ளெரி மடுத்து வெள்ளக்
கருங்கடல் கட்டி மேருக் கடந்தொரு மருந்து காட்டிக்
குரங்கினி யுன்னோடொப்ப தில்லெனக் களிப்புக் கொண்டேன்
பெருங்கடற் கோட்டந் தேய்த்த தாயதென் னடிமை பெற்றி,'
(மாயாசீதைப்படலம் : 52)

''உனைக் கொன்றவனைக் கொல்லக் கூசினேன்; என் எதிரே கொல்லவும் கண்டு நின்றேன். என் உடம்பினைப் பிளந்து புல்லிய உயிரை விடாது இன்னும் உயிர் வாழ்கின்றேன். இன்னும் என்னுடைய இவ்விழிசெயலில் ஒப்பற்றவனாகவே நிற்கின்றேன்,'' என்று இவ்வாறெல்லாம் அழுது அழுங்கும் அனுமன் செறிகழல் வீரன் பாதம் சேர்கின்றான். பொங்கிய பொருமல் வீங்கி, உயிர்ப்பொடு புறத்தைப் போர்ப்ப வெங்கண் நீரருவி சோரமால் வரையன்ன வீழ்கின்றான்.

அனுமனின் இவ்வவல நிலை காளத்திநாதனின் கண்களில் வழிந்த குருதி கண்டு கண்ணப்பநாயனார் துடித்த நிலையினை நினைவூட்டுகின்றது.

'பாவியேன் கண்டவண்ணம் பரமனார்க் கடுத்த தென்னோ
ஆவியி னினிய வெங்க ளத்தனார்க் கடுத்த தென்னோ
மேவினார் பிரிய மாட்டா விமலனார்க் கடுத்த தென்னோ
ஆவதொன் றறிகி லேன்யா னென் செய்கேன்'
(கண்ணப்பநாயினார் புராணம் : 174)

என்று கண்ணப்பர் பதறிக் கதறியதாகக் காட்டுகின்றார் சேக்கிழார். உண்மையான ஆழ்ந்த தூயபக்தர்கள் மட்டுமே இவ்வாறு தாமும் தம்தலைவரோடு ஒன்றுபட்டு அவர்தம் இன்ப துன்பங்களையும் உணரமுடியும்.

செவிக்குத் தேனென இராகவன் புகழினைத் திருத்தும் கவிக்கு நாயகனாக அனுமன் இராம காதையில் படைக்கப்பட்டுள்ளான். இராமன் மீது கொண்ட அளவற்ற அன்பு அவனைத்

தன் தேவியைக் காவல் புரியும் கொடிய அரக்கியரைக் கொல்ல வும் தூண்டுகின்றது. சண்டேசுரநாயனுர் இறைமீது கொண்டிருந்த எல்லையற்றஅன்பால் தம்தந்தையின் காலையே வெட்டிய போது, அனுமன் துயர்புரியும் அரக்கியரைக் கொல்லத்துணிந்ததில் வியப்புமில்லை; தவறுமில்லை

பக்திஉள்ளம் பண்பட்ட உள்ளமாய் இலங்குதல் இயல்பு. செயற்கரிய செயல்களைச் செய்துவிட்டு அனுமன் தன்னை வந்தடையும் போதெல்லாம் இராமன் அவனைப் பலபடப் பாராட்டுகின்ருன். பதிலாக அனுமன் நாயகனின்தாளில்வீழ்ந்து வணங்குகின்ருன். இச்செயல் 'என் வெற்றிக் கெல்லாம் காரணம் நீயேயன்றி என்னுல் ஆவதொான்றில்லை' என்பது போல் அமைகின்றது. உண்மைபக்தியும் இதுவே.

தன் உன்னதமான உண்மை பக்தனிடம் அளவிகந்த கருணைமழை பொழிவது ஆண்டவனின் தனிப்பெருங்குணம். இலக்குவனுடன் சுக்கிரீவன் தன்னைக் காணவருங்கால் அனுமனைக்காணுதஇராமன், 'ஐயநன் குணர்மாருதிஎவ்வழிமருவினுன்?' என வினவுகின்ருன். பக்தனைப்பார்க்க இவ்வாறு பரந்தாமனும் பரிதவிக்கின்ருன். பிரம்மாத்திரத்தால் அனுமன் கட்டுண்ட போது, சீதைபொருட்டு அனுமன் வருந்தியது போல் அவனுக்காகத் தான் இரங்கி ஏங்குகின்ருன் இராமன்.

'கடல்கடந்துபுக் கரக்கரைக் கருவொடுங் கலக்கி
இடர்கடந்துநா னிருக்கநீ நல்கிய திதற்கோ
உடல்கடந்தன வோவுனை யரக்கன்வில் லுதைத்த
அடல்கடந்தபோர் வாளியென் ருகுலித் தழுதான்.'

(பிரம்மாத்திரப்படலம் : 193)

காவிய நாயகனே அனுமன்பொருட்டு அழுதான் என்கிருன் கம்பன். அனுமனின் பக்தி எவ்வளவு பெருமைக்கு உரிய ஒன்று என்று உரைக்க இதனினும் வேறு சான்று தேவையில்லை. வான் மீகரும், துளசியும் இவ்வாறே அனுமனின் இராமபக்தியைக் குறைவற மாறுபடின்றிக் காட்டியுள்ளனர்.

சிறந்த அடியார்களை, ஆண்டவனுக்குத் தொண்டு செய்வதனையே அதாவது அடிமைத் தொழில் புரிவதனையே தம் கடன் எனக் கொண்டபெரியார்களை வழிபடுதல் இந்துமதத்தில் ஒருமரபாகவே அமைந்துள்ளது. அனுமனும் இவ்வாறு வழி பாட்டிற்குரிய தெய்வநிலையை அடைந்திருப்பதற்கு அவனது இராமபக்தியும், இராமனுக்குச் செய்த தொண்டுமே காரணங்களாகும், அனுமன் போன்ற அடியவர்களின் அருளைப் பெற்ருல் ஆண்டவன் அருளை எளிதில் பெறஇயலும் என்றநம்பிக்கையும் இன்றளவும் மக்களிடையே நிலவுகின்றது. இராமனுக்கு உகந்த பக்தனுக விளங்கியஅனுமன் இன்று திருமால் அடியார்களுக்கு அவனருளைப் பெற வழிகாட்டும் தெய்வமாய் உள்ளான். உண்மை பக்தி தரும் பெருமை, நற்பலன் இதுவேயாம்.

பிற இலக்கியங்களில்

அறத்தினை வலியுறுத்தற் பொருட்டு புராணக் கதைகள் பிற இலக்கியங்களில் எடுத்தாளப்படல்மரபு. இராமாயண, மகா பாரத நிகழ்ச்சிகள் தொன்றுதொட்டுஇன்றுவரை பொருத்தமான இடத்தில் எடுத்துக்காட்டப்படுகின்றன. இராமகாதையில் அஞ்சனைசிறுவன் அனுமன் குறிப்பிடத்தகுந்த பாத்திரங்களில் ஒருவன் ஆகலின் பலதமிழ் இலக்கியங்களில் அவனைப் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. கம்பன் இராமாயணம் படைக்கும் முன்பே இராமனின் வரலாறு தமிழ் நாடறிந்த ஒன்றாக விளங்கியமையின் கம்பனுக்கு முற்பட்ட இலக்கியங்களிலும் அனுமன் பற்றிய செய்திகள் அறியக் கிடக்கின்றன.

தமிழின் முதலிலக்கியமாகவும் முதன்மையான இலக்கியமாகவும் திகழும் சங்க இலக்கியத்தில் இராமாயணக் குறிப்புக்கள் காணப்படினும் அனுமன் பற்றிய குறிப்புக்கள் இல்லை. முதன்முதலில் சிலப்பதிகாரத்தில் தான் அனுமன் பேசப்படுகின்றான்.

''உரக் குரங்கு உயர்த்த ஒண்சிலை உரவோன்''.

(அழற்படுகாதை : 111)

என்று அருச்சுனனைக் குறிப்பிடும் இடத்தில் இளங்கோ குரங்கினைக் கொடியாக உடைய அருச்சுனன் என்று குறிக்கின்றார், இங்கு குரங்கு என்பது அனுமனையே குறிக்கும். அனுமனின் சிறப்புக்களுள் அவன் ஆற்றலும் ஒன்று. அது புலப்பட உரக் குரங்கு என்று அடிகள் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்து ஆழ்வார்கள்பாடல்களில் அனுமன் ஆங்காங்கே குறிப்பிடப்படுகின்றான். ஆழ்வார்கள் அனுமனை சிறியதிருவடி என்றே போற்றுகின்றனர். அச்சிறிய திருவடியின்திருச்செயல்களை மகிழ்ந்து பாராட்டிப் பாடியுள்ளனர். அனுமன் அருச்சுனன் கொடியில் இருப்பதைப் பெரியாழ்வரும் பாடியுள்ளார்.

'வெள்ளைப் புரவிக் குரங்கு வெல் கொடித்தேர்'' என்பது அவரது திருவாக்கு. இவரும மற்றும் குலசேகர ஆழ்வார், திருமங்கையாழ்வார் ஆகியோரும் அனுமன் இலங்கையை அக்னி பகவான் பாற்படுத்திய நிகழ்ச்சியைச் சிறப்பாகப்பாடியுள்ளனர்.

'ஓதமா கடலைக்கடந்தேறி யுயர்கொள் மாக்கடி காவையிறுத்துக்
கிதல் மாக்களும் சுற்றமும் கொன்று கடியிலங்கை மலங்க
வெரித்துத்
தூது வந்த குரங்கு''

(திருமங்கை 10 : 2 : 6)

எனத் திருமங்கையாழ்வார் அனுமன்கடலைக் கடந்தது, அசோக வனத்தினை அழித்தது எதிர்த்தஅரக்கர்களைக் கொன்றது ஆகிய செயல்களைச் சுட்டி இலங்கையைத் தீக்கிரையாக்கியதும் குறித்துள்ளார்.

தவிர, திருமங்கையாழ்வார் ''முன்னோர் தூதுவானரத்தின் வாயில் மொழிந்து'' என அனுமன் சீதையிடம் தூதுசென்ற நிகழ்ச்சியையும் குறிப்பிட்டுள்ளார். பெரியாழ்வாரும் பத்துப் பாடல்களில் அனுமன் தூதுரைத்த செய்திகள் என்ன என்பதனைத் தெளிவாகப் பாடியுள்ளார். அவை அவர் பாடல்களில் மூன்றும் பத்தில் பத்தாம் திருமொழியாக அமைந்துள்ளன.' நெறிந்த கருங்குழலாய் நின்னடியேன் விண்ணப்பம் என்று இதுதொடங்குகின்றது.

''மறையோனுடன்வந்து சனகன்வைத்திருந்த சிவதனுசை ஒடித்துச் சீதையைமணந்தான், தன்னைஎதிர்த்த பரசுராமனின் தவத்தின் பயனை ஒரே அம்பால் அழித்தான். இராமனும் சீதையும் மட்டும் தனித்திருந்த வேளையில் சீதை இராமனின் திருக்கரங்களை மல்லிகை மலர்மாலையால் கட்டி ஆர்த்து மகிழ்ந்தாள். கலக்கிய மனத்தினை உடைய கைகேயி ''குலக்குமரா! காடுறையப் போவென்று'' விடை கொடுத்தாள். மயங்கிய மனத்தினனை தயரத மன்னனும் அதனை மறுக்காதிருந்தான். இளையோன் இலக்குவன் தன்னொடும் இராமன் கானகமேகினான். கூரணிந்த வேல்வலவன் குகனோடும் கங்கைக் கரை தன்னில் தோழமை கொண்டான் கானமரும் கல்லதர் போய்க் காடுறைந்த காலத்துத் தேனமரும் பொழிற்சாரற் சித்திரகூடத் திருப்ப பரதநம்பி வந்து பணிந்தான்.

சித்திரகூடத்துச் சீதைக்கு இடர்செய்த சிறு கருங்காக்கையின் கண்ணைப் பறித்தான். பொன்னொத்த மான் புகுந்து விளையாட அவளன்பின் வழிநின்று சிலைபிடித்து எம்பிரானும் ஏகினான். பின் இளையோனும் அவனைத்தொடர்ந்தான்,' என்று இவ்வாறு முறையாக சீதையும் இராகவனும் உடனிருந்தபோது நிகழ்ந்தவை அனைத்தும் உரைக்கின்றான். பின் ''வைதேகி! ஒத்தபுகழ் வானரக்கோன் இவ்வடையாளங்களை மொழிந்தான். அதற்குச் சான்றாக அமைவது ஈது அவன்கைக் கணையாழியே,'' எனக் கொடுக்கின்றான்.

அனுமன் கூறியவற்றைக்கேட்டும் கொடுத்த கணையாழியினைக் கண்டும் சீதை அடைந்த பேரின்பத்தினை

'திக்குநிறை புகழாளன் தீவேள்விச் சென்ற நாள்
மிக்கபெருஞ் சபைநடுவே வில்லிறுத்தான் மோதிரங்கண்டு
ஒக்குமா லடையாளம் அனுமான்! என்று உச்சிமேல்
வைத்துக்கொண்டுகந்தனளால்மலர்க்குழலாள்சீதையுமே',
(3:10:9)

என்று பாடுகின்றார் பெரியாழ்வார். இவ்வாறு அனுமன் சீதையைச் சந்திக்கும்வரை நடந்த இராமகாதையினை அவன் வாயிலாகத் தூது மொழியில் மொழிகின்றார் பெரியாழ்வார் இத்தூது மொழிகளில் இராமன் காக்கையின் கண்ணைப் பறித்த செய்தியினைத் தவிரப் பிறிதொன்றையும் கம்பன் தன்காவியத்தில் கூறவில்லை.

அனுமன் உரைத்த இத்தூதுச் செய்திகளைக் கூறும் பாடல்களில் சிறந்த தேர்ச்சி பெறுபவர்கள் வைகுந்தத்தில் இமையவரோடு மகிழ்ந்திருப்பர் என இத்திருமொழியினை ஆழ்வார் முடிக்கின்றார் ஆழ்வாரின் இக்கூற்று அனுமன் தூதின் சிறப்பினை உணர்த்தி நிற்கின்றது.

குலசேகராழ்வார் ''இராமன் தில்லைநகர் திருச்சித்ர கூடந்தன்னுள் திறல் விளங்கு மாருதியோடு வமர்ந்தான்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையை எரித்த அனுமனின் புகழ்பாடிக் கோவர்த்தனமலை தன்னிடம் வாழ்கின்ற மந்திகளைத் தூங்கவைப்பதாகப் பெரியாழ்வார் பாடுகின்றார். திருமங்கையாழ்வார் ஆற்றல் சான்றதொல்பிறப்பில் அனுமனை வாழ்கவென்று பாடிக்குழமணி தூரம் (ஒருவகைக் கூத்து) ஆட அரக்கர்களை அழைக்கின்றார். அதனால் அவர்களுக்குக் கூற்றுவர்களாக உள்ள இராமன் சுக்கிரீவன் அனுமன் அங்கதன் நளன் ஆகியோரின் சீற்றம் தணியும் என்கிறார்.

''அனுமன் முன், பொல்லாத இராவணனுடைய பழைய வலியுடைய மதில்கொண்ட இலங்கையை எரித்துவிட்டு அன்புடன் இராமனிடம் வந்தான். அதுபோன்ற அன்புடன் இராமனின் இணையடிகளைப் பணியவேண்டும். அப்படிப் பணிபவர்களை என்பெலாம் உருக நெஞ்சமெனும் அன்பினால் ஞான நீர்கொண்டு அடியவனாகிய நான் நீராட்டுவிப்பேன்'' என்று திருமங்கையாழ்வார் பாடுகின்றார். இதன் மூலம் அனுமன் இராமன் மேல் கொண்ட பக்தியினைப் பெருமைப் படுத்துவதுடன் பக்திக்கு இலக்கணமாகவும் அவனைக் காட்டுகின்றார். செயற்கரிய செய்தபோதும் அனுமன் அதனால் ஆணவம் அடையாது ஆண்டவனிடம் அடியானாக வந்தான். அதுபோல் அடியார்கள் தங்கள் செயலின் வெற்றிகளில் ஆணவம் கொள்ளாது எல்லாம் நாராயணன் செயலாகக் கொண்டு அவனைப் பணியவேண்டும். அதுவே உண்மைபக்தி என ஆழ்வார் எடுத்துக்காட்டுகின்றார்.

'முன்பொலா விராவ ணன்றன் முதுமதி ளிலங்கை வேவித்து
அன்பினா லனுமன் வந்தாங் கடியிணை பணிய நின்றார்க்கு
என்பெலா முருகி யுக்கிட்டு என்னுடை நெஞ்ச மென்னும்
அன்பினால் ஞான நீர்கொண் டாட்டுவ னடியனே''

(திருக்குறுந் : 15.)

என்பதே அப்பாடல்

அனுமனைச் சிறப்பித்துப் பாடியுள்ள இம்மூன்று ஆழ்வார்களும் பொதுவாக அவன் பக்திக்கும் ஆற்றலுக்கும் சிறப்பிடம் கொடுத்திருப்பதைக் காணலாம். இம்மூவருள்ளும் திருமங்கையாழ்வார் சிறிய திருவடியிடம் மிகுந்த ஈடுபாடுள்ளவராய் விளங்குகின்றார்.

ஆழ்வார்களேயன்றிப் பிறரும் கூட அனுமனைப் பாடியிருக்கின்றனர். திருஞானசம்பந்தர் தன்னுடைய தேவாரத்தில் அனுமன் திருவுசாத்தானத்தில் இறைவனை வழிபட்டதாகப்பாடியுள்ளார்.

''நீரிடைத் துயின்றவன் தம்பிநீள் சாம்புவான்
பேருடைச் சுக்கிரீவன் அநுமான் தொழக்
காருடை நஞ்சுண்டு காத்தருள் செய்தஎம்
சீருடைச் சேடர்வாழ் திருவுசாத் தானமே''

(திருமுறை : 3 பதிகம் : 33)

கம்பருக்குப் பிற்பட்ட கால இலக்கியங்களிலும் அனுமன் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. மற்றொரு இதிகாசமாக விளங்கும் மகாபாரதத்திலும் அனுமன் பங்குபெறக் காண்கின்றோம். பீமனும் அனுமனும் ஒருவரையொருவர் சந்திக்கும் காட்சி இங்குச் சிறப்பாக அமைந்துள்ளது.

அழகிய தாமரைமலர் ஒன்றினைக் காணும் திரௌபதி அதனைப் பறித்துத்தருமாறு பீமனை வேண்டுகின்றாள். அவ்வதிசயத் தாமரை மலரை நாடி பீமன் சுந்தமாதன மலைச்சரிவுகளிடைச் செல்கின்றான். இடையே சோலை ஒன்றினை அடைந்த அவன் ஆங்கிருந்த மரங்களில் சிலவற்றைப் பறித்து எறிகின்றான். அதனால் எழுந்த ஓசை கேட்ட விலங்குகள் வெருவி ஓடுகின்றன. பறவைகள் வேற்றிடம் நோக்கிப் பறக்கின்றன. பின் ஒருகாட்டிற்குள் முழங்கிக் கொண்டே நுழைகின்றான். அங்கு துயின்று கொண்டிருந்த அனுமன் விழித்துத் தன் தம்பி பீமன் தான் இப்படிக் கர்ஜிக்கின்றான் என்பதனைப் புரிந்து கொள்கின்றான். அவனுக்கு நன்மை செய்யக்கருதி அவ்வழியாகத் தொடர்ந்து மேலும் செல்லவிடாதவாறு தடுக்கின்றான். வாழைக் காட்டில் எழுந்தமர்ந்து கொண்டு தன்வாலினைச் சுமற்றி ஓங்கி அடிக்கின்றான். அவ்வொலி கேட்ட பீமன் அத்திக்கை நாடி வருகின்றான்.

பொன்மயமான வாழைகளுக்கு நடுவே ஒரு பாறை மீது அனுமன் மின்னலைப்போல் காட்சிக்கு அரியவனாய் இடியைப் போல் முழங்கிக்கொண்டு தன்கையால் கழுத்தைத் தாங்கிக் கொண்டு அமர்ந்திருக்கின்றான். உதடுகள் குறுகி நாக்கு முகம் காது இவை சிவந்திருக்கின்றன. சொர்க்கத்தின் வழியை அடைத்துக் கொண்டு இமயமலை போன்று இருக்கும் அனுமனைக் காண்கின்றான் பீமன்.

அனுமனும் அலட்சியமாக பீமனை நோக்கி, 'நோயுற்று நலிந்திருக்கும் என்னை எழுப்பிய நீ யார்? மானிடனுன நீ பிற உயிர்களிடத்து இரக்கம் காட்ட வேண்டாமோ? மானிடர்கள் வாழாத இக்காட்டிற்குள் ஏன் வந்தாய்? இது தேவலோகத்திற்குரிய வழி. இவ்வழி செல்லாதே. உன் நன்மைக்காகவே நான் உன்னைத் தடுக்கின்றேன். இவ்வமிர்தம் போன்ற கனிகளை உண்டு விட்டு வந்தவழி திரும்பிவிடு,' என்று கூறிச் சிலகனிகளைக் கொடுக்கிறுன்.

இவ்வாறு அனுமன் கூற புயவலிமிக்க பீமன் ''நீர் யார்? எதன்பொருட்டு வானரவடிவம் தாங்கி இருக்கின்றீர்,'' என்று வினவி விட்டுத்தான் யாரெனக் கூறுகின்றுன். அனுமன் புன்முறுவலோடு, ''நான் ஒரு குரங்கு, நீ விரும்புகின்றபடி இவ்வழியில் செல்வதற்கு உனக்கு இடம் கொடேன். அழிந்து விடாது நீ திரும்பிவிடு'' என்கிறுன்.

அதனைக் கேட்ட பீமன், ''வானரரே! எனக்கு வழிவிடும். என் அழிவைப் பற்றி நீர் வருந்த வேண்டாம்,'' என்கிறுன். அனுமனும், ''என்னுல் எழுந்திருக்க இயலாது. விருப்பமானுல் என்னைத் தாண்டிச் செல்,'' என்று கூற, 'நிர்க்குணமான ஆண்டவன் உம் உடலிலும் வாழ்கின்றுன் ஆகலின் உன்னை நான் தாண்டேன். அன்றெனில் அனுமார் கடலைத் தாண்டியதைப் போன்று ஒரு நொடியில் உன்னை நான் தாண்டிவிடுவேன்,'' என்று கூறுகின்றுன் பீமன்.

உடனே, 'மானிடரில் சிறந்தவனே! கடலைத் தாண்டிய அந்த அனுமன் யார்? அவரைப்பற்றிய விபரங்களை எனக்குச் சொல்,' என்கிறுன் அனுமன். ''அவர் இராமபக்தர். எனது அண்ணன். காந்தியிலும் வன்மையிலும் ஆற்றலிலும் என்னை ஒத்தவர். உன்னைத் தண்டிக்கும் ஆற்றல் எனக்கு உண்டு. ஒரு காரணமாக நான் இங்கு வந்தேன்,'' என்று அதற்குப் பதிலுரைக்கின்றுன் பீமன்.

தன்பலத்தினுல் அகந்தை கொண்டிருக்கும் பீமனை எள்ளி நகையாடிய அனுமன், ''சினம் கொள்ளதே முதுமை காரணமாக என்னுல் எழ முடியவில்லை. எனது வாலைச் சிறிது அப்பால் நகர்த்திவிட்டு உன்விருப்பம்போல்செய்,'' என்கிறுன். தன்வலியில் மிகுந்த நம்பிக்கைகொண்ட பீமன், ''ஆண்மையற்ற இதன் வாலைப்பிடித்து இப்பொழுதே எமன் உலகு அனுப்புவேன்,'' என்று எண்ணி, ஆணவத்துடன் அருகில் சென்று அனுமனின் வாலைக் கைகளால் தூக்க முயல்கின்றுன். உடல் வியர்க்க, கண்கள் பிதுங்குகின்றன. நகர்த்தவும் இயலவில்லை. சோர்ந்து கலங்கி நாணமுற்று அனுமன் எதிரே சென்று கை கூப்பி வணங்குகின்றுன். ''உத்தமமானவானரரே! எளியேனின் சொற்பொறுத்து கருணை புரிவீராக! நீர் யார்? இயக்கரு? சித்தரா? அன்றித் தேவதையா? ஏதும் இரகசியம் இன்றெனின் உண்மை உரைக்க,'' என்று வேண்டுகின்றுன்.

அனுமனும், ''விருப்பப்படியே சொல்கின்றேன். கேசரி என்ற வானரரின் மனைவி வயிற்றில் வாயுவுக்குப் புதல்வனாகத் தோன்றினேன்,'' என்று சொல்கின்றான். பிறகு தசரதராமருடைய வரலாறும் சுருக்கமாக நவின்று, ''குருநந்தனா! இது தேவர்கள் செல்லவேண்டிய மார்க்கம். மானிடர் இவ்வழி ஏக இயலாது. நீ நாடி வந்துள்ள குளமும் அங்கேதான் இருக்கின்றது,'' என்று கூறுகின்றான்.

இவற்றைக்கேள்வியுற்ற தோள்வலிமிக்க பீமன் தன்தமையன் அனுமனை வணங்குகின்றான். ''உம்மைத் தரிசிக்கநேர்ந்த நான் பாக்கியசாலி. கடலைத் தாண்டும் காலத்தில் நீர் பேருருக் கொண்டீர் அல்லவா! அந்த உருவினை நான் காண விழைகின்றேன். அருள் புரியவேண்டும்,'' என்றும் இறைஞ்சுகின்றான்.

பீமன் விருப்பம் கேட்டு அனுமன் சிரிக்கின்றான் பிறகு 'அந்த உருவத்தை நீயோ பிறரோ காணமுடியாது. அந்தக் காலம் வேறு கிருத யுகத்தில் செய்கின்ற காரியங்களைத் துரோதாயுகம், துவாபரயுகம் முதலிய யுகங்களில் செய்ய இயலாது. தேவராயினும் மானிடராயினும் மலையாயினும் மரமாயினும் காலத்தை அனுசரித்தே ஆகவேண்டும். அதனை மீறுவது யாருக்கும் இயலாத ஒன்று,'' என்று உரைக்கின்றான்.

அடுத்து ஒவ்வொரு யுகத்தின் தருமங்களைப்பற்றியும் விரிவாக எடுத்துரைக்கின்றான் பீமனும், ''பெரியவரே கடலைத் தாண்டும் காலத்தில் நீர் எடுத்த மாபெரும் ரூபத்தைப் பாராமல் நான் திரும்பேன். எனக்குநீர் அருள்புரியும்,'' என்றுவற்புறுத்துகின்றான்.

அனுமன் சிரித்துக் கொண்டே தன் உருவத்தை எடுக்கத் தொடங்குகின்றான். விந்தியம்போல் உயர்ந்துநின்ற அவ்வடிவினைக் கண்டு வியந்த பீமன் அதற்குமேல் காண இயலாதவனாகித் தன்கண்களை மூடிக்கொள்கின்றான். அப்பொழுது அனுமன் அவனிடம், ''பீமா! எனது உருவத்தை உன்னால் எந்த அளவிற்குக் காணமுடியுமோ அந்த அளவே நான் இப்பொழுது வளர்ந்துள்ளேன். பகைவனைக்காணின் என் உரு இன்னும் மேலோங்கி வளரும்,'' என்கின்றான். பீமன் ''இதற்குமேல் காண இயலேன். உம் வடிவினைச் சுருக்கிக் கொள்ளும்,'' என்று இறைஞ்சுகின்றான். பின் அனுமன் தன் வடிவினைச் சுருக்கி அவனைத் தழுவிக் கொண்டு அறிவுரை வழங்கி அம்மலர் இருக்குமிடம் செல்வதற்கான வழியையும் காட்டுகின்றான். களைப்பு நீங்கி அதிக பலம் அடையும் பீமன் ''தனக்கு நிகரான பலமுடையோர் யாரும் இல்லை'' என்று எண்ணிக் கொள்கின்றான்.

அனுமன் அவனிடம், ''பீமா உன்னைத்தழுவியதும் இராமபிரானைத் தழுவின நினைவு வந்துவிட்டது. நீ விரும்பும் வரம் கேள். அத்தினபுரியை அழிக்க நீ இப்பொழுதே விரும்பினால் துரியோதனனை உன்முன் கொணர்ந்து நிறுத்துகின்றேன்,'' என்

கிருன். இதனுல் பெரிதும் மகிழும்பீமன், ''வானரகுலச்செம்மலே! நீர் எனக்கு அனைத்தும் செய்ததாகவே கருதுகின்றேன். நீர் இருக்கின்றபடியால் பாண்டவர்களாகிய நாங்கள் நாதன் உள்ள வர்களாளேம். உம்பலத்தினுலேயே பகைவர்களை நாங்கள் வெல் வோம்,'' என்கிருன். அதற்கு அனுமன், ''நீ போரிடும் போது உனக்கு உதவுவேன். போர்க்களத்தில் நீ முழங்கும்போது அந்த முழக்கத்தை மிகுந்த ஒலியுடையதாக்கி உன்பகைவர்களை நடுங் கச் செய்வேன். அர்ச்சுனன் கொடியில் இருந்து கொண்டும் நான் பேரொலி எழுப்பிப் பகைவர் வலி குறைப்பேன்,'' என்று கூறிவிட்டுப் பின் மறைகின்ருன.

இராமன் சீதை இருவராலும் சிரஞ்சீவித் தன்மை பெற்ற வன் அனுமன். அதன் பலனுகத் திருமாலின் அடுத்த அவதார மான கிருஷ்ணுவதாரத்திலும் வாழ்ந்து தன்தம்பி பீமனுக்கு அருள் புரிகின்ருன். பாண்டவர்கள் பக்கமிருந்து கௌரவர்களை அழிக்க உதவுகின்ருன். கிருஷ்ணன் அருச்சுனனுக்கு கீதை யைப் போதித்த போது அவன் தேரின் மேல் இருந்து கேட்கும் அரிய வாய்ப்பினையும் அடைகின்ருன். இவையே மகாபாரதத் தால் நாம் அறிய வருவன.

முருகன்மீது பாமாலை பாடிப் புகழ் பெற்ற அருணகிரி நாதர் தம் திருப்புகழில் அனுமனைப் பற்றியும் பாடியுள்ளார்.

''கருதி யிருபது கரமுடியொருபது
கனக மவுலி கொள் புரிசை செய் பழையது
கடிய வியனகர் புகவரு கனபதி கனல்மூழ்கிக்
கவச அநுமனெ டெழுபது கவிவிழ
அணையி லலையெறி யெதிரமர் பொருதிடு
களரி தனிலொரு கணைவிடு மடலரி மருகோனே
(திருமுறை :7 திருவருணை :63)

என்று மாருதி இலங்கையை எரித்த செயலைப் பாடுகின்ருர். பின்னும், ''அறந் தழைத்த அனுமனோடு சேர்ந்து இராவணனை நாராயணன் எதிர்த்தான்,'' என்றும், ''வெற்றி பெற்ற அனு மனைப் புகழ்ந்தான்,'' என்றும் பிற இருபாடல்களில் கூறியுள் ளார்.

மகரக் குண்டலத் திருப்புகழிலும் இராமன் அனுமனொடு எழுபது வெள்ளம் கவிகளுடன் போரிடச் சென்றது நவிலப்பட் டுள்ளது.

இரட்டைப் புலவர்கள் தங்கள் நகைச்சுவைத் திறனைப் புலப்படுத்த அனுமனை ஒருபாடலில் பயன்படுத்தியுள்ளனர். தங்கள் பாவிற்குப் பரிசளிக்க வந்த பாண்டியனைத் தடுத்த அமைச்சனை இகழ்ந்து பின்வருமாறு பாடியுள்ளனர்.

"புராதன மான தமிழ்ப்புல வீரிந்தப் புன்குரங்கு
மராமரம் விட்டிங்கு வந்ததென் ஞேவகை கேட்டிலையோ
தராதலம் வென்ற தமிழ்மா றனையுந்தன் தம்பியையும்
இராகவ னென்றும் இலக்குவ னென்றும் இருந்ததுவே."

இராகவன் பிள்ளைத்தமிழ் நூலாசிரியர் ஒரு காப்புச் செய்யுள் பாடியுள்ளார். இது ஒரு புதுமையாகும். இராமன் அருள் பெற முதற்கண் சிறிய திருவடியின் அருளைப் பெற வேண்டும் என்பது வழக்கு. அவ்வழக்கின் உண்மை உணர்ந்த, உணர்த்த ஆசிரியர் இவ்வாறு பாடியிருக்கலாம்.

"சீர்தந்த நிகமமுதல வாயபல கலைகளுந்
தெள்ளித் தெளிந்து பொறியிற்
செல்லலற நெஞ்சினைச் செல்லலற மெய்ஞ்ஞான
சிற்பரம் பொருளினிறுவிப்

போர்தந்த வச்சிரப் படையேந்து செங்கைப
புரந்தரன் முதலாகிய
புத்தேட் குலம்பரவ நின்ற மாருதிபதம்
போற்றியஞ்சலி செய்குவாம்.

பேர்தந்த வுலகினிற் றரு'மமொடு தான மும்
பிழைதபு மனுவேள்வியும்
பீடுபெறு மாதவமு மேலான வாய்மையும்
பிறழாம லோங்குருளா

வேர்தந்த சங்கமொடு திகிரிபரம் பணைகரத்
தெழிலிதவ ழிஞ்சிபுடை சூ
ழிசைமலி யயோத்திநகர் வருமி ராகவன்மீ
தியம்புசெந் தமிழ்தழையவே."

இப்பாடலில் ஆசிரியர் ஆஞ்சநேயனின் பெருமையையும் அவன்பால் தான் கொண்டுள்ள பற்றினையும் அழகாக விளக்கியுள்ளார்.

இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களிடையேயும் அனுமன் புகழ் பெற்றிருப்பதைக் காணலாம். திருவையாறில் திகழ்ந்து தென்னாட்டைத் தெளிவுபடுத்திய தியாகராஜர் அனுமனை அரனாகப் பாவித்துத் தன்னுடையதனிக்கவியில் பாடியிருக்கின்றார் 'அனுமய்யா! நீவிர் ருத்ரனே! உமக்கு அணிகலம் பாம்பே! அப் பாம்பின் பிரதிநிதி ஆதிசேஷன். இந்த ஆதிசேஷனே இலட்சுமணன். நீவிர் ருத்ரன் ஆவீர். ருத்ரனுக்கு உறு துணையாக அமைந்த

ஆதிசேஷனை உடன் கொண்டீர். உமக்கு என் அஞ்சலி,'' என்று துதிக்கின்றார்.

''வாழி ஜெயவாழி சனையாழி தருவீரன்'' என அனுமனை யோகி சுத்தானந்த பாரதியார் வாழ்த்துகின்றார். ''நாடு முற்றும் அனுமன்வழி நாடவேண்டும்'' என்கிறார் நாமக்கல்கவிஞர். இந்தியாவில் இராமராஜ்யம் அப்பொழுது தான் ஏற்படும் என்பது அவர் கொள்கை. இதன்மூலம் தன் விருப்பினையும் அனுமன் மீதுள்ள ஈடுபாட்டினையும் புலப்படுத்துகின்றார் கவிஞர், புதுமைப்பித்தன் தன்னுடைய 'நாரதஇராமாயண'த்தில் அனுமனை நகைச்சுவைக்குரிய ஒரு பாத்திரமாகப் படைத்துள்ளார். இருப்பினும் அனுமனின் இராமபக்தியைச் சிறிதும் மாற்றாமல் அமைத்திருக்கின்றார்.

இலங்கையில் வழங்கி வரும் நாட்டுப்பாடல் ஒன்றும் ஈண்டு குறிப்பிடத்தக்கது. சோமசுந்தரப் புலவர் என்பவர் 'அநுராசபுரக்காடு' என்று ஒருபாடல் இயற்றியுள்ளார்.

''வண்ணானின் மொழிகேட்டு வனம்விடுத்த சீதைதனை
இந்நாளும் தேடுதல்போல் இருகுரங்கு நெருங்கிடுமே''

என்பது அப்பாடல்வரிகள். கடல்தாவிவந்த அனுமன் இலங்கை முழுவதும் சீதையைத் தேடி அலைந்தான். அவ்வாறு அங்கு தேடிக்கண்ட அனுமன் இப்பொழுது வண்ணானின்மொழிகேட்டு வனத்திற்கு அனுப்பப்பட்ட சீதையைத் தேடி அநுராசபுரக் காட்டிற்கு வந்துவிட்டதாகச் சுவைபடப் பாடுகின்றார் புலவர்.

பலமொழிகளில் பலவிதமான இராமாயணக்கதை இருப்பதுபோன்று பிறமதங்களான பௌத்தம், சமணம் ஆகியவற்றிலும் இராமாயணக்கதை கூறப்படுகின்றது. இவற்றில் மத நோக்கமே முக்கியமாக உள்ளது. சமணர்களது கொள்கைகளும் புராண வரலாறுகளும் அவர்களது இராமாயணத்தில் காணப்படுகின்றன, சமணர்கள் தமிழில் இராமாயணம் இயற்றியது ஸ்ரீபுராணத்தால் தெரிய வருகின்றது. மேலும் சமணர்கள் எழுதிய பதுமசரித்திரம் என்ற நூலுள் அரக்கர்கள் வானரர்கள் பற்றிப் பேசப்படுகின்றது.

சைனர்கள் இராமாயணத்தில், சுக்கிரீவன் அனுமான் போன்றோர் வித்தியாதரர்கள்; குரங்குகள் அல்லர். அவர்களுக்கும் குரங்குக்கொடி உண்டு இராவணனுக்கு உறவினர்கள். மேலும் வைதீக இராமாயணத்தில் உள்ளது போன்று இங்கும் அனுமன் தூக்கிச் செல்லப்பட்ட சீதையைக் கண்டு வந்து தெரிவிக்கின்றான். பின்னர் இராமனே அனுமனைத் தூதாக அனுப்புகின்றான். தர்மோபதேசங்களால் அனுமன் சைனமதம் தழுவுகின்றான் இவனுக்கு இராவணன் உதவியால் ஆயிரம் மனைவியர் கிடைக்கின்றனர். அனுமன் தொடக்கத்திலேயே சமண

மத்தினனுகவும் கருதப்படுகின்றுன். சைனமத இராமாயணங்கள் பல. அவற்றின் கதைகளில் மாறுபாடுகளும் நிறைய உள்ளன. பௌத்த இராமாயணத்தில் அனுமன் நிலை என்ன என்பது தெளிவாகத் தெரியவில்லை.

இவ்வாறு அனுமன் பற்றிய செய்திகள் இராமாயணத்தில் இடம் பெற்றுள்ளது போன்றும், சில புதுச் செய்திகளோடும் அல்லது முரண்பாடுகளோடும் பிறபல இலக்கியங்களில் காணப்படுகின்றன. சிறப்புடைய ஒன்றே பிறவற்றில் எடுத்தாளப்படுவதற்குரிய தகுதியுடைத்து. அவ்வழி நோக்கும் இடத்து அனுமன் மேலும் சிறப்புப் பெறுகின்றுன்.

பகுதி 2.

தோற்றுவாய்

பாரதத்தின் அழியாத பழம்பெரும் செல்வம் ஆன்மீகம் தான். எதனையும் இறைத் தொடர்புடன் காணுமியல்பு தொன்று தொட்டு இங்கு இருந்து வந்திருக்கின்றது. மனிதன் தோன்றிய நாளிலிருந்தே இறைநம்பிக்கையும் தோன்றிவிட்டது. இவ்வுலகில் உள்ள அனைத்தையும் இயக்கும் சக்தியுடைய ஒருவன் இருக்கின்றான்; அவனே இறைவன். நிறைகுணத்தனாய் இலங்கும் அவன் நம் கட்புலனுக்கு எட்டாதவன். இருப்பினும் தன் அடியார்கள் மேல்கொண்ட அன்பினால் ஆங்காங்கே காட்சி கொடுத்திருக்கின்றான் என்று நம்புகின்றனர். இந்நம்பிக்கையின் விளைவே எண்ணற்ற சமயங்களின் எழுச்சி.

சமயம் மக்கள் அறிவு விளக்கம் பெற்று நன்னெறி நடந்து இன்பம் அடைதற்கு அமைவது. இம்மை மறுமைகளுக்கு நல்வழி காட்டும் கலங்கரை விளக்கமே அது என்று சுருங்கக் கூறலாம்.

சமயம் தோன்றிய நாளிலிருந்து கருத்து கொள்கை வழிபாட்டுமுறை இவற்றில் மாற்றமும் வளர்ச்சியும் ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றன. முதற்கண் ஆவிவணக்கம் இயற்கை வணக்கம் இரண்டும் தோன்றின. இவ்விரண்டிலும் இயற்கை வணக்கமே முந்தியது. சூரியன், சந்திரன், மரம், விலங்கு, நாகம் இவற்றை வணங்கியோர் நாட்செல்லச்செல்ல இறந்த தம் முன்னோரையும் வழிபடத் தொடங்கினர். இதன்பின் வீரர்களையும் வழிபட்டனர். அடுத்து செயற்கரிய செய்தவர்களும் தெய்வமாயினர். இதன் அடிப்படையிலேயே அனுமன் வழிபாடும் தோன்றியது. வீரம் போற்றப்பட்ட காலத்தில் வீரனாக எண்ணப்பட்ட இறைவன், அறிவு வளர வளர அன்புமயமான ஆண்டவன் ஆனான்.

இந்துமத ஆராய்ச்சிக்கு உபநிடதங்களைத் தவிர தரிசனங்கள் எனப்படுகின்ற மீமாம்சை, வேதாந்தம், சாங்கியம், யோகம், நியாயம், வைசேடகம் ஆகிய ஆறுசாத்திரங்களும் முக்கியமான ஆதாரங்களாயுள்ளன. இவைகளில்தான் வேதத்தின் உண்மை, கருமத்தின் பயன்கள், ஜீவாத்மா பரமாத்மா தொடர்பு ஆகியவை விளக்கப்பட்டுள்ளன.

தரிசனங்களை அடுத்து இதிகாசங்கள் தோன்றின இராமாயணம், மகாபாரதம், மனு, யாக்ஞவல்கியார் போன்ருேர் எழுதிய தருமசாஸ்திரங்களே இதிகாசங்கள் என்று போற்றப் பட்டன. இவற்றில் வேதக் கருத்துக்களும் உபநிடதக் கருத்துக் களும் கதைகளாகவும் உரையாடல்களாகவும் விளக்கப் பட்டுள்ளன. இதனுல் பாமர மக்களும் இந்துமத தத்துவங்களை எளிதில் புரிந்துகொள்ள முடிந்தது. இதிகாசக் கதைகளில் வரும் உத்தமத் தலைவர்களைப்போல் தாமும் நடக்கவேண்டுமென்று எண்ணி வாழ்வாராயினர். தருமத்தைக் காக்கவும் அதர்மத்தை அழிக்கவும் இறைவன் பூவுலகில் அவதரித்திருக்கின்ருன்; இனியும் அவதரிப்பான்என்ற நம்பிக்கையும் வேரூன்றியது இதனுல் ஆலய வழிபாடும் மக்களிடையே பரவியது.

நாள்தோறும் இறைவனை வணங்குகின்ருன் மனிதன். அவனை ஆழ்ந்து வழிபடுமளவு புனிதம் அடைகின்ருன். இதனுல் வாழ்க்கை ஓயாது புதுப்பிக்கப்படுகின்றது. பொருளைத் தேடும் ஒருவன் செல்வப் பெருக்கை உணர்வது போன்று இறைவனை முறையுடன் வழுத்துபவன் மேன்மையுறுவது அவனுக்கே நன்கு புரியும். நாளாக ஆகப் புதியஇன்பம் புதியஊக்கம் புதிய அமைதி புதியவலிவு புதியபொலிவு ஆகிய செல்வங்களுடன் வாழ்க்கை ஆனந்தமயமாய் அமையும் இவ்வுலகம் உண்மையில் இருள் சூழ்ந்ததன்று; அருளே வடிவெடுத்தது என்பதும் அப்போது விளங்கும். இதில் அசையாத நம்பிக்கை ஆண்டவனை நம்பினேர்க்கு அவனருள் வேட்டோருக்கு இருக்கின்றது.

மானிடர் எண்ணம் யாவிலும் சமயமும் கலந்து இணைந் திருப்பதே அது அழிந்துவிடாமல் இருப்பதற்குக் காரணமாகும். இறைநம்பிக்கை உலகில் நின்று நிலவும் வரை சமயங்களுக்கும் அழிவில்லை.

வேதகாலத்தில் இயற்கைச் சூழல்களே வழிபாட்டிற்குரிய இடங்களாயின. வேள்வி வழிபாடே பெரிதும் இடம் பெற்றது. ஆற்ருேரங்களிலும் மலர்ச்சோலைகளிலும் வழிபாடு நடந்து வந்தது. எந்தெந்த விருட்சங்களின்கீழ் வழிபாடு நடை பெற்றதோ அந்தந்த விருட்சங்கள் எல்லாம் நாளடைவில் தல விருட்சங்கள் ஆயின பின்பு ஆகமத்தை அனுசரித்து ஆலயங்கள் கட்டப்பட்டன. மலையைக் குடைந்தும் ஆலயம் அமைத்தனர். பொதுவாக அமைதி நிறைந்த இடங் களிலேயே ஆலயங்கள் அமைக்கப்பட்டன. இப்படி அமைந்த ஆலயங்கள் மானிட சரீரம் என்னும் ஆலயத்தின் புறச்சின்னங் களே. அண்டமெங்கும் குடிகொண்டிருக்கும் இறைவன் ஒவ்வொரு மானிடனின் இதயத்தையும் தன் இல்லமாகக்கொண்டு குடியிருக்கின்ருன். இத்தத்துவம் எளியோரால் புரிந்துகொள்ள இயலாமற் போனகாலே எந்த ஒன்றையும் கண்முன் வடிவோடு காணவிரும்பும் அவர்கள் பொருட்டு இறைவனுக்கும் ஆலயங் கள் எழும்பின.

வைதீகர் வழிபாடு யாகமுறையாகவும் தென்னாட்டினர் வழிபாடு ஆலயமுறையாகவும் இருந்தன. அதிலும் எங்கெங்கு தமிழர் சென்று வாழ்ந்தனரோ அங்கங்கு முதற்கண் ஆலயம் அமைத்த பின்னரே தம் கடமைகளை மேற்கொண்டனர். இது தமிழர் தம் வாழ்வில் இறைவழிபாடு இரண்டறக் கலந்துவிட்ட அரும்பெரும் உண்மையினை உணர்த்தும்.

ஆழ்ந்த பக்தியே ஆண்டவன் தரிசனத்துக்குவழி; முற்றிய பக்திநிலையே ஞானம்; இது வைணவர்தம் நம்பிக்கை இன்று, வைணவர் தெய்வம் இராமனின் பக்தனாக விளங்கிய அனுமன் இந்துக்களின் வழிபாட்டுக்குரிய தெய்வமாக மாறியிருக்கின்றான். உண்மை பக்திக்கு உறைவிடமாகத் திகழ்ந்து, இன்று பல உண்மை பக்தர்களின் உள்ளங்களை உறைவிடமாக்கிக் கொண்ட அனுமன்பற்றிய சமயத் தொடர்புடைய செய்திகளையும் அவன் வழிபடப்படும் இடங்களையும் எங்கெங்கு அவன் கோயில்கள் உள்ளன என்பதனையும் பின்வரும் கட்டுரைகள் விளக்குகின்றன. சிறிய திருவடி என்று போற்றப்படும் அனுமனை முதலில் தொழுத பின்பே இராமனைத் தொழவேண்டும் என்ற நிலைக்கு இன்று அனுமன் வழிபாடு உயர்ந்துள்ளது. ஆகலின் வழிபாடுபற்றிக் கூறுதிருப்பின் ஆய்வு நிறைவு பெறாது, என்று இவண் கூறப்பட்டுள்ளது. ஆனால் அனுமனின் உயரிய பண்புகளையும் ஆற்றிய அரிய செயல்களையும் விளக்குவதே இவ்வாய்வுக் கட்டுரையின் சிறப்பு நோக்கம் ஆகலின் வழிபாடு பற்றிச் சுருக்கமாகவே கூறப்பட்டுள்ளது.

வழிபாடு - தோற்றமும் வளர்ச்சியும்

அனுமன் வழிபாடு இந்துமதத்தில் புராதனமான ஒன்றன்று. வைணவசமய வளர்ச்சியின் ஒருநிலையாக இடைக்காலத்தில் தோன்றியதே.

இராமாயணத்திற்கு முன்னால் இராமகாதை கூறுவதாக அமைந்த தசரத ஜாதகக் கதைகளில் இராவணன் சீதையைத் தூக்கிச்சென்ற நிகழ்ச்சியோ இராம இராவண யுத்தமோ இல்லையென்பதுடன் அனுமன்பற்றிய குறிப்பும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. அனுமன் கடல் கடந்ததும் இமயம் சென்று மருத்துமலை கொணர்ந்ததும் பிற்சேர்க்கைகளே. காவியங்களில் இடம்பெறும் பாத்திரங்களின் பெயரை விளக்க எழுந்த கதைகள் அவர்கள் தனிப்பண்புகளை விவரிக்கும் நிலையில் பிற்காலத்தில் புகுத்தப்பட்டன. இவ்வாறு தோன்றியவையே அனுமனின் ஆற்றல் விளக்கும் செயற்கரிய செயல்கள். படிப்படியாக இராமாயணத்தில் இன்றியமையாத பாத்திரமாக மாறிய அனுமன் தன் சிறப்பால் வைணவர்களின் மனதில் தெய்வமாகக் குடிகொண்டான். செயற்கரிய செய்த வீரர்கள் தெய்வங்களாக்கப்பட்டனர் எனும் கொள்கைக்கு அனுமன் வழிபாடு தக்க சான்று ''விலங்குகளின் வழிபாடு'' வகையில் சேர்க்கத் தகுந்தாய் குரங்கு உருவில் அமைகின்றது இவ்வனுமன் வழிபாடு.

இந்துக்களிடையே நிலவிய விலங்கு வழிபாடு மிகத் தொன்மையானது. இதில் நாகவழிபாடும் கோவழிபாடும் மிகுதியாக நிலவுகின்றன புத்தம் சமணம் போன்ற பிறசமயத்தாரிடமும் விலங்கு வழிபாடு காணப்படுகின்றது. குரங்கினைத் தெய்வமாக வழிபட்டது புத்தஜாதகக் கதைகளில் கூறப்பட்டுள்ளது. போதிசத்துவர் குரங்காக ஒரு காலத்தில் அவதரித்தார் என்பதும் அறியப்படுகின்றது.

"எண்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன் போதிசத்துவர் குரங்காகப் பிறந்து குரங்குகளின் கூட்டத்துடன் அவற்றின் அரசனாக இமயமலைச் சாரலில் வசித்து வந்தார். அக்குரங்குகளைக் காப்பாற்றுவதற்காகத் தன் உயிரை இழந்தார். இதனை அருகில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த காசிமன்னன் அக்குரங்கரசனின் மண்டையோட்டை எடுத்துக்கொண்டு உடலை எரித்த இடத்தில் ஒரு கோயிலைக்கட்டி தீவட்டிகளைக் கொளுத்தித் தூபதீப ஆராதனைகளோடு மலர்சூட்டி மகிழ்ந்தான். அந்த மண்டையோட்டிற்குத் தங்கத்தாலான பூண்செய்து ஓர் ஈட்டி முனைமீது அதனைச் செருகி அதற்கும் ஆராதனை செய்தான். பின் அரண்மனை வாயிலில் அந்த ஈட்டியை நிறுத்தி அதற்கு ஏழு நாட்கள் பூஜை நடத்தினான். ஈட்டியிருந்த இடத்தில் மற்றொரு ஆலயம் அமைத்துத் தன் ஆயுள் பரியந்தம் அம்மண்டையோட்டை வணங்கி வாழ்ந்தான்'' என்று அப்புத்த ஜாதகக் கதை கூறுகிறது.

உதயணன் தன்னுடைய யானை இறந்தவுடன் அதற்குக் கோயில் கட்டி வழிபட்டதைப் பெருங்கதை கூறுகிறது. சிலம்பு ஒரு குரங்கு வானவனாக மாறிய கதையை எடுத்தியம்புகின்றது. இதனால் சமணமும் விலங்கு வழிபாட்டை ஏற்றுக்கொண்டது தெளிவாகின்றது

ரிக்வேதத்திலேயே ஒரு புனிதமான குரங்குபற்றிக் கூறப் படுகின்றது ஆனால் அக்குரங்கு பக்திக்கு எடுத்துக் காட்டாக அமையவில்லை. ஆரியர்களின் வருகைக்கு முன்னரே இந்து சமயத்தில் குரங்கு வழிபாடு இருந்தது. ஆரியர்கள் வந்தபின் அக்குரங்கு விருஷகபி என வழங்கப்பட்டது. ரிக்வேதத்தில் கூறப்பட்ட குரங்கே இவ்விருஷகபி. இது தமிழில் மந்தி என றழைக்கப்பட்டு வடமொழியில் அனுமந்த் என்றாகியது. இதுவே பிற்காலத்தில் பிரபலமான அனுமவழிபாடாக மாறியது என்பது F E Pargiters என்பாரின் கருத்து. "History and culture of the Indian People" என்ற நூலி அவர் இவ்வாறு கூறியிருப்ப தாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அனுமவழிபாட்டின் தோற் றத்திற்கு இவர் கூறும் கருத்து ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றாகவே தோன்றுகின்றது.

சங்க காலத்தில் வீரர்களுக்கு நடுகற்கள் அமைத்து வழி படும் பழக்கம் இருந்தது. சில இடங்களில் இந் நடுகற்கள் இன்றும் ஆஞ்சநேயர் கல்லு என்று வழங்கப்படுகின்றன இதன் காரணம் தெளிவாகவில்லை இக்கோயில்கள் வட ஆற்காடு தென்னாற்காடு சேலம் தருமபுரி ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள ஊர் களின் புறவெல்லையில் காணப்படுகின்றன. போரில் வீரமரணம் எய்திய வீரனின் உருவம் செதுக்கப்பெற்று அவன் பீடும் பெய ரும் பொறிக்கப்பெற்றுக் காணப்படும் பலகைக்கல் ஒன்றோ இரண்டோ சில இடங்களில் மூன்றோ நான்கோ மண்ணில் புதைத்து நிறுத்தப்பட்டுள்ளன. சுவாமியிடம் செல்வதற்கு நேர் வழிவிட்டு இருபுறமும் மண்ணால் செய்து சுடப்பட்ட பெருங் குதிரைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அருகில் சில ஆண் தெய்வங்களும் மண்ணால் செய்துவைக்கப்பட்டுள்ளன. இவ் வமைப்பைக் கொண்டுள்ள இக்கோயில்களுக்கு வழங்கப்படும் பல பெயர்களில் ஆஞ்சநேயர் கோயில் என்பதும் ஒன்று.[1] நாடோடிப் பாடல்களில் குரங்கு கடவுளாக வருணிக்கப்பட் டுள்ளது. இவற்றையெல்லாம் நோக்குங்கால் இவைதாம் அனுமன் வழிபாட்டிற்கு அடிப்படையாக அமைந்திருக்க வேண்டுமென்ற எண்ணம் எழுகின்றது.

இடைக்காலத்தில் வைணவ சமயம் வீழ்ச்சியடைந்த போது அதன் எழுச்சிக்கு வைணவ ஆச்சாரியார்கள் அனுமன் வழிபாட்டைப் புதியதாகப் புகுத்தினர் என்பர்.[2] திடீரென்று

---

1 கொங்கு: சனவரி 1972: பக்கம்: 9.

2 History and culture of the Indian People Volume I. Page 163.

அனுமனை மக்கள் தெய்வமாக ஏற்றுக்கொண்டனர் என்ற இக் கருத்து ஏற்புடையது அல்ல. அதற்கு வேறு சில அடிப்படைகள் இருந்திருக்கவேண்டும். அவை முற்கூறப்பட்டவைகளாக இருத்தலும் கூடும். அடியவர்களை வழிபாட்டிற்குரியவர்களாக்குவது இந்துமதத்தின்மரபு எனினும்இன்று அனுமன் பெற்றுள்ளதெய்வ நிலையை வேறு எந்த அடியவரும் பெறவில்லை என்பது குறிப் பிடத்தக்கது. குரங்குகள் புனிதமானவை என மக்கள் மத்தியில் நிலவிய கருத்தினை ஆழ்வார்கள் தங்கள் மதஎழுச்சிக்கு உகந்த தாகக்கொண்டு அதனை அனுமன் வழிபாடாக மாற்றினர் எனில் பொருந்தும். இவ்வாறு தோன்றிய வழிபாடு பின் இந்தியா எங்கும் பரவியிருக்கின்றது

இராமபிரான் வைணவர்களின் முதன்மையான தெய்வம். இத்தெய்வத்தின் அருளைப்பெற வேண்டுமாயின் ஆஞ்சநேயனின் அருளைப் பெறவேண்டும் என்று தோற்றுவிக்கப்பட்ட கருத்து அனுமன் வழிபாடு மிகவிரைவாகப் பரவுவதற்கும் நிலைத்து நிற் பதற்கும் ஒரு காரணமாயிற்று. இராமனிடம் எவ்வளவு ஈடுபாடு உண்டோ அந்த அளவு ஈடுபாடு அனுமனிடமும் வைணவர் களுக்கு எழுந்தது. இதனால் அனுமனுக்காகவே பல கோயில்கள் தோன்றின.

இன்று இந்துமதத்தில் அனுமன் கிராமதேவதையாகச் சில இடங்களில் கருதப்படுகின்றான். வங்காளம் தவிர இந்தி யாவின் ஏனைய பகுதிகளில் அனுமன் வழிபாடு மிகுதியாக உள்ளது. மேலும் எச்செயலும் விநாயகர் வழிபாட்டுடன் தொடங் கப்படின் அனுமனை வழிபட்டு முடிக்கப்படல் வேண்டும் என்ற நிலையும் இன்று ஏற்பட்டுள்ளது. இக்காரணம் பற்றியே ராதா கல்யாணம் போன்ற விழாக்களை பிள்ளையார் வழிபாட்டுடன் தொடங்கி அனுமன் வழிபாட்டுடன் முடிக்கின்றனர்.

அனுமனின் இராமபக்தி பலராலும் பாராட்டப்படுகின்ற ஒன்று. இவன், இறைவனிடம் தானே தன்னை அடைக்கலப்படுத் தற்கும், உண்மைக்கும் குறியீடாக்கப்பட்டுள்ளான். முற்றிலும் உன்னதமான அடிமையாய் கற்பனை செய்யப்பட்டுள்ளான். உடல் வலிமைக்குப் உருவகமாகக் கருதப்படுகின்றான். தங்களு டைய உடல்வலியைம் பெருக்க விரும்பும் இந்துக்கள் பொதுவாக அனுமனை வழிபடுகின்றனர். குழந்தைகள் தருவான்; வேண்டிய நேரத்தில் உதவுவான்; துன்பங்களைத் துடைப்பான் என்றும் பக்தர்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ளான். படைக்கலப் பயிற்சி பெறுவோரும் இவனைத் தமக்குரிய தெய்வமாகக் கொண்டுள்ளனர். பிரம்மச்சாரியும் வியாகரணம் வல்லபண்டித னும் ஞானியும் சிறந்த பக்திமானுமான இவனை அறிவும் துணி வும் விழைவோரும் வணங்குவதுண்டு

அனுமன் பெருவாரியாக இந்தியாவில் வழிபடப்படினும் தாழ்ந்த வகுப்பினரே பெரும்பாலும் வழிபடுகின்றனர். எங்கெல் லாம் இராமன் சீதை சிலைகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் அனுமன் சிலையும் உண்டு. பொதுவாக அனுமன் சிலைக்கு இரண்டு

கைகள் உண்டு. உயரம் இராமனின் மார்பு அல்லது இடுப்பு அளவு இருக்கும். இராமனுடைய வலதுபக்கம் உருவம் அமையும். வலது கையால் வாய்புதைத்து இடது கையை முழங்காலைத் தொட்டுக்கொண்டிருக்கும்படித் தொங்கவிட்டு தலைவன் முன்னிலையில் பக்தியும் அடிமைநிலையும் விளங்க எந்த ஆணையையும் நிறைவேற்றக் காத்திருக்கும் பாவனையைக் கொண்டதாக இவன் சிலையின் வடிவம் பொதுவாக அமைந்துள்ளது.

சதானியர்கள் வைணவ சமயத்துடன் தொடர்புடையவர்கள். இவர்கள் சூத்திரர்களுடைய தகுதியினையே கொண்டுள்ள போதும் மதகுருக்களின் தொழில்களில் சிலவற்றையும் செய்கின்றனர் இவர்கள் பெரும்பாலும் அனுமன் கோயில்களில் பூஜை செய்பவர்களாய் உள்ளனர். பெரும்பான்மை தாழ்ந்த வகுப்பினரால் வணங்கப்படும் அனுமனை உயர்குலத்தோரும் வழிபடுகின்றனர். அந்தணர்களும் அவனடி பணிகின்றனா. கி பி. 14 ஆம் நூற்றாண்டில் கங்கைக் கரையின் மேற்பகுதியில் வாழ்ந்த இராமானந்தரும் அவரது சீடர்களும் இராமனுக்கு அளித்த சிறப்பில் சிறிதும் குறையாமல் அனுமனுக்கும் அளித்து வழிபட்டனர்.

மார்கழி அமாவாசையன்று அனுமன் பிறந்தநாள், 'ஸ்ரீ ஹனுமத் ஜெயந்தி' என்று கொண்டாடப்படுகின்றது. சித்திரா பௌர்ணமி அன்று பிறந்தநாள் என்று கூறுவோரும் உண்டு. அனுமன் கலைகளின் உறைவிடமான கதிரவனிடம் ஒரே நாளில் எல்லாக் கலைகளையும் கற்று ஆசாரிய நிலையில் இருந்து கொண்டு ஆன்மாக்களை இறைவனுடன் சேர்த்து மகிழ்கின்றான்; அதனால் அனுமனை வழிபடுவதன் மூலம் சீதாராமனின் அருளைப் பெறுவது உறுதி என்று அனைவராலும் நம்பப்படுகின்றது.

'பளிங்குபோல் களங்கமற்ற மனமுடையவனும், பொன் னிறமுடையவனும், கரங்கூப்பி வணங்கிக்கொண்டிருப்பவனும் குண்டலங்களால் ஒளிவிடும் முகத்தை உடையவனுமான அனுமனை வணங்குகின்றேன். அனுமன் இராமனின் இணையடிகளில் மனதை ஈடுபடுத்தியவன். குற்றம் குறைகளற்றவன். சஞ்சீவி மலையினை எடுத்து வந்தவன். இவன் எனக்கு நீண்ட ஆயுளை அளிப்பானாக!' என்பது அனுமனை வழிபட உதவும் பாமாலையின் பொருள்.

ஆஞ்சநேயரின் வழிபாட்டைப் பரப்பியவர்களுள் ஸ்ரீமத்வரும், ஸ்ரீவியாசராஜரும் முதன்மையானவர்கள். ஸ்ரீவியாசராஜர் நாடெங்கும் ஏறக்குறைய 732 ஆஞ்சநேயமூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்துள்ளார் இவரை வழிபடின் மக்கட்பேறு புகழ் கல்வி செல்வம் போன்றன பெறலாம் என்று அறுதியிட்டுக் கூறியிருக்கின்றார்.

இவ்வாறாக அனுமன் வழிபாடு இன்று நாடெங்கும் பரவி நிற்கின்றது.

பல்வேறு தோற்றங்கள்

மனஉணர்வு உள்ளவரை மனிதன் மனத்தில் வடிவம் புலப்பட்டுக் கொண்டேயிருத்தல் இயல்பு. அத்தகைய மனதை-பல்வேறு துறைகளில் எஞ்ஞான்றும் உழன்று கொண்டேயிருக்கும் மனதை ஒருவடிவில் பதியவைத்துப் பயிற்சி செயின் அதன் அலைச்சல் குறைகின்றது. அதற்கு உருவவழிபாடு இன்றியமையாதது. ஆகவே வழிபாட்டில் உருவச்சிலைகள் இடம்பெற்றன. கோயிற்சிற்பங்களை மூன்று விதமாகப் பிரிக்கலாம். அவை நிலைத்தவை (achala), நிலையற்றவை (chala) நிலைத்தவையும் நிலையாதவையும் (achala chala) என்பவை. நிலைத்த உருவங்கள் கோயிலின் மூல விக்கிரகங்கள். அவை பெரும்பாலும் கற்களால் ஆனவை. நிலையற்றவை விழாக்களுக்கு எடுத்துச் செல்லப்படும் உருவங்கள். அவை உலோகத்தால் ஆனவை. மூன்ருவது வகை ஒரு இடத்தில் அமைக்கப்பட்டுத் தேவைப்பட்ட இடங்களுக்கு எடுத்துச் செல்லப்படும் உருவங்கள். இவையும் பெரும்பான்மை உலோகத்தால் ஆனவை. ஆண்டவன் ஒருவனே. இருப்பினும் அவனுக்குப் பலவடிவங்களை நம்முன்னோர் ஏற்படுத்தினர் ஒவ்வொரு வடிவமும் தன்னுள் சிலவேறுபாடுகளைக் கொண்டமையும்போது அதற்குரிய பெயரிலும் மாற்றம் ஏற்பட்டது. கோயில் கொண்டுள்ள இடத்திற்கேற்பவும் தெய்வங்களின் பெயர் மாறுபடுதல் உண்டு. இந்நிலை அனுமனுக்கும் ஏற்பட்டுள்ளது. சான்ருகச் சிலவற்றைக் கீழே காணலாம்.

அநுமேசுவரர்:—

அநுமன்பள்ளி என்னும் இடத்தில் இவ்வாஞ்சநேயர் குடிகொண்டுள்ளான். சீதாப்பிராட்டியாரைக்கொங்குபூந்துறை நாட்டின் கீழ்க்கரையும் மேற்கரையும் தேடி எங்கும் காணுமையால் மனம் நொந்து இங்கு ஈசனை வேண்டினுர் அனுமார். அதனுல் அவருக்கு அநுமேசுவரர் என்றும் அவ்வூர்க்கு அநுமன் பள்ளி என்றும் பூஜை பொருட்டு அனுமார் ஏற்படுத்தின நீர்க்குழிக்கு அநுமநதி என்றும் பெயர் வழங்கலாயிற்று. இந்நதிக்குக் குரக்குப்பள்ளம் என்ற மற்றொரு பெயருமுண்டு.

சத்திய ஆஞ்சநேயர்:

சத்திய ஆஞ்சநேயர் செங்கற்பட்டு நகரிலே கோட்டைச் சுவரிலே எழுந்தருளியிருக்கின்ருர். மக்கள் தங்களுக்குள் ஏற்படும் தகராறுகளைத் தீர்த்துக் கொள்ள அவருடைய சந்நிதியில் சத்தியம் செய்வதுண்டு. பொய்ச்சத்தியம் செய்வோன் அழிவான் என்ற நம்பிக்கையும் நிலவுகின்றது.

திரிநேத்ர சதுர்புஜ அனுமார்:—

மூன்று கண்களுடனும் பத்துக் கைகளுடனும் இவர் காட்சி தருகின்றார். நமது தெய்வங்களிலே வலிமிகுந்தவர்கள் சிவன் விஷ்ணு இந்திரன் யமன் முதலியோரே. இவர்களுடன் தனித்தனி பொருது வெல்லலே அரிது. அனைவருமே சேர்ந்து ஒருருவாக நின்றால் அவ்வுருவினை வெற்றிகொள்ளல் என்ற சொல்லிற்கே இடமில்லையன்றோ! அத்தகைய திருஉருவம்தானே உண்மையில் விசுவருபமாக இருக்கமுடியும் இந்த அனுமார் சிவனுடைய நெற்றிக்கண் மான் மழு அனைத்தும் கொண்டு இலங்குகின்றார். விஷ்ணுவோ தன்சங்கு சக்கரம் வில் வாள் அனைத்தையும் கொடுத்துவிட்டு ஒதுங்கிக் கொள்கின்றார். இந்திரனுடைய வஜ்ராயுதம் கேடயம் இரண்டும் இவரிடம் வந்து சேர்ந்து கொள்கின்றன. நமனுடைய பாசமும் சூலமும் இவரால் பறித்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இப்படியே பத்துக்கைகளிலும் பத்து ஆயுதங்கள். இந்த ஆயுதங்களையெல்லாம் தாங்கும் வலிமை பெற்ற விரிந்த மார்பு; திண்தோள்கள்; தலையில் நீண்டு உயர்ந்த மணிமகுடம்; இத்தனையும் ஏந்தி நிற்கும் கம்பீரமான தோற்றம் எல்லாம் சேர்ந்து கலை உலகில் இவ்வுருவம் ஓர் உயர்ந்த இடத்தைப் பெறுகின்றது. அனந்தமங்கலத்தில் உள்ள ராஜகோபாலசுவாமி கோயிலிலேதான் இந்தத் திரிநேத்ர தஜபுஜ அனுமார் விற்றிருக்கின்றார். இந்த அனுமாரின் பெருமையால் இவ்வூர் அனுமந்த மங்கலம் எனப்பெயரிடப்பெற்று இப்பொழுது அனந்த மங்கலம் என வழங்கப்படுகின்றது.

பஞ்சமுக ஆஞ்சநேயர்:—

பஞ்சமுக அனுமார் ஐந்து முகங்களையும் பதினைந்துகண்களையும் கோடிக்கதிரவன் ஒருங்கிணைந்தாற்போன்ற ஒளியினையும் தெற்றுப் பற்களோடு கூடிய அச்சந்தரும் தோற்றத்தையும் புருவநெறிப்பால் கோணலான பார்வையும் உடையவராவார். வராகர், கருடர், ஆஞ்சநேயர், நரசிம்மர், ஹயக்ரீவர் என்ற ஐந்து முகங்களோடு பத்துக்கரங்களுடனும் காட்சி அளிக்கின்றார். அரக்கர்களை வதைத்துப் பிரமனுக்கு வேதங்களை மீட்டுக் கொடுத்த ஹயக்ரீவருடைய முகம் பக்தர்களுடைய அஞ்ஞானம் அகற்றி ஞானம் அளிக்க வல்லது. இரண்யசம்காரம் செய்த நரசிம்மர் முகம் பக்தர்களைப் பேய்பிசாசுகளுடைய தொல்லைகளிலிருந்து காக்கக்கூடியது கருடருடைய முகம் பாம்பின்கொடிய நஞ்சு போன்றவற்றிலிருந்து காக்கவல்லது. பாதாளம் சென்று பூமியை மீட்டுவந்த வராகருடைய முகம் மக்களை நோய் நொடிகளினின்று காப்பது. நடுவிலுள்ள ஆஞ்சநேயர் முகம் பக்தர்களை அவர்களது பகைவர்களிடமிருந்து பாதுகாப்பது. இந்த அனுமார் கத்தி முச்சிலம் கட்வாங்கம் அங்குசம் மலை மரம் கோமுத்திரிகை முண்டம் இவற்றோடு மற்றுமொரு ஆயுதமும் தரித்திருப்பவர். பொன்னிற மேனியர். தேவர்களாலும வணங்கப்பட்டவர்.[1]

1 ஸ்ரீ தத்துநிதி. முதல் பாகம் பக்கம்: 222

பாலரூப ஆஞ்சநேயர்:—

உடுப்பிக்குக் கிழக்கே மூன்றுகல் தொலைவில் ஒரு சிறு குன்றில் துர்க்கைகோயில் ஒன்றுண்டு. அதன் கீழ் உள்ள குளக் கரையில் கோவணாண்டியாக ஒருபாலரூப ஆஞ்சநேயர் எழுந்தருளியுள்ளார். உடலெல்லாம் உரோமம் தெரியும்படி அருமையாக அச்சிலை வடிக்கப்பட்டுள்ளது. கையைக் கூப்பிக்கொண்டு பக்தியுடனும் எளிமையுடனும் இவர் காட்சி தருகின்றார்.

யந்தரோத்தாரக அனுமன்:—

ஹம்பியில் எழுந்தருளியிருப்பவர் இவர். இவரைப்பற்றி ஒருகதை கூறப்படுகின்றது. சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர் மாத்வ ஆச்சாரியரான வியாசராயர். அவர் ஆஞ்சநேயருடைய உருவத்தை வரைவதில் திறமை வாய்ந்தவர். ஒருநாள் ஓரிடத்தில் அவர் ஆஞ்சநேயருடைய உருவத்தை வரைந்தார். மறுநாள் பார்த்தபோது அவ்வுருவம் எழுதிய சுவடே தெரியாமல் மறைந்திருந்தது. ஐயமும் வியப்பும் அடைந்த அவர் மீண்டும் அங்கேயே ஆஞ்சநேயர் உருவினை வரைந்தார். அடுத்த நாள் அதுவும் மறைந்திருந்தது. இவ்வாறு அவர் வரைவதும் உருவம் மறைவதுமாகப் பலநாட்கள் சென்றன. இறுதியாக ஓடிப்போகும் ஆஞ்சநேயரை நிறுத்திவைக்க அவர் அவரை இயந்திரத்திற்குள் அடைத்துவிட்டார் அதை ஒட்டி எழுப்பிய ஆலயத்திலும் ஆஞ்சநேயரை இயந்திரத்திற்குள்ளேயே அடைத்து வைத்திருக்கின்றனர். கர்ப்பக்கிரகத்தில் உள்ள மூல உருவமே யந்திரவடிவம் அமைந்தது. பத்மதளத்தோடு கூடிய ஒரு வட்டத்தின் நடுவே ஆறு கோணம் கொண்ட யந்திரம் வரையப்பட்டுள்ளது. அதன் மத்தியில் ஆஞ்சநேயர் அமர்ந்தநிலையில் காணப்படுகின்றார். கோணங்களிலே பீஜாக்ஷரங்கள் உள்ளன. வட்டத்தின் உட்புறம் தியானஸ்லோகம் கிரந்த எழுத்தில் உள்ளது.

யோக ஆஞ்சநேயர்:—

சிங்கபுரத்தில் உள்ள ஒரு சிறிய குன்றில் யோக ஆஞ்சநேயர் இருக்கின்றார். தம்முடைய தலைவரான நரசிம்மரை எதிர்நோக்கியவராய் தம்முடைய வீர உணர்ச்சியையெல்லாம் அடக்கியவராய் நரசிம்மரைப்போலவே யோகநிலையில் இருக்கின்றார். இத்தலத்திலன்றி வேறெங்கும் யோக ஆஞ்சநேயரைக் காண இயலாது என்கிறார்கள். இவர் யோக மூர்த்தி மட்டுமல்ல; அற்புதமான அஹிம்சா தர்மத்தை நிலைநிறுத்திய மூர்த்தியும் ஆவார். தவிர மக்கள் பிணிபோக்கும் மருத்துவராக அமைந்து பெரும் புகழைத் தேடிக் கொண்டிருக்கின்றார். மக்களுடைய, சிறப்பாகப் பெண்களுடைய தீராத உடல்நோயினை மட்டுமன்றி மனநோயினையும் தீர்த்து வைக்கின்றார். பேய் பிசாசு பிடித்துள்ள பெண்களை இங்கு கூட்டி வந்து மலைமேலுள்ள அனுமந்த தீர்த்தத்தில் மூழ்கி எழச் செய்கின்றனர். பின் கூட்டிவந்து சந்நிதியில் நிறுத்திவிட்டால் சிறிது நேரம் ஆடினாலும் பின் அமைதியடைந்து தூங்கிவிடுகின்றனர். எழும்போது பிணி நீங்கி எழு

கின்றனர். இதனால் கார்த்திகைமாதம் எல்லா ஞாயிற்றுக் கிழமைகளிலும் சுற்று வட்டாரத்திலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் இங்கு வருகின்றனர்.

இந்த ஆஞ்சநேயர் நான்கு கரங்களுடன் காட்சி தருகின்றார். இருகரங்களில் சங்கு, சக்கரம் தாங்கியுள்ளார். அந்தப் பகுதியில் கொடுமைகள் பல இழைத்து வந்த காலகேய அரக்கர்களை அடக்கப் பேரிடும்போது மன்னன் இந்திரதுயும்னனுக்கு விஷ்ணு உதவியாக ஆஞ்சநேயரை சங்குசக்கரத்துடன் அனுப்பி வைத்தாராம்[1] பிள்ளைவரம் வேண்டி இவரை வழிபடுவோர் குறையும் நீக்குகின்றார் என்று கூறப்படுகின்றது.

வால் அறுபட்ட ஆஞ்சநேயர்:—

இவர் இராமேஸ்வரத்தில் எழுந்தருளியிருக்கின்றார். காசியிலிருந்து விசுவநாதலிங்கம் கொண்டுவரச்சென்ற ஆஞ்சநேயர் வருவதற்குத் தாமதமாகவே குறிப்பிட்ட வேளையில் இராமன் சீதையைக் கொண்டு மணலால் இலிங்கம் அமைக்கச் செய்து பூஜையை முடித்து விடுகிறார். திரும்பிய ஆஞ்சநேயர் அதனைக் கண்டு சினம்கொள்ள இராமன் சீதை பிடித்து வைத்த இலிங்கத்தை அப்பால் எடுத்தெறிந்து விட்டு அவர் கொண்டுவந்தஇலிங்கத்தைப்பிரதிஷ்டை செய்துவிடுமாறு கூறுகிறார். ஆத்திரத்தில் மணல்லிங்கத்தை அப்பால் தள்ள முயன்ற ஆஞ்சநேயர் அது முடியாமல்போகவே வாலினால் சுற்றித் தம் பலம் கொண்ட மட்டும் இழுக்கின்றார். வால் அறுந்து விடுகின்றது. பின் தம்தவறுணர்ந்து இராமனிடம் மன்னிப்புப் பெறுகின்றார். இங்கு வால் அறுபட்ட நிலையில் ஆஞ்சநேயருடைய சிலையைக் காணலாம்.

வீர ஆஞ்சநேயர்:—

வட ஆற்காடு மாவட்டத்தில் களம்பூரை அடுத்த சிறிய ஊர் கஸ்தப்பாடி. இவ்வூரில் உள்ள சிறிய கோயிலில் அனுமாருக்கு ஒருசிறுசந்நிதி உண்டு. அங்குள்ள அனுமாரை வீர ஆஞ்சநேயர் என்றழைக்கின்றனர். மகேந்திர மலையின் மீது அனுமார் கடலைத் தாண்ட நின்ற நிலையையே அங்குள்ள கற்சிலை காட்டுகின்றது. செகந்திராபாத் ரயில் நிலையத்திற்கு அருகாமையில் உள்ள பஞ்சமுக ஆஞ்சநேயருடைய ஆலயத்தின் கர்ப்பக்கிரகத்தில் பஞ்சமுக ஆஞ்சநேயருடன் ஒருகையில் கதையும் மற்றொரு கையில் சஞ்சீவி பர்வதமும் கொண்டு நிற்கும் வீர ஆஞ்சநேயருடைய உருவமும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

ஜன்மபூமி ஆஞ்சநேயர்:—

பன்னூரில் உள்ள ஆஞ்சநேபர் ஆலயத்தில் கையைக் கூப்பிக்கொண்டு பவ்யமாக நிற்கும் பக்த ஆஞ்சநேயர் ஜன்மபூமி ஆஞ்சநேயர் என்ற திருநாமம் தாங்கியிருக்கின்றார்

---

1 ஸ்ரீ ஆஞ்சநேய புராணம். கார்த்திகேயன் பக்கம்: 401

ஸ்ரீ பிரபத்யாஞ்சநேயர்:—

மங்களகிரி (ஆந்திரா) கல்யாணசரஸ் என்ற திருக்குளத்தின் கரையில் இந்த ஆஞ்சநேயர் கோயில் கொண்டுள்ளார் இவரே மங்களகிரியின் காவல்தெய்வம். இராமவதாரம் முடிந்து ஸ்ரீமத்நாராயணன் வைகுண்டம் செல்லும்போது ஆஞ்சநேய சுவாமி தாமும் வைகுண்டத்திற்குப் போக விரும்பினாராம். அப்போது ஸ்ரீமத்நாராயணன் ஆஞ்சநேயரை மங்களகிரியிலேயே தங்கி நரசிமமரை வழிபட்டுக் கொண்டிருக்கும் படிப் பணித்து விட்டுச் சென்றதாகத் தலபுராணம் கூறுகின்றது.

இங்ஙனம் இராமாயணத்தில் வானரராகக் காட்டப்பட்ட அனுமார் ஒருசில மாற்றங்களுடன் பலஇடங்களில் கோயில் கொண்டுள்ளார்.

தமிழகத்தில் வழிபாடு

"ஆலயந் தொழுவது சாலவும் நன்று" என்பது ஔவையின் திருவாக்கு. முடவனுக்கு ஊன்றுகோல் போன்று பாமரமக்களுக்கு உருவவழிபாடு பயன்படுகின்றது. அதனால்தான் அன்றும் இன்றும் இறைவனின் திருஉருவங்களை மிகுந்த சிரத்தையுடன் ஆலயங்களில் குடியேற்றுகின்றோம் இறைவன் உறைவிடம் ஆகவே தமிழில் ஆலயங்கள் "கோயில்" என்றழைக்கப் படுகின்றன. அக்கோயிலுள் இறைவன் வாழ்கின்றான் என்ற நம்பிக்கை ஒவ்வொரு பக்தனுக்கும் உண்டு தாங்கள் வாழ்வது போலவே இறைவனுக்கும் நீராட்டுதல், உணவு படைத்தல் போன்ற கருமங்கள் செய்து வாழச் செய்கின்றனர். அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனை அடியவர்கள் தங்கள் அகத்துள் சிறைப்படுத்துவது போல அவனுக்கு ஆலயங்கள் பலவற்றை நினைத்த இடங்களில் எல்லாம் தோற்றுவித்து உறைய வைத்தனர். இதனால் ஆண்டவன் இல்லங்கள் எங்கும் தோன்றின. அதிலும் தமிழகத்தில் மிக அதிகமாகத் தோன்றின. "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டா" என்ற பழமொழியே இங்கு உண்டு. கோயில்களின் சிறப்பால் மட்டுமே பெருமை பெற்ற ஊர்களும் பல உண்டு. தமிழகப் பெருமக்கள் ஆஞ்சநேயரை எழுந்தருளச் செய்துள்ள இடங்களுள் சிலவற்றை இங்குக் காண்போம்.

அரங்கன்சூழ் அரங்கர் கலியபெருமாள் கோயில்:—

இங்கு சுமார் 12 அடி இருக்கும் கம்பம்தான பெருமாள். இந்தக் கம்பத்தின் அடிபாகத்தில் சிறிய திருவடியின் உருவம் கல்லிலே செதுக்கப்பட்டிருக்கின்றது.

அழகர்கோயில்:— அனுமன் தீர்த்தம் இங்குண்டு.

இந்தளூர்:— பரிமளரங்கநாதன் கோயிலில் தனி சந்நிதி உண்டு. சனிக்கிழமைகளில் இங்கு குடிகொண்டுள்ள ஆஞ்சநேயரைத் தரிசிக்கப் பலர் வருவதுண்டு.

ஈரோடு:— கஸ்தூரி ரங்கப்பெருமாள் கோயிலில் அனுமன் சந்நதிவிஸ்வத்சேனரையும் திருப்பாதத்தையும் அடுத்துள்ளது. சுமார் நாலடி உயரமுள்ள ஆஞ்சநேயர் நல்ல குங்கிலியத்தால் அழகு செய்யப்பட்டுள்ளார்.

ஊத்துக்குளி:— பொள்ளாச்சியை அடுத்துள்ள இக்கிராமத்தில் அதன் ஜமீன்தார் அரண்மனைக்குள் நான்கு அல்லது ஐந்தடி உயரததில் இருக்கிறார் இந்த அனுமார். மேருகிரிக்கும் மீதுற நிற்கும் பெருமெய்யராகக் காட்சி கொடுக்கின்றார்.

கபித்தலம்:— ஆஞ்சநேயரின் தவத்திற்கு இரங்கிப் பெருமாள் காட்சி அளித்ததால் இத்தலம் கபித்தலம் எனப் பெயர் பெற்றது

காஞ்சிபுரம்:— ஈசனை வழிபடும் ஆஞ்சநேயரைக் காஞ்சி கைலாசநாதர் கோயிலில் காணலாம். சிவலிங்கத்தை வழிபடும் நிலையில் உள்ள ஆஞ்சநேயரை வேறெங்கும் காணமுடியாது. இராமன் இங்குதான் அனுமனுக்கு 108 உபநிடதங்களையும் உபதேசித்தான் என்று கூறப்படுகின்றது.

காரைமடை:— அரங்கநாதரின் கருப்பக் கிருக வெளிச்சுவரில் ஆண்டாள் சந்நிதியை அடுத்து ஆஞ்சநேயரின் சந்நிதி வடக்குப் பார்த்து உள்ளது. ஆஞ்சநேயரின் முகம் மேற்கு நோக்கி இருக்கின்றது. ஞாயிற்றுக் கிழமைகளில் பக்தர்கள் வடைமாலை சாற்றி வழிபடுகின்றனர்.

குடந்தை:— இங்குள்ள இராமசாமி கோயிலின் இராமாயணச் சிற்பங்கள் புகழ் பெற்றவை. அங்கே இராவணனுடைய சபையில் கம்பீரமான தோற்றத்தில் வாதிடும் மாருதியை இன்றுமுழுவதும் பார்த்துக் கொண்டிருக்கலாம். காவேரிப் படித் துறையில் ஓர் ஆஞ்சநேயர் கோயில் உள்ளது.

குருந்தமலை:—

கோயிலின் எதிரிலுள்ள மலைச்சரிவில் இரு சுனைகள் உள்ளன. அவை சுஜபுஷ்கரணி, அனுமந்தசுனை என்று அழைக்கப்படுகின்றன. இதன் எதிரில் அனுமார் கோயில் உள்ளது. அனுமார் பக்கத்தில் உள்ள சஞ்சீவி மலையில் ஒரு காலும் இங்கு ஒரு காலும் வைத்தாகக் கதைஉண்டு. அதன் நினைவாக அனுமாருக்குக் கோயில் கட்டியுள்ளனர். இங்கு எழுந்தருளியிருக்கும் அனுமாரின் உயரம் மூன்றடி. ஓங்கிய கை வலக்கை. இடது கையில் தாளத்துடன் தாமரைமொட்டு உள்ளது. கையில் கடகமும் மோதிரமும் காணலாம். இடையிற் சதங்கையுடனும் வாலில் மணியுடனும் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றார்.

குரக்குக்கா:— இங்குள்ள சிவன் கோயிலில் அனுமார் திருவுருவங்கள் உள்ளன.

சண்பகாரண்யம்:—

தஞ்சை மாவட்டத்தில் பாபநாசம் ரயில்நிலையத்திற்கு வடக்கே இரண்டு மைலில் உள்ள சண்பகாரண்யம் என்றதலம் ஆஞ்சநேயர் தலமாகச் சொல்லப்படுகின்றது. கஜேந்திரர்க்கும் ஆஞ்சநேயர்க்கும் பரந்தாமன் காட்சி தந்த இடம் இது

சிருங்கிரி:– பஞ்சமுக ஆஞ்சநேயர் அனந்தமங்கலத்தில் உள்ளதைவிட உருவத்தில் சிறியவராய் இவண் வீற்றிருக்கின்றார்

சிவன்மலை: – இங்கு சிவனை அனுமார் வழிபட்டமையின் அனுமார் சந்நிதியுண்டு. ஆனால் ஆலயம் அனுமார் கோயில் என்றே அழைக்கப்படுகின்றது.

சுசீந்திரம்:—

பதினெட்டடி உயரத்தில் அஞ்சலி ஹஸ்தத்துடன் நின்றருளும் அனுமாரது சிலை அழகிலும் கம்பீரத்திலும் பாரதத்திலேயே சிறந்துவிளங்குகின்றது ஒரே கல்லில் செதுக்கப்பட்ட இச்சிலை இம்மாவட்டச் சிற்பிகளின் கலைத்திறனுக்குத் தக்க சான்று நெடுநாள் மண்ணுக்குள் புதைந்துகிடந்த இத்திரு உருவம் கி பி 1872 இல் கோவில் புதுப்பிக்கப்படும் பொழுது கண்டெடுக்கப்பட்டது. இப்பகுதியில் படையெடுத்து வந்த சந்தாசாகிபினால் அனுமாரின் திருஉருவம் கீழே தள்ளிவிடப் பட்டதென்றும், இச்சிலை மிகுந்த உக்கிரத்தோடு இருந்தமையின் இவ்வூரில் பசியும்பிணியும் தலைவிரித்தாடின; அதனால் ஊர் மக்கள் அதைக் கீழே தள்ளினர் என்றும் கூறப்படுகின்றது. இப்பெரியசிலை நிறுத்தப்படக் கோவிலில் தகுதியான இடம் கிடைக்காமையின் 57 வருடங்கள் வெயிலையும் மழையையும் தாங்கிக்கொண்டு கோபுரத்தின் அருகிலேயே கிடந்தது. 1929 இல் இராமபிரான் சந்நிதியின் முன்உள்ள இடமே ஏற்றது எனத் தேர்ந்து அனுமார் திருஉருவச்சிலையை அங்குப் பிரதிஷ்டை செய்தனர்.

அனுமாரை சுரசை எடுத்துவிழுங்க அவர் தன்உருவைச் சிறிதாக்கி அந்த அரக்கியின் காதுவழியே வெளியேறிய நிகழ்ச்சி அவர் சிலையினருகே உள்ள தூணில் அழகாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. இதுவே அனுமார் சிலைகளில் மிகவும் சிறியதாக இருக்க முடியும்.

தீர்த்தயாத்திரை செய்வோர் கங்கை நீரையும் பன்னீரையும் அனுமாரின் தலைமீது விட்டு, பாதத்தினை அடையும் அந்நீரைத் தீர்த்தமாக அருந்துகின்றனர். இவ்வனுமாருக்குச் சாத்தப்படும் வடைமலையில் உள்ள வடைகளின் எண்ணிக்கை ஆயிரமாகும்.

செங்கற்பட்டு: –

நெடுஞ்சாலையில் பிரயாணம் செய்வோர் இங்கே வந்து ஆஞ்சநேயருக்குப் பிரார்த்தனை செய்துவிட்டுச் செல்வது வழக்கம்.

சென்னை:—

மைலாப்பூர் பகுதியில் லஸ்முனையிலிருந்து சமஸ்கிருதக் கல்லூரி நோக்கிச் செல்லும் ராயப்பேட்டை நெடுஞ்சாலையில் ஆஞ்சநேயருக்கு ஓர் ஆலயம் உள்ளது இந்த ஆஞ்சநேயர் சிறந்த வரப்பிரசாதியாகக் கருதப்படுகின்றார். வியாழக்கிழமைகளில் இவரைத் தரிசிக்க வருவோர் கணக்கற்றோர். வடைமாலை சாற்றுவோர் முன்னதாகவே கோயில் அதிகாரிகளிடம் சொல்லிப் பதிவு செய்து கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் விரும்பும் நாட்களில் அச்செயலை நிறைவேற்ற முடியும்.

திருவல்லிக்கேணிக் குளத்தின் கிழக்குக் கரையில் ஆஞ்சநேயர் எழுந்தருளியுள்ளார். அவரைப்பற்றி ஒருவியப்பிற்குரிய செய்தி கூறப்படுகின்றது. ஒரு தலைமுறைக்கு முன் அவர்மேற்குக் கரையில் குடியிருந்தாராம். அவரை வழிபடும் பக்தர்களைச் சிலர் நையாண்டி செய்தனராம். சக்தியுள்ள தெய்வம் என்பதெல்லாம் வெறும்புரளி என்றனராம். மாருதி அன்றிரவே தம்முடைய சக்தியை எடுத்துக்காட்ட கிழக்குக்கரையில் எழுந்தருளினராம். மறுநாள் காலையில் அதைக்கண்டு ஏளனம் செய்தோர் மனம்மாறி அவரை வழிபடத் தொடங்கினராம்.

அதற்கு வடக்கில் ஹனுமந்தராயன் கோயில் தெருவில் உள்ள அனுமார் கோயிலும புகழ்பெற்ற ஒன்றெனக் கூறப்படுகின்றது. பல தலைமுறைகளுக்கு முன்னர் ஒருவர்கனவில்தோன்றித் தமக்கு அங்கு ஓர் ஆலயம் எழுப்பவேண்டினாராம். அவரும் ஆலயம் நிறுவ அவண் எழுந்தருளி பக்தர்களின் இன்னல் களைந்து வருகின்றார்.

தண்ணித்துறை மார்க்கெட் அருகில் அனுமாருக்குத் தனிக்கோவில் எழுப்பப்பட்டிருக்கின்றது.

மாம்பலம் சிவ-விஷ்ணு கோயில், வடபழனி ஆண்டவர் கோயில், திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் ஆகியவற்றில் அனுமாருக்குத் தனியாகச் சந்நிதி இருக்கின்றது.

இவ்வாறு சென்னைநகரில் மட்டுமே அனுமார் பல இடங்களில் கோயில் கொண்டுள்ளார்.

சேவூர்:— இங்குள்ள கோயிலின் எதிரே உள்ள மேட்டில் அனுமந்தராயன் கோயிலும் உள்ளது.

தான்தோன்றிமலை:— இக்குடைக்கோயிலின் வலது புறப்படி வழியிறக்கத்தில் அனுமார் சந்நிதி உள்ளது.

திருக்கண்ணங்குடி :—

பக்த அனுமார் கைகட்டி வாய் புதைத்து நிற்கும்கோலத்தில், பூரண பிரம்மச்சரியக் களையும் பணிவும் பக்தன் இருக்க வேண்டிய நிலையும், பக்தியின் அடையாளமும் அறிவின் ஆழமும் உயர்பண்பும் வெளிப்படுகின்றன.

திருக்கரம்பனூர்:— பெருமாள் சந்நிதிக்கு வடபுறம் ஒரு அழகான ஆஞ்சநேயர்கோயில் இருக்கின்றது. வாலைத் தலைமேல்

தூக்கிக்கொண்டு கூப்பிய கரங்களோடு இங்கு ஆஞ்சநேயர் வீற்றிருக்கின்றார். இக்கோயில் உத்தமர் கோயில் என்றழைக்கப்படுகின்றது. ஆஞ்சநேயர் இல்லாதஇடமில்லை. பெருமாள் தூணிலும் இருப்பார் துரும்பிலும் இருப்பார் என்பதுபோன்றுஇவரும் தூணில் கூட சில இடங்களில் புகழ்பெற்று விளங்குகின்றார்.

திருச்சிராப்பள்ளி:—

ரயில்நிலையத்தில் இங்கு ஆஞ்சநேயர் குடி கொண்டுள்ளார். 1928ஆம் ஆண்டிற்கு முன்பு இரண்டாம் பிளாட்பாரத்தின் கிழக்குக் கோடியில் இக்கோயில் இருந்தது. அப்போது நாகபட்டினம் ஈரோடு இரண்டையும் ரயில் பாதையில் இணைக்க வேலை தொடங்கப்பட்டு இருந்தது. அப்போதைய மாவட்டப் பொறியாளர் ஆஞ்சநேயருடைய சிலையை வேறு இடத்திற்கு அகற்ற உத்தரவிட்டார். ஆலயம் இடிக்கப்பட்டது. ஆனால் சிலையை அங்கிருந்து அகற்றமுடியவில்லை அன்றிரவே ரயில்வேயின் ஏஜண்ட் அச்சிலை அருகில் இரண்டு ரயில்இன்ஜின்கள் தடம் புரண்டு விழுந்ததாகக் கனவு கண்டார். காலையில் எழுந்துவந்து பார்த்தபோது பாதையின் இருபக்கங்களிலும் ஆஞ்சநேயர் சிலை அருகில் இரு ரயில் இன்ஜின்கள் தடம்புரண்டு கிடந்தன. அவருக்குத் தம்முடையதவறு புரிந்துவிட்டது உடனே ஆஞ்சநேயர் ஆலயம் அமைக்க அருகிலேயே வேறு இடம் தந்ததோடு செலவிற்காக 800ரூபாயும் கொடுத்தார். அதன்பின் எளிதாகச் சிலையை அங்கிருந்து அகற்றிப் புதிய இடத்தில் பிரதிஷ்டை செய்திருக்கின்றனர்.

திருச்செங்கோடு:— ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் ஆலயத்தின் பெருமாள் சந்நிதி எதிரே அனுமார் அமர்ந்துள்ளார் இக்கோயில் மலைமீது உள்ளது.

திருநாராயணபுரம்:— இரணிய சம்காரத்துக்குப் பின் பிரகலாதன் நரசிம்மமூர்த்தியை நெருங்கித் தனக்கு சாந்தகோலத்தில் காட்சிதர வேண்டும் என வேண்ட அகண்ட காவிரியின் வடகரையில் உள்ள இத்தலத்தில் அவனுக்குக் காட்சி கொடுத்திருக்கின்றார். இங்குப் பிரகலாதன் தவம் இருந்து வேதநாராயணப் பெருமாளாகத் தரிசனம் செய்திருக்கின்றான். அவன் தவத்திற்கு சுக்கிரீவன் அனுமான்முதலியோர் உடன் இருந்து உதவியிருக்கின்றனர் துவஜஸ்தம்பத்தின் கீழ்ப்புறம் தரிசனம் தரும் ஆஞ்சநேயர் அருட்சக்தி நிரம்பியவர். இவர் பக்தர்கள் வேண்டுகோளை உடனுக்குடன் நிறைவேற்றி வைப்பதாகக் கூறப்படுகின்றது.

தோவாளை:— இங்குள்ள கிருஷ்ணன் கோயிலில் அனுமாரின் சிலை பெரிய அளவில் உள்ளது.

நாமக்கல்:—

பதினெட்டு அடி உயரம் இருக்கும் ஆஞ்சநேயரால்தான் இங்கு நரசிம்மர் கோயில் எழுந்தது என்பர். நரசிம்மர் சந்நிதி

யின் நேரே இருக்கும் துவாரம் வழியே பார்த்தால் அனுமாரின் கண்கள் தெரியும். இவ்வாறு பெருமாளைத் தரிசித்த வண்ணம் இருக்கிறார் சிறியதிருவடி. மேற்கூரை கிடையாது. இவ்வூர், அனுமனால் இராமகாரியத்திற்காகச் செல்லும்போது கொண்டு வரப்பட்டமலையாதலின் இராமகிரி, நாமகிரி என்றுவழங்கித் தற்பொழுது நாமக்கல் என வழங்கப்படுகிறது என்பர் திரு ரா. பி. சேதுப்பிள்ளை இவ்வனுமாருக்கு விழாநாளில் 500ரூபாய் செலவில் வடமாலை சாத்தப்படுகின்றது. இவ்வாஞ்சநேயர் இராமபர்வதத்தைக் கையில் கொண்டு பறந்து வந்தபோது இங்கே வைத்ததால் சாளக்கிராமச் க்ஷேத்திரம் எனப்பெயர் பெற்றதாகப் புராணம் கூறும். நாமக்கல்மலையைச் சுற்றியுள்ள ஒன்பது தீர்த்தங்களில் அனுமன் தீர்த்தமும் ஒன்று.

நீடாமங்கலம்: இங்குள்ள கோயிலில் ஆஞ்சநேயர் சந்நிதி உண்டு.

நைனாமலை:– இம்மலையின் அடிவாரத்தில் உள்ள மண்டபத்தில் ஸ்ரீ ஆஞ்சநேயமூர்த்தி திருச்சந்நிதி கொண்டுள்ளார். மலைமீதுள்ள வரதராஜசுவாமி ஆலயத்தின் நாற்கால் மண்டபத்தை அடுத்துத் தெற்கு நோக்கி ஆஞ்சநேயர் எழுந்தருளியிருக்கின்றார். இடக்கையை உயர்த்தி வலக்கையைத் தொடையில் ஊன்றியுள்ளார் கையில் கதை உள்ளது. தலைக்குமேல் வால் உயர்ந்து நிற்கிறது.

பட்டீசுவரம்:- இவ்வூர்க் கோயிலில் அனுமார் சிலை உள்ளது.

படவீடு:- போளூரிலிருந்து வேலூர் செல்லும் பாதையில் பத்தாவது மைலில் சந்தவாசல் என்ற சிற்றூர் இருக்கின்றது. அதன் மேற்கே மூன்றுகல் தொலைவில் இக்கிராமம் உள்ளது. இங்கு ஜமதக்கினி முனிவரின் ஆசிரமம் இருந்த பகுதியில் கண்டலநதி ஓடுகின்றது. அங்கு இராமபிரானும் பக்த ஆஞ்சநேயரும் குடிகொண்டுள்ளனர்.

பத்மநாபபுரம்:- இராமசாமி கோயிலின் மூலவரின் இடதுபக்கம் நிற்கும் அனுமார் திருவுருவங்கள் பஞ்ச உலோகத்தால் ஆனவை இங்கு வெள்ளியினால் ஆன அனுமவாகனம் ஒன்றும் உள்ளது

பாண்டிக்கொடுமுடி: –

மகுடேசுவரர் ஆலயத்தில் சுவாமி சந்நிதிக்கும் தேவிசந்நிதிக்கும் இடையில் திருமால் வீரநாராயணப் பெருமாள் என்ற திருநாமத்தோடு கோயில் கொண்டுள்ளார். கருவறையின் உள்ளேயே பரிவாரதேவதைகளுள் ஒன்றாக ஆஞ்சநேயர் வீற்றிருக்கின்றார். திருமங்கை நாச்சியார் சந்நிதியின் தெற்கில் ஆஞ்சநேயர் சந்நிதியும் உள்ளது.

மகாபலிபுரம்:- இங்கு 18 அல்லது 19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சிலை ஒன்று உள்ளது. இந்த ஆஞ்சநேயர் அஞ்சலி செய்யும் கோலத்தில் இருக்கின்றார்.

மகேந்திரகிரி:- கன்னியாகுமரி மாவட்டத்தின் ஒருமருங்கே உள்ள இம்மலையிலிருந்து புறப்படும் ஆறு அனுமார் பெயராலேயே வழங்குகிறது. அனுமார் காலடிபட்ட பெருமை இம்மலைக்கு உண்டு.

மருத்துவாழ்மலை:- குமரிமுனையிலிருந்து ஆறுமைல்வடமேற்கே இம்மலை உள்ளது. மருத்துமலையைத் தூக்கிக்கொண்டு இலங்கைக்குத் தாவிச் சென்றபோது அம்மலையிலிருந்து விழுந்த ஒருதுண்டுதான் இம்மலை என்பர். இங்குக் காணப்படும் சிவலிங்கம் அனுமாரால் பிரதிஷ்டைசெய்யப்பட்டது இம்மலைக் கார்த்திகைதீபம் காணவேண்டிய காட்சி.

மணிமங்கலம்:— இங்கு ஆஞ்சநேயர் கோயில் ஒன்று உள்ளது.

மதுராந்தகம்:- எங்கும் இராமனுடன் காணப்படும் அனுமார் இங்கு தனித்து நிற்கின்றார். இராமன், சீதை இலக்குவனோடு இங்கு வந்திருந்த போது அனுமார் பரதனிடம் இராமன் வரவினை அறிவிக்கச் சென்றிருந்தார். அதன்பின் இங்கு வந்து இங்குள்ள இராமச்சந்திர புஷ்கரணியில் நீராடினார் என்பர். இதன் கரையில் தனிக்கோயில் கொண்டுள்ளார்.

மதுரை:- மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் ஒரு தூணில் அனுமார் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. இந்த உருவம் வளர்ந்து வருகின்றது என்றும் அது வளர்ந்துமேல்விதானத்தை எட்டும்போது இந்த உலகம் அழியும் என்றும் மக்களிடையே ஒரு நம்பிக்கை நிலவுகின்றது.

மொரண்டிப்பாளையம்:- ஸ்ரீநிவாசப்பெருமாள் கோயில் அல்லது வெங்கடேசப் பெருமாள் விண்ணகரம் என்று அழைக்கப்படும் இவ்வூர்க் கோயிலில் ஆஞ்சநேயர் சந்நிதி பிரகாரத்திலேயே உள்ளது. உறியடி உற்சவத்தன்று அனுமந்தவாகனம் பெருமானை உலாவரப் பயன்படுகின்றது.

மேல்பாடி:- பொன்னியாற்றின் மேற்கரையில் உள்ளஇந்தக்கிராமத்தில் வீர ஆஞ்சநேயசுவாமி ஆலயம் ஒன்று உள்ளது. ஆஞ்சநேயரின் உருவச்சிலை நதிப்படுகையில் கிடைத்ததாகவும் அது சோமநாதேச்வரர் கோயிலைச் சேர்ந்ததாகவும் கூறப்படுகின்றது. இவ்வூர் மக்கள் வீர ஆஞ்சநேயருக்கு பக்தி சிரத்தையுடன் லட்சார்ச்சனையும் உற்சவங்களும் செய்து வருகின்றனர்.

இராமேஸ்வரம்:– இங்குள்ள அனுமாரின் சிறியசிலை 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. அனுமார் தம்கைகளில் இரு உருளைகளைத் தாங்கிக் கொண்டிருப்பதாக இது அமைந்துள்ளது. மற்றொரு பெரியசிலை ஆண்டவனின் ஆணையை எதிர் நோக்கி அதனை நிறைவேற்றக் காத்திருப்பதாக உள்ளது.

ஸ்ரீமுஷ்ணம்:– இராமகாதையைப் பாராயணம் செய்யும் அனுமாரை இங்குப் பார்க்கலாம். பூவராகவன் ஆலயத்திற்கு வடமேற்கே உள்ள நந்தவனத்தில் தனிக்கோவிலில் இக்கோலத்தோடு இருக்கின்றார். இராமன் பட்டாபிஷேகக் கோலத்தில் காட்சி தருகின்றான். பரதன் வெண்குடை பிடிக்க சத்ருக்கனன் சாமரம் வீசுகின்றான். அங்கே அனுமார் இராமாயணத்தைப் பாராயணம் செய்து கொண்டிருக்கின்றார்.

ஸ்ரீவைகுண்டம்:– இராமன் ஆஞ்சநேயரை அணைத்துக் கொண்டதுபற்றி அறிவோம். ஆனால் இளையபெருமாள் அனுமாரை அணைத்தபடி நிற்கும் திருக்கோலத்தை திருநெல்வேலி மாவட்டத்தில் ஸ்ரீவைகுண்டம் என்ற ஊரில் காணலாம். அங்குள்ள கள்ளப்பிரான் கோயில் முன் மண்டபத்தில் இலக்குவன் ஆஞ்சநேயரையும் அங்கதனையும் அணைத்தபடி நிற்கின்றான்.

இவ்வாறாகப் பற்பல இடங்களில் எழுந்தருளி மக்களுக்கு அருள் செய்து வருகின்றார் ஆஞ்சநேயர். மேற்கூறப்பட்ட கோயில்கள் மட்டுமன்றி இன்னும் பல அனுமார் கோயில்களும் உண்டு. எனினும் வழிபாட்டுச் சிறப்புடையவை இக்கோயில்களே.

பிற மாநிலங்களில் வழிபாடு.

தமிழகத்தில் மட்டுமன்றி பாரதத்தின் பல்வேறு மாநிலங்களிலும் அனுமார் வழிபடப்படுகின்றார். வடநாட்டில் இராம ஜெயந்தியும் நவராத்திரியும் தொடர்புபடுத்திக் கொண்டாடப் படுகின்றன. அவ்வமயம் நடைபெறும் 'இராமலீலா' என்றநாடகத்தில் ஆஞ்சநேயரே சிறப்பிடம் பெறுகின்றார். இதிலிருந்து அனுமாருக்கு வடக்கில் உள்ள புகழ் தெரியவரும். தவிர சைவ வழிபாட்டை விட இங்கு வைணவ வழிபாடே மிகுதியாகலின் ஆஞ்சநேயரின் சிறப்பும் ஓங்கியிருக்கின்றது. பொதுவாக, பிற மாநிலங்களில் நடைபெறும் அனுமவழிபாட்டைப் பற்றிக் கீழே காணலாம்.

ஆந்திரா:— ஆந்திராவின் கிராமப்புறங்களில் ஆஞ்சநேயர் ஆலயங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. அனுமவழிபாடும் இங்கு அதிகமாகவே நடைபெறுகின்றது. செகந்திராபாத்தில் பஞ்சமுக ஆஞ்சநேயர் ஆலயம் ஒன்றும் காணப்படுகின்றது.

பத்ராசலம் கோதாவரிக் கரையில் ஒரு ஆஞ்சநேயர் ஆலயம் இருக்கின்றது. அதனை வழிபட்ட பின்பே பத்ராசலம் சீதா ராமச்சந்திர ஆலயத்திற்குள் சென்று இராமரை வழிபடுகின்றனர். கொடிக்கம்பத்தின்கீழ் கைகூப்பியபடி ஆஞ்சநேயர் இருக்கின்றார். இவரை வழிபட்டபின் பலிபீடத்தை வலம்வந்து சுவாமியைத் தரிசிக்கின்றனர்.

விட்டல்வாடியிலும் அனுமார் கோயில் கொண்டிருக்கின்றார். பண்டரிபுரம் பாண்டுரங்கன் ஆலயத்தினுள் மரத்தினால் கட்டப்பட்டுள்ள சபாமண்டபத்தின் வலப்புறத்தில் ஒரு பெரிய ஆஞ்சநேயர்சிலை உள்ளது. அது சிவாஜியின் குருவான சமர்த்த ராமதாஸ் பிரதிஷ்டை செய்தது என்பர். அந்த மண்டபத்தில் பாண்டுரங்கனை நோக்கிக் 'காளா அனுமாரும்' கோயில் கொண்டிருக்கிறார்.

மங்களகிரியில் உள்ள பானக நரசிம்மராலயத்தில் வீர ஆஞ்சநேயர் குடிகொண்டுள்ளார் கிழக்குக் கோதாவரியில் இராமச்சந்திரபுரம் தாலுக்காவில் உள்ளது <u>திராட்சாராமம்</u> என்ற திருத்தலம். அங்குள்ள கோயிலின் உட்பிரகாரத்தின் கிழக்குவாயில் வெளியே மண்டபத்தில் ஆஞ்சநேயர் எழுந்தருளியுள்ளார். பொன்னூரில் உள்ள பாவநாராயணசுவாமி ஆலயத்தில் ஆஞ்சநேயர் சந்நிதி உள்ளது. தசாவதாரக் கோயிலின் எதிரே உள்ள மண்டபத்தில் பெரிய வீர ஆஞ்சநேயர் வீற்றிருக்கின்றார். இது 25 அடி உயரம் 10 அடி அகலம் 3அடி கனம் கொண்டது. விஜயவாடாவில் ஒரு தனி ஆஞ்சநேயர் கோயில் இருக்கின்றது.

இவ்வாறு பல இடங்களில் ஆஞ்சநேயர் ஆந்திராவில் குடி கொண்டு மக்களுக்கு அருள்செய்து வருகின்றார்.

கேரளம்:- கேரளத்தில் தலைச்சேரி நகருக்குக் கிழக்கே திருவெண்காடு என்ற திருத்தலம் இருக்கின்றது. இங்குள்ள இராமசுவாமி கோயிலில் கருவறைக்கு வெளியே கூப்பியகரங்களுடன் ஆஞ்சநேயர் இராமனை வழிபட்டுக் கொண்டிருக்கின்றார். இந்த ஆஞ்சநேயருக்கு அவல் நைவேத்தியம் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

திருச்சூர் ரயில் நிலையத்திலிருந்து பதினைந்து கல்தொலைவில் திருப்புரையூர் என்ற புண்ணியத்தலம் இருக்கின்றது. இங்குள்ள இராமர் கோயிலில் ஆஞ்சநேயருக்குத் தனிசந்நிதி உள்ளது. இத்தலத்தில் அவர் அருவமாக இருப்பதாகக் கூறுகின்றனர். "கண்டேன் சீதையை...... கண்டேன் சீதையை......," என்று எந்நேரமும் சொல்லிக்கொண்டே ஆலயத்தைச் சுற்றி வருகின்றாராம்.

திருவனந்தபுரம் பத்மநாப சுவாமி கோயிலும் மிகப் பெரிய அனுமார்சிலை உண்டு. இங்குள்ள கலைப்பள்ளியில் (School of Arts) சில ஆண்டுகளுக்கு முன் தந்தத்தில் அனுமார் சிலை செய்யப்பட்டது. அதில் அனுமார் தனது வலது கையை வாயின் மேலும் இடது கையை மார்பின் ஊடாகவும் வைத்திருக்கின்றார்.

பஞ்சாப்:- இங்கு ஆஞ்சநேயர் மூலநோயைத் தீர்க்கும் சக்தி உடையவராகக் கருதப்படுகின்றார். இந்நோயுடையவர் தம்கால் விரலில் வெள்ளை சிகப்பு பச்சை மஞ்சள் கறுப்பு என்று ஐந்து நிறங்களுள்ள நூலைப் பதினைந்து நாட்களுக்குக் கட்டியிருப்பார். இப்பதினைந்தாவது நாள் செவ்வாய்க் கிழமையாக இருக்கும்படிப் பார்த்துக்கொள்வர். அன்று ஆஞ்சநேயர் ஆலயம்சென்று காணிக்கை செலுத்தி வழிபடுவர். சிலசமயங்களில் பிணியுற்றோருக்கு மந்திரம் கூறப்பட்ட ஒரு வளையமும் தரப்படும். இதனை அவர் குறிப்பிட்ட சில நாட்களுக்கு அணிந்தால் மூலநோய் முற்றிலும் குணமாகி விடும் என்று பஞ்சாப் மக்கள் நம்புகின்றனர். இங்கு நவராத்திரியின் முதல் தினத்தில் இராமலீலா நாடகம் தொடங்கப்பட்டு பத்துதினங்கள் வரை தினமும் மாலையில் நடைபெறும். அனுமாருக்கு இந்நாடகத்தில் சிறப்பிடம் கொடுத்துள்ளனர். என்றோ பஞ்சாப்மாநிலத்தில் தோன்றிய இவ்வழக்கம் இன்று வட இந்தியா முழுவதும் பரவியுள்ளது.

மகாராஷ்டிரம்:- அனுமார் கிராமதேவதையாக இங்குப் பெருமளவில் வழிபடப்பட்டு வருகின்றார்.

மத்தியப்பிரதேசம்:- உஜ்ஜயினி நகரில் கோடி தீர்த்தக் குளம் என்றொரு தளம் உள்ளது. இராமர் பட்டாபிஷேகத்திற்காகப் பலபுண்ணிய தீர்த்தங்களிலிருந்தும் நீர் கொணர்ந்தாராம் அனுமார். அப்புண்ணிய தீர்த்தங்களில் இந்தக் குளமும் ஒன்று என்று கூறப்படுகின்றது. "அதன்கரையில் காகபுண்டி

என்ற மகரிஷி தவம் செய்தபோது அவ்வழி ஆஞ்சநேயர் வருங்கால் அவர் வால்பட்டு மகரிஷியின் தியானம் கலைந்தது; உடன் மகரிஷி ஆஞ்சநேயரிடம் அவர் கொண்டு செல்லும் புண்ணிய தீர்த்தங்களில் கொஞ்சம் கொஞ்சம் அந்தக் குளத்தில் விட்டால் அக்குளத்து நீரை எடுத்துச் செல்லத்தாம் அனுமதிப்பதாகக் கூறினர். அனுமாரும் அதனை ஏற்றுக்கொண்டு பிற புண்ணிய தீர்த்தங்களிலிருந்து தாம் கொண்டு வந்த நீரை அக்குளத்தில் கொஞ்சம் ஊற்றி மகரிஷியைத் திருப்திப்படுத்தி, பின் அக்குளத்து நீரையும் எடுத்துச் சென்றார்,'' என்று கூறப்படுகின்றது. பல தீர்த்தங்களின் நீரைப் பெற்றமையால் குளமும் கோடி தீர்த்தக்குளம் என்று பெயர் பெற்றிருக்கின்றது.

இது தவிர வேறுசில அனுமார் ஆலயங்களும் இங்குண்டு.

மைசூர்:- இங்கு இராமநகரம் என்னும் ஊருக்கு அருகில் ஹனுமந்தராயன் குடி எனும் ஊர் உள்ளது. இவ்வூர் மலைமீது ஆஞ்சநேயர் எழுந்தருளியிருக்கின்றார். இராம இராவணப்போரில் ஆஞ்சநேயர் உக்கிரமாகப் போரிடும் கோலத்தை நாம் விஜய நகரசாம்ராஜ்யத்தின் தலைநகராகத் தலைநிமிர்ந்து இருந்து இன்று இடிபாடுகளுடன் காணப்படும் ஹம்பியில் காணலாம். இரண்டாம் தேவராயரால் எழுப்பப்பட்ட விட்டலராயர் கோயிலில் இவ்வுருவம் உள்ளது. வாலினால் இரு அரக்கர்களைக் கட்டிப் பிடித்து வானிலே தூக்கிச் சுழற்றும் அதே நேரத்தில் மற்றொரு அரக்கனுடைய சிகையைப் பிடித்து உலுக்கும் தோற்றம் நம்மைக் கவர்வதில் வியப்பில்லை இங்குள்ள மால்யவந்தர் ரகுநாதர் கோயிலில் ஆஞ்சநேயருடைய அற்புதக்கோலமான பஞ்சமுகத்தைக் காணலாம்.

கொல்லூரில் உள்ள மூகாம்பிகை ஆலயத்தில் மேற்கு வெளிப்பிரகாரத்தின் வடபகுதியில் ஆஞ்சநேயர் அழகுடன் வீற்றிருக்கின்றார். இதனைப் பிரதிஷ்டை செய்தவர் ஸ்ரீவாதிராஜ சுவாமிகள். கோகர்ணத்தில் உள்ள திருக்கோகர்ண ஆலயத்தில ஆஞ்சநேயமூர்த்தி காணப்படுகின்றார். சங்கரநாராயண என்னும் தலம் கொல்லூருக்குத் தெற்கே உள்ள கோடேச்வரத்திலிருந்து வடமேற்கில் பதினைந்து கல் தொலைவில் உள்ளது. இங்குள்ள சங்கரநாராயண கோவிலில் பஞ்சமுக ஆஞ்சநேயர் எழுந்தருளியுள்ளார். குதிரை, சிம்மம், வராகம், கருடன், குரங்கு ஆகிய முகங்களுடன் அங்குசம் சூலம் கத்தி கதை மலை முஷ்டி பாசம் முதலிய ஆயுதங்களுடன் இவர் தம் அன்பர்களுக்கு அபயமளிக்கின்றார்.

தென்கன்னடமாவட்டத்தில் மங்களூர்க்குத் தென்கிழக்கே சுமார் அறுபத்தைந்து மைல் தொலைவில் இருக்கின்ற ஸ்ரீசுப்பிரமணிய என்ற திருத்தலத்தில் உள்ள ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி கோயிலின் மேற்குப்பிரகாரத்தில் ஆஞ்சநேயர் திருச்சந்நிதி கொண்டுள்ளார். உடுப்பித்தலத்தில் உள்ள கிருஷ்ணமடத்தில் ஆஞ்சநேயர் எழுந்தருளியுள்ளார். ஆஞ்சநேயரின் பிறபல சிற்பங்களும் இக்கோயிலில் உண்டு. உடுப்பிக்குத் தென்கிழக்கே

ஏழாவது மைலிலுள்ள பாஜகசேத்திரத்தில் 730 ஆண்டுகளுக்கு முன் ஸ்ரீமத்வாசாரியார் என்பவர் ஆஞ்சநேயரின் அவதாரமாகத் தோன்றினர் என்பர். இங்குள்ள ஆஞ்சநேயருக்கு ரங்கபூஜை நடைபெறுகின்றது. இச்சந்நிதியில் உடல்நலமில்லாதார், குறிப்பாக வயிற்றுக்கோளாறு உள்ளவர்கள் வெறும்தரையில் உண்பதாகப் பிரார்த்தனை செய்துகொண்டு அதனை நிறைவேற்றுகின்றனர். ரங்கபூஜையில் ஆஞ்சநேயருக்கு 'பஞ்சகஜ்ஜய' (கடலை, நெய், தேங்காய், சர்க்கரை, ஏலக்காய் சேர்ந்தது) என்ற பிரசாதத்தைப் படைக்கின்றார்கள்.

முல்பாகலில் ஆஞ்சநேயருக்கென 'வீர ஆஞ்சநேயர் ஆலயம்' எனத்தனி ஆலயமே உள்ளது. இவர் மிகுந்த புகழ்பெற்றவர். பிரம்மாண்டமான உருவில் வலக்கையை உயர்த்திக் கம்பீரமாக நிற்கின்றார். மகாபாரதப் போரின் போது அருச்சுனன் தேர்க்கொடியில் இருந்த மாருதி இவர். போரின்போது தேருக்கு ஆபத்து ஏற்பட்டால் கொடி சின்னபின்னமாகி விடுமே என்று கிருஷ்ணர் அருச்சுனனிடம் அந்த ஆஞ்சநேயரைப் பிரதிஷ்டை செய்துவிடும்படிக் கூறினாராம் அதன்படி 5000 ஆண்டுகளுக்கு முன் அர்ச்சுனனால் பிரதிஷ்டை செய்யப்பட்டார் ஆஞ்சநேயர். பச்சை சிவப்பு மஞ்சள் என்று வண்ணவண்ண ஒளியில் மாறி மாறி அவரைத் தரிசிக்கவைக்கிறார் அர்ச்சகர். இவர் இடுப்பிலே வீரவாள் இருக்கிறது. தினமும் தாமரைப் பூமாலை சாற்றி இவரை வழிபடுகின்றனர் இப்பகுதி மக்கள் திருப்பதி சென்று வெங்கடேசப்பெருமாளைத் தரிசிக்குமுன் இந்த ஆஞ்சநேயரை வழிபட்டுச் செல்கின்றனர். ஆலயத்தின் முன்மண்டபத்தில் கருங்கல்லில் ஓர் அனுமார் இருக்கின்றார். அதற்கு அஞ்சனகிரி என்றுபெயர். இம்மலை மீதுதான் சூரியபகவான் ஆஞ்சநேயருக்கு நவவியாகரணபண்டிதர் என்றபட்டம் அளித்தாராம்.

நரசிம்மதீர்த்தக்கரையில் யோகநரசிம்மர் சந்நிதிக்குமுன்புள்ள மண்டபத்திலும் ஆஞ்சநேயர் அழகாகவீற்றிருக்கின்றார். பெங்களூரில் இருந்து பதினேழாவது கல்லில் உள்ள அனுமந்தநகரில் ஆஞ்சநேயருக்குத் தனி ஆலயம் அமைத்து வழிபாடு நடைபெறுகின்றது. திருமுக்கூடலில் உள்ள அகத்தீச்வரர் ஆலயத்தின பின்புறம் ஆஞ்சநேயமூர்த்தி காவிரியை நோக்கியவாறு கோயில் கொண்டிருக்கின்றார். தலக்காட்டில் வீர ஆஞ்சநேயர் ஆலயம் ஒன்று உண்டு

பிலகிரிரங்கண்ண ஆலயத்தின் தென்மண்டபத் தூணில் ஆஞ்சநேயர்சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. மைசூர் சாமுண்டி மலையில் லட்சுமிநாராயணப் பெருமாள் கோயில் உளது. அங்கு கிழக்குப் பிரகாரத்திலுள்ள துளசிமாடத்திற்கு அருகில் ஓர் ஆஞ்சநேயர் தாமாகவே தோன்றியுள்ளார். இருளில்இவர் தெளிவாகத் தோன்றுவதுபோல் பகலில் தோன்றுவதில்லை. பசவங்குடி வியாசராயர்மடத்தில் ஆஞ்சநேயர்சந்நிதி உள்ளது. ஹம்பியில் கோதண்டராமர் ஆலயத்தை அடுத்து இராமதூதர் சற்று உயர

மான இடத்தில் திருக்கோயில் கொண்டுள்ளார். வியாசராஜ சுவாமிகள் பிரதிஷ்டை செய்த ஆஞ்சநேயமூர்த்தி இவர்தான் என்று கூறப்படுகின்றது. மால்யவந்தமலையில் உள்ள ரகுநாத சுவாமி ஆலயத்தின் கருவறையின் ஒரு கோடியில் ஆஞ்சநேய மூர்த்தியும் இருக்கின்றார்.

பேலூர் சென்னக் கேசவப்பெருமாள் ஆலயத்தில் கோபுர வாயிலுக்கு இடப்புறம் கிழக்குப் பிரகாரத்தில் ஆஞ்சநேயர் கோயில் கொண்டுள்ளார். சுஞ்ச்சன்கட்டே என்னும் இடத்தில் உள்ள கோதண்டராமசுவாமி ஆலயத்தில் கரம் குவித்து நிற்கும் ஆஞ்சநேயர் பக்திக்கு ஓர் இலக்கணமாய் திகழ்கின்றார்.

இராமநாதபுரத்தில் உள்ள இராமநாதேச்வரர் ஆலயத்தில் ஆஞ்சநேயரால் கருவறைக்கு வெளியே பிரதிஷ்டை செய்யப்பட்டு ஹனுமந்தேச்வரராக எழுந்தருளியிருக்கின்றார். இவரை முதலில் வழிபட்டபின்பே இராமநாதேச்வரரை வழிபடுகின்றனர். பட்டாபிராமன் ஆலயத்தில் ஆஞ்சநேயர் அஞ்சலி செய்த வண்ணம் நிற்கின்றார். ஸ்ரீரங்கப்பட்டினம் ஸ்ரீரங்கநாதர் ஆலயத்தில் உள்ள மண்டபத்தில் ஸ்ரீநிவாசரின் திருவடிகளில் பஞ்சமுக ஆஞ்சநேயர் தரிசனம்தருகின்றார். மேல்கோட்டை என்னும் ஊரில் யோகநரசிம்ம சுவாமி எழுந்தருளியுள்ள நரசிம்மமலையேறிச் செல்லும் பாதையில் ஏழு மண்டபங்கள் உள்ளன. ஆறுவது மண்டபத்தில் ஆஞ்சநேயர் எழுந்தருளியுள்ளார்.

இராஜஸ்தான்:– சூஜபூரா என்னும் கிராமத்தில் அனுமாரைப் புதுமையாகச் சித்தரித்துள்ளனர். ஒரு கல் மேடையின் மேல் உள்ள மூங்கில் மீது சிவப்புக்கொடி உள்ளது. மேடையும் சிவப்பு வர்ணம் பூசப்பட்டுள்ளது. இது இங்குள்ள அனுமார். டெல்வாரா என்னும் கிராமத்தில் ஓர் ஆஞ்சநேயர் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. இது இக்கிராமத்தை முன்பு ஆண்ட மன்னர்களால் எழுப்பப்பட்டது எனக்கூறப்படுகின்றது. இங்கு சமண மதத்தைச் சார்ந்த ஒரு வணிகர் இவ்வனுமார் அருளாலேயே தாம் மிக உயர்ந்தநிலை அடைந்ததாகக் கூறி இக்கோயிலுக்குப் பெருமை சேர்த்துள்ளார். மந்திரங்கள் ஓதுவோர் இங்கு அனுமார் சிலை முன் அமர்ந்தே செய்கின்றனர்.

அனுமார்பெருமை பாரதத்தில் மட்டுமின்றிக் கடல்கடந்தும் பரவியுள்ளது. இலங்கை ஜாவாபோன்ற தீவுகளிலும் அனுமார் வழிபடப்படுவதை இனிக்காண்போம்.

இலங்கை:—

சீதா எலியா என்ற இடத்தில் சிறிய கோயில் ஒன்று உண்டு. இங்கு இராம இலக்குவர் சீதை மூவரோடு அனுமாரும் வழிபடப்படுகின்றார். சீதை சிறையிருந்த இடத்தின் ஒருபகுதி இது என்றுகூறி இதனைச் சீதையம்மன் கோயில் என்றழைக்

கின்றனர். அனுமார் இலங்கைக்கு நெருப்புவைத்ததில் அசோகவனத்தில் கரிந்து போகாமல் தப்பிய அசோகமரங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக நிற்கின்றன. அனுமார் மூட்டிய நெருப்பின் வெம்மையைத் தணிக்க அருகிலிருந்த குன்றின் மேல் காலை ஊன்றினளாம் சீதை; உடனே கற்பாறையிலிருந்து தண்ணியநீர் பாய்ந்ததாம்; அது இன்றும் வற்ருத நீருற்ருக ஓடிக்கொண்டிருக்கின்றது என்று இதைப்பற்றிய கர்ணபரம்பரைக்கதை ஒன்றை திரு. துல. சபாநாதன் கூறியிருக்கின்ருர்.

அனுமார் இலங்காபுரியை அடைந்து சீதையைக் கண்டு இராமரிடம் மீளும்காலத்தில் அரிஷ்டபர்வதத்தில் சிறிதுநேரம் தங்கியதாக வான்மீகி கூறுகின்ருர். இப்பர்வதத்தைப் பற்றிய சான்றும் இங்குளது என்பர் இராவணன் இலங்கையின் அரசன் ஆகலின் எங்கோ ஓரிரு இடங்களில் அனுமார் வழிபடப்படினும் இங்கு பிறஇடங்களில் அடைந்ததுபோல் புகழ் அடையவில்லை.

ஜாவா:– இயற்கை இறந்த ஆற்றலோடு அனுமார் இராமாயணங்களில் பாடப்பெற்றிருப்பதால் இங்கும் வணங்கப் படுகின்ருர்.

இவ்வாருக ஆஞ்சநேயர் தென்ளுட்டில் மிகுதியாகவும் வடநாட்டில் பரவலாகவும் இலங்கை ஜாவாபோன்று வேறுசில இடங்களிலும் வழிபடப்படுகின்ருர் பொதுவாக மந்திர சக்தி படைத்தவராகவே மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்ருர். மந்திரதந்திரங்களில் பெரும்பான்மை நம்பிக்கைகொண்டவர்கள் கிராமமக்களே ஆகலின் கிராம தேவதையாகவே அனுமார் இந்தியாவில் இடம் பெற்றுள்ளார்.

பிற தெய்வங்களுடன் தொடர்பு

இந்து சமயம் சைவம் வைணவம் என்ற இருபெரும் பிரிவுகளைக் கொண்டது. இவை இரண்டாக இலங்கினும் இரண்டும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையன. இருசமயத்தினராலும் வழிபடப்படும் தெய்வங்களுக்கு இடை உள்ள தொடர்பே இதற்குக் காரணம் என்பதும் அனைவரும் அறிந்த ஒன்று. இதனைப் புராணக்கதைகளும் வலியுறுத்துகின்றன. விலங்குவடிவில் தோன்றி மனிதப்பண்பால் தெய்வத்தன்மை பெற்று விளங்கிய அனுமன் இறுதியில் தெய்வநிலையினையே அடைந்து விட்டான். அடியானாக இருந்து ஆண்டானாக மாறிய அனுமன் தனக்கெனப் பல அடியார்களைப் பெற்று ஆஞ்சநேயரர்கவும் ஆகிவிட்டான். இந்த ஆஞ்சநேயர் இரு சமயத்து இறைகளுடனும் தொடர்பு கொண்டவர். அதனை விள்க்கும் புராணச் செய்திகளை இவண் காண்போம்.

அனுமார்—திருமால்:

அனுமார் சஞ்சீவி மலைகொணர்ந்து இலக்குவன் முதலியோர்க்கு உயிரளிக்கின்றார் பின் அதனை இருந்த இடத்தில் கொண்டுபோய் வைத்துவிட்டு மீளுங்கால் சாலக்கிரமலையை அடைகின்றார். அங்கு நரசிம்மமூர்த்தியின் சிலையைக் கண்டு அதை மலையொடும் பெயர்த்து எடுத்து இலங்கை திரும்பும் வழியில், தாகமிகுதியினால் நீர்நிலை எங்குளது எனத் தேடுகின்றார். அருகே இலக்குமி தவம்புரியும் கமலாலயத்திருக்குளத்தைக் கண்ணுற்று அவண் சென்று தாகம் தீர நீர்பருகுகின்றார். மீண்டும் தன் வழிச்செல்ல விரும்பி மலையை எடுக்கமுனைகின்றார். ஆனால் மலையினை அசைக்கவும் அவரால் இயலவில்லை. உடன் இறைவனை எண்ணி வழிபடத் திருமால் தோன்றி, ''நான் இலக்குமியைத் திருமணம் புரிந்துகொண்ட பின்னர் இலக்குமி நரசிம்மனாக இங்குத் தோன்றுவேன். நீ அதுவரை இராம காரியத்திற்குச் சென்று வந்தால் இராமச்சந்திரமூர்த்தியாகத் தோன்றி அருள்புரிவேன். ஆகவே இங்கிருந்து என்னை வணங்கித் தவமிருப்பதை விடுத்து நீ மேற்கொண்ட செயலைத் தொடர்வாய்,'' என்றுரைக்கின்றார். அதற்கு அனுமாரும், ''நானும் இவ்விடத்தில் என் தந்தை வாயுதேவனின் உருவில் எனது ஒரு கூறால் நரசிம்மரை வழிபடுவேன். மற்றொரு கூறால் இராமர் பணி செய்து உய்வேன்,'' என்று உரைக்கின்றார்.

பின் அனுமார் வேண்டுகோட்கிணங்கக் கார்க்கோடக, சயனத்தில் கமலாலயத்தில் திருமால் காட்சி அளிக்கின்றார். அவ்வடிவோடு என்றும் விளங்குமாறு அனுமார் வேண்ட அவ்விதமே காவிரிக்கரையில் ஓரிடத்தில் காட்சியருளுவதாகக் கூறிக் காவிரியில் ஓர் இடைக்குறை உண்டாக்கி அத்திருவரங்கத்தீவில் அரவணைப் பள்ளியில் காட்சியருளுவாராயினர்.

அநுமார்—கண்ணன்:—

கிருஷ்ணர் தமக்குச் சகோதரனாகப் பிறந்திருக்கின்றான் என்பது பலராமருக்கு எல்லையற்ற பெருமையைத் தேடித்தந்தது. அதனால் அவரிடம் ஆணவம் மெல்லமெல்ல வளரலாயிற்று. யாரையுமே மதிக்காது வாழ்ந்துவரலானார். நாள்பல கழிய கிருஷ்ணரையே அலட்சியப்படுத்த ஆரம்பித்தார். அதே போன்று சத்தியபாமாவும் தன் அழகிலே ஆணவம் கொண்டாள். தன் அழகே கிருஷ்ணர் தன்னை மணந்து கொள்வதற்குக் காரணம் என எண்ணி அகம்பாவத்தோடு நடக்கத் தொடங்கினாள்.

பலராமர் சத்தியபாமா இருவர்தம் ஆணவத்தையும் அடக்க எண்ணினார்கிருஷ்ணர். ஆஞ்சநேயருக்குத்தான் தரிசனம் தருவதாக முன்பு கூறியதை இச்சமயம் நிறைவேற்றி அவர் மூலமே இருவர்தம் ஆணவத்தையும் அடக்கவேண்டும் என்று உறுதிகொண்டார். கிருஷ்ணரின் இம்முடிவினால் ஆஞ்சநேயருக்குப்புனிதப்பயணம் மேற்கொள்ளவேண்டும் என்ற விருப்பம் உண்டாயிற்று. ஒவ்வொரு ஆலயமாகச் சென்று இறைவனைத் தரிசித்து மேற்குக் கடற்கரையிலிருந்த பிரபாச தீர்த்தத்திற்கு வந்து சேர்ந்தார். அதே சமயம் நாரதரும் கிருஷ்ணரைக் காண துவாரகை வந்தடைந்தார்.

நாரதரை உபசரித்த கிருஷ்ணர், ''பலராமனுடன் கடற்கரை அடைந்து அங்குள்ள என்பக்தன் ஆஞ்சநேயனைக் கிருஷ்ணன் அழைப்பதாகக் கூறி அழைத்து வாருங்கள்,'' என்றார். கடற்கரை வந்து சேர்ந்த நாரதரும் பலராமரும் அங்கு இராம நாமத்தில் ஈடுபட்டிருந்த ஆஞ்சநேயரைக் கண்டனர். பலராமர் அவரை நெருங்கி, 'ஆஞ்சநேயா! உன்னைக் கிருஷ்ணன் அழைத்து வரச் சொன்னான்,' என்றார்

மாருதி தன்னிலை அடைந்து, 'கிருஷ்ணர் யார்? எதன் பொருட்டு என்னை அழைத்தார்? துவாரகையில் எனக்கென்ன வேலை?' என்று வினவினார். உடனே பலராமர், 'கிருஷ்ணனை உனக்குத்தெரியாது? அவன் என்தம்பி. நாங்கள் துவாரகைக்கு அதிபதிகள்,'' என்று அகம்பாவத்துடன் மொழிந்தார். 'நீங்கள் யார் என்பதே எனக்கு விளங்கவில்லையே,' என்றார் மாருதி. 'நான்தான் பலராமன்,' என்றார் பலராமர்.

அடுத்தகணம் பலராமருடைய தாடையில் சென்று மோதியது ஆஞ்சநேயரது வைரக்கரம். ''அடே! உனக்கு என்ன துணிவு! என் இராமனைவிட நீ பலமானவனா?'' என்று சீறினார். பலராமரும் வெகுண்டு மாருதியின் மீது பாய்ந்தார் இருவரும் கட்டிப் புரண்டனர். இறுதியில் ஆஞ்சநேயரின் குத்துக்களைத் தாங்கமாட்டாது பலராமர் பின்வாங்கினார். 'அடே! இந்தக் கணமே நீ பெயரை மாற்றிக் கொள்ளவில்லையென்றால் உன்னை உயிரோடு விடேன். என் இராமனை மிஞ்சுவாரும் உலகில்

உண்டோ'' என்று கூறி வாலைச் சுழற்றித் தரையில் ஓங்கியடித்தார் ஆஞ்சநேயர்.

வேகமாகத் திரும்பி வந்த அண்ணனின் கோலத்தைக் கண்ட கிருஷ்ணர் ஆதரவுடன் அவரை அணுகி, 'நடந்ததுஎன்ன? ஆஞ்சநேயரைக் காணவில்லையா?' என்று வினவினார். நடந்தது கூறினார் பலராமர். ''அண்ணா நீங்கள் கூறியதை ஆஞ்சநேயன் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று எண்ணுகின்றேன். மறுபடியும் போய் அவனை அழைத்து வாருங்கள்,'' என்றார் கிருஷ்ணர் பலராமர் மீண்டும் செல்ல அஞ்சவே அவரைப் படையோடு அனுப்பி வைத்தார்.

பலராமர் படைகளோடும் வருவதைக் கண்ட ஆஞ்சநேயர், ''அடே! உனக்கு என்ன துணிவு இருந்தால் படையொடும் வருவாய். உன்னை என் செய்கின்றேன் பார்,'' என்று முழங்கிக் கொண்டே அவர்மீதும் பாய்ந்தார். படைவீரர்கள் மூலைக்கு ஒருவராய் அஞ்சி ஓடினர். தம்முடைய வாலால் பலராமரைக் கட்டியிழுத்து மணலிலே புரட்டி எடுத்தார். உயிர் பிழைத்தால் போதும் என்று பலராமர் துவாரகைக்கு ஓடி வந்தார்.

நிகழ்ந்ததை அறிந்த கிருஷ்ணர், ''அண்ணா நீங்களோ மிகுந்தபலசாலி. நான் தங்களுடைய தம்பியாகப் பிறக்கப் பெரும்புண்ணியம் செய்திருக்க வேண்டும். ஏன் இவ்வளவு விரக்தியாகப் பேசுகின்றீர்கள். நீங்கள் நினைத்தால் ஆஞ்சநேயரையே அழித்து விடலாமே,'' என்றார். கிருஷ்ணரின் இவ்வார்த்தைகள் பலராமர் மனதில் கூரம்புகளாய் பாய்ந்தன. தாம் கொண்ட அகமபாவத்திற்குச் சரியான படிப்பினை இது என்று எண்ணிக்கொண்டார். அக்கணமே ஆணவம் அவரை விட்டு அகன்றது.

''அண்ணா, இப்பொழுது போய் ஆஞ்சநேயரை ஸ்ரீராமன் அழைத்ததாகக் கூறுங்கள்,'' என்று சொல்லி வற்புறுத்தி நாரதருடன் பலராமரை அனுப்பி வைத்தார். மூன்றும் முறையாகப பலராமரைக் கண்ட மாருதி கண்கள்சிவக்க ஓடிவந்தார். பலராமரின் உடல் அச்சத்தால் நடுங்கியது. ''ஸ்ரீராமர் உன்னை அழைத்துவர அனுப்பினார்'' என்று நாக்குழறக் கூறினார்.

''ஆஹா! என்ன பிழை செய்துவிட்டேன். இதை முன்னரே கூறியிருக்கக்கூடாதா?' ஸ்ரீராமனிடம் இருந்து வந்தஉன்னையும் வீரர்களையும் அடித்து உதைத்துத் துன்புறுத்திவிட்டேனே! ஹே ராமா! என்னை மன்னித்து விடுங்கள். அறியாமல் பிழை செய்துவிட்டேன்,'' என்று மனமுருகி வேண்டினார். கண்களினின்றும் நீர் வெள்ளமெனப்பாயந்தது. அவர்களை நெருங்கி வணங்கினார். பலராமரை இறுகத் தழுவிக்கொண்டார். ''இதோ இப்பொழுதே புறப்பட்டுவிடடேன் அடியேன் தோளில் ஏறி அமருங்கள். நான் சுமநது வருகின்றேன்,'' என்று மண்டியிட்டுத் தரையில அமர்ந்தார். பலராமருக்கு ஆஞ்சநேயரின் இம் மாற்றம் வியப்பளித்தது. அரண்மனை சபாமண்டபத்தை

அடைந்ததும் ஆஞ்சநேயரை அங்கொரு ஆசனத்தில் அமர்த்தி விட்டு நாரதர் கிருஷ்ணரிடம் சென்று ஆஞ்சநேயர் வருகையைத் தெரிவித்தார்.

பலராமரின் அகம்பாவம் அடங்கிவிட்டது அறிந்த கிருஷ்ணர், சத்தியபாமாவின் அகம்பாவத்தையும் அடக்கவிரும்பினார். ஆகவே, ''ஆஞ்சநேயன்வந்துவிட்டானா? நாரதரே, அவனுக்கு ஸ்ரீஇராமச்சந்திரனாகக் காட்சி அளிப்பதாகக் கூறியிருக்கிறேன். விரைந்து சென்று சத்தியபாமாவிடம் சீதையாக அவள் வர வேண்டும் என்று கூறுங்கள்,'' என்றார் கிருஷ்ணர். நாரதரும் சத்தியபாமாவை அடைந்து கிருஷ்ணர் கூறியதைக் கூறினார்.

சத்தியபாமா பெருமைக்கடலில் மூழ்கித் தத்தளித்தாள். அறையினுள் நுழைந்து மிகமிக அழகாகத் தன்னை அலங்கரித்துக்கொண்டு கிருஷ்ணரிடம் சென்றாள். அவளைப் பார்த்தகிருஷ்ணரின் முகம் வெறுப்பால் கறுத்தது, 'நாரதரிடம் நான் என்ன சொல்லி அனுப்பினேன். நீ என்ன செய்திருக்கின்றாய். சீதை இப்படியா இருப்பாள். ஆஞ்சநேயன் இந்நிலையில் உன்னைக் கண்டால் யாரோ அரண்மனை நாடகக்காரி என்று எண்ணுவான். போ...போ... விரைவில் மாற்றிக்கொண்டுவா,'' என்று சீறிவிழுந்தார்.

அவமானம் அடைந்த சத்தியபாமா, 'எத்தனை நாட்கள் தன்னை இந்த அலங்காரத்தில் பார்த்துக் கிருஷ்ணர் மகிழ்ந்திருக்கின்றார்; இன்றுமட்டும் ஏன் இந்தவெறுப்பு,'' என்று எண்ணினாள். முதலில் அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. பிறகுதான் சீதை அசோகவனத்தில் இருந்தநிலை அவள் நினைவிற்கு வந்தது. சோகமேஉருவான சீதையின் தோற்றத்தைத் தான் ஆஞ்சநேயன் தரிசித்திருக்கவேண்டும் என்று எண்ணிக்கொண்டாள். வேகமாக அலங்காரங்களையெல்லாம் களைந்துவிட்டு எளிய புடவை ஒன்றை உடுத்திக் கொண்டாள். தலையைப் பின்னுமல் விரித்தே போட்டுக் கொண்டாள். பின் முகத்திலே துயரத்தின் சாயலைத் தருவித்துக்கொண்டு கிருஷ்ணரிடம் வந்தாள்.

அவளைக் கண்டவுடன், ''ஐயையோ! இதென்ன அலங்கோலம்!'' என்றுகூறிக் கண்ணை மூடிக்கொண்டார் கிருஷ்ணர். இந்தக்கோலத்தில் ஆஞ்சநேயன் சீதைஎன்று உன்னைஎண்ணிக் கொள்ள மாட்டான். பேய் வழிமாறி இங்கே வந்திருக்கின்றது என்று நினைப்பான். நேரத்தை வீணாக்கிவிட்டாயே. பக்தனைத் தரிசனத்திற்காக எவ்வளவு நேரந்தான் காக்க வைப்பது?...... நாரதரே! நீர் சென்று ருக்மணியிடம் ஆஞ்சநேயர் வந்திருப்பதாகவும் சிதா ராமனைத் தரிசனம் தரச்சொன்னதாகவும்கூறுங்கள். உடனே சீதையாக வரவேண்டும் என்று கூறுங்கள்'' என்றார் கிருஷ்ணர்.

சத்தியபாமாவுக்குத் தூக்கம் தாங்க முடியவில்லை. ருக்மணி செய்வதைக் காணப் பக்கத்து அறையில் காத்திருந்தாள். நாரதர் கிருஷ்ணரின் விருப்பத்தை ருக்மணியிடம் கூறினார்.

''பக்தன் வந்திருக்கின்ருனு! என்ற அவள் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. புதிதாக அலங்காரம் செய்துகொள்ளாது முகத்தைத் துடைத்துக் கொண்டு திலகம் மட்டும் இட்டுக்கொண்டு ஓடிவந்தாள். ''பிரபோ! பக்தன் எங்கே? அதிகநேரம் காக்க வைத்து விட்டேனு?'' என்று பரபரப்புடன் ஓடிவந்த ருக்மணியைக் கண்டதும் கிருஷ்ணர் முகம் மலர்ந்தது. நாரதரை, ஆஞ்சநேயரை அழைத்து வரும்படி அனுப்பினுர்.

உள்ளே நுழைந்து, அருகில் புன்முறுவலோடு சீதைநிற்க ஸ்ரீராமன் அமர்ந்திருப்பதைக் கண்டார் ஆஞ்சநேயர். அவர் கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்தது. ''பிரபோ! இரகுநந்தனு! இந்தத் தரிசனத்தைப் பெற எத்தனை காலமாக காத்திருக்கின்றேன் தெரியுமா?'' என்றவர் தம்மை மறந்து இரண்டறக் கலந்து அவ்வினிய காட்சியைப் பருகிப்பருகி ஆனந்தமடைந்தார். ''இராகவா! இந்த வடிவினை எவ்வளவு பருகினுலும் என் ஆவல் அடங்கவேயில்லை. என் மனதிலே இக்காட்சி என்றும் நிலைத்திருக்க அருள்புரியவேண்டும்,'' என்று இறைஞ்சினுர். கிருஷ்ணரும் புன்முறுவலோடு, ''ஆஞ்சநேயா நீ நினைக்கும் போதெல்லாம் இந்தக்காட்சி உன் மனதிலே தோன்றும்,'' என்றருளினுர். மங்களகரமான அக்காட்சியை மனதிற்குள் கண்டு களித்தவராய் மாருதி அங்கிருந்து அகன்ருர்.

பக்கத்து அறையிலிருந்து ருக்மணியைப் பார்த்தசத்தியபாமா அவளுடைய எளியதோற்றத்தினைக் கண்டு வியந்துநின்ருள். பக்தன்வந்திருக்கின்ருன் என்று கேள்விப்பட்டதும்அவள் முகத்தில் வெளிப்பட்ட அன்பும் பக்தனுக்குத் தரிசனம் தர வேண்டும் என்ற வேகமும் அவளுக்குத் தனிஅழகை அளித்திருப்பதைக் கண்டாள். தன்தவறு உணர்ந்தவள் மனதில் தோன்றும் உயர்ந்த எண்ணங்களே ஒருவருக்கு எழிலூட்டுகின்றன என்பதை அறிந்தாள். அன்றே தன் அகம்பாவத்தையும் அழித்துவிட்டாள்.

அனுமார்—சிவன்:—

திரேதாயுகத்தில் கேசரி என்பவன் வெகுகாலமாக மக்கட் பேறின்றி வருந்தினுன். அக்குறை நீங்க சிவபெருமானைக் குறித்துக் கடுந்தவமிருந்தான். கைலாசநாதர் பக்தன் மீது கருணை கொண்டு அவன்முன் தோன்றி, ''உனக்கொருபெண் பிறப்பாள். அப்பெண்ணிற்கு நீ வேண்டியபடி மைந்தன் பிறப்பான்,'' என்றருளி மறைந்தார். கேசரிக்கு அஞ்சனை பிறந்தாள் அஞ்சனையை ஒரு வானரவீரன் மணந்தான். தருமதேவதை குறத்தி உருவில் அவளிடம் வந்து, ''வேங்கட மலைக்குச் சென்று பரந்தாமனைக் குறித்துத் தியானம் செய். அவன் அருளால் விண்ணவரும் போற்றும் பிள்ளை உனக்குப் பிறப்பான். அவனுல் உன்குலம் விளங்கும். நீயும் புகழ்பெறுவாய். இது சத்தியம,'' என்று கூறியது.

அஞ்சனை கணவனை வணங்கி ஆசிபெற்றுத் திருமலைக்குப் புறப்பட்டாள். ஆகாய கங்கையில் நீராடி அதன் கரையில் ஐம்புலன்களையும் அடக்கித் தவம் புரிந்தாள். அஞ்சனாதேவியின் கடும்விரதம் கண்ட வாயு பெருவியப்பு அடைந்தான். காற்றை உணவாகக் கொண்டு பகவத்தியானத்தில் ஈடுபட்டுள்ள அவளுக்குத் தன்னாலான உதவிசெய்ய விழைந்தான். மரங்களிலிருந்து நன்கு கனிந்த பழம் ஒன்றைத் தினமும் கொண்டு வந்து அஞ்சனையின் கரங்களில் போட்டு வந்தான். அஞ்சனை அதனை இறைவன் அருளாக எண்ணி மகிழ்ந்து தினமும் உண்டுவந்தாள். ஈசனுடைய கருணையால் அவன் கருவே அவள் வயிற்றில் வளர்ந்தது. நாட்கள் கழிய, அஞ்சனையும் அழகிய ஆண்மகவொன்றுக்குத் தாயானாள். அக்குழந்தையும் வானரவடிவிலேயே இருந்தது அஞ்சனாதேவியின் மைந்தன் என்ற பொருள்பட ஆஞ்சநேயன் எனப்பெயரிட்டு அழைத்து வந்தனர். இவ்வாறு சிவனின் அம்சமாக அனுமார் பிறந்து புகழொடு விளங்கினார்.

அனுமார்—மற்ற தேவர்கள்:—

அனுமார் குழந்தையாக இருந்தபோது ஒருநாள் விளையாடிக் கொண்டிருந்தார். அஞ்சனை பழங்களைப் பறித்து வரச் சென்றிருந்தாள். தாயை விட்டுப் பிரிந்ததாலும் பசியாலும், முன்பு முருகன் சரவணமென்ற நாணற்காட்டில் தாயைக் காணாமல் அழுதது போன்று, பெருங்கூக்குரலிட்டு அழுதார். அப்போது கதிரவனைக் கண்டு பொன்னிறமான பழம் என்றெண்ணி அவனைப் பறிக்கத் தாவினார். இளமை, வாயுவின் சக்தி இரண்டும் இணைய அது அவருக்குக் கடினமான காரியமாக இல்லை. எல்லா உயிர்களுக்கும் நன்மையே விழையும் சூரியன் 'இவனோ குழந்தை; ஒன்றும் அறியான். மேலும் இவனால் பிற்காலத்தில் உலகிற்குப் பெரும்பயன் விளையப்போகின்றது. அதனால் இவனுக்கு எந்தத் துன்பமும் நேரிடக்கூடாது, என்று எண்ணித் தன் கரங்களால் அவரை வருத்தாமல் காத்தான். அப்பொழுது இராகு அவரைப் பிடிக்க வந்தான். அவனுடைய தேர்க்கு அருகில் வந்த மாருதி அவனைப் பார்த்துத் தாவினான், இராகு அஞ்சி இந்திரனிடம் சென்று முறையிட்டான்.

அதைக் கேட்டு வியந்த இந்திரன் இராகுவை முன்செலச் செய்து தானும் பின்னால் ஐராவதத்தின் மேல் வந்தான். மறுபடியும் வந்த இராகுவைக் கண்ட அனுமார், ''இது இன்னும் பெரிய பழம்,'' என்றெண்ணி அவன் மீது தாவினார். இதனால் இராகு, 'இந்திரா! காப்பாற்று!' என்று அலறிக் கொண்டோடினான். உடன் மாருதியைக் கொல்லவந்தான் இந்திரன். இதுவரையில் களிறினைக் கண்டறியாத மாருதி இப்பொழுது இதுவும் ஒரு புதியபழம் போலும் என்றுஎண்ணி அதைபபிடிக்க முயன்றார். சினம் அடைந்த இந்திரன் உடனே தன் வச்சிராயுதத்தை எடுத்து மாருதியை அடித்தான். குழந்தையாகலின் அந்த அடியைப் பொறுக்க இயலாது ஒருமலையின் மீது மாருதி விழுந்தார். அவருடைய இடதுகன்னம் முறிந்தது.

தன்செல்வன் வச்சிராயுதத்தால் அடிபட்டு மயங்கிக் கிடந்ததைக் கண்ட வாயு அடங்காச் சீற்றத்துடன் அவரைவாரி யெடுத்து அருகில் உள்ள ஒரு குகைக்குள் கொண்டுபோய் படுக்கவைத்தான். மூன்று உலகங்களிலும் தான் உலாவுவதை நிறுத்தினான். இதனால் தேவர்களும் பிற உயிர்களும் மிகுந்த வருத்தமுற்றனர். பிரம்மனிடம் சென்று முறையிட்டனர் தேவர்கள்.

பிரம்மா, மற்றதேவர்களுடன் வாயு தன் மகனை வைத்திருக்கும் குகையை அடைந்து வாயுவைச் சமாதானம் செய்தான். தன் அமிர்தக்கரத்தால் ஆஞ்சநேயனைத் தடவிக் கொடுத்தான். உடனே சிரமம் தீர்ந்து குளிர்ந்த நீரில் நனைந்த, வாடிய பயிரைப்போல் மாருதி பழைய பலமும் வீரியமும் ஒளியும் பெற்று எழுந்தார். அதைக் கண்டு மகிழ்ந்த வாயு முன்புபோல் உலகத்தில் உலவத் தொடங்கினான்.

பிரம்மா மற்ற தேவர்களை விளித்து, 'இவனால் உங்களுக்கு ஒரு பெரிய காரியம் நடக்க வேண்டியிருக்கின்றது. ஆகையால் சக்திநிறைந்த வரங்களை இவனுக்கு அளியுங்கள். வாயுவிற்கும் இதனால் மகிழ்ச்சி உண்டாகும்,' என்று கூறினான்.

அப்பொழுது இந்திரன் தான் அணிந்திருந்த தங்கத்தாமரைமாலையைக் கொடுத்து, 'என் வச்சிராயுதத்தால் இவன் அடிபட்டுக் கன்னம் முறிந்ததால் இன்றுமுதல் அனுமான் என்று பெயர் பெறட்டும் என் வச்சிராயுதத்தால் இவனுக்கு அழிவில்லை,' என்றான். சூரியன், 'என் ஒளியில் இவனுக்கு நூற்றில் ஒரு பங்கைக் கொடுக்கின்றேன் சாஸ்திரங்களைக் கற்கத்தகுந்த வயதினை இவன் அடையும்போது நானே அவைகளை இவனுக்குக் கற்றுக் கொடுக்கின்றேன். அதனால் நன்முறையில் சொல்லாடும் திறனை இவன் பெறுவான் சாஸ்திரஞானத்திலும் இவனுக்கு நிகரில்லை,'' என்றான். வருணன், ' என்பாசத்தாலும் நீராலும் இவனுக்கு ஒரு நாளும் மரணமில்லை,'' என்றான். எமன், ''என் காலதண்டத்தால் இவனுக்கு இறப்பில்லை. நோய் இவனை அணுகாது. போரில் மனவலிமையை ஒருநாளும் இழக்க மாட்டான்,'' என்றான். குபேரன், ''என் கதையால் போரில் இவனுக்கு மரணம் நேராது'' என்றான். பரமசிவன், ''என் சூலம் முதலிய ஆயுதங்களாலும் பாசுபதம் முதலிய அஸ்திரங்களாலும் இவனுக்கு மரணமில்லை,'' என்றான்.

இப்படித் தேவர்கள் வரமளிக்க, பிரம்மா மகிழ்ந்து வாயுவைப் பார்த்து. 'என் ஆயுதங்களும் அஸ்திரங்களும் இவனை ஒன்றும் செய்யா. உன் புதல்வன் நண்பர்களுக்கு அடைக்கலமும், பகைவர்களுக்குக் காலனும், போரில் தோல்வியற்றவனும் ஆவான். நினைத்த உருவினை அடைவான். நினைத்த இடங்களுக்குப் போவான். இவன் போக்கைத் தடுப்பவர்கள் யாருமேயில்லை இவன் புகழ் காலம் உள்ளவரையில் எங்கும் பரவியிருக்கும் இறைவன் இராமவதாரம் எடுக்கும் பொழுது இராவணாதியர்களை இவன் அடக்கிப் பல வீரச்செயல்கள் புரிவான்,'' என்று

கூறித் தேவர்களுடன் மறைந்தான். இவ்வாறு பலவரங்களைப் பெற்றுத் தன் ஆற்றலைப் பெருக்கிக் கொண்டார் ஆஞ்சநேயர்.

இவர்களன்றி அனுமாருக்கு, பீமன், அருச்சுனன் போன்றோருடனும் தொடர்பு உண்டு பீமனுடன் உள்ள தொடர்பு ''பிற இலக்கியங்களில்'' என்ற பகுதியில் முன்பே விளக்கப்பட்டுள்ளது. எனவே அருச்சுனனுடன் உள்ள தொடர்பை மட்டும் காண்போம்.

அனுமார் — அருச்சுனன்:- அனுமன் அருச்சுனனுடைய தேர்க் கொடியில் வீரபுருஷனாக இருந்து கீதோபதேசத்தைக் கேட்டதே ஒரு அழகான கதை சிரஞ்சீவித் தன்மை பெற்றவர் அனுமார். ஆதலால் இராமனை விட்டுக் கடேசியாகப் பிரிகின்றபோது எல்லாக்காலத்திலும் தான் வாழ்ந்தாலும் இராமனுக்கு இத்தகைய நிலைத்தவாழ்வு இல்லையாதலால் அவனை என்றும் காண இயலாதே; அவ்வாய்ப்பை எங்ஙனம் பெறுவது என்று ஏங்குகின்றார் அப்போது இராமன் அவருக்கு அடுத்தயுகத்திலும் இராமனாகவே காட்சியளிப்பதாக வாககளிக்கின்றான். அனுமாரும் இராமனைத் தரிசிக்க அடுத்தயுகத்தில் சேதுசகரைக்குவந்து தவம் செய்கின்றார் தீர்த்தயாத்திரை புறப்பட்ட அருச்சுனன் அதே சேதுக்கரைக்கு வருகின்றான்.

இராமநாமத்தைக் கூறிக் கொண்டிருக்கும் அனுமாரைப் பார்த்து, 'என்ன இராமன்? இந்தச் சொத்தைக் கடலைக் கடப்பதற்குக் கல்லால் அணை கட்டியிருக்கின்றான். நானாக இருந்தால் என் அம்புகளைக் கொண்டே ஒரு அஸ்திரபபாலம் அமைத்து அதன் மேலேயே என் சேனையை நடத்திக் கடல் கடந்திருப்பேன்,'' என்று ஏளனமாகப் பேசுகின்றான். அனுமாருக்கோ அடக்க முடியாத அளவிற்குச் சினம் பொங்குகின்றது. ''உன் அஸ்திரப்பாலம் என் போன்ற ஒருவனைக் கூடத் தாங்க வலியற்றதாக இருக்கும்,'' என மடக்குகின்றார். அதைத்தான் பார்த்து விடுவோமே என்று கூறி அரைக்கணத்தில் ஒரு அஸ்திரப்பாலம் அமைக்கின்றான் அருச்சுனன். அனுமாரும் உடனே விசுவரூபம் எடுத்துப் பாலத்தின் மேல் நடக்கின்றார். பாலம் நொறுங்கித் தூள் தூளாகின்றது. அவமானத்தைத் தாங்கமுடியாத அருச்சுனன் தன் உயிர்த்துணைவனை கிருஷ்ணனை நினைத்துக்கொண்டே தீப்புகுந்து உயிரை விட்டுவிட விரைகின்றான். அந்தச் சமயத்தில் ஒரு வேதியன் வருகின்றான்,

அனுமார் அருச்சுனன் இருவரையும் கண்டு அவர்கள் வாக்குவாதத்தினையும் நடத்திய போட்டியினையும் பற்றிய விபரம் கேட்கின்றான். ''என்ன! போட்டியென்றால் நடுவர் ஒருவர் இல்லாமலா போட்டியிடுவது? சரி, நான் நடுவராக இருக்கின்றேன். திரும்பவும் அருச்சுனன் பாலம் அமைக்கட்டும்,'' என்கிறான். அருச்சுனன் பாலம் அமைக்க அனுமார் விசுவரூபம் எடுத்துப் பாலத்தின் மேல் ஏறி நடக்கின்றார்; குதிக்கின்றார். பாலம் நொறுங்காது அப்படியே இருக்கத் தலைகவிழ்கின்றார்.

அச்சமயம் வேதியனுக வந்தவன் அனுமாரிடம் ''நானே இராமன்,'' என்று தன் உருவைக் காட்டுகின்ருன். அருச்சுனனிடம் அதே நேரத்தில் ''நானே கிருஷ்ணன்,'' என்று தன் உருவைக் காட்டுகின்ருன் ''எல்லாம் நானே,'' என்ற கீதோபதேசம் அன்றே நடந்து விடுகின்றது. இறுதியில் அருச்சுனன் வேண்டிக் கொண்டபடி அனுமாரும் பாரதயுத்தம் நடக்கும் போது அவனது தேரில் கொடியாக அமைந்து வெற்றிதேடித் தருவதாக வாக்களிக்கின்ருர். மீண்டும் கீதோபதேசம் விரிவாக அமர்க்களத்தில் நடைபெறுகின்றது. குன்ருத வீரமும் மாருத பக்தியும் கொண்ட அனுமாரும் கேட்கின்ருர் அதனை. அறிதற்கரிய விளக்கங்களையெல்லாம் அறிகின்ருர்

இவ்வாறு பிற பலரோடு அனுமாரை இணைத்துப் புராணக்கதைகள் பல வழங்கப்படுகின்றன. குறிப்பிட்ட சிலகதைகளே இங்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. விரிவஞ்சி பிற விடப்பட்டுள்ளன.

வழக்குக் கதைகள்

கதைசொல்வதும் கேட்பதும் மனித உணர்வோடு இரண்டறக் கலந்துவிட்ட ஒன்று. பல நூற்ருண்டுகளுக்கு முன்பே கதை கூறும் புழக்கம் தொடங்கி விட்டாலும் இன்றும் கூட கதை சொல்வதும் கேட்பதும் தனி இன்பத்தினை நல்குகின்றன. கருத்தினை விளக்கவும், வலியுறுத்தவும் கதைகள் முதலில் கூறப்பட்டன. உயர்ந்த தத்துவங்களும் நீதிகளும் கதைகளாலேயே நம் முன்னேரால் விளக்கப்பட்டன. அது இன்றுவரை தொடர்கின்றது. ஒவ்வொரு சமயமும் தன் சமயக்கருத்தைப் பரப்பவும் கதைகளையே கருவியாகக் கொண்டது இந்துசமயம் ஒவ்வொரு தெய்வத்தைப் பற்றியும் எண்ணற்ற கதைகளைக் கொண்டுள்ளது அவைகாலத்திற்கும்இடத்திற்கும் கூறுவோர் மனநிலைக்கும ஏற்றபடி பலமாற்றங்களையும் அடைந்துள்ளன. அனுமாரும்தெய்வமாகவேவழிபடப்படுகின்ருராகலின் அவரைப் பற்றியும் பலகதைகள் கூறப்படுகின்றன அவை அவரது ஆற்றலையும் இராமபக்தியையும் புகழ்வதாக அமைந்துள்ளன. சில கதைகள் ஏதேனுமொரு படிப்பினையை ஊட்டுகின்றன. அனுமார் பற்றி வழங்கும் சில கதைகளை இவண் காணலாம்.

வாலால் அரியாசனம் அமைத்தது:— இராவணனிடம் அனுமார் இராமன் பொருட்டுத் தூது செல்கின்ருர். அகந்தையே வடிவான அரக்கர்கோன் அவருக்கு ஆசனம் அளிக்கவில்லை. அதுகண்டு சிறிதும் சினம் கொள்ளாத அனுமார், ''அறிவும்

ஆற்றலும் படைத்தோர் வேறுயாருடைய ஆதரவினையும் நாடுபவர் அல்லர்,'' என்பதனை அவனுக்கு அறிவுறுத்த எண்ணுகின்றார். அந்த இடத்திலேயே நின்றுகொண்டு தம் வாலைச் சுழற்றுகின்றார். சுழற்றச்சுழற்ற வால் நீள்கிறது. நீண்டவாலே ஆசனமும் ஆகின்றது. அதன்மீது ஏறிஅமர்ந்துஇராவணனிடம் தூதுரைக்கின்றார். அவரது அரியாசனம் அரக்கர் தலைவனின் அரியாசனத்தைவிட ஓர்அடி உயரமானதாகவே அமைகிறது.

தன் இதயத்தில் சீதாராமனைக் காட்டியது

சீதை அனுமாருக்குத் தன்னுடைய விலைமதிப்பற்ற முத்துமாலை ஒன்றை அன்பின் அடையாளமாகத் தருகின்றாள். அதனைப் பெற்றுக் கொள்ளும் அனுமார் ஒவ்வொரு முத்தாக உடைக்கின்றார். அருகில் இருந்த வீடணன் அதன் காரணம் வினவ அம்முத்தினுள் தன்தலைவன்பெயர் இருக்கின்றதா எனத் தான் ஆராய்வதாகக் கூறுகின்றார். அவ்வாறு இல்லாவிட்டால் அது தன்னால் அணியப்படத் தகுந்ததாகாது என்றும் கூறுகின்றார். இதைக்கேட்டு வீடணன் ஏளனம் செய்ய, தம்முள் இராமன் நிறைந்திருப்பதாகக் கூறுகின்றார். அதனை மெய்ப்பிக்கத் தம் இதயத்தையே பிளந்து காட்டுகின்றார். அதனுள் இராமன் சீதையுடனும் இலக்குவனுடனும் இருப்பதை வீடணனும் அருகில் இருந்தோரும் கண்டு வியந்து பாராட்டுகின்றனர். இராமர் மகிழ்ந்து அவரைமார்புறத் தழுவிக்கொள்கின்றார். இதனால் அனுமார் முன்னைவிட மிகுதியான ஆற்றலும் அறிவும் மனவலியும் பெறுகின்றார்.

காலநேமியை அழித்தது:—

அனுமார் இலக்குவனையும் பிற வானரவீரரையும் காத்தற் பொருட்டு மருத்துமலை கொணரச்செல்கின்றார். அதை அறிந்த இராவணன், காலநேமி என்ற அரக்கனை, அனுமாரை அழிக்கும்படிக் கூறி அனுப்புகின்றான். காலநேமி அனுமார் செல்லும் வழியில் மாயையால் ஒரு குளத்தை உண்டாக்கி அதன் அருகில் அழகியவீடுஒன்றையும் தோட்டத்தையும் உண்டாக்குகின்றான். அனுமார், அது ஓர் ஆசிரமமாக இருக்கவேண்டும். அங்குள்ள முனிவரைக் கேட்டுச் சிறிது சிற்றுண்டி அருந்திச் சென்றால் அயர்வுநீங்கும்,'' என்றெண்ணி அதை அணுகுகின்றார். அங்கே காலநேமி முனிவராகக் கபடவேடம் பூண்டு அமர்ந்திருக்கின்றான். மாயைக்கே தலைவனான இராமனுடைய தூதனை மயக்க விரும்பி அமர்ந்திருந்த அவனை அனுமாரும் வணங்குகின்றார். அக்கபடமுனியும் இராமனுடைய குணங்களைப் பாராட்டுகின்றான். பிறகு அனுமார் பருகுவதற்கு நீர் கேட்கக் காலநேமி கமண்டலத்தை எடுத்துக் கொடுக்கின்றான். அனுமார், ''இந்த நீர் என்தாகம் தணித்தற்குப் போதுமானது அன்று,' என்று கூறக் காலநேமி, 'அருகிலுள்ள குளத்தில் நீரருந்திக் குளித்துவிட்டுத் தூய்மையாக விரைவில் வா. மூலிகைகள் பற்றி நான் உனக்குக் கூறுகின்றேன்'' என்கிறான்.

அனுமார் குளத்தினுள் இறங்கியதும் ஒரு பெண்முதலை காலைக் கௌவுகின்றது. அதைக்கொல்ல அது ஒரு தேவமாதாக மாறி, 'அனுமாரே! உம்முடைய தரிசனத்தால் என் பாவம் அகன்று முனிவர் எனக்களித்தசாபமும் நீங்கியது. நான் கூறுவதை நம்புங்கள். இங்குள்ளவன் உண்மையில் முனிவரல்ல; கொடிய அரக்கன்,'' எனக்கூறி விண்ணுலகம் சென்றுவிடுகின்றது. உடனே அனுமார் காலநேமியிடம் சென்று, 'முதலில் குருதட்சணையைப் பெற்றுக்கொள். பிறகு எனக்குக் கற்பிக்கலாம்,' என்று கூறித் தம்வாலால் அவன் தலையைச் சுற்றிக் கீழே தள்ளிக்கொல்கின்றார். காலநேமி உயிர்போகும் தருவாயில் 'இராம இராம' என்று இராமனை வணங்கி உயிர் விடுகின்றான். காலநேமியும், முதலையும் முற்பிறப்பில் சந்தருவனாகவும் அப்சராசாகவும் இந்திரனுடைய அவையில் பாடிக்கொண்டிருந்தவர்கள். ஒருகால் துருவாசமுனிவர் அவண் வந்த போது இருவரும் சிரித்தனர். அதனால் சினம் கொண்ட முனிவர் அவர்களை முறையே அரக்கனாகவும் முதலையாகவும் இலங்கையில் பிறக்குமாறு சபித்து அனுமாரால் பழைய நிலை அடைவர் என்று சாப விமோசனமும் அருளினார்.

இராம இலக்குவரைக் காத்தது:— இராவணன் தன் நண்பர்களான ஐராவணன், மைராவணன் இருவரையும் அழைத்து இராம இலக்குவரைக் கடத்திச் சென்று காளிக்குப் பலியிடுமாறு வேண்டினான். இதனை வீடணன் அறிந்ததும் அனுமாரிடம் கலந்தாலோசித்தான். போர் தொடங்கியதிலிருந்து இரவுநேரத்தில் ஆஞ்சநேயரே இராம இலக்குவருக்குக் காவல் இருந்தார். தம்முடைய வாலால் அவர்கள் உறங்கும் இடத்தைச் சுற்றி ஒரு சிறு கோட்டை கட்டி யாரும் நுழைய முடியாதபடிக் காவலிருந்தார். அன்றையதினம் மேலும் விழிப்போடு இருக்கவேண்டும் என இருவரும் முடிவு செய்தனர்.

மாயாவிகளான ஐராவணனும் மைராவணனும் இதை எதிர்பார்த்து, கதிரவன் மறைந்தசிறிதுநேரத்திற்கெல்லாம் தங்கள் எண்ணத்தைச் செயலாக்க முற்பட்டனர். வழக்கம் போல் அனுமார் வானரவீரர்களைக் கவனித்து வரச் சென்றிருந்தார். இராமரும் இலக்குவரும் ஒருபாறையின் மீதமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தனர். சிறிது இடைவெளிவிட்டு விபீடணன் சுக்கிரீவன் முதலானோர் தங்கியிருந்தனர்.

ஐராவணனும் மைராவணனும் அவ்விடத்தை அடைந்து மாயையால் அனைவரையும் உறங்க வைத்தனர். இராமனும் இலக்குவனும் களைப்புமிகுதியால் பாறையில்படுத்துவிட்டனர். உடனே அரக்கர் இருவரும் பாறையோடு இராம இலக்குவரைத் தூக்கிக்கொண்டு பறந்தனர்.

பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கவனித்து விட்டு வந்த மாருதி அனைவரும் துயில்வதைக்கண்டு ஐயுற்றார். பின் அவர்களை எழுப்ப, கண் விழித்த அவர்கள் திடீரென்று தங்களைச் சூழ்ந்துகொண்ட துயிலினை எண்ணி வியந்தனர். இராமஇலக்கு

வர் இருவரும் படுத்திருந்த பாறையும் காணவில்லை என்பது தெரிந்தது. எங்கு தேடியும் அவர்களைச் காணவில்லை. இராம இலக்குவரை அரக்கர்கள் கடத்திச் சென்றது தெளிவாயிற்று. மாருதியும் அவர்களைத் தேடிப் புறப்பட்டார்.

இலங்கையில் உள்ள எல்லாக் காளிகோயில்களிலும் நிகும் பலையாகம் நடந்த இடத்திலும் அவர்களைத் தேடினர். அப்பொழுது ஒரு புரு இராம இலக்குவரை அரக்கர்கள் பாதாள உலகத் திற்குக் கொண்டு சென்றதாக உரைத்தது. அனுமாரும் உடனே அவ்விடம் நோக்கி விரைந்தார். அங்கு அரக்கர்களின் அரண்மனைக்குள் நுழைய முயன்ற அனுமாரைக் காவலன் ஒருவன் தடுத்து நிறுத்தினன். அவனிடம் அனுமார் தாம் இராமனைத் தேடி வந்ததாகக் கூறினர். உடன் அந்தக்காவலன் ஆவல் பொங்க, 'என் தந்தை ஆஞ்சநேயர் இலங்கையில் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அவர் நலமாக இருக்கின்றாரா?'' என்று வினவினன்.

அவன் கேள்வியைக் கேட்டுத் திடுக்கிட்ட மாருதி, 'என்னப்பா சொன்னாய்? ஆஞ்சநேயரின் மகனா? அவர் மணம் புரிந்தது எப்போது?'' என்று வினவினர். 'ஐயா! அன்னை சானகியைத் தேடி, இராம காரியமாக இலங்கை வந்திருந்த ஆஞ்சநேயர் இராவணன் வாலிலே வைத்த தீயைக் கடலை அடைந்து அதன் நீரால் அணைத்தார். அப்போது அவர்தம் கழுத்தில் புகையுடன் படிந்திருந்த வியர்வையை வழித்து நீரில் எறிந்தார். அதை மீன் ஒன்று விழுங்கிவிட்டது அந்த மீனுக்குப் பிறந்தவனே நான். என்பெயர் மகரத்துவஜன்,' என்ருன் அவன். மாருதியும், 'மகரத்துவாஜா நீ நலம் வினவிய ஆஞ்சநேயன் நானே,' என்ருர். மகரத்துவஜன் மகிழ்ச்சியோடு அவரைக் கட்டித் தழுவிக் கொண்டான். அவன் மூலம் அவர்கள் அரண்மனையில் பலத்த காவல் உண்டு என்பதையும் காளிகோயிலில் இராமஇலக்குவரை மறுநாள் பலி கொடுக்கப் போகின்றனர் என்பதையும் அறிந்தார் மாருதி. பின் அக்கோயிலை அடைந்து கருவறைக்குள் நுழைந்து கதவை உட்புறம் தாழிட்டுக் கொண்டார்.

மறுநாள் காலையில் அவ்வரக்கர்கள் கோயிலுக்குள் வந்த போது தன்குரலைக் காளிதேவி குரல்போல் மாற்றிக்கொண்டார். முதலில் தான் மிகுந்த சீற்றத்துடன் இருப்பது போல் காட்டிப் பின், 'நீங்கள் பலி கொடுக்கக் கொண்டு வந்திருக்கும் வீரர்களை நீராட்டி, மாலைகளால் அலங்கரித்துக் கையில் வில் அம்புகளுடன் இங்கு அழைத்து வாருங்கள்,'' என்ருர். தேவியைத் திருப்திப்படுத்த அவர்களும் அவ்வாறே செய்து இராம இலக்குவரை அழைத்து வந்தனர். மாருதி அச்சமூட்டும் படிச் சிரித்து, 'என் உக்கிரத்தை உங்களால் தாங்கமுடியாது. கண்களை மூடிக் கொண்டு இக்கதவு வழியே அவர்களை உள்ளே தள்ளுங்கள்.' என்று உரைத்துக் கதவைச் சிறிதே திறந்தார். அரக்கர்கள் இராம இலக்குவரை உளளே தள்ளியதும் கதவைத் தாழிட்டுக் கொண்டார். சிறிது நேரம் கழிந்ததும் அவர்களைத் தோளில்

தூக்கிக் கொண்டு வெளியே வந்தார். இதனைச் சற்றும் எதிர்பாராத அரக்கர்கள் எதிர்க்கத் தொடங்கினர். அவர்களின் தலையை மூவரும் வெட்டி வீழ்த்தவும் அவை மீண்டும் அவர்கள் உடலோடு சேர்ந்து கொண்டன. இதனைக்கண்ட மாருதி இராம இலக்குவரைத் தோள்களினின்றும் இறக்கிவிட்டு, அரக்கர்களின் உயிர்நிலையாது என்பதனை அறிய, புறப்பட்டுச் சென்றார்.

மகரத்துவஜனை நாடிவந்தவர் ஒரு நாககன்னிகையைக் கண்டார். அவள் ஐராவணனால் வலிந்து கொண்டு வரப்பட்டவள். அவள் தனக்கு இராமனை மணம் புரிந்து வைத்தால் அரக்கர்களை அழிக்கும் வழியைக் கூறுவதாகக் கூறினாள். சிறிது நேரம் சிந்தித்த ஆஞ்சநேயர் சூழ்ச்சியால் காரியத்தை நிறைவேற்றிக் கொள்ள எண்ணி அவளிடம், 'அம்மா! உன் எண்ணம் ஈடேறும் ஆனால், அவருடைய பாரத்தை உன்மஞ்சம் தாங்கவேண்டும். இல்லையேல் உன்விருப்பம் நிறைவேறாது,' என்றார். அவளும் மகிழ்ந்து, 'முன்னர் அவ்வரக்கர்களால் காப்பாற்றப் பட்ட வண்டுகள் அவர்களுக்கு அபாயம் நேரும் போதெல்லாம் அமிர்தத்தைக் கொணர்ந்து அவர்கள் இரத்தத்தில் கலந்து விடுவதால் மரணம் அடைவதில்லை அவ்வண்டுகளை அழித்தால் அவர்கள் மாள்வர்,' என்றாள்.

ஆஞ்சநேயர் உடனே நந்தவனத்தை அடைந்து அங்கிருந்த வண்டுகளையெல்லாம் அழித்தார். அவ்வமயம் ஒரே ஒரு வண்டுமட்டும் தன்னை உயிருடன் விட்டுவிடும்படி வேண்டியது. ஆஞ்சநேயர், 'நாககன்னிகையின் மஞ்சத்தைக் குடைந்து அதன் மீது அமர்ந்தவுடன் உடையும்படிச் செய்யவேண்டும். அவ்வாறு செய்தால் விட்டுவிடுவதாகக்,' கூறினார். அதனை அவ்வண்டும் செய்து முடிப்பதாகக் கூறி அகன்றது. வண்டுகள் இறந்ததால் எளிதாக இராம இலக்குவர்கள் அரக்கர்களைக் கொன்றனர்.

அங்கிருந்து இலங்கை நோக்கி மூவரும் புறப்படும்போது மாருதி நாககன்னிகையின் வேண்டுகோளை நினைவுபடுத்தி அவளிடம் இராம இலக்குவரை அழைத்துச் சென்றார். நாககன்னிகை இராமனைக் கண்டு பக்தியுடன் பாதபூஜை செய்து வரவேற்று உள்ளே அழைத்துச் சென்று மஞ்சத்தில் அமரச்செய்தாள். இராமன் அமர்ந்ததும் மஞ்சம் முறிந்துவிட அவள் இராமன் பாதம் பணிந்து வணங்கினாள். இராமன் துவாபரயுகத்தில் அவள் எண்ணத்தைப் பூர்த்தி செய்வதாகக் கூறிச்சென்றான் பாதாள உலகிலிருந்து இராம இலக்குவர்களுடன் வெளியேறி விபீடணன், சுக்கிரீவன் முதலியோரை அடைந்தார் மாருதி. மாருதியின் பெருமையை உலகம் அறியும் பொருட்டே தங்களைத் தூக்கிச்சென்ற அரக்கர்கள் தங்களை மாருதி வரும்வரை விட்டுவைத்திருந்ததாக இராமன் கூற அனைவரும் மகிழ்ந்தனர்

இவ்வாறு இராம இலக்குவரை அரக்கர்களிடமிருந்து அனுமார் காத்ததாகக் கதை வழங்குகிறது.

அகந்தை அழிந்தது :—

சீதையிடமிருந்து சூடாமணி பெற்றுத் திரும்பிய அனுமார் வானரவீரர்களிடம் நடந்ததைக் கூறுகின்றார். அன்று மாலையில் உலாவிக் கொண்டிருந்தவர் அன்னை கொடுத்தனுப்பிய சூடாமணியைச் சிறிதுநேரம் புனிதமான இடத்தில் வைத்து விட்டு நீராட விரும்புகிறார். அங்கு அருகிலேயே ஒரு முனிவர் இருக்கக் கண்டு அவரை அணுகித் தாம் நீராடி மீளும்வரை அதைக் கவனமாக வைத்திருக்கும்படி வேண்டுகின்றார். அவரும், 'என்கமண்டலத்தினுள் உன்கையாலேயே போட்டு விட்டுச் செல்' என்று கூற அனுமாரும் அவ்வாறே செய்து செல்கின்றார்.

சிறிதுநேரத்தில் நீராடி மீண்ட மாருதி முனிவரிடம் சென்று சூடாமணியைக் கொடுக்கும்படி வேண்டுகின்றார். முனிவர், 'போட்டதுபோன்று நீயே எடுத்துக் கொள்,' என்று கூற அனுமாரும்கமண்டலத்தினுள்கைவிட்டுத்துழாவுகின்றார் அவர் போட்டதோ ஒரே சூடாமணி. ஆனால் அவர் கையில் தட்டுப்பட்டதோ ஐந்து சூடாமணிகள். திகைத்த அனுமார் முனிவரையே எடுத்துத் தருமாறு வேண்டுகின்றார். முனிவர் சிரித்துக்கொண்டே, 'நீ போட்டது உனக்கே தெரியவில்லையென்றால் அதை ஏறெடுத்தும் பாராத எனக்கு எப்படித் தெரியும்?' என்று வினவுகின்றார். மிகுந்த துயருற்ற அனுமார் தாம் சூடாமணியைப் பெற்ற வரலாற்றையும் இராமனிடம் தான் அதை எப்படியும் கொண்டு போய்க் கொடுக்கவேண்டும் என்றும் கூறுகின்றார். முனிவர் இடைமறித்து, 'என்ன? நீ இலங்கைக்குச் சென்றாயா! அன்னையைக் கண்டு வந்தாயா? உன்னைப் போலசில குரங்குகள்தான் ஒவ்வொன்றாக இங்கே வந்து, தாங்கள் இலங்கை சென்றதாகவும் அன்னையிடமிருந்து சூடாமணியைப் பெற்று வந்ததாகவும் கூறிக் கொடுத்து விட்டுச் சென்றிருக்கின்றன,' என்கிறார்.

கூர்த்தமதி படைத்த மாருதி ஒரேகணத்தில் நிலையைப் புரிந்து கொள்கின்றார் மேனி நடுங்க கண்களிலிருந்து நீர் பெருகியோடுகின்றது. கைகளில் இருக்கும் சூடாமணிகளைக் கண்களில் ஒற்றிக்கொண்டு வானரவீரர்களிடம் தாம் இலங்கை சென்று மீண்டமையைப் பலமுறை பெருமையோடு கூறியதை எண்ணிப்பார்க்கின்றார் அந்தநேரத்தில் அங்கிருந்த அனைவருள்ளும் தாமே இலங்கை சென்று தேவியைக் காணும் சக்தி படைத்திருந்ததை நினைத்து அகம்பாவம்கொண்டதைஎண்ணுகின்றார். அந்த ஆணவத்தை அவருக்கு உணர்த்தவே இறைவன் இவ்வாறு நாடகமாடியிருக்கின்றான் என்பதனையும்புரிந்துகொள்கின்றார்.

மனம்உருக மாருதி கண்களைமூடிக்கொண்டு இறைவனிடம் மன்னிப்பு வேண்டித் தியானம் செய்கின்றார். கையிலே வைத்திருந்த பொருளின் கனம் குறைவது போல் தோன்றவே கண்

கண்ணைத் திறந்து ஒரேஒரு சூடாமணி மட்டும் இப்பொழுது இருக்கக் காண்கின்றார். எதிரிலிருந்த முனிவரையும் காணவில்லை. மெய்சிலிர்க்க ஆண்டவனின் அருளை எண்ணிக் கிட்கிந்தை இருந்த திசையை நோக்கி மண்ணுற விழுந்து வணங்கி எழுகின்றார்.

இராமநாமத்தால் ஈசனைக் கட்டியது:—

வீரமணி என்பவன் சிறந்த சிவபக்தன். அவன் பக்தியில் கட்டுண்ட சிவன் அவன் அரண்மனையிலேயே கோயில் கொண்டிருந்தார். அவன்மகன் ருக்மாங்கதன் இராமன் அனுப்பிய அசுவமேதயாகக் குதிரையைக் கட்டி விடுகின்றான். வீரமணி சிவபூஜையிலிருக்கும் போது சிவன் அவன் முன் தோன்றி இராமனிடம் பகை வேண்டாம் அக் குதிரையை விட்டுவிடு என்கிறார். மறுக்கும் வீரமணி சிவனையே உதவிக்கழைக்கின்றான். அவனுடைய உறுதியைக்கண்ட இறைவன் இராமதரிசனம் அவனுக்குக் கிடைக்கச் செய்து அவனை இராமபக்தனுக்க எண்ணி அதற்குச் சம்மதிக்கின்றார். வீரமணி பூஜையை முடித்துக் கொண்டு போருக்குப் போகின்றான்.

குதிரைக்குப் பின்வந்த ஆஞ்சநேயர், சத்ருக்னன், புட்கான் முதலானோரும் அமருக்கு ஆயத்தமாகின்றனர். இரு திறத்தாரும் மிக வன்மையாகப் போரிடுகின்றனர். மாருதி பெருஞ் சீற்றத்துடன் போர்க்களத்தினுள் புகுந்து ருக்மாங்கதனையும் அவன் வீரர்களையும் அடித்து வீழ்த்துகின்றார். வீரமணியோ சத்ருக்னன் புட்சரன் ஆகியோரைத் தன் பாணங்களால் திக்குமுக்காடச் செய்கின்றான். யோகினி உபதேசித்த இராமகவசமந்திரத்தைக் கூறும்படி மாருதி வேண்ட சத்ருக்னன் அதனைப் பயன்படுத்தி வீரமணியை வீழ்த்துகின்றான்.

பக்தன் படுகளத்தில் வீழ்ந்தமை கண்ட ஈசன் சக்தியுடனும் வீரபத்திரனுடனும் அங்கு வருகின்றார். சத்ருக்னன் ஈசனை எதிர்க்க, சக்தியை ஆஞ்சநேயரும் வீரபத்திரனை புட்கானும் எதிர்க்கின்றனர். சத்ருக்னனும்புட்கரனும் மயங்கி விழுந்துவிட மாருதி ஈசனிடம் ஓடி வருகின்றார். 'மகேச்வரா! சத்ருக்னன் தங்கள் முன்பு நிற்கக்கூடியவனு? அவனை வீழ்த்தியது உங்களுக்குப் பெருமையைத் தருமா? என்னை வீழ்த்துங்கள்,' என்று சொல்லி அவர்முன் கைகட்டி நின்று இராமநாமத்தை முழங்குகின்றார்.

கர்ணுமிர்தமான அந்நாமகீர்த்தனையில் ஈசன் தம்மையே மறந்து ஒன்றிவிடுகின்றார். சினமும் தணிகின்றது. 'மாருதியின் திறமைதான் என்னே!' என்றுவியந்து, 'ஆஞ்சநேயா! வீரமணி பக்தியால் என்னைக் கட்டியிருக்கின்றான். நீயோ இராமநாமத்தால் கட்டியிருக்கின்றாய். உனக்கு என்ன வரம் வேண்டும்?' என்று வினவுகின்றார். "கைலாசநாதா! தங்கள் அருள் தான் எனக்கு வேண்டும். என்னைத் தடுக்காது அனுமதி அளியுங்கள் சஞ்சீவி மலையினை எடுத்து வந்து சத்ருக்னனையும் மற்றவர்களையும் எழுப்புகின்றேன். அதுவரைதாங்கள் இவ்விட

மே இருக்கவேண்டும்,' என்று இறைஞ்சுகின்றார் அனுமார். ஈச னும் சம்மதிக்க அனுமார் செல்கின்றார். மலையுடன் திரும்பிய ஆஞ்சநேயரைக் கண்டு ஈசன் சிரிக்கின்றார். ஈசனின் சிரிப்பு மாருதியைச் சிந்திக்க வைக்கின்றது, சிரிப்பின் பொருளும் புரி கின்றது. 'ஈசனே என் அறியாமையை எண்ணித்தான் சிரித்தீர் கள். உண்மைதான். மகத்தான இராமமந்திரம் இருக்கும்போது சஞ்சீவி மலையை நாடிச்சென்றிருக்கின்றேனே! என் அறியாமை யை என்னென்பது?' என்கின்றார். பின் கண்களைமூடி இராமனைத் தியானித்து சத்ருக்னனையும் புட்கரன் முதலானோரையும் எழுப்புகின்றார்.

பின் ஈசன் வில்லின் நாணைச் சுண்டி ஒலி எழுப்புகின்றார். ஆஞ்சநேயர் அனைவரையும் இராமநாமத்தைக் கூறும்படி வேண்டுகின்றார். போர்க்களத்தில் இராமநாமமுழக்கம் விண்ணை முட்டும்படி எழுகின்றது. இராமநாமத்தை இடையறாது கேட் டுக்கொண்டிருந்த ஈசனின் மனமும் போருக்குரிய சினம் கொள் ளாது மகிழ்ச்சியில் திளைக்கின்றது. தன் நிலையினை உணர்ந்த அவனும் அந்த இக்கட்டான நிலையிலிருந்து விடுபட இராமனை நினைக்கின்றார். உடன் இராமரும் பட்டுடைதரித்து தர்ப்பையும் பவித்திரமும் விரல்களில் அணிந்து யாகதீட்சையோடு தரிசனம் தருகின்றார். அந்தக் காட்சியைக் காணும் வீரமணியும் இராம பக்தனாகின்றான். குதிரையை அவிழ்த்து வந்து அளவற்ற காணிக்கைப் பொருள்களுடன் அதனை ஒப்படைக்கின்றான். அனைவரும் பெருமகிழ்ச்சி அடைகின்றனர்.

சிவபக்தன் :— ஆஞ்சநேயரை இராமபக்தர் என்பர். அவ ரைச் சிறந்த சிவபக்தராகக் காட்டுகின்றது ஒருகதை. கௌதம முனி தம்முடைய ஆசிரமத்தில் சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து பூஜை செய்து வந்தார். அதைக்காண பிரகலாதன், பாணன் போன்ற அசுரபுத்திரர்களும் வருவார்கள்.

ஒருசமயம் பிரகலாதன் முதலானோர் வந்தபோது அவர் களோடு விருஷர்பவா என்ற அசுரர் தலைவனும் வந்தான். நார தர், தும்புரு மற்றும் பல மகரிஷிகளும் அங்கே குழுமியிருந்த னர். அங்கே சிவபக்தன் கௌதம முனியின் சீடன் சங்கராத்மா வின் செய்கைகள் விருஷபர்வாவுக்குப் பிடிக்கவில்லை. கோபம் கொண்டு அவன் தலையைச் சீவிவிட்டான். அருமையான சீடன் மாண்டதைக் கண்டு கௌதமரும் உயிர்விட்டார் அப்போது மும்மூர்த்திகளும் தேவர்கள் சூழ அங்கே தோன்றினர். ஈசன் கௌதமரையும், அவருடைய சீடனையும் உயிர் பெற்றெழச் செய்து,' அன்பர்களே சங்கராத்மா என் ஆத்மபக்தன் வெளியில் என்ன நடக்கிறது என்பதனை அவன் கவனிப்பதேயில்லை. அவ னுக்கு நான்தான் உலகம். என்னைத்தியானிப்பதே அவன்செயல். இதேபோல் மற்றொரு பக்தன் எனக்கிருக்கின்றான். அவனையும் காட்டுகின்றேன்,' என்றார்.

அஞ்ஞான்று வீணையின் அற்புத கானம் [illegible] அங்கே பர வியது. அதன் இனிமையில் அவர்கள் மெய்ம்மறந்து நின்றனர்.

அப்பொழுது ரிஷப வாகனத்தில் சிவபெருமான் காட்சி அளிக்க அருகில் ஆஞ்சநேயர் வீணகானம் செய்து கொண்டிருப்பதைக் கண்டனர். ஆஞ்சநேயரின்பக்திப்பரவசநிலை அங்கிருந்தோரை உருகச் செய்தது. 'ஆஞ்சநேயா! நீயும் ரிஷபத்தின் மீது ஏறிக் கொள். என் அருகிலிருந்தபடி கானம் பாடலாம்,' என்றழைத்தார் சிவபெருமான். 'மகேசுவரா! நான் எவ்வாறு தங்களுக்குச் சமமாக அமர்ந்து வாசிப்பேன்; வேண்டாம். தாங்கள் என் தோள்களில் அமர்ந்து கொள்ளுங்கள். தங்களைச் சுமந்தவாறு நான் கானம் செய்வேன் அதுவே நான் வேண்டுவது,' என்றார் ஆஞ்சநேயர். பரமசிவனும் பக்தனுடைய வேண்டுகோளைத் தட்டாதுரிஷபத்தைவிட்டிறங்கி ஆஞ்சநேயருடையதோள்களில் ஏறி அமர்ந்தார். ஈசனைத்தாங்கியபடியே மெய்ம்மறந்து கானம் செய்தார் மாருதி. அந்த காட்சியைக்கண்ட கௌதமர் முதலானோர் ஆஞ்சநேயரைப் பலவாறு பாராட்டினர்.

இராமனை வென்றது

விசுவாமித்திரர் ஒருநாள் அயோத்தி சென்று இராமனிடம், 'மறுநாள் சூரியஅஸ்தமனத்துக்குள் சகுந்தராஜாவின் தலையைத் தன் காலடியில கொண்டு வந்து சேர்க்க வேண்டும்,' எனக் கூறிச் சென்றார். அதுகேட்டுதிகைத்த இராமனும் வேறு வழியின்றி தன் தம்பியரைச் சகுந்தராஜாவுடன் போரிட்டு அவன் தலையைக் கொண்டு வருமாறு பணித்தார். இதற்கிடையில் நாரதர் சகுந்தராஜாவிடம் சென்று அனுமாரின் தாயாரை அடைந்து அவன் உயிரைக் காத்துக்கொள்ளுமாறு கூறினார். சகுந்தராஜாவும் அதைச்கேட்டு அனுமாரின் தாயை அணுக, அவள் அனுமாரிடம்சென்று அரசரின்உயிரைக் காப்பதாக வாக்குக்கொடுக்கும்படி அழுதாள். அனுமாரும்தான் காப்பதாகக் கூறி அரசனை ஒருகுகையுள் விட்டு அதன்வாயிலில் அமர்ந்து இராமநாமபஜனை செய்தார். அரசன் தலை கொண்டு செல்ல வந்தவீரர்கள் அனுமார் மேல் அம்புமாரி பொழிந்தனர். ஆனால் அம்புகள் வலுவிழந்து கீழே விழுந்தன இறுதியில் பொழுதுசாய்வதற்குச் சிறிதுநேரமேஇருக்கும்பொழுது இராமனே நேரில்வந்து தன்பக்தன்மீது இராமபாணத்தை எய்தான். இதுவரை தோல்வியேகண்டிராத இராமபாணம் அனுமார்காலடியில் ஒருமலர்போல் விழுந்தது. இவ்வாறு இராமநாமத்தால் இராமனையே வென்றமைந்தார் ஆஞ்சநேயர்.

அப்பொழுது விசுவாமித்திரர் வந்து அரசனின் தலையைக் கேட்க நாரதர் அரசனை வெளிவரச்செய்து விசுவாமித்திரரின் பாதங்களில் பணியச் செய்தார். இதனை எதிர்பார்க்காத விசுவாமித்திரரிடம் நாரதர், 'நீங்கள் சகுந்தராஜனின் தலை உங்களுடைய பாதங்களில் இருக்கவேண்டும் என்றீர்களே தவிர அத்தலை அவன் உடலை விட்டுப் பிரிந்திருக்க வேண்டும் என்று கூறவில்லை. உங்கள் விருப்பத்தை இராமன் நிறைவேற்றி விட்டான்,' என்று கூறி அச்சூழ்நிலையை இனிமையாக முடித்து வைத்தார்.

இராமநாமத்தின் பெருமை உரைத்தது:—

இலங்கையைக் கடப்பதற்காக அனுமார் கடலில் ஓர் அணையைக் கட்டினார். பாறைகளை எடுத்து அதில் இராம நாமத்தை எழுதிக் கடலில் எறிய அது மிதந்தது. இதனை அருகில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த இராமன் தன்கையால் ஒரு பாறையை எடுத்து அதைக் கடலுள் எறிய அது அமிழ்ந்து விட்டது. இராமன் அனுமாரிடம் அதற்கான காரணத்தை வினவினார். அனுமாரும் 'இராமனைவிட இராம நாமம் வலிமைமிகுந்தது,' என்று உரைத்தார்.

ஆணவம் அழித்தது:—

ஒரு சமயம் நாரதருக்கும் தும்புருவுக்கும் இடையே சச்சரவு ஏற்பட்டது. இருவரும் தான்தான் இசைக்கலையில் முதன்மைபெற்றவன் என்று வாதிட்டனர். பின் இருவரும் அனுமாரிடம் வந்து தீர்ப்பளிக்கும் படி வேண்டினர். ஆஞ்சநேயரும் அவர்களை வரவேற்று உபசரித்து ஓரிடத்தில் அமரச் செய்தார். பின் இராமனைப் பற்றி மிக இனிமையாகப் பாடிக் கல்லை உருகச் செய்தார். மறுபடியும் பாடி அதனை இறுகச் செய்து, 'உங்களில் யார் கல்லும் உருகும்படிப் பாடுகிறீர்களோ அவர்களே வென்றவர்,' எனக் கூறினார். வியந்த நாரதரும் தும்புருவும் தங்களால் ஆனமட்டும் முயன்றும் முடியாமற் போகவே தங்கள் ஆணவம் இழந்து திரும்பினர். அனுமார் சப்தபிரமனான உருத்திரனின் அம்சமானதால் இசைக்கலையில் மிகச்சிறந்த தேர்ச்சி பெற்றிருந்தார் என்பர்.

அனுமார் ஆற்றல் பற்றி மேலும் பல கதைகள் வழங்குகின்றன. அவற்றுள் மால்யவந்தனைக் கடலுள் எறிந்தது, கந்தமாதனைச் சத்திய உலகம் சென்று அழைத்து வந்தது, சதகண்டராவணனுலுதையுண்ட சுக்கிரீவ வீடணரை வாற்பலத்தால் வருவித்தது, சதகண்டன் உதிரத்தில் பிறந்த சதகண்டர்களை வதைக்க, குரங்கு, நரசிங்கம், கருடன், வராகம், குதிரை ஆகிய பஞ்சமுக ஆஞ்சநேயராக உருக்கொண்டு அவர்களை வதைத்து இராமனிடம் இரத்தினமாலையைப் பரிசாகப் பெற்றது, இராமன் பணிமுடித்து கந்தமாதனம் அடைந்து அங்கே கதலிவனத்தில் தவம் புரிந்தது, கருடனை தன் வாலால் துவாரகையில் தள்ளியது போன்ற கதைகள் அவற்றுள் சில.

அனுமார் இராமபக்தர்களுக்கு உறுதுணையாக இருந்துவருகின்றார் என்பதை மெய்ப்பிக்கவும் சிலகதைகள் கூறப்படுகின்றன. பேதரு நகரில் உத்தவசித்குணர் என்பவர் நடத்திய இராமநவமி விழாவில் அது சிறப்புற நடைபெறுவாறு கேடுகள் செய்த கெடுமதியோரைக் குரங்குவடிவில் வந்துவிரட்டியது, இந்தியில் இராமாயணம் எழுதிய துளசிதாருக்கு இராமன் காட்சியருளும் படிச் செய்தது, துளசிக்குத் தானே முதலில் ஞான ராமாயணத்தைப் போதித்தது, ஆஞ்சநேயரின் அம்சமாகக் கருதப்பட்ட இராமதாசருக்கு (இராம நாம பஜனைக்குச் சிறப்பளித்தவர்)

இராமதரிசனம் கிடைக்கும்படிச் செய்தது போன்று இன்னும் சில கதைகளும் நாட்டில் நிலவி வருகின்றன.

இவ்வாறு வழங்கப்படும் கதைகள் மக்கள் மனதில் இறை நம்பிக்கையை ஏற்படுத்துகின்றன. இறைநம்பிக்கை உள்ளோரிடத்து அதனை மேலும் வலுப்பெறச் செய்கின்றன. அறவுரைகளைவிட இப்படிப்பட்ட கதைகள் தானே மக்கள் மனத்தில் ஆழப்பதிகின்றன.

இராமாயணங்கள் அனுமாரை நற்பண்பும் ஓரளவு இறைத்தன்மையும் உடையவராகக் காட்ட இக்கதைகள் அவரைத்தெய்வமாகவே கூறுகின்றன. மேலும் சிறப்பான ஒன்றிற்கு அனைவருமே உரிமை கொண்டாடுதல் இயல்பு. அதற்கேற்ப இராமபக்தனாகப் புகழ்பெற்ற ஆஞ்சநேயருக்குப் பல பக்தர்கள் தோன்றி அவரைச் சிவபக்தனாகவும் கூறிக்கொள்கின்றனர். இது அவரது பெருமையை மேலும் பெருக்குகின்றது. தவிர, வைணவர்களாலும் சைவர்களாலும வணங்கப்பட்டு இந்துக்களின் பொதுக் கடவுளர் வரிசையிலும் இடம்பெறும் சிறப்பினை ஆஞ்சநேயர் அடைந்திருக்கின்றார்.

பிற

கம்பனில் அனுமன் பயிலு மிடங்கள்

அஞ்சிலே யொன்று பெற்றான்... காப்பான்
(காப்புப் பாடல்கள் 31)

வாயுமற் றெனது கூறு மாருதி யெனலும் (1:5:28)

காலின் மாமதலை யிவர் காண்மினோ... நீதியா நினைமின் (4:2:2)

தாழ்சடைக் கடவுளென... இடைவுதவி (4:2:3)

அஞ்சனைக் கொரு சிறுவன்... கற்பினின் நினையும் (4:2:4)

தன்பெருங்குணத் தற் றன்னிற் றனலதொப்பிலாதான் (4:2:9)

அஞ்சனை வயிற்றின் வந்தே னுமமு மனும னென்பேன் (4:2:15)

எம்மலைக்குலமுந்தாழ விசைசுமந் தெழுந்த தோளான் (4:2:16)

யார்கொலிச் சொல்லின் செல்வன்... விரிஞ்சனோ?
விடைவலானோ? (4:2:18)

ஆணியிவ்வுலகுக் கெல்லா மென்னலா மாற்றற்கேற்ற
சேனுயர் பெருமை (4:2:19)

மெய்ம்மையின் வேலி போல்வான் (4:2:25)

காலின் மைந்தன் நெடிதுவந்து அடியில் தாழ்ந்தான் (4:2:30)

பாழியந் தடந்தோள் வீரமாருதி... ... அரிக்குலத
தொருவ னென்றான் தன்னுருக் கொண்டு நின்றான்
றருமத்தின் தனிமை தீர்ப்பான் (4:2:31)

பண்டைநூல் கதிரோன் சொல்லப்படித்தனன் படிவம் (4:2:32)

கோட்படாப் பதமே ஐய குரக்குருக் கொண்ட
தென்றான் (4:2:33)

நம்பியைப் பெற்றோம் (4:2:34)

குரக்குச்சீயம்... விரைவில் போனான் (4:2:35)

மானவன் குணமெலா நினையுமா மகிழ்வினான் (4:3:1)

ஆல முண்ட வனினின்றரு நடம் புரிகுவான் (4:3:2)

மந்திரம் கெழுமுநூல் மரபுணர்ந்து உதவுவான் (4:3:15)

பொன்னையே பொருவுவாய் (4:3:16)

அஞ்சனை சிறுவன் மேனி போர்த்தன (4:3:28)

அடியில் தாழ்ந்த அஞ்சனை சிங்கம் (4:3:29)

மாருதி, குன்றுபோல நின்றிருகை கூப்பினான் (4:3:36)

பொய்யிலாதவன் வரன்முறை இம்மொழிபுகல (4:3:68)

அனுமனே முதலியமைச்சர்......சமீரணன் மகன்
உரை தருவான் (4:3:72)
தன்துணைத் தனி மாருதி தோளினை தழுவி (4:3:79)
பொய்யில் மாருதி முதலினோர் புகழ்வுறும் பொழுதில் (4:4:15)
வன்திறல் மாருதி வணங்கினான் (4:6:28)
உற்றது செய்க என்றலு முரியனிவ் வனுமன் (4:7 137)
அனுமன் என்பவனை யாழி யைய நின் செய்ப
செங்கைத்தனுவென நினைதி (4:7:138)
நீதிசால் வன்றுண் மால்வரை யன்ன மாருதி (4:7:178)
மெய்ப்போர் மாருதி தன்னை வீர (4:8:3)
மாருதியை நோக்கிப் 'பேர் எழில் வீர! (4:8:27)
பொய்த்தலி லுள்ளத் தன்பு பொழிகின்ற
புணர்ச்சியினும் (4:8:28)
நின்போற்பெரும் பொறை யறிவினோரால் (4:8:29)
தருமம் தானே போன்ற நீ (4:8:30)
வணங்கி மாருதியும் போனான் (4:8:31)
தேவியை நாடிய முந்தித்தென்றிசைக் கேவிய தூதென (4:9:1)
அனும னென்பவ னளவு அறிந்தனம் (4:9:67)
கோதில் சிந்தை யனுமனைக் கூவுவான் (4:10:26)
மந்திரத் தனிமாருதி தன்னொடும் (4:10:27)
அனுமன் விளம்பினான் (4:10:42)
வன்றுணை வயிரத் திண்டோண் மாருதி
மருங்கின் வந்தான் (4:10:60)
அந்தமில் கேள்வி நீயும்.....இயிம்பினன்
இயம்ப வல்லான் (4:10:61)
மாருதி மாற்றம் கேட்ட...... (4:10:68)
அரிக்குலத்தவனை நோக்கி (4:10:69)
மாருதி தொழுது (4:10:75)
மாருதி யொடும் போனான் (4:10:76)
முற்றும் நயம்தெரி யனுமன் வேண்ட நல்கினன் (4:10:81)
மாருதிக் குரைக்கப் போனோன் (4:10:88)
அனுமன் நீதிக் கல்வியால் கடந்ததல்லால் (4:10:96)
அனுமன் காண்டொன்று மொழிந்தனன் (4:10:117)
'நெறிவலோய்!' என ஏயினன் அனுமனை (4:10:118)
நன்குணர் மாருதி யெவ்வழி மருவினான் (4:10:34)
நம்பனைத் தந்த கேசரி (4:11:4)
ஐயஞ்சாயிர கோடி கொண்டனுமன் வந்தடைந்தான் (4:11:19)
அண்ணலனுமனை 'யைய நீ......நின் தாதையின்
புக்குழல் தவன வெகத்தை......' (4:12:5)

மாருதி நீயலால்	(4 : 12 : 7)
தெள்ளியோய்	(4 : 12 : 8)
நீண்டவனும் மாருதியை...'நீதிவல்லோய்!'	(4 : 12 : 32)
ஐய!	(4 : 12 : 33)
ஐய!	(4 : 12 : 34)
தக்கோய்	(4 : 12 : 37)
கடலினும் நெடிது கற்ருேய்	(4 : 12 : 40)
தக்கோய்	(4 : 12 : 48)
சான்ருேய்	(4 : 12 : 51)
ஐயா!	(4 : 12 : 51)
நல்லோய்	(4 : 12 : 64)
சான்ருேய்	(4 : 12 : 66)
அறிஞ!	(4 : 12 : 73)
மாருதிமுதலிய வயிரத்தோள்வயப்போர் கெழுவீரரே	(4 : 13 : 21)
வன்திறல் மாருதி	(4 : 13 : 29)
வெங்காலின் ஏகினுன்	(4 : 13 : 30)
பொன்னெடுங் கிரிகள்போற் பொலிந்த தோளினுன்	(4 : 13 : 31)
அஞ்சலென மாருதி கொதித்தான்	(4 : 13 : 44)
மாருதி யுரைத்தான்	(4 : 13 : 51)
வெவ்விழைவில் சிந்தை நெடுமாருதி விரித்தான்	(4 : 13 : 55)
மாருதியு மற்றவண் மலர்ச்சரண் வணங்கி	(4 : 13 : 57)
நல்லோய்!	(4 : 13 : 58)
வல்லோய்!	(4 : 13 : 61)
அண்ணல்!	(4 : 13 : 64)
ஐயா!	(4 : 13 : 65)
அனுமானும்	(4 : 13 : 66)
வழுத்தரிய மாருதியும்	(4 : 13 : 67)
நெடுவானுற நிமிர்ந்தான்	(4 : 13 : 68)
உருத்துல கெடுத்த கருமா வினையு மொத்தான்	(4 : 13 : 69)
...பூவடி வுடைப் பொருவில் சேவடி புரைந்தான்	(4 : 13 : 70)
அனுமன் மேகமென வார்த்தான்	(4 : 13 : 71)
மாருதி வலித்தகையை பேசி மறவோரும்	(4 : 13 : 73)
மாருதேயன்......'வாய்மைசால் ஆரியா!'	(4 : 14 : 9)
அனுமன் செப்புவான்	(4 : 15 : 19)
ஐயனம் மாருதி யழலுங் கண்ணினுன்... உருத்துமுன்னின்ருன்	(4 : 15 , 27)
நுணங்கு கேள்வியான்	(4 : 15 : 29)
மாருதி	(4 : 15 : 30)
கோதிலான்	(4 : 15 : 32)

வன்றிண் டோள்வரை யன்ன மாருதி (4 : 15 : 38)
காற்றின் சேய் (4 : 15 : 39)
மெய்மையோய் (4 : 15 : 43)
மாருதி யொப்பார் வேறிலை ... சீரியன் மற்ருே
ளாண்மை தெரிப்பான் (4 : 16 : 8)
ஆலம் நுகர்ந்தானுமென வெம்போ ரடர்கிற்பீர் (4 : 16 : 9)
ஒப்புறின் ஒப்பார் நுமலது இல்லீர் (4 : 16 : 10)
தோள்வலி யென்றுங் குறையாதீர் (4 : 16 : 11)
மேருகிரிக்கு மீதுற நிற்கும் பெருமெய்யிர் ... ...
பழியற்றீர் (4 : 16 : 12)
மதிவல்லீர் (4 : 16 : 13)
ஒல்கலில் வீரத்துயர் தோளீர் (4 : 16 : 14)
நீதியி னின்றீர் வாய்மை யமைந்தீர் ... உலகினும்
ஆதி அயன்தானே யென யாது மறைகின்றீர் (4 : 16 : 15)
அண்ண லமைந்தாற் கன்பு சிறந்தீர் (4 : 16 : 16)
அமர் வந்தால் மடங்கன் முனிந்தா லன்ன வலத்தீர் (4 : 16 : 17)
பண்டிதர் நீரே ... ... வேண்டிய போதே வேண்டுவ
வெய்தும் வினைவல்லீர் (4 : 16 : 18)
சாகரமுற்றுந் தாவிடு நிரிக்கடருவும்வேக மமைந்தீர்
(4 : 16 : 19)
தாழ்வதனத் தாமரை நாப்பண் ஆம்பல்
விரிந்தாலன்ன சிரிப்பா னறிவாளன், கூம்ப
லொடுஞ் சேர்கைக் கமலத்தன் (4 : 16 : 20)
உவமை யாலுந் திருவடி யென்னுந் தன்மை
யாவர்க்குத் தெரிய நின்ருன் (4 : 16 : 26)
பார்நிழல் பரப்பு மேலோர்பொற்றேர்வெயிற் கதிர்ப்
பரிதி மைந்தன் போர் நிழல் பரப்பு மேலோர்
புகழெனவுலகம் புக்குத் தார்நிழல் பரப்புந்
தோளான் (4 : 16 : 27)
முகவாமைமுதுகிற் ருேன்று மந்தர மெனலு மானுன்
(4 : 16 : 28)
வன்னெடுஞ் சுகர கோடி மயேந்திர மண்டந்தாங்கும்
பொன்னெடுந் தூணின் பாதசிலை யெனப்
பொலிந்து நின்ருன் (4 : 16 : 29)
ஆண்டகை (5 : 1 : 2)
அண்டமுந் திசைகளெட்டு மதிரத் தோள் கொட்டி
யார்த்தான் (5 : 1 : 3)
அந்தமில்லான் (5 : 1 : 4)
கூருகிர்க் குவவுத் தோளான் (5 : 1 : 9)
'வித்தக சேறி' என்ருர்; வீரனும் விரைவ தானுன் (5 : 1 : 14)

'விசயம் வைகும் விலங்கற்றோ ளலங்கல்வீர!' ...
    பொருப்பை ஒப்பான் (5 ; 1 : 15)
அலங்கல் தாழ்மார்பன் (5 ; 1 ; 16)
வீரன் (5 : 1 - 17)
இசையுடை யண்ணல் (5 : 1 ; 19)
வீரன் (5 : 1 : 20)
ஆண்டகை (5 ; 1 : 21)
உறுவலிக் கலுழக் ஊழின் எய்திஞனும் (5 : 1 : 22)
திவலையது ஊலிக் காலின் வள்ளுகிர் வீரன் செல்லும்
    விசைபெற மறுகி (5 : 1 : 23)
கட்புலங் கதுவலாகா வேகத்தான் ...... ஒற்றைப்புட்பக
    விமானத் தானவ் விலங்கை மேற் போவ
    தொத்தான் (5 : 1 ; 25)
மாருதி ... கயிலையங் கிரியை யொத்தான் (5 : 1 ; 26)
மாணியாம் வேடந்தாங்கி மலரயற் கறிவுமாண்டோர்
    ஆணியா யுலகுக் கெல்லா மறப்பொரு ணிரப்பு
    மண்ணல் ... கனகமால் வரையு மொத்தான் (5 ; 1 : 27)
முடிவுகாலத் தழிவுறக் கடுகும் வேகத் தாதையு
    மனையஞனுன் (5 : 1 : 28)
மாகம் கிழக்கெழு வழக்கு நீங்கி வடக்கெழுந்
    திலங்கை செல்லும் பருதிவான வனு மொத்தான் (5 : 1 ; 29)
அறத்தகை யரசன் றிண்பேராழியு மனைய ஞனுன் (5 : 1 : 30)
ஊழிநாள் வடபாற் றோன்று முவா முழு
    மதியு மொத்தான் (5 : 1 ; 31)
கலுழனு மனைய ஞனுன் (5 : 1 : 32)
கூடலத்தன் (5 : 1 : 33)
வீரன் வால் வேத மெய்க்கும் ... அனுமன் (5 : 1 ; 34)
குன்றெடு குணிக்குங் கொற்றக் குவவத்தோள்
    குரக்குச் சீயம் (5 : 1 : 36)
விலங்கயிலெயிற்று வீரன் (5 ; 1 : 37)
அண்ணல் (5 : 1 : 38)
பொருவரு முருவத் தன்ஞனுன் (5 : 1 : 39)
இந்நாக மன்ஞன் (5 : 1 : 40)
அழுங்கா மனத்தண்ணல் (5 : 1 : 52)
எந்தாய் (5 : 1 ; 54)
ஐய! (5 : 1 : 55)
உயர்விற்கு முயர்ந்த தோளாய்! (5 : 1 56)
காலின் மைந்தன் ... நீதி நின்ருய்! (5 : 1 ; 57)
பொற்ருகன் மார்ப! (5 . 1 ; 58)
விரைத் தாமரை வாண்முகம் விட்டு விளங்த வீரன் (5 : 1 : 59)
மெய்ம்மை பூண்டான் (5 : 1 ; 62)

தம்மின் ஒவ்வாதன வொத்திட வூழிவெங்
காலுமொத்தான் (5 : 1 : 63)

கோளொத்தவன் மேனி, விசும்பு இருகூறு செய்யும்
நாளொத்தது (5 : 1 : 65)

முன்றுற்ற தலத்திடை முற்றிய துன்பம் வீப்பான் (5 : 1 : 66)

வண்மையாள (5 : 1 : 68)

நல்லறிவாளன் (5 : 1 : 69)

ஓர்ந்தானும் (5 : 1 : 70)

வீரன் (5 : 1 : 71)

எம்மை யாண்டான் வலன் (5 : 1 : 72)

பொன் மேனியன் (5 : 1 : 73)

பெரிய கோளரி பெயர்ந்தான் (5 : 1 : 83)

திண்கலுழ னொத்தான் (5 : 1 : 84)

சாகாவரத் தலைவரில் திலக மன்னன்... வாலோடு
ஆகாயம் உற்ற கதலிக்குவமை யானுன் (5 : 1 : 85)

இமைப்பினிடை மேருகிரி கீழா நீண்டான் (5 : 1 : 87)

விசும்பிடைச் செல்லும் வீரன் (5 : 1 : 90)

தன்றகை யனைய மேனி (5 : 2 : 43)

மாருதிப் பெயர் ஆண்டகை மாரி வந்தளிக்க (5 : 2 : 52)

வந்தன னிராகவன் றூதன் (5 : 2 : 53)

எண்ணுடை யனுமன் மேலிழிந்த பூமழை (5 : 2 : 57)

இராமன் ஈய்ததோர் பகழியின் செலவென
வனுமன் பற்றினல் (5 : 2 : 60)

அவ்வழி யனுமனும் (5 : 2 : 61)

தனியே புகுது நம்பி (5 : 2 : 65)

எள்ளரிய காவலினை யண்ணலு மெதிர்ந்தான் (5 : 2 : 68)

தூணு மென்னும் தோளுடையானை (5 : 2 : 75)

மாருதி கண்டான் (5 : 2 : 81)

'அஞ்சலை போலும்? அறிவில்லாய்!' (5 : 2 : 82)

களியா யுள்ளத் தண்ணல்... நீதி நலத்தின்
வினையோர்வான் (5 : 2 : 83)

ஐயன் மனத்தோர் நகைகொண்டான்...
புகழ் கொண்டான் (5 : 2 : 85)

வஞ்சங் கொண்டான் வானர மல்லன் (5 : 2 : 86)

எண்ணம் பிழையாதான் (5 : 2 : 88)

பழியோர் வான் (5 : 2 : 89)

யாரும் யாவையு மெல்லா வுலகத்தும் தொழுந்தாள்
வீரன் தூதுவன் (5 : 2 : 92)

ஐய! (5 : 2 : 93)

முரண்வலிக் குரங்கு (5 : 2 : 94)
ஐய! (5 : 2 : 95)
வீரனும் (5 : 2 : 96)
அறிவனும் (5 : 2 : 97)
தேவருக்கமுதம் ஈந்த குன்றென வயோத்திவேந்தன்
புகழெனக் குலவு தோளான் (5 : 2 : 100)
கருங்கடல் கடந்த தாளான் (5 : 2 : 101)
காலின் தோன்றல் கரியனாய் வெளியனாகிச்
செய்யனாய்க் காட்டுங் காண்டற்கரிய
யெளியனாந் தன்னகத் துறை யழகனே போல் (5 : 2 : 102)
மயக்கற நாடி ஏகு மாருதி (5 ; 2 ; 121)
காவ லூட்டங்கள் பொறியுகக் கனலெழக் கனன்றான் (5 ; 2 , 130)
மறுகியேறிய முனிவெனும் உடவை வெங்கனலை
அறிவெனும் பெரும் பரவையம் புனலினா
லவித்தான் (5 ; 2 ; 131)
செவிக்குத் தேனன்ன இராகவன் புகழினைத்திருத்துங்
கவிக்கு நாயக னனையவ னுறையுளைக் கடந்தான் 5 : 2 : 132)
இராகவன் புகழென நலத்தான் (5 : 2 : 133)
அணுவின்மேருவின் ஆழியானெனச்செலுமறிவோன் (5 : 2 : 134)
ஏந்தல் ... புக்கான் (5 : 2 : 135)
செற்ற நீங்கிய மனத்தினன் (5 : 2 : 137)
மந்திரம்பல கடந்துதன் மனத்தின்முன் செல்வான் (5 : 2 : 138)
புகைபுகா வாயினும் புகுவான் (5 : 2 : 140)
தனிக்கடக்களி றெனவொரு துணையிலான் ... கனிக்
கடற்கதிர் தொடர்ந்தவ னகழியைக் கண்டான் (5 : 2 : 146)
நாயகன்புகழ் நடந்த பேருலகெலா நடந்தான் (5 : 2 : 148)
வினைப்பகையை வென்றான் (5 : 2 : 166)
விளைந்த வெவ்வினை வேரற வீசினான் (5 : 2 : 169)
நினைவி னெய்தின னீதியி னெய்தினான் (5 : 2 : 179)
தகைவில்லான் (5 : 2 : 199)
இராவணற் கெடுப்பருங் கிரியெனத் திரடோளான் (5 : 2 : 203)
நூல்பெருங் கடனுணங்கிய கேள்வியான் (5 : 2 : 206)
கொண்டதோர் உருவ மாயோன் குறளினுங்
குறுகி நின்றான் (5 : 2 : 218)
மூலம்பார்க்குறினுலகை முடிவிக்குமுறைத்தென்னும்
காலம் பார்த் திறைவேலை கடவாத
கடலொத்தான் (5 : 2 : 222)
முற்றப் போர் முடித்ததொரு குரங்கு (5 : 2 : 223)
ஊனழிய நீங்காத வுயிர் சுமந்த வுணர்விலேன் (5 : 2 : 231)

எள்ளுறையு மொழியாமல் யாண்டையினு முளனுய்த்தில்
உள்ளுறையு மொருவனைப் போலெம் மருங்கு
மூலாவுவான் (5 : 2 : 234)

எய்தின னிராகவன் தூதன் (5 : 3 : 2)

வெவ்விடை யனைய போர் வீரத் தூதனும் (5 : 3 : 54)

நாயகன் றூதன் ... ஒய்விலன் (5 : 3 : 61)

அஞ்சனை சிறுவன் கண்டனன் (5 : 3 : 97)

ஊழிதொறு முயர்வுறுங் கீர்த்தியான் (5 : 3 : 100)

அன்னகாலையில் அனுமனும் (5 : 3 : 139)

ஒரு விஞ்சை வினை செய்தான் (5 : 4 : 1)

கண்டனனனுமனும் ... அண்டர் நாயகனருடுதன் யான்
(5 : 4 : 23)

நெறிநின்று பொறிகளைந்தும் வென்றவ னல்லனுகில்
விண்ணவனுதல் வேண்டும் ... நன்றுணர் வுரையுந்
தூயனவை யிலன் போலும் (5 : 4 : 27)

குரக்கினத் தொருவனே தானுகுக (5 : 4 : 28)

'வீர! நீ யாவனென்ருள் (5 : 4 : 29)

மன்னவன் றனக்கு நாயேன் மந்தரத் துள்ளேன்
வானின் நன்னெடுங் காலின் மைந்தனுமமு
மநுமனென்பேன் (5 : 4 : 32)

அடியேன் (5 : 4 : 35)

பழியை வென்ருன் (5 : 4 : 37)

அறிவுற வனுமன் சொல்வான் (5 : 4 : 39)

அறிவன் (5 : 4 : 60)

உயிர் தந்தாய் உத்தம (5 . 4 : 71)

மும்மையா முலகந் தந்த முதல்வற்கு முதல்வன்
தூதாய் ...... அம்மையா யப்பனுய வத்தனே
யருளின் வாழ்வே (5 : 4 : 72)

பாழிய பணைத்தோள் வீர துணையிலேன் பரிவு தீர்த்த
வள்ளலே (5 : 4 : 73)

'விழுமிய குணத்தோய்!' ... தூண்திரண்டனை ய
தோளான் (5 : 4 : 74)

காலமொர் மூன்றும் வல்லான் (5 : 4 : 95)

செவ்வழிப் பெருமை ... அனுமன் பாலதோ (5 : 4 : 101)

ஏணில தொரு தரங்கிதென் றெண்ணிலா
ஆணியை யனுமனை (5 : 4 : 104)

கண்டனன் ருனுந்தன் கமலக் கண்களால் (5 : 4 : 105)

எழுந்துயர் நெடுந்தகை (5 : 4 : 106)

ஆண்டகை யனுமனும் (5 : 4 : 109)

காற்ருமன்ன கடுமையாய் (5 : 4 : 110)

ஆழி நெடுங்கை யாண்டகை தனருளும் புகழுமதி
வின்றி ஊழி பலவு நிலைநிறுத்தற் கொருவனீயே
யுளையாளுய்பாழிநெடுந் தோள்வீரா (5 : 4 : 111)

அறிவுமீதே... நீதியீதே நினக்கென்றால் வெறிய
ரன்றோ குணங்களால் விரிஞ்சன் முதலா
மேலானோர் (5 : 4 : 112)

அடியன் தோள் ஏறுகடிது (5 : 5 : 9)

தனிமையோய் (5 : 5 : 13)

இடை ஆறு மைம்பொறி நின்னையு மாணெனக்
கூறு மிவ்வுரு (5 : 5 : 19)

காண்டி ஐயநின் மெய்யுணர் கண்களால் (5 : 5 : 24)

கோதிலான் (5 : 5 : 25)

நீதியோய் (5 : 5 : 29)

ஐயா! (5 : 5 : 33)

சேறி ஐய!...மேலோய்! (5 : 5 : 76)

மெய்ம்மை தொடர்ந்தோய் (5 : 5 : 78)

அவ்வனுமனும் (5 : 5 : 80)

மாருதி கண்டான் (5 : 5 : 82)

நல்லோய் (5 : 5 : 83)

நெறிக்கொடு வடக்குறு நினைப்பினி னிமிர்ந்தான் (5 : 6 : 1)

